# இளமைக் காற்று

## லட்சுமி பிரபா



# நூல் விவர அட்டவணை


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | இளமைக் காற்று |
| ஆசிரியர் | : | லட்சுமி பிரபா |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| முதற் பதிப்பு | : | செப்டம்பர், 2007 |
| மொழி | : | தமிழ் |
| தாளின் தன்மை | : | 11.6 K.g. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : | 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : | 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : | 304 |
| பைண்டிங் | : | சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : | அன்பு இல்லம்<br>கே.கே.பி. காம்ப்ளக்ஸ்,<br>107/2, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை, சென்னை-14. |



6227230

41414


**விலை: ரூ.100.00**


| | | |
|---|---|---|
| கணினி அச்சு | : | வேலன் லேசர்<br>சென்னை-18. ☏:94441-01753 |
| அச்சிட்டோர் | : | கே.வி.எஸ். ஆப்செட்<br>சென்னை-14. ☏:28480166 |



41414
6227230


## முன்னுரை

**வா**சக நெஞ்சங்களுக்கு,

வணக்கம். நலம்... நலம் தானே? இந்தப் புதிய நாவல் மூலம் நாம் மீண்டும் சந்திக்கிறோம்.

'இளமைக்காற்று' நாவல் 'கண்மணி'யில் வெளிவந்து வாசகர்களிடமிருந்து நல்ல வரவேற்பைப் பெற்றுத் தந்தது.

கடமை, தன்னம்பிக்கை இவற்றை தனது இரு கண்களாக கொண்டுள்ள கதாநாயகி உமா... உங்களது உள்ளத்தை நிச்சயம் கவர்வாள். எனது மாணவிகளில் ஒருத்தி அதி புத்திசாலிப்பெண்... ஜாலி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு அவள் நடந்து கொண்ட விதம்... உச்சாணிக் கொம்பிலிருந்த உன்னதமான அவள் குடும்பத்தையே படுகுழியில் தள்ளிவிட்டது.

பரிதாபத்துக்குரிய அந்த மாணவியையே... பவித்ராவாக உங்களது கண் முன் உலாவ விட்டிருக்கின்றேன்.

'வா... வா... வசந்தமே...' நாவல் படைப்பில் எனது முதல் முயற்சியாக 'கண்மணி'யில் வெளிவந்தது. சம்யுக்தா - ஆனந்த் என்ற உள்ளத்தால் ஒன்றுபட்டிருந்த காதலர்களை... வாழ்க்கையில் ஒன்று சேர்க்க, அக்ஷரா - சந்துரு என்ற குறும்புக்கார காதல் ஜோடி... எப்படியெல்லாம் போராடி உள்ளனர் என்பதை சுவாரசியமாகச் சொல்லி இருக்கின்றேன்.

உங்களது மேலான கருத்துக்கள் என்னை மென்மேலும் மெருகேற்றும் என்று நம்புகின்றேன்.

உங்கள் சகோதரி
லட்சுமி பிரபா

## உள்ளே...


1. இளமைக் காற்று 5
2. வா... வா... வசந்தமே... 158


# இளமைக் காற்று

## 1

வாசலில் நீர் தெளித்து விட்டு, சிறிய கம்பிக் கோலத்தைப் போட்டுக் கொண்டிருந்தாள் உமா. ஈரக் கூந்தலை துணியினால் சுற்றி... கொண்டை போட்டிருந்தாள். கச்சிதமாகக் கோலத்தைப் போட்டு முடித்ததும்... ஒரு கணம் நின்று நிதானித்து அதை ரசித்தாள்.

வாசலருகே நின்ற பவள மல்லிகை மரத்தில்... பூக்கள் பூத்துக் குலுங்கி தன் சுகந்த நறுமணத்தை அந்தத் தெருவெங்கும் பரப்பிக் கொண்டிருந்தது. கோலப்பொடிக் கிண்ணத்தை நிலைப்படியருகே வைத்து விட்டு வந்த உமா, பளவ மல்லிகை மரத்தடியில்... தரையெங்கும் கொட்டிக் கிடந்த பவளமல்லிப் பூக்களைக் கொஞ்சம் அள்ளியெடுத்தாள்.

பழைய காலத்து வீடு அது! காவி பட்டையடிக்கப்பட்ட உயரமான திண்ணைகளைக் கடந்தால் ரேழி! அதையும்

தாண்டினால் பெரிய கம்பி முற்றம்! முற்றத்திலிருந்த அழகான துளசி மேடையில் செழிப்பாக வளர்ந்திருந்தது துளசிச்செடி! துளசி மேடையிலும், செடியிலும் பூக்களைத் தூவி, தொட்டு வணங்கி விட்டு கூடத்திற்கு வந்தாள் உமா.

கூடத்தில்... சாமி சிலைகளும், படங்களும் வைக்கப் பட்டிருந்த அலமாரிக்குக் கீழே குத்து விளக்கை ஏற்றி வைத்தாள். அடுக்களைக்குச் சென்று காப்பியைத் தயாரித்து டம்ளரில் நிறைத்துக் கொண்டு உள்ளறைக்குச் சென்றாள்.

உள்ளறையில் படித்துக் கொண்டிருந்த தங்கை ஸ்வேதா நிமிர்ந்து பார்த்தாள். ''இந்தா! காபியைக் குடிச்சிட்டு படிம்மா!'' டம்ளரைக் கீழே வைத்துவிட்டு பரபரப்புடன் அடுக்களைக்குள் நுழைந்து அம்மியை நீர் விட்டு அலம்பினாள்.

''உமா! உமாக்கண்ணு!...'' வாசலிலிருந்தே குரல் கொடுத்தபடி பாட்டி மங்களம் சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டே உள்ளே வந்தாள்.

''கிச்சன்லே இருக்கேன் பாட்டி!'' பேத்தியின் குரல் வந்த திக்கை நோக்கிச் சென்ற பாட்டி, கையைத் தரையில் ஊன்றி மெதுவாகப் பேத்தியின் அருகே அமர்ந்தாள்.

அம்மியில் நீர் தெளித்து தேங்காய்ச்சில்லை நையப் புடைத்து இழுத்து அரைக்க ஆரம்பித்தாள் உமா.

''எங்கே என் மருமக ருக்மணி? கோவிலுக்குப் போயிருக்காளா?''

சமீபத்தில் பாட்டியின் வலது கண்ணில் காட்ராக்ட் ஆபரேஷன் செய்யப்பட்டிருந்ததால்... அந்தக் கண்ணை மறைத்து ஒற்றைத் துணித்திரை கட்டுப் போட்டிருந்தாள்.



''இல்ல பாட்டி! அம்மா மாடியில வடாம் பிழியறாங்க!'' என்ற உமா மீண்டும் அரைக்கத் தொடங்கினாள்.

''இந்நேரத்துக்கேயா?'' ஒற்றைக் கண்ணால் ஏறிட்டாள் பாட்டி.

''போன மாசம் வீட்டுல போட்ட வடாம்லே... கொஞ்சம் எடுத்து பாக்கெட்டுகள்லே போட்டு... பக்கத்துல இருக்கற டிபார்ட்மெண்ட் ஸ்டோர்லே கொடுத்தோம். ''அந்த சாம்பிள் பாக்கெட்ஸ் எல்லாம் தீர்ந்து போச்சு... அதுக்கு நல்ல விதமா வரவேற்பு இருக்குன்னு சொன்னாங்க. அதான்... நேத்துக் கூடுதலான அளவுல மாவைக் கிளறி ரெடி பண்ணி வச்சாங்க அம்மா! வெயில் ஏறும் முன்னாடியே வடாம் பிழிஞ்சா... நல்லாருக்கும்னு இப்ப தான் மொட்டை மாடிக்குப் போனாங்க!''

''அது சரி! நீ ஏன் அம்மியிலே அரைக்கிறே? மிக்ஸி என்னாச்சு?''

''மிக்ஸி ஜார் சர்வீசுக்குப் போயிருக்கு பாட்டி!''

''ஹூம்!'' பெருமூச்செறிந்தாள் மங்களம். அவளது மனம் பாறாங்கல்லாய் கனத்தது. அவளது முகம் முழுவதும் சோகம் அப்பிக் கிடந்தது.

''என்ன பாட்டி? உடம்புக்கு ஏதாச்சும் முடியலியா? முகம் வாட்டமா இருக்கு?'' கரிசனத்தோடு கேட்டாள் உமா.

''இந்த உடம்புக்கு என்ன கேடு வந்தாலும் சரி தான்! போற வயசுல நான் போய்ச் சேராம... இளைய மகனை வாரிக் குடுத்துட்டு இன்னமும் பூமிக்குப் பாரமா இருக்கேனே... அந்தக் கவலை ஒண்ணு போறாதா எனக்கு?'' ஒற்றைக் கண்ணில் பொலபொலவென்று கண்ணீர் வழிய ஆரம்பித்தது.

''என்ன பாட்டி இது? சமீபத்துல தான் உங்களுக்கு ஆபரேஷன் ஆகியிருக்கு... கண்ணீர் வடிச்சா... நல்ல தில்ல பாட்டி! பெரியவங்க நீங்க... எங்களுக்கு ஆறுதல் சொல்லி வழி நடத்தனும். நீங்களே இப்படி இடிஞ்சு போனா... எப்படி பாட்டி?'' பரிவான குரலில் கடிந்து கொண்டாள் உமா.

மளமளவென்று அரைத்த விழுதை வழித்தெடுத்துக் கிண்ணத்தில் போட்டு அம்மியை அலம்பித் தள்ளினாள். ஈரக்கைகளை முந்தானையில் துடைத்துக் கொண்டே பாட்டியின் அருகில் அமர்ந்தாள்.

''இன்னமும் வலது கண்ணுல பெயின் இருக்குன்னு... சொன்னீங்களே பாட்டி? இப்படி அழுதா என்னாகும்? அம்மாவுக்கு வேற அடிக்கடி நெஞ்சு வலி வருது. கவலைப்பட்டு உங்க ரெண்டு பேத்துக்கும் ஏதாச்சும் ஒண்ணு ஆச்சுன்னா... எங்க கதி என்னாகும் பாட்டி?''

துக்கம் பந்தாக எழும்பி உமாவின் தொண்டையை அடைத்தது. மறுவினாடியே சட்டென்று தன்னைச் சமாளித்துக் கொண்டு பாட்டியைக் கைத்தாங்கலாகப் பிடித்துத் தூக்கினாள்.

''வாங்க பாட்டி! மாடிக்குப் போகலாம். அம்மா தனியாளா வடாம் பிழியறாங்க. நான் சாதம் வச்சு துவையல் அரைச்சுட்டேன். நேத்தைக்கு மீந்து போன வத்தக் குழம்பை நல்லா சுண்ட வச்சாச்சு. இன்னிக்கு சமையல். அவ்ளோதான். வடாம் புழிஞ்சுட்டு வந்து சமைச்சா... லேட்டாகும். அதான் சீக்கிரம் முடிச்சாச்சு!'' பேசிக் கொண்டே மங்களத்தின் கரத்தைப் பிடித்துக் கொண்டு படிகளில் மெல்ல பேசிக் கொண்டே ஏறினாள் உமா.



பேச்சரவங்கேட்டு வடாம் பிழிந்து கொண்டிருந்த ருக்மிணி நிமிர்ந்து பார்த்தாள்.

''வாங்க அத்தே!'' முகம் மலர முறுவலித்தாள்.

''ருக்கு! ஏற்கனவே... அக்கம் பக்கத்துல இருக்கறவங்க விரும்பிக் கேக்கறாங்கன்னுட்டு சாம்பார் பொடி, ரசப் பொடி, இட்லிப்பொடி, பருப்புப்பொடி அந்த வேலை போறாதுன்னு.. இப்போ வடாம் வேற புழிஞ்சு கடைகளுக்குத் தரப் போறீங்களா?'' பாட்டியின் குரலில் ஆதங்கம் வழிந்தது.

''மசாலாப்பொடி வகைகளுக்கு நல்ல வரவேற்பு இருக்கு அத்தே! சுவையும் மணமுமா ரொம்ப நல்லாருக்குன்னு எல்லாருக்கும் ஒரு திருப்தி இருக்கு. அன்னக்கி கொஞ்சம் வடாமை பாக்கெட்டுகள்ல போட்டு டிபார்ட்மெண்ட் ஸ்டோர்லே கொடுத்துட்டு வந்தேன். சீக்கிரமா வித்துப்போச்சாம். அதே பக்குவத்துல கூடுதல் அளவுல கிடைக்குமான்னு வீடு தேடி வந்து கேக்கறப்போ... எனக்கு மறுப்பா பேச வரலை! பேங்க்லே போட்டு வச்சிருக்கற பணம் ரொம்ப சொற்பம்!

''விக்கிற விலைவாசிலே நானும் ரெண்டு பொண்ணுங்களும் சாப்பிடணும். அதுகளுக்கு படிப்புச் செலவு அது இதுன்னு... சமாளிக்க முடியாம முழி பிதுங்க வேண்டியிருக்கு... இன்னும் ஒரு வருஷத்துல பெரியவ உமா படிப்பை முடிச்சிடுவா... ப்ளஸ் டூ படிக்கற ஸ்வேதாவுக்கு காலேஜ் சீட் வாங்கணும்.

''பெரியவளுக்கு காலா காலத்துல ஒரு கல்யாணத்தைப் பண்ணி வச்சிட்டா... என் பாரம் கொஞ்சம் இறங்கும். ஓகோன்னு வாழ்ந்து நொடிஞ்சு போயிட்டோமேன்னு இடிஞ்சு போய் உக்காந்தா... யார் வந்து தாங்குவாங்க?

உடம்புலே தெம்பு இருக்கற வரைக்கும் தேனீ மாதிரி உழைச்சுகிட்டே இருக்கணும். அதுதான் என்னோட கருத்து!'' ருக்மணியின் குரலில் வருத்தம் தோய்ந் திருந்தது.

''சபேசன் மட்டும் உயிரோட இருந்திருந்தா... நீங்க எல்லாம் இவ்ளோ கஷ்டப்பட வேண்டியதில்லை... சபே சனும், நடேசனுமா சேந்து வியாபாரம் செஞ்சு அமோக லாபத்தை ஈட்டறாங்கன்னு நான் ரொம்ப சந்தோஷப் பட்டேன். யாரோட கொள்ளிக்கண் பட்டதோ தெரியல. வியாபார விஷயமா ஈரோட்டுக்குப் போன புள்ளை.. திரும்பும்போது பொணமாய் போய் நம்ம தலைலே இடி விழுந்திடுச்சு!

''சரி... தம்பி போயிட்டானே? நாம தான் அவனோட குடும்பத்துக்கு எல்லாம் பண்ண வேணும்கிற பொறுப் புணர்ச்சி இல்லாம... இந்த நடேசன் இப்படி நடப்பானா? சின்னவனுக்குரிய பங்கை சமமாகப் பிரிச்சுக் குடுக்காம... ஏதோ நஷ்டக் கணக்கைக் காட்டி பேருக்குக் கொஞ்ச பணத்தைக் குடுத்துட்டு... கண் துடைப்பு செய்துட்டான்.

''ஒரு நாலு வருஷம் தள்ளி... என்னவோ அவன் தனி சம்பாத்தியத்துல வந்த பணத்தை வச்சு... 'நல்ல வருமானம் வருது... பெரிய வீடு கட்டணும்'னு சொல்லி ஜம்முனு பங்களா கட்டிட்டான்... தம்பி குடும்பத்தை மாடியில குடி வச்சிடலாம்னு ஒரு எண்ணம் வரலே. அந்தக் காலத்துல நாங்க வாழ்ந்த இந்தப் பூர்வீக வீட்டுலே கிடந்து நீங்க அவஸ்தைப் படறீங்க.

''தான்... தனக்குன்னு சுயநலம் வந்துடுச்சுன்னா... சகோதரப் பாசம், ரத்த பந்தம் இதெல்லாம் கண்ணுலேயே படறதில்லை. இதை நான் உயிரோட இருந்து பாக்க



ணும்னு என் தலையில எழுதி வச்சிருக்கு பாரு... ருக்கு?'' நா தழுதழுத்தாள் பாட்டி.

''அம்மா! வெயில் ஏறிக்கிட்டிருக்கு பாரு. நான் வடாம் பிழிஞ்சிட்டு வந்துடறேன். பாட்டியை அழைச்சுக்கிட்டு கீழே போயிடுங்க. அவங்க இன்னிக்கி என்னமோ அழுது தீர்க்கற 'மூட்'லேயே இருக்காங்க!'' மளமளவென்று மாவைப் பிழிந்தாள் உமா.

''தம்பிக்கு ஓரவஞ்சனை செய்ததுக்கு பகவான் நடேச னுக்கு கை மேல் பலன் கொடுப்பார்... பாரேன்! அவன் பெத்த பொண்ணு பவித்ராவே... அவனுக்கு ஆப்பு வைக்கப்போறா!'' புலம்பித் தீர்த்தாள் மங்களம்.

''உஷ்! என்ன பேச்சு இது? பவித்ரா யாரு? உங்க பேத்தி! தவிர நடேசன் மாமா மேலயும் எங்களுக்கு எந்தக் கோப மும் இல்ல. நல்லது கெட்டதுக்கு இந்த வீட்டு ஆம்பிளைங் கிற முறையில அவர் வந்து நிக்கறாரே... அது மட்டும் போதும்! பவித்ராவும் எம் பொண்ணு தான். இள ரத்தம்... துடிப்பா இருக்கிறா... ஆனா புத்திசாலிக் குழந்தை!

''கொஞ்ச நாளானா... எல்லாத்தையும் புரிஞ்சு நடந் துப்பா! என்கிட்டே பேசின மாதிரி... அந்த வீட்டுலே போய் தப்பித் தவறிக்கூட பேசிடாதீங்க! தப்பா நெனைச் சுப்பாங்க... அத்தே!'' அன்புடன் கடிந்து கொண்டாள் ருக்மணி.

''ஊஹூம்! உனக்கென்ன தெரியும் அவளைப் பத்தி? நாந்தான் தினமும் பாத்துக்கிட்டு வரேனே? அந்தக் குட்டிப் பாம்பு என்ன பண்ணப் போகுதுன்னு... எனக்குத் தானே தெரியும்?'' பவித்ராவைப் பற்றி பேசும் போதே... பாட்டியின் அடி வயிற்றில் அமிலம் சுரந்தது.

## 2

பூஜையறையிலிருந்து வந்த சாம்பிராணியின் மணம் வீட்டை நிறைத்துக் கொண்டிருந்தது. அம்மா கற்பகமும் பாட்டி மங்களமும் குளித்துவிட்டுப் பூஜை செய்கிறார்கள் போலும்.

படுக்கையில் குப்புறப்படுத்துக் கொண்டு பளபளத்த கால்களை ஆட்டிக்கொண்டு... ஆங்கில நாவலின் கடைசிப் பக்கத்தில் சுவாரசியமாக மூழ்கி இருந்தாள் பவித்ரா. பத்தொன்பது வயதுப் பூம்புயல்! அதிபுத்திசாலி! சிறு கோடு போட்டுக் காட்டினால்... ரோடு போட்டுவிடும் அதி திறமைசாலி.

ஆழ் கவனம் செலுத்தினால் சில மணி நேரங்களிலேயே... பாடப்புத்தகத்தின் சாராம்சத்தைக் கிரகித்துக் கொள்ளும் சாமர்த்தியம் கொண்டவள். மற்ற மாணவிகளைப் போல், 'மாங்கு மாங்கு' என்று விடிய விடிய பரீட்சைக்குத் தயார் படுத்த வேண்டிய அவசியம் இல்லையாதலால்... செமஸ்டர் நெருங்கும் சமயத்தில் கூட தோழி இரவலாகத் தந்த ஆங்கில நாவலை 'பொறுப்பாகப்' படித்துக் கொண்டிருந்தாள்.

சாத்தியிருந்த அறைக் கதவின் இடுக்கு வழியாக சாம்பிராணியின் மணம் கசிந்து வந்து கொண்டிருந்தது. வெளியே வராண்டாவில் அப்பா நடேசன் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தார். இன்று பேப்பர் காரன் வருவதற்குத் தாமதமாகி விட்டது போலும்.

காலையில் எழுந்ததும் சுடச்சுட செய்திகளை மேய்ந்தால் தான் அன்று முழுவதும் அவருக்கு அலாதி திருப்தியாக இருக்கும். இன்று பேப்பர் வர சற்று லேட்டானதில்... குட்டி போட்ட பூனையாக உலாவித் தவித்தார்.



வாசலருகே மின்னல் வேகத்தில் வந்து நின்ற பேப்பர் காரன், சைக்கிளை விட்டு இறங்காமல் ஹிண்டு மற்றும் தமிழ் தினசரிகளை வீசியெறிந்துவிட்டு மறைந்தான்.

''நின்று நிதானமா குடுத்துட்டுப் போனா... குறைஞ்சா போயிடுவான்? மரியாதை தெரியாத பயல்!'' மனதிற்கு முணுமுணுத்துக் கொண்டே பேப்பரைப் பொறுக்கியெடுத்துக் கொண்டு உள்ளே நுழைந்தார் நடேசன்.

''பேப்பர் வந்தாச்சாப்பா?'' எதிர்ப்பட்ட மகன் நரேந்திரனை நிமிர்ந்து பார்த்தார்.

படிய வாரிய கேசமும் நெற்றியில் பளிச்சிட்ட விபூதியும் 'அவனொரு அடக்கமான பிள்ளை' என்று கட்டியங் கூறின. பி.ஈ. முடித்த கையோடு கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு தற்காலிகமாக ஒரு தனியார் கம்பெனியில் பணிபுரிந்து வந்தான்.

'ஹிண்டு'வை வாங்கிப் புரட்டி இன்றைக்கு ஏதாவது பெட்டர் சாய்ஸ் கிடைக்குமா? என்று ஆவலுடன் பார்வையால் துழாவினான். முன்னறை சோபாவில் அமர்ந்த நடேசன், மனைவி கற்பகம் நீட்டிய சூடான காபியைப் பருகிக் கொண்டே தினசரியைப் பிரித்தார். சுடச்சுட செய்திகளையும், ஒரு வரி விடாமல் விளம்பரப் பகுதிகளையும்... மேய்ந்து விட்டுத்தான் மனிதர் அப்பால் நகர்வார்.

''கற்பகம்! பவித்ராவுக்கு காபி கொடுத்தியா? நேத்து நைட் ரெண்டு மணி வாக்குல பாத்ரூம் போக நான் எழுந்தப்போ... அவ ரூம்லே லைட் வெளிச்சத்தைப் பாத்தேன். கடுமையா உழைச்சுப் படிக்கிறா... காலேஜ் படிப்போட நிறுத்திக்காம... சாயந்தரம் ஆனா... கம்ப்யூட்டர் கோர்ஸ் முடிக்க ஆசைப்பட்டு அதுல வேற சேர்ந்து படிக்கிறா!...

''ஒய்வு ஒழிச்சல் இல்லாம... இந்த மாதிரி அக்கறை யோட படிப்புல நாட்டம் காட்டற குழந்தையை நினைச்சா... எனக்குப் பெருமையா இருக்கு!'' மகள் பவித்ராவின் 'திருப்புகழைப் பாடிவிட்டு மீண்டும் 'தினசரி'யில் மூழ்கிப்போனார் நடேசன்.

''பவி! பவி!... அம்மாடி பவித்ரா!'' உரத்த குரலில் அழைத்த கற்பகம் அறைக் கதவை மெல்லத் தட்டினாள்.

தாயின் குரலைக் கேட்டதும்... அதுவரை படித்துக் கொண்டிருந்த ஆங்கில நாவலை சட்டென்று தலை யணைக்கடியில் மறைத்து வைத்தாள் பவித்ரா. தேர்வுக்குத் தயார் படுத்த வேண்டிய புத்தகத்தைத் தேடி எடுத்துப் பிரித்துக் கொண்டே... நடந்து கதவைத் திறந்தாள்.

''இந்தாம்மா... பவி! சூடா காபியைக் குடிச்சிட்டு அப்புறம் படி... இன்னமும் நிறைய படிக்க வேண்டியது இருக்கா? நைட்டெல்லாம் கண் முழிச்சுப் படிச்சு கண்ணு சிவந்து கிடக்கு பாரு!'' பச்சாதாபப்பட்டாள் கற்பகம்.

சிவந்த கண்களும் கலைந்த கேசமுமாக இருந்த போதிலும்... பவித்ரா சோபை குன்றாமல் காணப்பட்டாள். கூர் மூக்கும், அகன்ற கண்களும், கச்சிதமான உடல்வாகும், பளிச்சென்ற நிறமும், ஒழுங்கே வாய்க்கப் பெற்று ஒரு சிற்பி வடித்த சிலை போன்று... கண்களைக் கட்டிப் போட்டாள்.

அசர வைக்கும் அழகுடன் திகழ்வதாலும், படிப்பில் கெட்டிக்காரியாக விளங்குவதாலும்... சதா அவளைச் சுற்றி தோழியர் கூட்டம் வலம் வந்தது. தன் அதீத அழகாலும், அறிவாலும் எதையும் சாதித்து விடலாம் என்ற எண் ணத்தில் இறுமாந்திருந்தாள் பவித்ரா.



''எம்மா! தொந்தரவு பண்றே? எனக்கு காபி வேணும்னா... நா வந்து வாங்கிக் குடிக்க மாட்டேனா?'' சிணுங்கிய குரலில் அலுத்துக் கொண்டாள்.

''காலங்காத்தால என்ன மொணங்கிக்கிட்டிருக்கா எம் பேத்தி?'' பாட்டி மங்களம் பவித்ராவை தன் ஒற்றைக் கண்ணால் துளைத்தெடுப்பது போல் பார்த்தாள்.

''ஆமா... பரீட்சைக்குப் படிக்கிற பொண்ணு என்னத் துக்கு கதவைச் சாத்தி வைக்கிறே?'' சந்தேகம் அப்பிய குரலில் கேட்டாள் மங்களம்.

''இந்த தொண தொணப்புக்கு பயந்துட்டு தான் நான் கதவைச் சாத்திட்டு படிக்கிறேன்'' என எரிந்து விழுந்தாள் பவித்ரா.

''அம்மா! ப்ரண்ட்ஸ் கூட கம்பைண்ட் ஸ்டடி பண்ணப் போறேன். நாலு பேர் சேர்ந்து படிக்கும்போது... ஒருத் தருக்கொருத்தர் டவுட்ஸ் க்ளியர் பண்ணிக்கலாம். நான் குளிச்சிட்டுக் கிளம்பறேன்மா'' பதிலுக்குக் காத்திராமல் குளியலறைக்குள் புகுந்து கதவை அறைந்து சாத்திக் கொண்டாள்.

''நான் இப்ப என்ன கேட்டுட்டேன்னு இப்படி குதிக் கிறா? நான் தெரியாமத்தான் கேக்கறேன். உமாவும் இவ மாதிரி காலேஜுலே தான் படிக்கிறா? இப்டியா கிடந்து ஆர்ப்பாட்டம் பண்றா? போறது வர்றதுகூட தெரியாம எவ்ளோ அடக்கமா இருக்கா? அவளும் நல்லா படிக்கிற பொண்ணு தான்? ஹூம்! இதெல்லாம் எனக்கென்னமோ சரியாப் படலே... பின்னாடி ஏதாச்சும் ஒண்ணு கிடக்க ஒண்ணு ஆயிட்டா... திரும்ப அதை சீராக்க முடியுமா சொல்லு?'' நீளமாகப் பேசிவிட்டு, மருமகள் கற்பகத்தை ஏறிட்டாள் பாட்டி!

''ஆரம்பிச்சாச்சா?... உங்க பேத்தி உமாவைப் பத்தி பேசி, மத்தவங்களை மட்டம் தட்டறதை நிறுத்துறீங்களா? உமா உங்க பேத்தின்னா... பவித்ராவும் ஒரு பேத்தி தான்! ஞாபகம் இருக்கட்டும். உங்க தொந்தரவு தாங்காம தான் எம்பொண்ணு வெளியில போய் படிக்கறேங்கிறா... மூணாவது மனுஷி மாதிரி குத்தம் கண்டு பிடிச்சுப் பேசறதை நிறுத்துங்க! எங்க பொண்ணு பவித்ராவைப் பத்தி... எங்களுக்குத்தான் தெரியும்! என்னையும் பவித்ராவையும் கண்டாலே... உங்களுக்கு ஆகாதே! சதா... அந்தச் சின்ன மருமக ருக்மணி... அவ பொண்ணு உமா புராணம் தான்!''

இரைந்து பேசிக் கொண்டே கிச்சனுக்குள் சென்ற கற்பகத்தை விடாமல் பின் தொடர்ந்தாள் பாட்டி மங்களம். அவசரமாகக் குளியலை முடித்துக் கொண்டு வெளிப்பட்ட பவித்ரா கச்சிதமாகத் தன்னை அலங்கரித்துக் கொண்டாள். ஹேண்ட் பேக்கில் வேண்டியவற்றைத் திணித்தவள்... மறக்காமல் தலையணைக்கடியில் ஒளித்து வைத்த ஆங்கில நாவலையும் எடுத்து வைத்துக் கொண்டாள்.

அடுக்களைக்குள் மாமியாரும், மருமகளும் இன்னமும் 'சொற்போர்' செய்து கொண்டிருந்தனர். 'இப்போதைக்கு இந்த 'யுத்தம்' ஓயப்போவதில்லை' என்று எண்ணியதும்... பவித்ராவுக்கு சிரிப்பு பீறிட்டுக் கொண்டு வந்தது.

''அப்பா! ப்ரண்ட் மது வீட்டுலே கம்பைண்ட் ஸ்டடி பண்ணப் போறேன். எனக்கு டிபன் வேணாம்மா. அம்மா கிட்ட சொல்லிடுங்க... வரட்டுமா?''

இன்னமும் பேப்பரில் தலையை விட்டுக் கொண்டிருந்த நடேசனிடம் விடை பெற்றாள்.



''சரிம்மா! பாத்து ஸ்கூட்டியை ஓட்டிட்டுப் போ!''

''இல்லப்பா!... என்னத்துக்கு வீணா பெட்ரோல் செலவு? நான் பஸ்லே போயிக்கறேன்பா!'' சமர்த்தாக பதிலளித்தாள் பவித்ரா.

''இந்த மாதிரி பொறுப்பான பொண்ணை... ஏன் இந்த அம்மா புரிஞ்சிக்கவே மாட்டேங்கிறாங்க?'' வழக்கம் போல் நடேசனுக்குள் இன்றும் இந்தக் கேள்வி முளைக்கத் தான் செய்தது.

மகள் அடிக்கப் போகும் லூட்டியைப் புரிந்துகொள்ள முடியாத அந்த அப்பாவி அப்பா நிம்மதியாக மீதமிருந்த செய்தித் துணுக்கை வாசிக்க ஆரம்பித்தார்.

## 3

ஆபீஸ், ஆடிட்டிங் முடிந்த திருப்தியில் சுழல் நாற்காலியில் சாய்ந்து கண்களை மூடித் தன்னை ஆசுவாசப் படுத்திக் கொண்டான் கிரிதரன். திடீரென்று செல்போன் உயிர் பெற்று அவசரக் குரலில் அலறியது.

'செல்'லில் தெரிந்த நம்பரை உற்றுப் பார்த்தான் கிரிதரன்.

''ஹலோ, சொல்லு ரமேஷ்!''

''என்ன கிரி? ஆடிட்டிங் திருப்திகரமாக முடிஞ்சிடுத்தா? எதுவும் பிரச்சினை வரலையே?''

''எதுவும் வரல... என்ன விஷயம்னு சொல்லுடா?''

''கிரி! நேரா... கெஸ்ட் ஹவுஸுக்கு வந்துடு. வந்து பாத்தா... நீ அசந்துடுவே!''

''பீடிகை போடாம விஷயத்துக்கு வாயேன். ப்ளீஸ்... ரமேஷ்!''

''ஓகே... ஓகே! ஆடிட்டிங் அது இதுன்னு... ஏகத்துக்கும் டென்ஷனாயிருப்பே... உனக்கு 'கம்பெனி' குடுக்க என்னோட பி.ஏ. மிஸ்.ப்ரியா காத்திட்டிருப்பா... அவ தான்டா... ரெண்டு மாசத்துக்கு முன்னாடி வேலையில சேர்ந்தாளே... செக்கச் செவேல்னு மனீஷா ஜாடையில இருப்பாளே... அவதான். ரொம்ப பிகு பண்ணவ... படிஞ்சு வலிய வந்தாச்சு. மறக்காம நேரா அங்க போயிடு. மிஸ் ப்ரியாவை மிஸ் பண்ணிடாதேடா'' மறுமுனையில் மிகுந்த அக்கறையுடன் நண்பனை 'நல்வழிப்படுத்தி னான்' ரமேஷ்.

மறுவினாடி 'செல்' மௌனித்தது!

'மிஸ் ப்ரியா... ப்ரியா!... நினைக்கும்போதே கிரிக்கு மனதில் திடீரென உற்சாகம் பொங்கிக் கரை புரண்டது.

தன் பார்வைக்காக டேபிளில் வைக்கப்பட்ட பைல் களை ஊன்றிக் கவனித்துக் கையெழுத்திட்டான் கிரிதரன். 'இண்டர்காமில்' தனது செக்ரட்டரியிடம் அதிகாரக் குரலில், ''சைன் பண்ணிட்டேன். மதன்லால் கம்பெனிக்கு அந்த 'கொட்டேஷனை' இன்னிக்கே அனுப்பிடுங்க... புராஜெக்ட் ரிப்போர்ட் ரெடியா இருக்கா? நாளைக்கிக் காத்தால என் டேபிளுக்கு வந்தாகணும், பெண்டிங் எதுவும் இருக்கக் கூடாது. டூ யூ அண்டர்ஸ்டாண்ட்?'' என்று பொரிந்து தள்ளினான்.

மறுமுனையில் ''யெஸ் சார்! ஓகே சார்! ஓகே சார்!'' விதிர்த்த குரலில் பவ்யத்துடன் பதிலளித்தாள் செக்ரட்டரி.

புயல் வேகத்தில் கிரிதரன் வெளிப்பட்டதும், வேலை யில் மும்முரமாக ஆழ்ந்திருந்த அலுவலகப் பணியாளர்



கள் மரியாதை நிமித்தமாக எழுந்து நின்றார்கள். ப்யூன் ரெங்கசாமி ப்ரீப் கேஸை தூக்கிக் கொண்டு எஜமானின் பின்னால் ஓடினான். கிரிதரன் காரில் ஏறி அமர்ந்ததும், ப்ரீப் கேஸை கார் சீட்டில் வைத்துவிட்டு ஒரு சல்யூட் அடித்தான். தலையைச் சரித்துப் புன்னகைத்து விட்டு, காரை ஸ்டார்ட் செய்து விருட்டென்று கிளம்பினான்.

''பாஸோட தம்பி ஸ்ரீதரன் பெங்களூர்லே படிச்சிட் டிருக்காரு இல்ல. இந்த வருஷம் எம்.ஏ. முடிச்சிட்டு வந்து... அவரும் அண்ணன்கூட பிஸினஸ்லே இறங் கிடுவாருன்னு... நான் நெனைக்கிறேன்!'' அபிப்ராயத்தைச் சொன்னான் அண்ணாத்துரை.

''அவரும் பாஸ் மாதிரி நல்ல டைப்பா?'' துருவிக் கேட்டான் ரெங்கசாமி. ''அப்படித்தான் நெனைக்கிறேன். பாஸுக்கு ஆயிரம் நல்ல குணம் இருந்தாலும்... அது எல்லாம் 'அந்த விஷயத்துல' அடிபட்டுப் போகுது இல் லியா?'' மெல்ல வம்பு மூட்டையை அவிழ்க்க ஆரம்பித் தான் கிளார்க் சண்முகம்.

''ஆமாமா!... நானும் அதத்தான் நெனச்சேன்'' ஒத்து ஊதிய அண்ணாத்துரை சட்டென்று தலையைக் கவிழ்த்துக் கொண்டு ''சீக்கிரம், சீட்டுக்குப் போங்க! பாஸோட செகரட்டரி வர்ற மாதிரி தெரியுது!'' என்றதும் விருட்டென்று அவர்கள் மாயமாயினர்.

கிரிதரன்... முப்பது வயது இளைஞன். 'கங்காதரன் பில் டர்ஸ்' 'கங்காதரன் அப்ளையன்சஸ்' முதலிய நிறுவனங் களுக்குச் சொந்தக்காரன். அவனது அயராத உழைப்பி னால்... நகரத்தின் சில பகுதிகளில் கிளை நிறுவனங் கள் முளைத்து முன்னணியில் முன்னேறிக் கொண் டிருந்தன.

கிரியின் தந்தை கங்காதரன் உயிருடன் இருந்தவரையில்... அவனது தாய் மாமனது குடும்பம், கிரியின் குடும்பத்துடன் நகமும் சதையுமாக ஒட்டி உறவாடிக் கொண்டிருந்தது. கிரியின் தாய் மரகதத்திற்கு, தன் அண்ணன் மகள் அனுவை மருமகளாகக் கொண்டு வர வேண்டும் என்று மிகவும் ஆசை!

சிறு வயதிலிருந்து 'உனக்கு அனு, அனுவுக்கு நீ!' என்று உறுதியாகப் பெரியவர்கள்... இவர்களை முடிச்சுப் போட்டுப் பேசப் பேச... 'எதிர்காலத்தில் தம்பதிகளாக ஆகப் போகிறோம்' என்ற எண்ணம் விதையூன்றி முளை விட்டு வளரத் தொடங்கியது. இருவரும் வளர்ந்து ஆளானதும்... உயிருக்கும் மேலாக ஒருவரையொருவர் காதலிக்கத் தொடங்கினர்.

'அது ஒரு ஆத்மார்த்தமான காதல்' என்று கிறுக்குத்தனமாக நம்பிக் கொண்டிருந்தான் கிரி.

மகிழ்ச்சி மட்டுமே தாண்டவமாடிய அந்த குடும்பத்தில் யாருடைய கண்பட்டதோ தெரியவில்லை. திடீரென்று கிரியின் தந்தை கங்காதரன் மாரடைப்பால் காலமானார். அதுவரை பிஸினஸ் பக்கமே தலை வைத்துப் படுக்காமல், கவலையின் சாயலை சற்றும் கண்டறியாமல் ஹாயாக சுற்றித் திரிந்த கிரியின் தலையில் இடி விழுந்தாற் போலாயிற்று.

தந்தையை இழந்த துக்கத்தை விழுங்கிக் கொண்டு, யதார்த்தத்தைப் புரிந்து கொள்ள... கிரிக்கு சில காலம் தேவைப்பட்டது. 'சோகத்தில் சாய்ந்து கொள்ள அனு தோள் கொடுப்பாள்' என்று நம்பிக் கொண்டிருக்கையில்... அந்த அனுவோ அவன் மீது அணுகுண்டைத் தூக்கிப் போட்டாள்.



கங்காதரனின் மறைவுக்குப் பின்பு பிஸினஸ் தொய்வடைந்து போனது. சில கடன்காரர்களின் தொல்லை வேறு. 'குடும்பம் நொடித்து விட்டதே' என்று கிரி விழி பிதுங்கி செய்வதறியாது திகைக்கும் சமயம்... அவனது தாய் மாமனும், அனுவும் நிர்தாட்சண்யமாக நடந்து கொண்டார்கள். அன்று நடந்த நிகழ்ச்சியில் ஏற்பட்ட காயம்... இன்றளவும் அவன் மனதில் ஆறாத ரணமாக இருந்து கொண்டிருக்கிறது.

''ஆமா... காதல்... கத்திரிக்காய் எல்லாம் டைம் பாஸிங்கிற்குத் தோதா இருக்கும். பிராக்டிக்கலா பாத்தா... லைப் நடத்த பணம், பணம்... பணம் தான் தேவை. நமக்குள்ளே இனி எதுவுமே இல்லை. 'இனிமே என்னைப் பாக்க வராதே! குட்பை பார் எவர்'' அவள் பேசியதைக் கேட்டு அவமானத்தில் இரத்தம் கொதித்தது. எரிமலை போல் மனம் குமுறியது.

அதன் பின்... அவமானத்தில் உள்ளூர ஓலமிட்ட போதும், மேற்கொண்டு என்ன செய்ய வேண்டும் என்று கவனத்தை பிஸினஸில் திருப்பினான்.

வியாபார சூட்சுமங்களை, நுணுக்கங்களைத் துல்லியமாகக் கற்றுக் கொள்ள நண்பன் ரமேஷ் அவனுக்கு உதவினான்.

அனுவால் ஏற்பட்ட அவமானத்தாலும், ரோஷத்தாலும்... கிரிக்குள் உறங்கிக் கிடந்த சிங்கம் தட்டி யெழுப்பி விடப்பட்டது. வியாபார நுணுக்கங்களை விரல் நுனியில் அவன் அடக்கியதும்... மெல்ல மெல்ல வெற்றிப் பாதை கண்ணுக்குப் புலப்பட்டது. நண்பன் ரமேஷின் உதவியோடும், ஆலோசனையோடும் கொஞ்சம் கொஞ்சமாகத் தடைகளைக் களைந்து முன்னேறினான்.

ஊண் உறக்கமில்லாத அயராத உழைப்பினால்... சிகரங்களைத் தொட்டுக் கொண்டிருந்தான் கிரி. 'எந்தப் பணத்திற்காக ஒரு பெண் அவனைத் தூக்கி எறிந்தாளோ... அதே பணத்தை நாடி... அழகான இளம் பெண்கள் வலிய வந்து அவனது காலடியில் பணிய வேண்டும்' என்ற பழி உணர்ச்சி... கிரியின் மனதில் அசுரத்தனமாக வளர்ந்தது. அவனுள் வெறித்தனமாய் வளர்ந்த பழி உணர்ச்சி... அவனை அவ்வப்போது தடம் புரள வைத்தது நிஜம்!

## 4

பஸ் நிறுத்தத்தில் பத்து நிமிடங்களாகக் காத்துக் கொண்டிருந்தாள் பவித்ரா. நிழற்குடையின் கீழ் நின்றிருந்தவளின் அருகே கசகசப்பாய் கூட்டம் திரண்டிருந்தது. இன்றைக்கு முகூர்த்த நாள் போலும்! காத்துக் கொண்டிருந்த பெண்கள் அனைவரும் தலை நிறையப் பூச்சூடி விதவிதமான வண்ணப் பட்டுப் புடவைகளில் பளபளத்தனர்.

''இன்னமும் பஸ்ஸைக் காணோமே? நாம போய்ச் சேர்றதுக்குள்ளே முகூர்த்த நேரம் முடிஞ்சிடும்... போ!'' ஊதா வண்ணப் புடவைக்காரி அலுத்துக் கொண்டாள்.

''இன்னிக்கு எங்க பாத்தாலும் கல்யாணம் தான்! வர்ற வழியிலே பாத்த ரெண்டு மூணு மண்டபங்களும் நிரம்பி வழியுது. பஸ்ல இடங்கிடைக்கிறது கஷ்டம்தான்!'' இடுப்பில் குண்டு குழந்தையைச் சுமந்து கொண்டிருந்த அரக்கு சிவப்பு நிற புடவைக்காரி கவலையுடன் பெருமூச்செறிந்தாள்.

''கஷ்டத்தைப் பாத்தா முடியுமா? என்னதான் கூட்டமா இருந்தாலும் நீ குழந்தை வச்சிருக்கிறதைப் பார்த்தா...



யாருக்கும் மனசு கேக்காது. உனக்குக் கண்டிப்பா சீட் கிடைச்சிடும்!'' ஆரஞ்சு வண்ணப் புடவைக்காரி ஆறுதல் சொல்லி முடிக்கும் முன் ஒரு பஸ் வந்து நின்று பெருமூச்சு விட்டது.

''ஏறு! ஏறு! இந்தப் பக்கமா சீக்கிரமா ஏறேன்!'' ஆள் ஆளுக்குக் கத்திக்கொண்டே முண்டியடித்தனர்.

''ஏம்பா! படிக்கட்டுல நிக்கற பசங்க கொஞ்சம் இறங்கி வழி விடுங்க'' பஸ்ஸின் உள்ளே இருந்த கண்டக்டர் கர்ணகடூரமான குரலில் அதட்டினார். பட்டுப்புடவைக்காரிகள் அனைவரும் இடித்துப் பிடித்து எப்படியோ தத்தம் பாரங்களை பஸ்ஸிற்குள் திணித்தனர். பஸ்ஸிற்குள் ஏறி நின்றதும்... ஏதோ கோட்டையைப் பிடித்து விட்ட வெற்றிக் களிப்பு அவர்களது முகங்களில் படர்ந்தது.

''அப்பாடி!''

தலையில் சூடியிருந்த பூச்சரங்களில் பூக்கள் பாதிக்கு மேல் உதிர்ந்து போனதைக் குறித்தும், அயர்ன் செய்த பட்டுப்புடவை கசங்கி விட்டதைக் குறித்தும் அவர்களுக்கு உள்ளூர வருத்தம் தான்!

பவித்ரா எப்படியோ சாமர்த்தியமாக கூட்ட நெரிசலில் ஏறிக் கம்பியோரமாக இருந்த சீட்டில் சட்டென்று அமர்ந்து விட்டாள். முகத்தில் முத்து முத்தாகப் பூத்திருந்த வியர்வையை நாசூக்காக கர்ச்சீப்பால் ஒற்றிக் கொண்டாள். ஹாண்ட் பேக்கில் இருந்த செல்போன் கிணுகிணுவென்று அவளை அழைத்தது.

'செல்'லை எடுத்து நம்பரைப் பார்த்தாள் பவித்ரா.

''என்ன மது?''

''ஹாய் பவி! என்ன இவ்ளோ லேட்?'' மறுமுனையில் தோழி மதுமதி வினவினாள்.

''நீ சொன்னபடி ஸ்கூட்டியை விட்டுட்டு வந்தேன்பா! பஸ் ரொம்ப லேட்... இன்னமும் 'ஒன் அவர்'லே அங்க இருப்பேன். மது!... என்னோட காலேஜ் மேட்ஸ் சில பேரும் அங்க வருவாங்கப்பா. நான் விஷயத்தைச் சொன்னதும் 'நாங்களும் வரோம்'னு கம்பெல் பண்ணிட்டாங்க. குறிப்பிட்ட இடத்துக்கு எல்லாரும் வந்துடறதாச் சொல்லிட்டாங்க. உனக்கு ஒண்ணும் சிரமம் இல்லையே?'' குயிலைப் பழித்த குரலில் அவள் பேசுவதை, பஸ்ஸில் இடம் கிடைக்காமல் நின்று கொண்டு பயணித்த பெண்கள்... மிகுந்த ஆர்வத்துடன் கவனிக்கலாயினர்.

''என்ன மது? பதிலையே காணோம்?'' லைன் கட்டாகி விட்டதோ என்ற கவலையில் சற்றுக் குரலுயர்த்தினாள் பவித்ரா.

''ஹலோ!... ஹலோ?''

''ஹலோ... பவி, ஸாரி! வேற ஏதோ யோசனையில இருந்துட்டேன். என்கிட்ட உனக்கு எந்த பார்மாலிட்டீஸும் வேண்டாம். தாராளமா யாரை வேணுமின்னாலும்.. அழைச்சுட்டு வா! நோ, பிராப்ளம் யா!''

''தேங்க் யூ, மது!'' அடுத்த வினாடி 'செல்' மவுனித்தது. நாலைந்து மாதங்களுக்கு முன் பவித்ராவுக்கு அறிமுகமானாள் மதுமதி. பவித்ரா வழக்கமாகப் பயின்று வரும் கம்ப்யூட்டர் சென்டரில் புது மாணவியாக மது சேர்ந்ததிலிருந்து... யாரிடமும் அதிகம் ஒட்டாமல் இருந்தாள்.

ஆனால் பவித்ராவிடம் மட்டும் 'பசை' போட்டு ஒட்டிக் கொண்ட தினுசில் அதீதமாக நெருங்கிப் பழகி அத்யந்த தோழியாகவே ஆகிவிட்டாள். பல காலமாகத் தன்னுடன் நெருங்கிப் பழகும் மற்ற தோழியரைக் காட்டிலும்... 'கம்ப்யூட்டர் சென்டரில்' கிடைத்திருந்த புதுத்தோழி மதுவின் சிநேகிதத்தைப் பெரிதும் விரும்பினாள் பவித்ரா.



''ஏம்மா! இந்தக் குழந்தையைக் கொஞ்சம் உன் மடில வச்சுக்கறியா?'' அந்த குண்டு குழந்தைக்காரி பரிதாபத்தோடு பவித்ராவை நோக்கினாள்.

'இவள் எப்போது என்னருகில் வந்து தொலைத்தாள்?' உள்ளூர எரிச்சல் மண்டிக் கொண்டு வந்தது.

'மறுத்தாலும் நன்றாகயிராது!... அனைத்துத் தாய்க்குலங்களும் ஒட்டு மொத்தமாகத் திரண்டு நியாயம் கேட்டு 'உண்டு, இல்லை' என்று ஆக்கி விடுவார்கள். மூக்கொழுகிக் கொண்டிருந்த குழந்தையை வாங்கி மடியில் வைத்துக் கொண்டால்... உடம்பில் ஈஷி விடுமே? அதுவும் போதாதென்று மடியிலே ஈரம் செய்து விட்டால்...?'

'அப்பாடி! என்னால் சகிக்க முடியாது!' அருவருப்பில் முகம் சுளித்தவள் சட்டென்று எழுந்து நின்றாள்.

''குழந்தையை வச்சுகிட்டு நீங்க உட்காருங்கம்மா!'' முத்துப்பல் வரிசை தெரிய முறுவலித்தாள் பவித்ரா.

''உஸ்! அம்மாடி! நன்றிம்மா... நீ நல்லாயிருப்பே!'' தாய்க்குலம் வாழ்த்தியது. பெருந்தன்மையால் தலையசைத்தவள் உள்ளூர பற்களைக் கடித்தாள். நெரிசலில் மெல்ல மெல்ல நகர்ந்து முன்னேறி... படிக்கட்டுக்கு நேராக வந்து நின்றாள்.

படிக்கட்டுகளில் தொங்கிக் கொண்டும் தொத்திக் கொண்டும் பயணித்த இளசுகளின் பார்வை பவித்ராவின் மேல் படிந்தது. பாதிக்கும் மேற்பட்ட உடம்பை வெளியில் தொங்க விட்டு... ஜன்னல் கம்பியை ஒற்றைக் கையால் பற்றித் தொற்றிக் கொண்டு பயணிப்பதை... தங்கள் வீரத்தின் வெளிப்பாடாக இன்றைய இளவட்டங்கள் எண்ணிக் கொள்கின்றனர்.

பவித்ராவைக் கண்டதும் இளசுகளின் முகங்களில் ஆயிரம் வாட்ஸ் வெளிச்சம்! அதுவரை வறண்டு போன முகங்களோடு வெறுப்பாகப் பயணித்தவர்கள்... அவளது தரிசனம் கிடைத்ததும் குற்றாலச் சாரலில் நனைந்தவர் களைப் போன்று குதூகலித்தனர்.

''டேய், மச்சி! கலரைப் பாருடா!''

''செம பிகருடா! அசப்புல சிநேகா மாதிரி இல்லே?''

''டேய்! ஒண்ணரைக் கண்ணா... நல்லாப் பாத்துட்டுப் பேசு!

''ஹைட், ஸ்ட்ரக்சர் எல்லாமே அச்சில வார்த்தாப்புல சிம்ரன் மாதிரியே இருக்குடா.''

''ஜிம்முக்குப் போறா போலிருக்குடா.''

''மாடலிங் பண்ணா... அம்சமா இருக்கும்டா மச்சி!''

அதுவரை தொய்ந்து போய் பயணித்த இளவட்டங்கள், தொடர்ந்து விதவிதமாக விமர்சிக்கலானார்கள். ஓரக்கண் ணால் அவ்வப்போது நோட்டமிட்டுக் கொண்டும், தன்னைப் பற்றிய தரக்குறைவான விமர்சனங்களை... காது குளிரக் கேட்டுக் கொண்டும் நின்றிருந்தவளுக்கு, ஒரு மணி நேரம் பறந்ததே தெரியவில்லை. 'சல்லித்தனமான' விமர்சனங்களை தனக்குக் கிடைத்த புகழாரமாக நினைத்து உள்ளூர ஆர்ப்பரித்தாள்.

தான் இறங்க வேண்டிய நிறுத்தம் வந்ததும் சட்டென்று இறங்கினாள், முறுவல் பூத்த முகத்துடன்! சில பயணி களை உதிர்த்து விட்டு நகர ஆரம்பித்த பஸ்ஸில் மீண்டும் தொற்றிய இளசுகள் 'ஹாய்' என்று கையசைத்து அவளைப் பார்த்துச் சிரித்தனர்.



பஸ்ஸின் மத்தியில் ஜன்னலோரமாக அமர்ந்திருந்த அந்த நடுத்தர வயதுப் பெண்மணி, பவித்ராவின் பாட்டிக்கு தூரத்து உறவு முறைக்காரி! பவித்ரா... அந்த பஸ்ஸில் ஏறியதிலிருந்து... அவளைக் கண் கொட்டாமல், பார்த்துக் கொண்டு தானிருந்தாள்.

'மங்களத்தம்மாவோட வம்சத்துல வந்த பொண்ணுங் கன்னாலே... இருக்கற இடம் தெரியாம... கவுரவத்தை விட்டுக் குடுக்காம இருப்பாங்க'ன்னு ஒரு பேச்சு! ஆனா... இந்தப் பொண்ணு இப்டி நடந்துக்கிறாளே?... என் கண்ணையே நம்ப முடியலையே?' அந்த வம்புக்காரியின் மூளை தீவிரமாக யோசித்தது.

பவித்ரா பஸ்ஸை விட்டிறங்கியதும், ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தாள் தலையை நீட்டி! 'மெல்லுவதற்கு நல்ல அவல் கிடைத்து விட்டது' என்ற திருப்தி அவளது முகமெங்கும் படர்ந்தது. தலையில் பெரிய பாறாங் கல்லை ஏற்றி விட்டதைப் போல்... மண்டை வெடித்து விடும் போல் கனத்தது.

'உடனடியாக இந்த விஷயத்தைப் பத்து பேரிடமாவது பரப்பி விட வேண்டும். அப்போது தான் பாரம் இறங்கும்!' வம்பு கிடைத்து விட்ட ஆவலில் இருப்புக் கொள்ளாமல் தவித்தாள் அந்தப் பெண்மணி!

'உள்ளதை உள்ளபடி சொல்லாமல்... சற்றே திரித்துக் கதை கட்டினால் கேட்பவர்களுக்கு சுவாரஸ்யம் கூடும்! எப்படிச் சொன்னால் எடுப்பாக இருக்கும்?' தனது கற் பனைக் குதிரையைத் தட்டி விட்டாள் அந்த வம்புக் காரி!

## 5

கிணற்றிலிருந்து இறைத்த நீரை பக்கெட்டில் நிரப்பினாள் உமா. சோப்புத் தூளை சிறிது அள்ளி பக்கெட் நீரில் போட்டு கரைத்து விட்டு, அழுக்குத் துணிகளை அதில் போட்டு அமிழ்த்தினாள். கிணற்று மேடையருகே குவிந்திருந்த பாத்திரங்களைப் பரபரவென தேய்த்து அலம்ப ஆரம்பித்தாள்.

''உமா! உமாக்கண்ணு!...'' அழைத்துக் கொண்டே புழக்கடைப் பக்கமாக மெல்ல வந்தாள் பாட்டி மங்களம்.

''வாங்க, பாட்டி! பாத்து... அந்தப் பக்கமா... கொஞ்சம் பாசி பிடிச்சிருக்கு! வழுக்கி விழுந்திடப் போறீங்க?'' பதற்றத்துடன் எழுந்தாள் உமா.

''அந்த வீட்டுலே எனக்கு இருப்பே கொள்ளலைம்மா... அதான்! ஆமா... உன்கிட்ட ஒண்ணு கேக்கணும்னு நெனைச்சேன். உனக்கு இப்போ பரீட்சைக்குப் படிக்கிறதுக்கு லீவு விட்டுருக்காங்க. ஆனா நீ என்னடான்னா... சதா வீட்டுக் காரியத்தையே பாத்துட்டிருக்கியே? பரீட்சைக்கு எப்போ தயார் படுத்துவே?''

''இருபத்து நாலு மணி நேரமும் படிக்கணும்னு அவசியம் இல்ல பாட்டி. கவனம் செலுத்தி சில மணி நேரங்கள் அக்கறையாப் படிச்சா போறும்! அதுவும் தவிர காலேஜ்ல கிளாஸ் எடுக்கறப்போ... நல்லா கவனிச்சு குறிப்பு எடுத்து வச்சுப்பேன்... அதுக்கப்புறம் லைப்ரரிக்குப் போய் அன்றாட பாட சம்பந்தமான குறிப்புகளுக்கு... விரிவான விளக்கத்தை தயார் பண்ணிடுவேன்... மனசை ஒரு நிலைப்படுத்தி இதையெல்லாம் எழுதும்போது... தன்னாலே அந்த பாடம் 'தரோவா ஆயிடும்'' என்று முறுவலித்தாள் உமா.



''அடக்கமா... ஆர்ப்பாட்டமே இல்லாத தேர்வுக்குத் தயார் படுத்திட்டிருக்கே! அங்க பவி பண்ணற அட்டூழியம் இருக்கே? ஹூம்! ரெண்டு பேருமே ஒரே படிப்புத் தானே படிக்கிறீங்க?''

''நானும் அவளும் பி.எஸ்ஸி. தான் படிக்கிறோம்! வேற வேற குரூப்... வேற வேற காலேஜ்!''

முந்தானையை வரிந்து இழுத்து இடுப்பில் செருகி இருந்தாள் உமா. கைகளில் கண்ணாடி வளையல்கள், கழுத்தில் கருகமணிப் பாசியும், காதுகளில் சிறிய ரோஜாத் தோடுகளுமாகக் காணப்பட்டாள். எளிமையான தோற்றத்திலும்... எல்லையில்லா சௌந்தரியம் அவளிடம் குடி கொண்டிருந்தது.

பவித்ராவைப் போன்று இவளிடம் கவர்ச்சி இல்லை... கண்ணியம் இருந்தது. அசர வைக்கும் அழகுக்கு பதிலாக... அமைதியாக மனதிற்கு இதம் தரும் அழகு இருந்தது.

அவள் சலசலத்து ஓடும் காட்டு அருவி என்றால்... இவள் தெளிந்த சலனமற்ற ஜீவ நதியாக இருந்தாள். அரதப் பழசாகி சாயம் போன புடவையில் கூட... தெய்வீக அழகுடன் மிளிர்ந்தாள் உமா.

''என்ன பாட்டி? யோசனை பலமா இருக்கு?'' சிரித்த போது முத்துப்பல் வரிசை பளீரிட்டது.

''ஒ... ஒண்ணுமில்லடா தங்கம்! சரி... நான் வரட்டுமா? ருக்கு!... சாயந்தரமா வரேன். கோவிலுக்குப் போலாம். தயாரா இரு!'' மருமகளுக்கு உத்தரவு இட்டாள் மங்களம்.

பாட்டி கிளம்பியதும், அலம்பி வைத்த பாத்திரங்களை எடுத்து வந்து அடுக்களையில் அடுக்கி வைத்தாள்.

துரித கதியில் ஊற வைத்த அழுக்குத் துணிகளை, துவைக்கும் கல்லில் அடித்துத் துவைத்து அலசினாள். துணிகளை எடுத்துக் கொடியில் உலர்த்தினாள். கிணற்று மேடையைச் சுற்றிலும் தண்ணீரை ஊற்றி துடைப்பத் தால் தேய்த்துக் கழுவித் தள்ளினாள். நெற்றியோரம் வழிந்த வியர்வையைப் புறங்கையால் துடைத்துக் கொண்டு உள்ளே வந்தாள்.

ஸ்வேதா... அன்று பள்ளிக்கூடத்திற்குச் சென்று விட்டு... போன வேகத்தில் திரும்பி வந்திருந்தாள். முன்னாள் பள்ளி முதல்வர் மரணமடைந்து விட்டதால்... அன்று பள்ளிக்கு விடுமுறை போலும்!

''ஸ்வேதா! டீ போட்டுருக்கேன். முதல்லே குடி! தூங்கி வழியற மாதிரி இருக்கே. முகத்தை நல்லா அலம்பிட்டு வந்து படி! ப்ரஷ்ஷா இருந்தா தான் மனசுல பதியும்!

''அம்மா! இந்தாங்க மாத்திரை போட்டுக்கங்க. இல்லேன்னா, ஷுகர் ஏறிடும்! கொஞ்சம் படுத்து ரெஸ்ட் எடுங்க... நேத்து நைட்டெல்லாம் கவலைப்பட்டு நெஞ்சு வலி வந்து அவஸ்தைப்பட்டீங்க!'' வேண்டா வெறுப் பாக முனகிக்கொண்டே மாத்திரையை விழுங்கிய தாயைப் பார்த்ததும், பரிதாபத்தில் உமாவின் விழிகளில் நீர் சுரந்தது. கூடத்தில் பாய் விரித்து அசதியுடன் தலை சாய்த்தாள் ருக்மணி.

சகலத்தையும் முடித்துவிட்டு சுவரோரமாக சாய்ந்து அமர்ந்து படிக்கத் தொடங்கினாள் உமா. கடிகாரத்தின் 'டிக் டிக்' என்ற சன்னமான ஓசை... காதில் விழுமளவு ஆழ்ந்த நிசப்தம் நிலவியது. நத்தையாய் ஒரு மணி நேரம் நகர்ந்தது.



''பாங்... ப... பாங்'' தெருவில் தண்ணீர் லாரி வந்து விட்டதை அறிவிக்கும் பொருட்டு ஹாரன் சத்தம் அலறியது. அடுக்களையில் காலியாகக் கிடந்த இரு பிளாஸ்டிக் குடங்களை எடுத்துக் கொண்டு தடபுடலாகத் தெருவுக்கு ஓடினாள் உமா.

''நானும் தண்ணி பிடிக்க வரட்டுமாக்கா?'' புத்தகத்தை மூடிவிட்டு ஸ்வேதா எழுந்தாள்.

''வேணாம்! நானே பிடிச்சுட்டு வந்துடறேன். நீ படி! தண்ணிக்குப் போனா... லைன்ல நின்னு புடிக்கணும்... லேட்டாகும்.'' தங்கையை அதட்டி அமர வைத்து விட்டு வெளியேறினாள்.

அதற்குள் நிறையப் பேர் காலிக் குடங்களோடு வந்து விட்டிருந்தனர். உமா கியூவில் வந்து நின்றாள். அதற்குள் வரிசை 'அனுமார்வால்' போல் நீண்டு விட்டிருந்தது. அவளது முறை வந்ததும் தண்ணீர் பிடித்து இடுப்பி லொன்றும் கையிலொன்றுமாய் குடங்களைத் தூக்கிக் கொண்டு வந்து அடுக்களையில் வைத்தாள்.

வியர்வையில் கசகசத்த முகத்தை அலம்பிக் கொண்டு கலைந்திருந்த கேசத்தைக் கோதி சீராக்கிக் கொண்டாள். நெற்றிக்கு ஸ்டிக்கர் பொட்டை வைத்து விட்டு கண் ணாடியில் தன் முகத்தை ஒரு கணம் ஏறிட்டாள். பவுடர் பூச்சு... ஒப்பனை எதுவுமின்றி பளிங்கு போல் பளபளத்தது வட்ட முகம்! கசங்கிய புடவையை நீவி விட்டுக் கொண்டே கூடத்திற்கு வந்தாள் உமா.

''ஸ்வேதா... என்னோட கிளாஸ்மேட் வத்சலா வீட் டுக்குப் போயிட்டு வந்துடறேன்மா!'' என்றாள்.

''எதுக்கு அக்கா?'' தயக்கமாய் கேட்டாள்.

''வத்சலாவோட அக்காவுக்கு மேரேஜ் ஆச்சுல்ல... அவங்க மாப்பிள்ளை கூட ஃபாரின் போறாங்களாம். மூணு வருஷம் கழிச்சு தான் வருவாங்க போல... 'நம்ம வீட்டுல தயார் பண்ற மசாலாப் பொடி வகைகள்' நல்லாருக்கு... புதுசா குடித்தனம் பண்ணப் போற அக்காவுக்கு... சாம்பார் பொடி, ரசப்பொடி, பருப்புப்பொடி, இட்லிப்பொடி வகைகளை... நல்ல முறையில் தயார் பண்ணி பேக் பண்ணி குடுக்கச் சொன்னா!

''எல்லாப் பொடி வகைகளையும் பேக் பண்ணி வச்சிருக்கேன். வத்சலா நேத்தைக்கு இங்க வரேன்னு சொன்னா... வீட்டுலே உறவுக்காரங்க நிறைய பேர் வந்துட்டதால... அவளால நகர முடியலை போலிருக்கு! பாவம்... அவ அம்மாவுக்கும் உடம்பு முடியலை. அதான்! நான் ஒரு நடை போய் கொடுத்திட்டு... அவ அக்காவைப் பாத்துட்டு வந்துடறேன்!'' முற்றத்தில் தயாராக எடுத்து வைத்திருந்த இரு பெரிய பைகளை எடுத்துக் கொண்டாள் உமா.

''ரெண்டு கட்டைப்பிடி பேக்ஸை தூக்கிட்டு எப்டிக்கா போவே? நானும் வரட்டுமா?'' பரிதாபத்துடன் தமக்கையை ஏறிட்டாள் ஸ்வேதா.

''ப்ச்! பஸ்லே ஏறினா... ரெண்டு ஸ்டாப் தான்! இறங்கி கொஞ்ச தூரம் நடக்கணும். இதெல்லாம் பாத்தா... முடியுமா? வீட்டு வரி கட்டணும்! அம்மாவுக்கு ஷுகர், நெஞ்சு வலி வேற... மருந்துச் செலவுக்குப் பணம் வேணும். உனக்கு நல்லதா நாலு செட் ட்ரஸ் எடுக்கணும். பாவம்.. சின்னப் பொண்ணு நீ! எல்லா ட்ரஸ்ஸும் நைந்து போயிருக்கு... சரி வரேன்மா!'' பைகளைத் தூக்கியபடி விடு விடுவென்று நடந்து... கால்களில் செருப்புகளைத் திணித்துக் கொண்டு படியிறங்கினாள்.



## 6

உச்சி வெயில் மண்டையைப் பிளந்தது. சூரியன் அனலைக் கக்கிக் கொண்டு இருந்தான். வழக்கத்திற்கு மாறாக பஸ்ஸில் சொற்ப பயணிகளே அமர்ந்து இருந்தனர். டிக்கெட்டை வாங்கிக் கொண்டு ஜன்னலோர இருக்கையில் அமர்ந்த உமாவுக்குப் புறங்கழுத்தில் வியர்வை கசகசத்தது. பைகளைக் காலடியில் வைத்து விட்டு சேலைத் தலைப்பால் வியர்வையைத் துடைத்து விட்டு, இலேசாக விசிறிக் கொண்டாள்.

பதினைந்து நிமிடங்களில் அவள் இறங்க வேண்டிய நிறுத்தம் வந்ததும்... சட்டென்று இறங்கி சுற்றும் முற்றும் பார்த்தாள். அது ஒரு புறநகர்ப் பகுதி என்பதால்... ஆட்டோக்கள் எதுவும் கண்களில் தட்டுப்படவில்லை. 'வேகமாக நடந்தால்... இருபது நிமிடங்களில் வத்சலாவின் வீட்டை அடைந்து விடலாம்' என்று எண்ணியபடி ஓட்டமும் நடையுமாக விரைந்தாள் உமா.

உமா எதிர்பார்த்தது போலவே... வத்சலாவின் வீட்டில் ஏகப்பட்ட உறவுத் தலைகள் முளைத்திருந்தன. ''வா! உமா! வா... நீயே வந்துட்டியே? நான் இன்னைக்கி சாயந்தரம் கிளம்பி வரலாம்னு இருந்தேன்!'' வத்சலாவுக்கு மகிழ்ச்சியில் தலை கால் புரியவில்லை.

''ரொம்ப சந்தோஷம்மா!... வீட்டுப் பக்குவத்துல மசாலாப் பொருட்கள் கிடைக்கிறதே அபூர்வம்தான்... அம்மா செய்தாங்களாம்மா?'' வத்சலாவின் அம்மா தனம் விசாரித்தார்.

''எல்லாத்தையும் நான் காய வைச்சு, வறுத்து... மிஷின்லே திரிக்கறதுக்கு முன்னே... அம்மாகிட்ட

பக்குவம் சரியா'ன்னு உறுதிப் படுத்திக்கிட்டு செய்தேன்!'' என்று முறுவலித்தாள் உமா.

''கெட்டிக்காரப் பொண்ணும்மா! வத்சு! உமாவுக்கு ஸ்வீட் எடுத்து வை. அவ கிளம்பும்போது... பணத்தை மறக்காம குடுத்துடு'' கூறிவிட்டு அடுப்படி வேலையை கவனிக்க... தனம் விரைந்தார். தோழிகள் பத்து நிமிடங்கள் அளவளாவினர்.

''அக்காவும் மாமாவும் மாடி ரூம்லே இருக்காங்க. வா... பார்த்துப் பேசிட்டுப் போ'' வற்புறுத்தி இழுத்துக் கொண்டு போனாள் வத்சலா. மாடியேறும் போது பேச்சுக் குரல்களும், சிரிப்பொலிகளும் உச்சஸ்தாயியில் கேட்டன.

''மாமா... இவ என் கிளாஸ் மேட் உமா... மசாலாப் பொடி வகைகளை உங்களுக்காக ஸ்பெஷலா தயாரிச்சிருக்கா... சமையல்லே எக்ஸ்பர்ட்!''... அறிமுகம் செய்தாள் வத்சலா. மரியாதை நிமித்தம் வணக்கம் தெரிவித்துவிட்டுத் திரும்ப யத்தனித்தபோது... அந்த இளைஞன்... மாப்பிள்ளையின் தோழன் போலும்! விழுங்கி விடுவது போல்... உமாவையே பார்த்தான். குப்பென்று முகம் சிவந்து போனாள் உமா.

''வரேன்... வரேன் வத்சு டைம் ஆகுது!'' விடை பெற்றுக் கிளம்பினாள்.

''ஹூ இஸ் திஸ் சிண்ட்ரெல்லா?'' அந்த இளைஞன் சற்று உரக்கக் கேட்டபோது பதறிப் போனாள் உமா.

வாட்ட சாட்டமான இளைஞன்! சிரிக்கும் கண்கள்... புன்னகை ததும்பிய முகம்... மேலுதட்டை மறைத்த அடர்ந்த மீசை!

''ஹூ இஸ் திஸ் சிண்ட்ரெல்லா?'' என்று அவன் கேட்டபோது சட்டென்று திரும்பிப் பார்த்தாள். அவள்



இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது. 'கிண்டல் செய்கிறானா?' உள்ளுக்குள் சந்தேகம் முளைவிட்டது.

ஒரு விநாடி தான் ஏறிட்டாள். 'ஊஹூம் அந்தப் பார்வையில் கிண்டலோ கேலியோ தென்படவில்லை. சாதாரணமாக விளையாட்டாகக் கேட்டிருப்பான் போலும்! கண்களில் கபடம் தெரியவில்லை!

தனக்குத்தானே சமாதானம் செய்து கொண்டாள் உமா. வத்சலாவும் உமாவைப் பின் தொடர்ந்து கீழே இறங்கினாள்.

''உமா! அவர் எங்க மாமாவோட காலேஜ் மேட்டாம். பேர் கிரி... பெரிய பிஸினஸ் மேனாம்! இவரைப் பாத்ததிலிருந்து எங்க மாமாவுக்கு குஷி பிச்சுக்கிட்டுப் போகுது... சரி... உனக்குத் தர வேண்டிய பணத்தை ரெடியா எடுத்து வச்சிருக்கேன். வாங்கிட்டுப் போ உமா!''

காலியான இரண்டு கட்டைப் பிடி கொண்ட பைகளையும், பணத்தையும் பெற்றுக் கொண்டு, வத்சலாவின் அம்மாவிடம் சொல்லி விடை பெற்றுக் கொண்டு வெளியேறினாள்.

''சிண்ட்ரெல்லா...'' ஆங்கிலத்தில் படித்த மேலை நாட்டுக் கதை ஞாபகத்திற்கு வந்தது.

''சிண்ட்ரெல்லா... பேரழகி தான்! ஏழைப் பெண்ணும் கூட...!''

''ஓ... அரதப் பழசாகி சாயம் போன காட்டன் புடவையை நான் கட்டிக் கொண்டிருப்பதையும், மசாலாப் பொருட்களைக் கொடுக்கப் போனதையும் வைத்து... நான் ஏழை என்று முடிவு கட்டி விட்டான். அவனைச் சொல்லிக் குற்றமில்லை... என் தோற்றமே நான் ஒரு ஏழைப் பெண்

என்று பறை சாற்றி விடுகின்றதோ? அப்பா சபேசன் மட்டும் விபத்துல மாட்டி மாண்டு போகாம இருந்திருந்தா... எனக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்குமா?'' உள்ளூர பச்சாதாபம் எட்டிப் பார்த்ததும்... சட்டென்று மனதைத் தேற்றிக் கொண்டாள் உமா.

'உழைக்கிறதுக்குரிய உறுதியையும் தன்னம்பிக்கையையும் கொடுத்து இந்த அளவுக்கு கவுரவத்தை விட்டுக் கொடுக்காமல்... குடும்பத்தை ஓட்ட முடிகின்றதே? அதற்கு பகவானுக்குத் தான் நன்றி சொல்ல வேண்டும். சுய பச்சாதாபம் ஏற்பட்டால்... அது நம்மை முன்னேற விடாது. முடக்கிப் போட்டு விடும்! உழைப்புக்குரிய பலன் நிச்சயம் கிடைக்கும். நம்பிக்கையைத் தளர விடக்கூடாது' தன்னைத் தேற்றிக் கொண்டாள் உமா.

வெயில் உக்கிரமாக நெருப்பைக் கக்கியது. ஓட்டமும் நடையுமாக பஸ் ஸ்டாப்பை நோக்கி நடந்தாள் உமா. தேய்ந்து போன செருப்புகளின் வார் அறுந்து விடுவேன் என்று அவளை பயமுறுத்திக் கொண்டிருந்தது.

முக்கால் மணி நேரமாகியும் கூட... பஸ் வந்த பாடில்லை. நிழலுக்கு ஒதுங்க நிழற்குடையோ... மரமோ இன்றி வெட்ட வெளியில் வெறிச்சென்ற பஸ் நிறுத்தத்தில் வெயில் தீயாக தகிக்க... வியர்வை ஆறாக பெருக்கெடுத்து ஓட... உலர்ந்த உதட்டை நாவினால் ஈரப்படுத்திக் கொண்டு வழிமேல் விழி வைத்திருந்தாள் உமா.

தூரத்தில் குலுங்கியபடி பஸ் வந்து கொண்டிருந்ததைக் கண்டதும் தான் அவளுக்கு உயிரே வந்தது. அதிகக் கூட்டமில்லாமல் இருக்கவே பெருத்த நிம்மதியுடன் இருக்கையில் அமர்ந்து கொண்டாள்.



டிக்கெட்டை வாங்குவதற்குரிய சில்லரைப் பணம் தனியே பர்ஸில் பத்திரமாக இருந்தது. வெகு நேரமாக பஸ்ஸிற்கு காத்திருந்தபோது தொண்டை வறண்டு கொண்டு வர... அருகில் இருந்த பெட்டிக்கடையில் தாகத்திற்கு ஏதாவது கூல் ட்ரிங்ஸ் வாங்கிக் குடிக்கலாமா? என்று அவளையும் அறியாமல் அவளது கண்கள் கடையை அடிக்கடி ஏறிட்டன.

''ஊஹூம்! வத்சலா எல்லாம் நூறு ரூபாய் நோட்டுக்களாகக் கொடுத்து விட்டாள். தனிப்பட்ட ஒருத்திக்காக ஏன் நோட்டை மாற்ற வேண்டும்?'' சிக்கனம் கருதி வாளாயிருந்தாள் உமா.

'இந்தப் பணத்தை வைத்துத் தான் பலசரக்கு சாமான்களை வாங்க வேண்டும். வீட்டிற்குச் செல்வதற்கு முன்... மார்க்கெட்டிற்குச் சென்று வேண்டிய சாமான்களை வாங்கிப் போட்டுக் கொள்ள வேண்டும்!' நினைத்துக் கொண்டாள்.

அவள் இறங்க வேண்டிய நிறுத்தம் வந்ததும்... இறங்கி நேராக மார்க்கெட்டிற்குச் சென்றாள். 'பாவம் அம்மா! முழங்கால் மூட்டு வலி என்று சொன்னாளே?' மறக்காமல் 'அயோடெக்ஸ்' வாங்கிக் கொண்டாள்.

மாங்காய் சீஸன் என்பதால்... விலை மிகவும் மலிவாக இருந்தது. டிபார்ட்மெண்ட் ஸ்டோர்ஸ் உரிமையாளர் அவளிடம்... மாங்காய் ஊறுகாய் செய்து தர முடியுமா? என்று கேட்டிருந்தாரே? ஞாபகம் வந்ததும்...

நல்ல மாங்காய்களாகப் பொறுக்கியெடுத்து... பத்து கிலோவுக்கு வாங்கிக் கொண்டாள். காய்கறிக் கடையில் முடக்கத்தான் கீரையைப் பார்த்ததும்... பாட்டி மங்களத்தின் நினைப்பு வந்தது.

'பாவம்! வாய்வுத் தொல்லையால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தாள் பாட்டி! முடக்கத்தான் கீரையை ஆய்ந்து ரசம் வைத்துக் கொடுத்தால்... வாய்வுத் தொல்லைக்கு நல்ல நிவாரணம் கிடைக்குமே!' என்ற நினைப்பில் ஒரு கட்டுக் கீரையை வாங்கி பையின் மேலாக பத்திரமாக வைத்தாள்.

இரண்டு கனத்த பைகளையும் தூக்கிக் கொண்டு நடக்கையில்... தோள்பட்டைகள் இரண்டும் இற்று விடும் போல் வலித்தன. ஆட்டோவில் ஏறினால் சுளை யாக முப்பது ரூபாய் செலவாகிவிடும் என்ற நினைப்பில்... பைகளை ஓரமாக ஆங்காங்கே கீழே வைத்து எடுத்துக் கொண்டு நடக்கலானாள் உமா.

## 7

திருவான்மியூர் கடற்கரையோரமாக அமைந்திருந்தது அந்த பங்களா. வாசலருகே கொப்பும் கிளையுமாகப் படர்ந்திருந்த வேப்ப மரம். ஜிலு ஜிலுவென்று காற்று! வீட்டைச் சுற்றித் தென்னை மரங்கள். அந்த பங்களா மிகுந்த அழகாய் இருந்தது. பால்கனியிலிருந்து பார்த்தால்... அலையடிக்கும் கடல் காட்சிகள் என்று ரம்யமாக இருந்தது மனதைக் கொக்கி போட்டு இழுத்தது.

பவித்ராவுடன் வந்திருந்தவர்களைப் பார்த்து விட்டுத் திகைத்துப் போயிருந்தாள் மதுமதி. ஐந்து இளம் பெண்களும், நான்கு இளைஞர்களுமாக அங்கு வந்திருந்தனர்.

''மது... இவங்க என்னோட ப்ரண்ட்ஸ். இவ ராஜி, இது ராதா, இவ கல்பனா, ஸ்ரீமதி... தீப்தி! இவன் கார்த்திக்,



ரவீந்தர், சுரேஷ், பாலாஜி!'' உடன் வந்திருந்தவர்களை அறிமுகப்படுத்தினாள் பவித்ரா.

பரஸ்பர அறிமுகப் பேச்சுக்கள் முடிந்ததும்... அவர்களை மாடியிலுள்ள அந்த நீண்ட சோபாவில் அமர வைத்து விட்டு சட்டென்று மறைந்தாள் மதுமதி. பத்து நிமிடங்கள் கழிந்த பின்பு தான் வந்தாள்.

''ஹாய்! ப்ரண்ட்ஸ், இவங்க தான் என்னோட அக்கா அம்பிகா. இவன் என்னோட அண்ணன் சந்துரு. அக்கா வோட ஹஸ்பெண்ட்... அதான் அத்தானுக்கு மாசத்துல பாதி நாளுக்கு மேலே வெளியூர்ல வேலை. சொந்த பிஸினஸ். பறந்து பறந்து சம்பாதிக்கறாரு. சந்துரு, லெதர் பிஸினஸ் பண்ணிட்டிருக்கான். அக்கா முக்காவாசி நாள் இங்க தனியா தான் இருப்பாங்க. அதனால் டைம் கிடைக்கும்போதெல்லாம் நாங்க இங்க வந்துடுவோம். இவ்ளோ பெரிய பங்களாவைப் பராமரிக்க உதவிக்கு ஆட்கள் இருக்காங்க!'' அறிமுகப் படலத்தைத் தொடங்கி வைத்தாள் மதுமதி.

அந்த அம்பிகா சற்றுக் குட்டையாய் குண்டாய் இருந்தாள். பாப் தலை, உதட்டில் லிப்ஸ்டிக், கண்களில் 'மஸ்காரா' என்று ஏகத்துக்கும் 'மாடர்ன்' ஆகத் தெரிந்தாள்.

''நீங்க வந்ததுல எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு!'' என்று கூறியவள் பவித்ராவையே ஏற இறங்கப் பார்த்தாள்.

அந்த சந்துரு ஆறடி உயரத்தில்... பார்க்க பளிச்சென்று சினிமா ஹீரோவைப் போலிருந்தான். ஆண், பெண் பேதமில்லாமல் அனைவரது கைகளையும் பற்றிக் குலுக்கினான்.

''ப்ரண்ட்ஸ்! நாம ஜாலியா என்ஜாய் பண்றதுக்கு தான் இங்கே வந்துருக்கோம். எல்லாரும் மனசு விட்டுப்

பேசணும். நம்ம மனசுக்குப் பிடிச்ச மாதிரி... நாம நடந்துக்க முடியுதா? பேரண்ட்ஸ் எதுக்கெடுத்தாலும் தலையிட்டு தடை போட்டுட்டுத் தான் மறுவேலை பாக்கிறாங்க... இங்க நமக்கு எந்த விதமான தடையுமில்ல. மனசுக்குப் புடிச்ச எந்த விஷயத்தையும் இங்க செய்யலாம்.

''ஜூஸ், கோக், பீர்னு ஏகப்பட்ட அயிட்டம்ஸ் இருக்கு. இதுல எதை வேணும்னாலும் தயங்காம எடுத்து உங்க தாக சாந்திக்கு குடிக்கலாம், மனசுக்குப் புடிசசவங்களோட சேந்து டான்ஸ் பண்ணலாம். இங்க நாம்ப ப்ரீ பேர்ட்ஸ் தான்'' மதுமதி கூறியதுதான் தாமதம்...

''ஹேய்ய்ய்!''... என்று ஒரே சமயத்தில் அவர்கள் கூச்ச லிட்டனர். சிலர் பிடித்த பானத்தை அருந்தி தாக சாந்தி செய்தனர். சிலர் ஏதோ ஒரு பாப் சாங் போட்டு... வலிப்பு வந்தாற்போல் வெட்டி... வெட்டி... டான்ஸ் ஆடினர்.

மதுமதியும் அம்பிகாவும் 'லஞ்ச்' தயாரிக்கும் மும்முரத் தில் இருந்தனர்.

''கமான்... லெட்ஸ் டான்ஸ்'' சந்துரு தனது வலது கரத்தை நீட்டினான். மறுக்க முடியாமல் அவனது கரத்தைப் பற்றிக் கொண்ட பவித்ரா, அவனது கண்களை ஏறிட்டாள். நளினமாக, நாசூக்காக அவளுடன் ஆடிய வன்... மெல்ல குனிந்தான்.

''பவி! யூ லுக் ஸோ ப்யூட்டிஃபுல்!'' அழகான ஆகிருதி யான இளைஞன் தன்னைப் புகழ்ந்ததும் பவித்ராவின் உள்ளம் குதூகலித்து ஆர்ப்பரித்தது.

''தேங்க் யூ'' முறுவலித்தாள்.

''வாவ்! இந்த சிரிப்புக்கு நூறு தாஜ்மஹாலை பரிசாகக் குடுக்கலாம்!'' நீண்ட இமைகள் பட்டாம்பூச்சியாக படபடத்தன. மனசுக்குள் சாரல் அடித்தது.



''ப்ரண்ட்ஸ்! எல்லோரும் லஞ்ச் சாப்பிட வாங்க!'' மதுமதி உரக்க அழைத்தாள். அதுவரை கனவு மிதக்கும் கண்களோடு நடனமாடிக் கொண்டிருந்தவர்கள் அனைவரும் விழிப்புற்று டைனிங் ஹாலுக்கு வந்தனர்.

''லஞ்ச் சாப்பிட்டு முடிச்சிட்டு... எல்லாரும் ரிலாக்ஸ் பண்ணுங்க! யாரோட குறுக்கீடும் இல்லாம... டான்ஸ் ஆடி என்ஜாய் பண்ணுங்க! போரடிச்சா... எதிர்த்தாப்பல இருக்கற கடல் தண்ணியில விளையாடலாம்!'' அனை வரும் ஆர்வம் ததும்பும் விழிகளால் மதுமதியை ஏறிட் டனர்.

உருப்படுவதற்கான பல ''நல்ல வழி''களைக் கூறும் மதுமதியை அவர்களுக்கு நிரம்பவே பிடித்துப் போனது.

'கூடா நட்பினால்...' அழிவுப் பாதையை நோக்கி தான் விரைந்து செல்வதை அறியாமல் மகிழ்ச்சிக் கடலில் திளைத்துக் கொண்டிருந்தாள் பவித்ரா.

## 8

அந்த பங்களாவின் பால்கனியில் நின்று கொண்டிருந்தாள் பவித்ரா. அலை அடிக்கும் கடலையே வெறித்துக் கொண்டிருந்தாள். போட்டா போட்டி போட்டுக் கொண்டு அலைகள் விரைந்து வந்து கரையை முட்டி மோதி விட்டு, வந்த வேகத்தில் பின்னோக்கி ஓடின.

ஜிலுஜிலுத்த உப்புக்காற்று அவளது துப்பட்டாவைப் படபடக்க வைத்தது. பறக்க எத்தனித்த துப்பட்டாவை இழுத்துப் பிடித்து கழுத்தைச் சுற்றி 'மப்ளர்' போல் கட்டிக் கொண்டாள்.

'தான் ஒரு தன்னிகரற்ற அழகி' என்ற கர்வம் பவித்ரா வுக்கு உண்டு. எத்தனையோ இளைஞர்கள் அவளது தரிசனம் காண... மணிக்கணக்கில் தவமிருந்து தவிப் பதை அவள் அறிவாள்.

'ஒரே நாள் பழக்கத்தில்... சந்துருவுடன் நடனமாட சம்மதித்தது சரியா?' குற்றவுணர்வில் மனதின் ஓரத்தில் ஒரு அரிப்பு இருந்து கொண்டே இருந்தது.

''என்ன பவி? இங்க தனியா நின்னுட்டிருக்கே? லஞ்ச் எப்படி இருந்தது?''

''நல்லா இருந்துச்சு! இந்த வீடு லோன்லியா... ரம்யமா இருக்குது மது! அலையடிக்கற கடலை... நாள் முழுக்கப் பார்த்தாலும் சலிக்காது போலிருக்கு!''

''கரெக்ட், பவி! சாப்பிட்டு முடிச்சிட்டு... மத்தவங்க ஜாலியா பீச்சுக்குப் போறாங்க! டயத்தை வேஸ்ட் பண் ணாம நாமளும் என்ஜாய் பண்ணலாம். அதோ... சந்துரு வர்றான் பார்!... பவி! அடுத்தவாட்டி நீ தனியா கிளம்பி வாயேன்!''

''தனியா வந்தா... ஜாலியா இருக்காதுன்னுதானே இவங்களையும் அழைச்சுட்டு வந்தேன்! ஆமா... நான் மட்டும் வரணும்னு சொல்றியே? என்ன காரணம்? இவங்க வந்ததுலே... உனக்கு எதுவும் சிரமம் இல்லை'ன்னு சொன் னியே?'' நெற்றியில் சிறு முடிச்சு விழ ஏறிட்டாள் பவித்ரா.

''அப்படிக் கேளுங்க! தனிமையிலே இனிமை காண முடியுமா? பவித்ராவோட கேள்விக்கு பதில் சொல்லு மது!'' சிரித்தபடி வந்து நின்றான் சந்துரு.

''அ... அது வந்து.. வந்து... நான் அந்த அர்த்தத்துல சொல்லலை. எல்லாரையும் கேதர் பண்ணி... புரோக்ராம்



ஃபிக்ஸ் பண்ணிட்டுத் தான் வரணும்னு அவசியம் இல்ல. இது உன்னோட சிஸ்டர் வீடு மாதிரி! நினைச்ச மாத்திரத்துல தாராளமா கிளம்பி வரணும். எந்த விதமான தயக்கமும் தேவையில்ல... அதைத்தான் நான் சொல்ல வந்தேன்!''

மதுவின் பதிலில் ஒரு தடுமாற்றம்... அப்பட்டமாய் தெரிந்தது.

'கூடா நட்பு' என்பதைப் பற்றி... திருக்குறள் அளிக்கும் விளக்கத்தை நன்கு படித்திருந்தும் அதி புத்திசாலியாக இருந்தும்கூட, கண் மூடித்தனமாக மதுவின் நட்பை விரும்பினாள் பவித்ரா.

''பவி! நீ சந்துருகூட போ! நான் உனக்கு புக்ஸ் எடுத்து வச்சுட்டு வந்துடறேன். ரொம்ப நல்ல நாவல்ஸ் தெரி யுமா? ஞாபகம் இருக்கும்போதே எடுத்து வச்சிடறேன்... இல்லைன்னா மறந்து போயிடும். அதான்!'' நழுவினாள் மது.

பங்களாவின் வாசலருகே, அந்த வேப்ப மரத்தடியில் நின்றிருந்தான் சந்துரு. கொப்பும் கிளைகளும் கடற் காற்றின் உபயத்தில் சலசலவென்று ஆடின. சுகமான காற்று உடலைத் தழுவிக் கொண்டிருந்தது.

''போகலாமா பவி!'' சந்துரு கேட்டதற்கு, தலை யசைத்தபடி நடந்தாள் பவித்ரா. விளக்கைத் தேடிச் செல் லும் விட்டில் பூச்சியைப் போல்... விபரீதம் விளையப் போகின்றது என்பதை உணராதவளாய்... சந்துருவுடன் நடந்து சென்றாள். அடி மனதில் 'இது தவறு' என்று எச்சரிக்கை மணி அடித்தாலும்... அதைப் புறந்தள்ளி விட்டு... 'ஜாலி' ஒன்றையே குறிக்கோளாகக் கொண் டிருந்தாள்.

ஏதோ ஒரு தீய சக்தி அவளது அறிவுக் கண்ணைக் கட்டிப் போட்டிருந்தது. 'விநாச காலே... விபரீத புத்தி' என்று பெரியவர்கள். சும்மாவா கூறி வைத்தார்கள்?

கடல் நீரில் கால்களை நனைத்தபடி நின்றிருந்தார்கள். பெரிய அலை வரும்போது 'ஹாய்' என்று கூச்சலிட்டுக் கொண்டு பின்னோக்கிக் கரைப் பக்கம் ஓடி வந்தார்கள். ஒவ்வொரு அலைக்கும். போவதும் வருவதுமாக நெடு நாள் பழகிய காதலர்களைப் போன்று விளையாடிக் களித்தனர்.

* * *

அந்த வயதான தம்பதியினர் கால்களில் மணல் புதையப் புதைய மெல்ல நடந்து வந்தனர். கூட வந் திருந்த ஒரு ஆள் 'கைடு' போல் முன்னே நடந்து சென் றான்.

''வீடு உங்களுக்கு கண்டிப்பா பிடிக்கும். அந்த வீடு ரெண்டு வருஷம் முன்னாடி கட்டியதுதான்! நீங்க வாங் கிட்டீங்கன்னா... காத்தாட டெய்லி நீங்க பீச்ல நடக்க லாம்!''

''அது சரி! வாசலுக்கு கிட்டக்க ஒரு வேப்ப மரம் இருக்கே?... அந்த பங்களாவுல யார் இருக்கா?'' அந்தப் பெரியவர் ஆவலுடன் கேட்டார்.

''யார் இருக்காங்கன்னு சரியாத் தெரியலை! ஆனா... அப்பப்ப ஜோடி ஜோடியா யாராவது வந்து தங்கிக் கும் மாளம் போடுவாங்க போல!''

அசட்டையாக பதிலளித்தான்.

''காமாட்சி!... அதோ அங்க பாரு! அது யாருன்னு தெரி யுதா?'' கிழவர் அந்த இளம் பெண்ணை சுட்டிக் காட்டினார்.



''மங்களத்தம்மா வீட்டுப் பொண்ணு மாதிரி இல்ல இருக்கு? ஆமா... இவளுக்கு எப்போ கல்யாணம் ஆச்சு?'' அப்பாவியாய் கேட்ட மனைவியை அதட்டினார் கிழவர்.

''மண்ணாங்கட்டி! இன்னும் கல்யாணமே ஆகல... கதை வேற மாதிரி போகுது காமாட்சி... அந்தக் குடும் பத்துல பொறந்த பொண்ணா இப்டி? எனக்கு மனசே ஆறலை காமாட்சி!'' ஆற்ற மாட்டாமல் கிழவர் புலம்பித் தள்ளினார்.

ஒரு நிமிடம் நின்று பவித்ராவையே கவனித்தார். முதியவருக்கு ஆத்திரமும் ஆவேசமும், வெறுப்பும் மண்டிக் கொண்டு வந்தன.

* * *

''ட்ரிங்... ட்ரிங்... ட்ரிங்...

செல்ஃபோன் சிணுங்கியது. செல்லை உயிர்ப்பித்தாள் பவித்ரா.

''ஹலோ பவி! நாந்தான் அம்மா பேசறேன். எங்கே இருக்கே?'' கற்பகத்தின் குரலில் பதற்றம் தொற்றி நின்றது.

''என்னம்மா நீ? பாட்டியோட தொணதொணப்புக்கு பயந்துட்டு தான் நான் மது வீட்டுலே படிச்சிட்டுருக்கேன். படிச்சிட்டு நானே வருவேன்ல... அதுக்குள்ள என்ன அவசரம் உனக்கு?'' எரிந்து விழுந்தாள் பவித்ரா.

''புரியாம பேசாதம்மா! அப்பாவுக்கு நெஞ்சு வலி வந்து ஆஸ்பத்திரியில சேத்துருக்கோம்... உங்க அண்ணன் நரேந்திரனை வேற காணோம். அவனோட செல்லை ஆஃப் பண்ணி வச்சிருக்கான் போலிருக்கு!

''உமா தான் விஷயம் தெரிஞ்சதும் ஓடி வந்து உதவினா... நா பயத்துல கையைப் பிசைஞ்சிட்டு நிக்கறேன்... நான் ஆடிப் போயிருக்கேன்மா... சீக்கிரமா கிளம்பி வந் துடறியா?'' கற்பகத்தின் குரல் தழுதழுத்தது.

''எந்த ஹாஸ்பிடல்லே சேத்துருக்கே?'' கடுப்பாய் கேட் டாள் பவித்ரா.

''ஏய்... என்னடி இது? நானே பயத்துல வெடவெடன்னு நடுங்கிக்கிட்டு உக்காந்துருக்கேன்... பதறிகிட்டு ஓடி வராம... கிராஸ் கேள்வி கேட்டுக்கிட்டு இருக்கியே? நீ முதல்லே கிளம்பி வீட்டுக்கு வா... அதுக்கு அப்புறம் நாம்ப அப்பாவைப் பாக்கப் போகலாம்! பெத்தவங்களுக்கு ஒண்ணுன்னா... பதற மாட்டியா நீ? நின்னு நிதானமா பேசிட்டிருக்கியே... உன்னைப் போய் பெத்தேன் பாரு... என்னைச் சொல்லணும்!'' கற்பகத்தின் பொறுமை எல்லை கடந்து விட்டிருந்தது. எரிமலை போல் வெடித்து விட்டாள்.

கடற்கரைக் களியாட்டம் பாதியிலே நின்று போனதில் அவளுக்குக் கோபம் பீறிட்டுக் கொண்டு வந்தது. சந்துரு பின் தொடர்ந்து வர... அந்த பங்களாவுக்குச் சென்று மதுவிடம் விஷயத்தைக் கூறி விடை பெற்றாள் பவித்ரா.

''சந்துரு! உன்னோட டூ வீலர்லே... பவியைக் கொண்டு விட்டுட்டு வா!'' மது பணித்தாள். அசுர வேகத்தில் சந்துரு பைக்கை ஓட்ட... பின்னால் அமர்ந்த பவித்ரா அவனது புஜத்தைப் பற்றிக் கொண்டாள்.

வீட்டு வாசலில் அவளை இறக்கி விட்டுக் கைய சைத்து... சந்துரு விடை பெற்றதை... அந்தத் தெருவில் உள்ளவர்கள் சிரத்தையாக கவனித்தனர்.



## 9

மகன் நடேசனுக்கு நெஞ்சு வலி வந்ததும் ஏகத்துக்கும் பயந்து விட்டிருந் தாள் பாட்டி மங்களம். ஏற்கனவே இளைய மகன் சபேசனைப் பறி கொடுத்து விட்டு... மீளாத துயரத்தில் தத்தளித்து மருகிக் கொண்டிருந்த வளுக்கு... நடேசன் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டதைக் கண்டதும் 'பகீர்' என்ற உணர்வில் அடி வயிற்றைப் பிசைந்தது.

ஒற்றைக் கண்ணில் நீர் வழிய, குறுக்கும் நெடுக்குமாக விரைந்த டாக்டர்களையும், நர்ஸ் பட்டாளத்தையும் கண்டு அரண்டு போனாள்.

''உமாக்கண்ணு! எனக்கு பயமா இருக்குடா! இவங்க பண்ற அமர்க்களத்தைப் பாத்தா.. எங்க இவனும் என்னை விட்டுட்டுப் போயிடுவானோன்னு கலக்கமா இருக்கு.''

''ஒண்ணும் பயப்படத் தேவையில்லை பாட்டி! பகவான் இருக்கார். இங்க இருக்கற டாக்டர்ஸ் எல்லாம் ரொம்பத் திறமையானவங்க... பெரியவங்க நீங்க நம்பிக்கை இழக்கலாமா? அப்புறம் பெரியம்மாவுக்கு யார் ஆறுதல் சொல்றது?'' மெல்லிய குரலில் கடிந்து கொண்டாள் உமா.

நடேசனுக்கு நெஞ்சு வலி வந்து துடிக்க ஆரம்பித் ததும்... வேலைக்காரி மூலமாக விஷயத்தைத் தெரிந்து கொண்டு உமாதான் விரைந்து வந்து ஆவன செய்தாள். மகனும் மகளும் வீட்டில் இல்லாத தருணத்தில் கணவ னுக்கு நெஞ்சு வலி வந்ததும்... கற்பகத்திற்கு கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை.

கிழவி மங்களம் திகிலில் உறைந்து போனாலும், சம யோசிதமாக வேலைக்காரியைத் துரத்தினாள். நான்கைந்து

வீடுகள் தள்ளித்தான்... உமாவின் வீடு என்பதால் அவளும் சடுதியில் ஓடி வந்து பார்த்தாள். சட்டென்று டெலிபோன் டைரக்டரியைப் புரட்டிப் பார்த்து... சந்திரா மருத்துவமனைக்கு போன் செய்து... ஆம்புலன்ஸுக்கு ஏற்பாடு செய்தாள்.

நரேந்திரனை 'செல்லில் பிடிக்க' முடியவில்லை என்றதும்... அவனது அலுவலகத்திற்கு போன் செய்தாள்.

''பாட்டி! நரேந்திரன் ஆபீஸ்ல இல்லயாம். சைட் சூபர் வைஸ் பண்ண, எங்கேயோ போயிருக்கானாம். அவனுக்குத் தகவல் தெரிஞ்சதும்... பறந்து வந்துடுவான் பாட்டி!'' ஆறுதல் கூறினாள் உமா.

துரித கதியில் ஆம்புலன்ஸ் வேன் அலறிக் கொண்டு வந்ததும்... நடேசன் அவசரமாக சந்திரா மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். ரிசப்ஷனில் பெயரைப் பதிவு செய்து விட்டு... அவசர சிகிச்சை பிரிவு வாசலருகே நின்று கொண்டாள் உமா.

அவ்வப்போது டாக்டர் எழுதித் தரும் ப்ரிஸ்கிரிப்ஷனை வாங்கி... பார்மஸிக்கு விரைந்து வேண்டியவற்றை வாங்கி... ஓட்டமும் நடையுமாக அவற்றை டாக்டரிடம் கொடுத்தாள். மூன்று மணி நேரம் நீண்ட யுகங்களாக நகர்ந்து தொலைத்தது.

''மைல்ட் அட்டாக்! நாலஞ்சு நாள் இங்கேயே இருக்கட்டும். ஹெல்த் கண்டிஷனை நல்லா பாத்துட்டு... அப்புறமா டிஸைட் பண்ணிக்கலாம். சுகர் பேஷண்ட் வேற.. ஜாக்கிரதையா இருக்கணும். டென்ஷனே பட விடாதீங்க. மாடிப்படி ஏறக்கூடாது. ஆயில் சுத்தமா சேக்காதீங்க... டயட் ரொம்ப முக்கியம். மறுபடியும் சொல்றேன்... எந்தக் காரணத்தைக் கொண்டும் அவர் டென்ஷன் படவே கூடாது...''



தலைமை மருத்துவர் நூற்றியெட்டு 'ரெஸ்ட்ரிக்ஷன்ஸ்' அள்ளி விட்டு விட்டு... ஸ்டெதாஸ் கோப்பும் கையுமாக காரிடாரில் டக் டக் என்று நடந்தார்.

''அழாதீங்க பாட்டி முதலுதவி குடுத்து முடிச்சிருக்காங்க. பயப்படற மாதிரி ஏதாவது இருந்தா... டாக்டரே வெளிப்படையா சொல்லியிருப்பாரே... பெரியம்மா! கண்ணைத் துடையுங்க... பவிக்கு போன் பண்ணினா லைன் கிடைக்கலேன்னு சொன்னீங்க... நீங்க வீட்டுக்குப் போய் மறுபடியும் ட்ரை பண்ணுங்க.

''மணி நாலே முக்கால்! அநேகமா... பவி இந்நேரம் வீட்டுக்கு வந்திருக்கலாம். பூட்டின வீட்டைப் பாத்துட்டு என்னவோ ஏதோன்னு நினைக்கப் போறா... அதனால நான் 'கால்' டாக்ஸி' பிடிச்சிட்டு வரேன். நீங்களும் பாட்டியும் கிளம்புங்க. பெரியப்பாவை நான் கவனிச்சுப்பேன்!''

''கற்பகம் வேணும்னா வீட்டுக்குப் போகட்டும். நான் இருக்கேன். வயசுப் பொண்ணு... உன்னை ஒத்தையா எப்டி விட்டுட்டுப் போறது?'' கிழவி பிடிவாதமாக மறுத்து விட்டாள்.

''சரி! நீங்களாவது புறப்படுங்க. பெரியம்மா! தைரியமா இருங்க. பவித்ரா வந்ததும் நிதானமா விஷயத்தைச் சொல்லுங்க. ஆங்... பெரியம்மா! அப்படியே எங்க வீட்டுலே... அம்மாக்கிட்டேயும் சொல்லிடுங்க. பெரியப்பாவுக்கு என்ன ஆச்சோ, ஏதாச்சோன்னு கிடந்து தவிச்சுட்டு இருப்பாங்க. அதான்!'' கெஞ்சும் குரலில் கேட்ட உமாவைப் பார்த்து... குற்றவுணர்வில் மெல்லத் தலையாட்டினாள் கற்பகம்.

கால்டாக்ஸியை அழைத்து கற்பகத்தை ஏற்றி அனுப்பி விட்டு உள்ளே வந்த உமா, பாட்டியை வெளி நோயாளிகள் வந்து அமரும் பெஞ்சில் உட்கார வைத்தாள்.

''இந்த கற்பகம் இருக்காளே... உன்னைப் பத்தி நான் உயர்வாப் பேசினா... அவளுக்கு உள்ளூர பத்திக்கிட்டு எரியும். 'எங்க பவி தான் உசத்தியாக்கும்'னு பேசி எங் கிட்ட மல்லுக்கு நிப்பா! அங்கிட்டும் இங்கிட்டும் அல்லாடி பொறுப்பா நீ செயல்படறதைப் பாத்துவிட்டு... இப்ப வாயடைச்சுப் போயிட்டா... பாரேன்!'' மங்களம் அங்கலாய்த்தாள்.

''உஷ்! என்ன பாட்டி இது? பழசை விட்டுத் தள்ளுங்க!''

''மைத்துனர் இறந்து போயிட்டாரே? கைக்கும் வாய்க்கும் பத்தாம... ஓரகத்தியும் அவ குழந்தைகளும் உழைச்சு ஓடாத் தேய்ஞ்சு... கஷ்ட ஜீவனம் நடத்தறாங்க ளேன்னு... ஒரு நாளாவது நெனைச்சுப் பாத்து இருப் பாளா... இந்தக் கற்பகம்?' அவங்களுக்குச் சேர வேண்டிய பணத்தை சமமாப் பிரிச்சுக் குடுத்துடுங்க'ன்னு... நடேசன் கிட்ட தான் சொல்லி இருப்பாளா?

''அவன் புருஷனாகவே இருக்கட்டும்... தப்பு செய்தா தட்டிக் கேட்க வேணாமா? நம்ம குடும்பம் மட்டும் நல்லா இருந்துட்டாப் போறும்னு... சுயநலமா இருந்துட்டா பாத்தியா? சொந்த பந்தத்துல கஷ்ட நஷ்டம் வந்தாக்க... ஒருத்தருக்கொருத்தர் உதவி கைதூக்கி விடணும். அது தான் மனுஷத் தன்மை!

''நீ எக்கேடு கெட்டாலும் எனக்கென்னன்னு இருந்தா... நமக்கும் அஞ்சறிவு படைச்ச ஜீவராசிகளுக்குமே வித்தி யாசம் இல்லாம போயிடும்! பணம் இன்னக்கி இருக்கும். நாளக்கி போயிடும்! கஷ்ட காலத்துல... பணத்தை மட்டும் வச்சுக்கிட்டு எதையும் சாதிக்க முடியாது. மனு ஷாளோட ஆதரவும் தேவைன்னு... இப்ப கற்பகத்திற்கு புரிஞ்சு இருக்கும்.



41414
622123

''உன்னோட நல்ல மனசை இவங்க புரிஞ்சுக்கிறதுக்கு பகவான் ஒரு சந்தர்ப்பம் குடுத்தாரே... அந்த மட்டும் எனக்குத் திருப்தி தான்! 'தோழிங்க கூட சேந்து படிக்கப் போறேன்'னு... வெளியில போறாளே? பவித்ரா... நிஜ மாவே படிக்கிறதுக்குப் போறாள்னு நீ நம்பறியா?'' பாட்டி மங்களம் விடாமல் புலம்பித் தீர்த்தாள்.

## 10

நடேசனுக்கு மிக்க வெறுப்பாக இருந்தது. தன் சுயநலத்தை நினைத்து மனதளவில் மிகவும் கூசிப்போனார். மகன் நரேந்திரனும் அருமை மகள் பவித்ராவும் தன் மீது மிகுந்த பாசம் கொண்டவர்கள் என்று இதுவரை எண்ணியிருந்த வருக்கு... தான் போட்டது வெறும் தப்புக் கணக்குதான் என்று புரிந்ததும்... மனிதர் ஆடித்தான் போய்விட்டார்.

இவர்கள் மீது கொண்ட பாசத்தினால் தானே... சொந்தத் தம்பி சபேசன் விபத்தில் மறைந்ததும்... தவித்து நின்ற அவனது குடும்பத்திற்குச் சேர வேண்டிய பாத்தியதையை சரியாகத் தராமல் 'கண் துடைப்பு' செய்திருந்தார்.

அன்று ஹாஸ்பிடலில் அவர் அட்மிட் ஆகி... வெகு நேரம் ஆகியும் நரேந்திரன் வந்து சேரவில்லை. இரவு ஏழு மணி வாக்கில் மெல்ல வந்து எட்டிப் பார்த்த மகனின் முகத்தில் சந்தோஷ ரேகை தான் படர்ந்திருந்தது. 'நெஞ்சு வலி வந்து அப்பா படுக்கையில் விழுந்து கிடக்கிறாரே?' என்று சிறிதுகூட விசனப்பட்டதாகத் தெரியவில்லை.

''இப்போ கொஞ்சம் பரவாயில்லை தானேப்பா? ஒரு குட் நியூஸ் அப்பா... யு.எஸ்.லே இருந்து பேக்ஸ் ஒண்ணு

வந்ததுப்பா... ஏகப்பட்ட சம்பளத்தோட நல்ல ஜாப் கிடைச்சிருச்சுப்பா... இன்னமும் ஒரு மாசம் தான் டயம் இருக்கு.

''எல்லா ஏற்பாட்டையும் பண்ணிட்டுக் கிளம்பணும். பேக்ஸ் கிடைச்சதும்... ப்ரண்ட்ஸ் கிட்ட இந்த விஷயத்தை 'ஷேர்' பண்ணப் போயிட்டேன். ப்ரண்ட்ஸை பாத்துட்டு... திரும்ப 'சைட்டு'க்கு வந்தப்போதான்... உங்களப் பத்தி தகவல் எனக்கு கிடைச்சது.''

வெளிநாட்டுக்குச் செல்லப் போகிறோம் என்ற மகிழ்ச்சியில் நரேந்திரன் அந்தரத்தில் மிதந்து கொண்டிருந்தான். சந்தோஷத்தில் ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தவனுக்கு... தந்தையின் உடல் நிலை ஒரு பொருட்டாகவே தோன்றவில்லை போலும்.

அருமை மகள் பவித்ராவும் பட்டும் படாமலும் தான் நின்றிருந்தாள். ஏற இறங்க ஒரு பார்வை பார்த்து விட்டுக் கேள்விக் குறியோடு... மனைவி கற்பகத்தை நடேசன் நோக்கினார்.

''பவி! என்னம்மா சும்மா நிக்கிறே? அப்பாட்ட ஏதாச்சும் பேசு!''

''உஷ்! அப்பா ஹார்ட் பேஷண்ட்... எதுவும் பேசி டிஸ்டர்ப் பண்ணக்கூடாது.''

''சரி! அவரு பேசக்கூடாது. நெஞ்சு வலி வந்து துடிச்சிருக்காரு. இப்போ எப்டி இருக்கு? பரவாயில்லையா? எதைப் பத்தியும் டென்ஷன் படாதீங்கன்னு... ஆறுதலா ரெண்டு வார்த்தை பேசினா... நீ குறைஞ்சா போயிடுவே? வந்து வெறுமனே நிக்கிறியே?'' ஆற்றமாட்டாமல் கற்பகம் வெடுக்கென்று கேட்டு விட்டாள்.



''இது ஹாஸ்பிடல்! ஒவ்வொருத்தரும் வளவளன்னு பேசிட்டு நின்னா... நர்ஸ் திட்டுவாங்க. சரி... அப்பா ரெஸ்ட் எடுக்கட்டும். 'விசிட்டிங் அவர்ஸ்' முடியற நேரம் வந்தாச்சு போல... நான் வீட்டுக்குக் கிளம்பட்டா?'' அடிக்கடி கர்ச்சீப்பால் மூக்கைப் பொத்திக் கொண்டாள் பவித்ரா. ஆஸ்பத்திரிக்கே உரிய பிரத்யேக மருந்து நெடி பிடிக்காமல் முகத்தைச் சுளித்தாள்.

ஒரு வார காலம் நடேசன் ஆஸ்பத்திரியில் தங்க நேரிட்டு விட்டதில்... மனிதர் மிகவும் தவித்துப் போனார். யு.எஸ். பயணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்வதில் மும்முரமாக இருந்த நரேந்திரன், தினமும் ஒரு முறை... பெயருக்கு எட்டிப் பார்த்தான்.

காலையோ, மாலையோ வந்தால் ஒப்புக்கு பத்து நிமிடங்கள் மூச்சைப் பிடித்துக் கொண்டு இருக்கும் தினுசில்... திணறிக் கொண்டிருந்து விட்டு, நைசாக நழுவி விடுவாள் பவித்ரா. பெற்ற மக்களால் துளியும் பிரயோஜனமில்லை என்பதை நடேசன் நன்கு உணர்ந்து விட்டிருந்தார்.

ஆஸ்பத்திரியில் பகல் முழுவதும் தங்கி, உமா அவரைக் குழந்தையைப் போன்று நன்கு கவனித்துக் கொண்டாள். வேளா வேளைக்கு மருந்து மாத்திரைகள் கொடுத்து... ஹார்லிக்ஸ், ஜூஸ் என்று பானங்களைப் பருகக் கொடுத்து... வேண்டியவற்றை அருகில் உள்ள பார்மஸியில் வாங்கிக் கொண்டு வந்து... அக்கறையுடன் வளைய வந்த உமாவை, அங்குள்ளவர்கள் நடேசனின் சொந்த மகள் என்றே கருத ஆரம்பித்து விட்டார்கள்.

அன்று காலையில் நடேசனுக்கு ஊசி போட்டு விட்டு நிமிர்ந்த டாக்டர் திரும்பிப் பார்த்தார். ப்ளாஸ்க்கில் இருந்து

சூடான பாலை டம்ளரில் நிறைத்து, ஹார்லிக்ஸ் போட்டு அதை ஸ்பூனால் கலக்கிக் கொண்டிருந்தாள் உமா.

''மிஸ்டர் நடேசன்! இந்த மாதிரி ஒரு மகள் கிடைக்க நீங்க கொடுத்து வச்சிருக்கணும். ஒரு நர்ஸை அப்பாயிண்ட் பண்ணியிருந்தாக்கூட... இந்த அளவுக்கு கவனிச்சிருக்க மாட்டாங்க. என்ன ஒரு பாசம், அக்கறை, பொறுப்பு? எமன் கூடப் போராடியாவது உங்களை... உங்க பொண்ணு மீட்டுட்டு வந்துடுவா!'' டாக்டர் மனதாரப் பாராட்டினார்.

''வாஸ்தவம் தான் டாக்டர்! இந்த மாதிரி ஒரு மக கிடைக்கக் குடுத்துத் தான் வச்சிருக்கணும்!'' நெகிழ்ந்து போனார் நடேசன்.

''ஒரு மகள்... தன் அப்பாவுக்குச் செய்ய வேண்டிய கடமை இதுதான்! இந்த சாதாரண விஷயத்தைப் பத்தி... யாராவது பாராட்டிப் பேசுவாங்களா? நல்ல ஜோக் டாக்டர்!'' சூடான பாலை ஆற்றிக் கொண்டே பதிலளித்தாள் உமா.

இரவு நேரத்தில் மனைவி கற்பகம் ஆஸ்பத்திரியில் தங்கினாள். இரவில் பதினோரு மணி வாக்கில் இரண்டு மாத்திரைகளைக் கொடுத்து விட்டு, நடேசனுக்குப் போர்வையைப் போத்திவிட்டு... திருப்தியுடன் தலையைச் சாய்த்துத் தூங்கி விடுவாள் கற்பகம். மூன்று மணி நேரத்திற்கு ஒரு முறை அவருக்கு மாத்திரைகள் தர வேண்டும் என்று டாக்டர் உத்தரவிட்டதை... பலமுறை கற்பகத்திற்கு ஞாபகப்படுத்தி விட்டுத்தான் உமா செல்வாள்.

''இதோ பார் உமா! யாருக்கும் என்னை விட... அவர் மேல அதிகப் படியான அக்கறை இருந்து விட முடியாது!



நா கவனிச்சுப்பேன்!... காலைலே வரச்சே... பெரியப்பாவுக்கு மாத்துத் துணிங்க எடுத்துட்டு வந்துடு!'' என்று அதிகாரம் தொனித்த குரலில் அதட்டுவாள்.

பதினோரு மணிக்கு தலையை சாய்த்துப் படுத்து விட்டால்... கும்ப கர்ணனின் தங்கையைப் போன்று குறட்டை விட்டுத் தூங்கி நடேசனின் தூக்கத்தையே கெடுத்து வைத்தாள். நிசப்தமான இரவில் சுவர்க்கடிகாரத்தில் 'டிக் டிக்' என்று முள் நகர்வதை வேடிக்கை பார்த்துக் கொண்டு, மிரள மிரள விழித்துக் கொண்டு... அவர் படுத்திருந்தார்.

ரவுண்ட்ஸ் வரும் டாக்டரும், நர்சும் இந்த அரிய காட்சியைப் பார்த்து விட்டு எரிச்சலடைந்து கற்பகத்தைத் திட்டுமளவுக்குப் படுத்து இருந்தாள்.

''ஏம்மா! எந்திரிங்கம்மா! பேஷண்டை கவனிக்க வந்தீங்களா? படுத்துத் தூங்க வந்தீங்களா?... நேரத்துல மருந்து மாத்திரையைக் குடுத்தீங்களா இல்லையா? உங்களால நல்லபடியா பாத்துக்க முடியலைன்னு நெனச்சா... பகல்ல வந்து கவனிக்குது பாருங்க... அந்தப் பொண்ணையே அனுப்பி வையுங்க'' வள்ளென்று எரிந்து விழுந்தாள், அந்த ஸ்டாப் நர்ஸ்.

## 11

பவித்ரா புரண்டு புரண்டு படுத்துப் பார்த்தும் தூக்கம் வந்து தொலைக்கவில்லை. 'அப்பா நடேசனுக்கு ஏன் தான் இந்த நெஞ்சுவலி வந்ததோ தெரியவில்லை.' அவளுக்கு உள்ளூர எரிச்சல் மண்டிக் கொண்டு வந்தது.

மனிதர் ஆஸ்பத்திரியில் படுத்திருந்த ஒரு வார காலமும் அவளால் வெளியில் எங்கும் செல்ல முடியாமல் போய் விட்டது. போதாததற்கு செமஸ்டர் தேர்வுகள் வரிசையாக வந்ததில்... வெளியில் எங்குமே தலை காட்ட முடியவில்லை.

ஆஸ்பத்திரியிலிருந்து டிஸ்சார்ஜ் ஆகி, வீடு வந்து சேர்ந்த நடேசன் சதா சர்வ காலமும் கால்களை நீட்டிப் படுத்துக் கொண்டிருந்தார். டாக்டர் எச்சரித்ததின் பேரில் வெளிவாசலுக்குச் செல்லாமல் முழு ஓய்வில் இருந்தாலும், தனது பிஸினஸ் விவகாரங்களைத் தொலைபேசி மூலம் கேட்டுத் தெரிந்து கொண்டார்.

உதவியாள் அவ்வப்போது நேரில் கொண்டு வரும் கணக்கு வழக்கு சம்பந்தமான பைல்களை சாய்ந்த வாக்கில் உட்கார்ந்து ஆராய்ந்து கொண்டாலும்... நடேசனுக்கு முழு திருப்தி ஏற்படவில்லை.

ஏதாவது சாக்கு வைத்து வெளியில் கிளம்பிச் செல்ல... பவித்ராவுக்கு உள்ளூர சங்கடமாக இருந்தது. நேரம் கிடைக்கும் போதெல்லாம் உமா, பெரியப்பா நடேசனைக் காண வந்து போய்க் கொண்டிருந்தாள். பெரியப்பா நடேசனின் கால் மாட்டில் அமர்ந்து கொண்டு... அவரது கால்களை இதமாக அமுக்கி விட்டு இன்முகத்துடன் பேசினாள்.

நாளிதழ்களில் வெளிவரும் செய்திகளை ஏற்ற இறக்கத்தோடு வாசித்துக் காட்டினாள். சேலைத் தலைப்பை இழுத்து இடுப்பில் செருகிக் கொண்டு... அடுக்களையில் புகுந்து பாட்டி மங்களத்தின் பரிந்துரையின்படி பத்தியக் கஞ்சி தயாரித்தாள் உமா.

வீட்டில் ஆள் ஆளுக்கு நெஞ்சு வலி வந்த மனிதரை 'தாங்கு தாங்கு' என்று தலையில் வைத்துக் கொண்டாடியதைக் கண்டு, பவித்ராவுக்கு பற்றிக் கொண்டு வந்தது. அதுவும் உமா வீட்டிற்கு வந்து சிரத்தையாக மருந்து மாத்திரைகள் கொடுத்துப் பணி விடை புரிந்து கொண்டிருக்கையில்... பவித்ராவால் வாயைத் திறந்து வெளியில் சென்று வர அனுமதி கேட்க முடியாமல் போய் விட்டது.



தப்பித் தவறி ஏதாவது கேட்கலாம் என்று போனாலும், அப்பா நடேசனின் கடுகடுத்த முகத்தைப் பார்த்துவிட்டு எதுவும் பேச முடிவதில்லை. சதா தன் அறையைச் சாத்திக் கொண்டு வேண்டிய மட்டும் தோழி மதுவுடன் செல்போனில் பேசித் தீர்த்தாள். அவள் மனது பரபரப்பான காலியான சூழலுக்கு ஏங்கித் தவித்தது. நோயாளித் தந்தை, அம்மா, பாட்டி... என்று யாரைக் கண்டாலும் கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

''பவி! உனக்குப் பிடிச்ச நெய்த்தோசை, வெங்காய சாம்பார், கொத்தமல்லிச் சட்னி இருக்கும்மா... சாப்பிட்டுட்டுப் படுத்துக்கோ!'' அம்மா கற்பகம் அடுக்களையிலிருந்து உரத்துக் குரல் கொடுத்தாள்.

''எனக்குப் பசிக்கலை! எதுவும் வேணாம். ஐஸ் வாட்டர் போதும்!'' கூறிக்கொண்டே அடுக்களையை எட்டிப் பார்த்தாள். தோசை வார்த்துக் கொண்டிருந்த உமா நிமிர்ந்து பார்த்து முறுவலித்தாள்.

''பாட்டிக்கும், பெரியப்பாவுக்கும்... உப்பு காரம் குறைவா எண்ணெ இல்லாம செய்திருக்கேன். ஆனா... உனக்கும், பெரியம்மாவுக்கும் தாராளமா எண்ணெ வார்த்துக் காரசாரமா சமைச்சிருக்கேன். பெரியம்மாவுக்கு தலை வலின்னு சொன்னாங்க... அவங்களுக்கு உதவலாமேன்னு நான் அடுக்களைக்குள் புகுந்துட்டேன்'' புன்னகை பூத்த படி... சட்னிக்குத் தாளித்துக் கொட்டினாள் உமா.

பவித்ராவுக்கு உள்ளூர கபகபவென்று எரிந்தது. சின்ன வயதிலிருந்தே உமாவைக் கண்டாலே... அவளுக்குள் பொறாமை உணர்வு தலை தூக்கும். இத்தனைக்கும் பவித்ரா நிகரற்ற அழகி தான். செல்வச் செழிப்பில் வளர்ந்தவள் தான்...

உமாவோ வறுமையில் வாடுபவள்தான்... ஆனால் தன்னிடம் இல்லாத ஒரு ப்ளஸ் பாயிண்ட் உமாவிடம் இருப்பதாக... பவித்ராவின் உள்ளுணர்வு அடிக்கடி கூறும்! அணிந்து கொள்ள உருப்படியான அணிகலன்கள் எதுவுமே இல்லாதவள்தான்... வித விதமான க்ரீம் பூச்சுகளைப் பார்த்தறியாதவள் தான். ப்யூட்டி பார்லர் பக்கமே தலை வைத்துப் படுக்காதவள் தான்...

ஆனால் அபரிமிதமான அழகை... கடவுள் உமாவுக்கு வஞ்சகமில்லாமல் அள்ளி வழங்கி விட்டிருந்தார். உதவும் மனப்பான்மையாலும், பழகும் விதத்திலும் அனைவரது உள்ளங்களைக் கட்டிப் போட்டிருந்தாள் உமா. அன்பு, பண்பு, மரியாதை.. இவற்றினால் பெரியவர்களின் உள்ளங்களைக் கொக்கி போட்டு இழுத்தாள் உமா.

''இதோ பாரு உமா! நீ சமைச்சதை நான் கையால தொடமாட்டேன். உபகாரம் பண்றது, உதவறது எல்லாம் அவங்களோட நிறுத்திக்கோ.. என்கிட்ட எதையும் வச்சுக்காதே... முதல்லே பாட்டி... அடுத்ததா அப்பா... எங்கம்மான்னு எல்லாரையும் கைக்குள்ளே போட்டுக்கிட்டே... எல்லாரும் உன்னை உசத்தி வச்சுப் பேசி... என்னை மட்டம் தட்டணும்னு தானே இவ்ளோ மெனக்கெடறே! இந்த பவி... எதுக்கும் சளைச்சவ கிடையாது... புரிஞ்சுக்கோ!'' வள்ளென்று எரிந்து விழுந்தாள் பவித்ரா.

''பாரு கற்பகம்! உமா அப்டி என்ன சொல்லிட்டா? எதுக்கு இப்டி கடுகு மாதிரி படபடன்னு பொறியறா?



உதவிக்கு வந்த பொண்ணை இப்படியா உதாசீனமாப் பேசுவாங்க? அவ யாரு? உனக்கு சகோதரி தானே? தூக்கி எறிஞ்சு ஏன் பேசறே? என்னத்துக்கு இப்படி விரோதம் பாராட்டறே?''

பாட்டி மங்களம் உமாவுக்குப் பரிந்து கொண்டு வாதாடினாள்.

''சரி... சரி! விடுங்க அத்தே!... அவரு காதுல விழுந்துடப் போகுது!'' தர்ம சங்கடத்துடன் முணுமுணுத்தாள் கற்பகம்.

அதற்குள் சப்தம் கேட்டு படுக்கையை விட்டு எழுந்து மெல்ல நடந்து வந்தார் நடேசன்.

''கற்பகம்! என்னாச்சு இவளுக்கு? ஏன் இப்படி குதிக்கறா? காரணம் என்னன்னு கேட்டியா? நானும் கொஞ்ச நாளா பாத்துட்டு தான் இருக்கேன். எதுவும் எனக்கு சரியாப் படலை. பாசத்தைக் கொட்டி வளர்த்தே... பெத்த தகப்பனுக்கு 'அட்டாக்' வந்துட்டதேன்னு... கொஞ்சமாச்சும் விசனப்பட்டாளா?

''ஆஸ்பத்திரியில கிடந்து வந்துருக்கேன். மூணாம் மனுஷி மாதிரி ஒப்புக்கு... தினமும் ஆஸ்பத்திரிக்கு வந்து எட்டிப் பார்த்துட்டு... அட்டென்டென்ஸ் குடுத்துட்டுப் போயிட்டா. எத்தனை நாளு ஓடி ஓடி.. பெத்த தகப்பனுக்கும் மேல என்னை உமா கவனிச்சுட்டு வர்றா? ஆனா நான் பெத்த பொண்ணு... பவி?

''எனக்காக ஒரு துரும்பை நகர்த்தியிருப்பாளா? இந்த நெஞ்சுவலி வந்தது கூட நல்லதுக்குத்தான்.... பெத்த புள்ளைங்க மேல... கண் மூடித்தனமான பாசம் வச்சிருந்தேன்... இப்பத் தான் எனக்கு கண்ணு திறந்திருக்கு. என்

தம்பி மக உமாவோட அருமையை உணர வைச்சதுக்கு... கடவுளுக்குத்தான் நான் நன்றி சொல்லணும்.

"இன்னொரு அட்டாக் வந்தா... இந்த உடம்பு தாங்குமோ என்னமோ? யார் கண்டா? நரேந்திரன் யு.எஸ்.லே செட்டில் ஆயிடுவான். காலாகாலத்துலே உமாவுக்கும், இவளுக்கும் கல்யாணத்தைப் பண்ணிட்டு... ஸ்வேதா போல ஒரு அமௌண்டை பேங்க்ல போட்டு வச்சுட்டா... எனக்கு பாரம் குறையும். ருக்மணிக்கும் கொஞ்சம் நிம்மதியா இருக்கும்.

"தரகர்கிட்ட சொல்லி வச்சிருக்கேன். நல்ல இடமா அமைஞ்சிட்டா.. சட்டு புட்டுன்னு முடிச்சிரலாம். என்னம்மா நான் சொல்றது சரிதானே?" பலகீனமான குரலில் பேசியபடி நடேசன், தாய் மங்களத்தை ஏறிட்டார்.

மங்களத்தின் முகத்திலிருந்த இறுக்கம் தளர்ந்து... திருப்தியும் சந்தோஷமும் படர்ந்தது. மனதிலிருந்த பெரும் பாரம் சட்டென்று இறங்கியது. அதுவரை பாறாங் கல்லாய் கனத்த இதயம்... இறகு போல் இலேசானது.

"இப்பத்தாம்ப்பா... என் மனசுக்கு நிம்மதியா இருக்கு!" பெருமூச்சு விட்டாள் மங்களம்.

குற்றவுணர்வில் தலை குனிந்திருந்த பவித்ரா விருட்டென்று நடந்து... தன் அறைக்குள் புகுந்து கொண்டாள். "உமாவின் மனதை நோகடிக்கலாம்" என்று சென்றவளுக்கு... முகத்தில் அறைபட்டது போல் அவமானமாயிருந்தது. பற்களை நறநறத்தாள் பவித்ரா.

"நான் கோவிலுக்குப் போயிட்டு வரேன்" மயில் கழுத்து நிறப் பட்டுப் புடவையைக் கட்டிக் கொண்டு, அடர்ந்த கூந்தலில் மல்லிகைச் சரத்தைச் சூடிக்



கொண்டு... ஒயிலாக வந்து நின்றாள் பவித்ரா. ஏறிட்டுப் பார்த்த கற்பகம் பரவசமடைந்து போனாள்.

"என் கண்ணே பட்டுடும் போல இருக்கு பவி! போயிட்டு சீக்கிரமா வந்துரு. அப்பா கோவிச்சுக்கப் போறார்" மகளின் கன்னத்தை வருடினாள் கற்பகம்.

வராண்டா சுவரோரமாக சாய்ந்து அமர்ந்து... கால்களை நீட்டிய வண்ணம் வெற்றிலையைக் குதப்பிக் கொண்டிருந்தாள் பாட்டி மங்களம். அவளது கால்களைத் தாண்டிக் கொண்டு நடந்து... வாசலை விட்டு வெளியேறிய பேத்தியைக் கண்டு மனதில் விசனப்பட்டாள்.

நெற்றி வகிட்டில் குங்குமம், கால்களில் மெட்டி அணிந்து கொண்டு செல்லும் பேத்தியின் போக்கைக் கண்டு... ஏகத்துக்கும் கலவரப்பட்டாள். இதைப்பற்றிக் கேட்டு ஏற்கனவே ஒரு முறை மங்களம் வாங்கிக் கட்டிக் கொண்டாள்.

"அததுக்கு கால நேரம்னு ஒண்ணு இருக்கு தெரியுமா? முறைன்னு ஒண்ணு இருக்கு!... எதுக்கு எல்லாத்துக்கும் அவசரப்படறே? இளங்கன்று பயமறியாதுன்னு சொல்வாங்க! இதெல்லாம் தப்பும்மா!" கரிசனத்துடன் புத்தி சொன்னவளைப் பிலுபிலுவென்று சண்டை பிடித்தாள் கற்பகம். அன்று பெரிய அக்கப்போரே நடந்து விட்டது.

"ஹூம்! எனக்கேன் வம்பு? எல்லாம் பட்டாத்தான் தெரியும்!" முணுமுணுத்தபடியே வெற்றிலையைக் குதப்பினாள் மங்களம்.

"அப்பாடி" வீட்டிலேயே அடைந்து கிடந்த பவித்ராவுக்கு மூச்சுத் திணறுவது போன்ற இறுக்கமான உணர்வு ஏற்பட்டதால் வெளிக்கிளம்பினாள். தெருமுனையைக் கடக்கும் முன் 'செல்' சிணுங்கியது.

''ஹாய் பவி? எப்படியிருக்கே? சந்துரு 'லைன்ல' இருக்கான் பேசுப்பா!'' மதுவின் குரலைக் கேட்டதும் இதமாயிருந்தது. சந்துருவுடன் பேசும்போது... அந்தரத்தில் மிதப்பது போன்ற இனம் புரியாத பரவசம் ஏற்பட்டது. 'களுக்' என்று சிரித்தபடி தன்னை மறந்து பேசினாள், அக்கம் பக்கத்து வீட்டு ஜன்னல்களில் தலைகள் முளைத்தன. அன்றைக்கு அசை போட நல்ல வம்பு கிடைத்து விட்ட மகிழ்ச்சியில் விழிகள் தெறிக்க வேடிக்கை பார்த்தனர்.

## 12

நாட்கள் வேகமாகப் பறந்தோடின. மகன் நரேந்திரன் யு.எஸ்.க்குப் பறந்து விட்டான். நடேசனுக்கு உடல்நிலை ஓரளவுக்குத் தேறி விட்டதால் நிதானமாக வெளியில் சென்று வியாபாரத்தை கவனித்துக் கொண்டார்.

உமாவுக்கு பி.எஸ்ஸி.யில் 'யுனிவர்சிடி ரேங்க்' கிடைத்திருந்ததால்... அருகிலுள்ள பள்ளியில் கணித ஆசிரியையாக சுலபமாக நுழைந்து விட்டிருந்தாள். நடேசன் எவ்வளவோ தடுத்தும் பிடிவாதமாக வேலைக்குச் சென்றாள் உமா.

''படிச்ச படிப்பை எதுக்கு சித்தப்பா வீணாக்கணும்? ஆசிரியையாக வேலை பாத்தா... ஆத்ம திருப்தி கிடைக்கும்! அதே சமயத்துல வர்ற சம்பளத்தை வச்சு... அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்துக்கலாம் இல்லையா?'' தான் எடுத்த முடிவில் உறுதியாக நின்றாள் உமா.

நடேசன் தீவிரமாக 'வரன் வேட்டையில்' இறங்கியிருந்தார். எல்லாம் சரியாக அமைந்திருந்தால்... ஜாதகம்



பொருந்தாமல் போனது. ஏதோ ஒரு காரணத்தால் தட்டிக் கழித்துப் போய்க் கொண்டிருந்தாலும்... நடேசன் மனம் தளராமல் முயற்சித்தார். பெற்ற மகளுக்கும் மேலாக உமாவின்பால் பாசத்தைப் பொழிய ஆரம்பித்திருந்தார்.

அன்று காலை மனைவி கற்பகத்தின் வற்புறுத்தலின் பேரில் பாகற்காய் சூப்பை அவர் பருகி விட்டிருந்தார். நாக்கு மற்றும் நாடி நரம்புகள் அனைத்திலும் கசப்பேறி விட்டது போன்ற உணர்வில் அவர் தவித்துப் போனார்.

''இன்னும் எத்தனை நாளைக்கித்தான்... பத்தியச் சாப்பாடு என்ற பெயரில்... உப்புச் சப்பில்லாமல் சாப்பிட்டு நாக்கை அடக்கிக் கொண்டிருப்பதாம்? இதுக்கு வேக வேகமாக கடமையை முடித்து விட்டு காரசாரமா, திருப்தியா சாப்பிட்டுட்டு... நேரம் வந்ததும் போய்த் தொலையலாம்!'' மனதில் ஒரு விரக்தி உருவாகி விஸ்வரூபம் எடுத்தது.

''ட்ரிங்... ட்ரிங்!''

தளர்வுடன் ரிசீவரை எடுத்துப் பேசினார் நடேசன்.

''ஹலோ! நான்தான்... நடேசன்!'' என்றவருக்கு மறுமுனையில் தரகர் சொன்ன தகவல் மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது.

''சரிங்க... நல்லது! நான்... தம்பி மனைவியை கலந்து பேசிட்டு உங்களுக்கு அரை மணி நேரத்துல... தகவல் தந்துடறேன். வச்சிடட்டுமா?''

முகமெல்லாம் பிரகாசிக்க சுற்றும் முற்றும் பார்த்தார். ''கற்பகம்! நான் உமா வீட்டுக்குப் போய்... ருக்மணியைப் பார்த்து பேசிட்டு வரேன்'' உற்சாகமாகக் குரல் கொடுத்து விட்டு நடையை எட்டிப் போட்டார் நடேசன்.

* * *

சல்லடையில் சலித்த ரவையை, சம்புடத்தில் கொட்டிய ருக்மணி நிலைப்படியில் நிழலாடியதும் நிமிர்ந்து பார்த்தாள். வியப்புடன் புடவைத் தலைப்பை தோளைச் சுற்றிப் போர்த்திக் கொண்டு எழுந்து நின்றாள்.

''வாங்க, உள்ளே வாங்க மாமா!'' நடேசனை வரவேற்றாள். கூடத்திலிருந்த பழைய நாற்காலியில் அமர்ந்த நடேசனுக்கு, சில்லென்ற நீர் மோரை தம்ளரில் நிறைத்துக் கொண்டு வந்து கொடுத்தாள். மடக் மடக்கென்று பருகி விட்டு தயக்கத்துடன் நிமிர்ந்தார்.

''என்ன விஷயம் மாமா? சொல்லி அனுப்பிச்சிருந்தா... நானே அங்க வந்திருப்பேனே? உங்களுக்கு எதுக்கு சிரமம்?''

''அய்யோ... என்னம்மா நீ? பெரிய வார்த்தையெல்லாம் பேசறியே? நானே குற்ற உணர்ச்சியில் தவிச்சுட்டிருக்கேன்... சரி விடும்மா! நம்ப உமாவுக்கு நல்ல வரன் வந்திருக்கும்மா... மாப்பிள்ளைக்கு டெல்லிக்குப் பக்கத்துல வேலை! ஒரு பெரிய கம்பெனில மார்க்கெட்டிங் எக்ஸிக்யூட்டிவா இருக்காராம். கை நிறைய சம்பளம்! மாப்பிள்ளை மாநிறமா... களையா இருப்பாராம்.

''அப்பா, ஒரு அண்ணன் மட்டும் தானாம்! மாமியார், நாத்தனார்னு பிக்கல் பிடுங்கல் எதுவும் கிடையாது. மாப்பிள்ளையோட அண்ணி, நாப்பது சவரன் நகையோட, நல்ல சீர் செனத்தியோட வந்தாளாம். நாமளும் நம்ம உமாவுக்கு அம்பது சவரன் போட்டு... சிறப்பா சீர் செனத்தி செஞ்சுடலாம்னு இருக்கேன்.

''நீ சரின்னு சொல்லிட்டா... மாப்பிள்ளை வீட்டுக்காரங்களுக்கு போன் போட்டுச் சொல்லி, உடனடியா நிச்சய தாம்பூலம் வச்சிடலாம். நீ என்ன சொல்றேம்மா?''



நீளமாகப் பேசி விட்டு, ஆர்வத்துடன் ருக்மணியை ஏறிட்டுப் பார்த்தார்.

''இவ்ளோ தூரம் மெனக்கெடறீங்க! தம்பி மகள் நல்லபடியா வாழணும்னு... நல்ல சீர் செனத்தி செய்ய நீங்க தயாரா இருக்கீங்க... ரொம்ப சந்தோஷமாவும், பெருமையாவும் இருக்கு. இந்த விஷயத்துல நான் சொல்றதுக்கு ஒண்ணுமே இல்ல... உமா வந்துட்டும்! வாழப் போறவ அவதானே? அவளோட அபிப்பிராயம் தான் முக்கியம்! அவ கிட்ட நீங்களே இது விஷயமா ஒரு வார்த்தை கேட்டுருங்களேன்!''

''அதுவும் சரிதான்! சரிம்மா... நான் வீட்டுக்குப் போறேன். உமா வந்ததும்... விஷயத்தைச் சொல்லி அனுப்பி வைக்கிறியா?'' எழுந்து கொண்டார் நடேசன்.

''என்ன பெரியப்பா?... வராதவங்க வந்துருக்கீங்க! உடனே கிளம்பறீங்க? இருந்து சாப்பிட்டுப் போங்க!'' ஈரக் கூந்தலில் துவாலையை இறுகக் கட்டியபடி வந்தாள் ஸ்வேதா.

'என்ன ஒரு அன்பு, குணம், பணிவு, மானிதாபிமானம்?... இவர்களுடன் வாழ தம்பி சபேசனுக்குத் தான் கொடுத்து வைக்கலை!' அவரது இதயத்திலிருந்து ஈரம் கசிந்தது.

''இன்னொரு நாளைக்கு வந்து விருந்தே சாப்பிடறேன்டா!'' முறுவலித்து விட்டுக் கிளம்பினார் நடேசன்.

மனைவி கற்பகம் இந்த விஷயத்தைக் கேள்விப்பட்டு... ஒன்றும் பேசாமல் அமைதி காத்தாள். மங்களத்திற்கு உற்சாகம் கரைபுரண்டு ஓடியது.

''இந்த மட்டும் நடேசன் மனம் மாறி... தம்பியின் குடும்பத்திற்கு உதவ முன் வந்தானே'' சந்தோஷத்தில்

பாட்டி மங்களத்திற்கு இறக்கை கட்டிப் பறப்பது போலி ருந்தது.

''உமாவோட... தங்கமான குணத்துக்கு எல்லாம் நல்லபடியாத்தான் நடக்கும்!''

''நிறுத்துங்க... பாட்டி! குணமாம் குணம்! அப்படி இப்படின்னு நாடகமாடி, எங்கப்பாவே முன் வந்து அம்பது சவரன் நகை போட்டு, சீர் செனத்தி, கல்யாணம்... எல்லாம் பண்ணும்படி செய்துட்டா பார்த்தீங்களா?

''அவளோட அம்மா... அதுக்கும் மேல்... உமா வந்ததும் அவகிட்ட அனுமதி கேக்கணும்னு சொல்லிச்சாம்... இவங்க எல்லாம் இந்த மாதிரி வசதி வாய்ப்பு வரா தான்னு... ஏங்கித் தவிக்கிற கூட்டம்... எனக்குத் தெரி யாதா? இதுல பெரிசா பிகு வேற? அவ வந்து என்ன சொல்லிடப் போறா?... 'பெரியப்பா... பெரியப்பா... நீங்க பெரியவங்க! உங்க இஷ்டப்படி எல்லாம் செய்யுங்க'ன்னு தான் சொல்லப்போறா''... ஆத்திரம் தாளாமல் ஊசிப் பட்டாசு போல் படபடவென்று வெடித்தாள் பவித்ரா.

''ஏய்! பெரியவங்க, சின்னவங்கன்னு மரியாதை இல்லாம பேசினே... பல்லைத் தட்டிருவேன். அம்பது பவுன் என்ன? ஐநூறு பவுன் கூட போடுவேன். இந்தச் சொத்துல என் தம்பி குடும்பத்துக்கு உரிமை இருக்கு! இது நாள் வரைக்கும்... மனசாட்சியை மண்ணுல போட்டுப் புதைச்சிட்டு... துரோகம் பண்ணிட்டேன்! இந்த விஷயத் துல யார் தலையிட்டாலும்.... செருப்பு பிஞ்சிடும்! ஜாக் கிரதை!'' கர்ஜித்தார் நடேசன்.

மதியம் மூன்று மணி வாக்கில் தளர்வாய் நடந்து வந்த உமாவின் முகம்... அமாவாசைக்குள் அடைபட்ட நில



வாய் இருண்டு கிடந்தது. ஹாலில் குறுக்கும் நெடுக்கு மாய் நடந்து கொண்டிருந்த நடேசன் உமாவைக் கண் டதும் சட்டென்று நின்றார்.

''வா... உமா! இப்படி வந்து உட்காரு!''

''நீங்க வீட்டுக்கு வந்துட்டுப் போனதா... அம்மா சொன்னாங்க!'' தயங்கி நிறுத்தினாள்.

தனது அறைக் கதவிடுக்கு வழியாக உமாவைக் குரூ மாக நோட்டமிட்டாள் பவித்ரா.

''மேற்கொண்டு ஆக வேண்டியதை நான் கவனிக்கலா மில்லியா?'' சுற்றி வளைத்து அவளது சம்மதத்தைக் கேட்டார் நடேசன்.

''பெ... பெரியப்பா... என் மேல் இவ்ளோ பாசம் வச்சிருக்கிறதுக்கு... நான் ரொம்ப கடமைப்பட்டிருக்கேன். ஆனா... எ... எனக்கு இந்த அலையன்ஸ் வேண்டாம். வசதி வாய்ப்போட வெளியூர்ல வாழ்க்கைப் படறதை விட... உள்ளூர்லேயே... ஏழ்மையான நிலையில் இருந் தாலும் பரவாயில்ல... உங்களை எல்லாம் அடிக்கடி வந்து பாத்துட்டுப் போற பாக்கியம் வேணும்.

''கு... குடும்பத்தை விட்டு கண்காணாம பிரிஞ்சு வாழறதுலே எனக்கு உடன்பாடு இல்ல. என்னை மன்னிச் சிடுங்க பெரியப்பா! தவறா நினைச்சுக்காதீங்க!'' குர லுடைந்து நா தழுதழுத்தது.

''உம் மனசை நான் நல்லாப் புரிஞ்சுகிட்டேன். உமா அழாதே!'' உமாவின் முதுகில் தட்டிக் கொடுத்தவாறே... எதிர் அறையை அர்த்த பாவனையுடன் நோக்கினார் நடேசன். அது வரை கதவு இடுக்கு வழியாகப் பார்த்துக் கொண்டிருந்த பவித்ரா, சட்டென்று தலையை இழுத்துக் கொண்டாள்.

சோகம் படர்ந்த முகத்துடனும், சோர்வுடனும் வீட்டை நோக்கி நடந்தாள் உமா. உமாவின் உள்ளத்தில் பெரிய பட்டிமன்றமே நடந்து கொண்டிருந்தது. 'வரனைத் தட்டிக் கழித்தாளே? அதற்கு உண்மையான காரணம் இது தானா?'... 'இல்லை' என்று உள் மனம் ஓலமிட்டது.

இந்த வரன் மட்டுமல்ல... வேறு எந்த வரனையும் உமாவின் இதயம் ஏற்றுக் கொள்ளாதே! அவளையும் மீறி திருட்டுத் தனமாக அந்த இளைஞனைக் குடியேற்றி சிறைப்படுத்தியிருந்தது... அவள் இதயம். அதல பாதாளத்தில் இருக்கும் உமாவுக்கும், எட்டா சிகரத்தில் இருப்பவனுக்கும் ஏணி வைத்தாலும் எட்டுமா?' அவளது விழிகள் உடைப்பெடுத்தன.

## 13

அதிகாலை நான்கு மணிக்கே அலாரம் வைத்து எழுந்து விடுவாள் உமா. கால்களில் சக்கரம் கட்டிக் கொள்ளாத குறையாக... பம்பரமாகச் சுழன்றாள் உமா. குளித்து முடித்து வடாம் வற்றல் செய்வதற்குத் தேவையான மாவைக் காய்ச்சி பதமான முறையில் இறக்கி... முற்றத்தில் ஆற வைத்து விடுவாள்.

இடையிடையே சமையலை கவனித்து விட்டு... மாவு ஆறியதும் மொட்டை மாடிக்கு எடுத்துச் சென்று... பரபர வென்று மாவைப் பிழிந்து முடிக்கும் முன்... தோள் பட்டையிலிருந்து கைகள் கழன்று விழுந்து விடுவது போல்... வலி உயிரை எடுக்கும். ருக்மணிக்கு அடிக்கடி உடம்புக்கு முடியாமல் போய்விடும்.

மாவைப் பிழிந்து விட்டுக் கீழே வரும்போது மணி எட்டரையைத் தொட்டு விடும். அவசர அவசரமாக முகம்



கழுவிப் பொட்டிட்டு... வேறு புடவையை மாற்றிக் கொண்டு அவதி அவதியாய் இரண்டு வாய் சாதத்தை அள்ளி வாயில் திணித்துக் கொண்டு... ஓட்டமும் நடையுமாகப் பள்ளிக்கு ஓடுவாள் உமா.

மாலையில் அலுத்துக் களைத்து வீட்டிற்கு வந்து... மாற்றுப் புடவையைக் கட்டிக் கொண்டு முகம் அலம்பி விட்டு காபி தயாரித்து அம்மாவுக்கும் கொடுத்து விட்டு சற்று நேரம் ஓய்வாக உட்கார்வாள்.

மசாலாப் பொருட்களை ருக்மணி வாணலியில் வறுக்கும் சத்தம் கேட்டதும் மனம் கேளாமல் உமாவும் ஓடிச் சென்று... ருக்மணியை கூடத்திற்கு அனுப்பி விட்டு வறுத்து, இடித்து... பெரிய பெரிய பக்கெட்டுகளில் அவற்றைக் கொட்டி நிறைத்து மூடி வைத்து விட்டு... மிஷினுக்குச் சென்று அரைப்பதற்குரிய கூலியைக் கொடுத்து விட்டு வீட்டிற்கு வந்து விடுவாள்.

''உமா! எதுக்கு ஸ்கூல் வேலைக்கு ஓடறே? உடம்பு என்னத்துக்கு ஆகும்? நாள் முழுக்க அங்கேயும் வேலை செய்து... இங்கேயும் வேலை செய்தா... உடம்பு என்னத் துக்கு ஆகும்? இதுல வர்ற வரும்படியே போதுமானதா இருக்கே? எது வந்தாலும் நம்மால சமாளிக்க முடியும் உமா? போதும் டீச்சர் வேலை! ராஜினாமா பண்ணிடு!''

ருக்மணி அடிக்கடி புலம்பித் தள்ளுவாள்.

''பசங்களுக்கு டீச் பண்றது மனசுக்கு எவ்ளோ திருப்தியா இருக்கு தெரியுமா? என்னோட ஆசைக்கு கொஞ்ச நாள் ஒர்க் பண்றேனே? எப்ப என்னால முடி யலையோ... அப்போ ரிசைன் பண்ணிடறேன். உடம் புலே தெம்பு இருக்கற வரைக்கும் தேனீ மாதிரி உழைச்சுக் கிட்டே இருக்கணும்னு நீ தானே சொல்வே?'' மகள் உமா

சிணுங்கும்போது ருக்மணியால் பதில் பேச முடியாது. வாயடைத்துப் போய் விடுவாள்.

தனிமையில்... யாரும் அறியா வண்ணம் உமாவின் அழகிய உதடுகள் 'கிரி' என்ற பெயரை உச்சரித்து... கண் கலங்குவதை அந்தத் தாய் எவ்விதம் அறிவாள்?

குளித்து விட்டு ஈரத்தலையை துவட்டிக் கொண்டே வெளிப்பட்ட ஸ்ரீதரன், பூஜையறைக்குள் புகுந்தான். நெற்றியில் கீற்றாகத் திருநீற்றைப் பூசியபடி பலகையில் சம்மணமிட்டு அமர்ந்தான். மனதை ஒரு நிலைப்படுத்தி தியானிக்க ஆரம்பித்தான்.

''புத்திர் பலம், யசோதைர்யம், நிர்பயத்வம் ஆரோகதா அஜாட்யம்''... ஆஞ்சநேயர் ஸ்லோகத்தை துரித கதியில்... அவனது உதடுகள் முணுமுணுக்கத் தொடங்கின. பூஜையறை வாசலில் வந்து நின்ற மரகதம் அம்மாளின் கண்கள் குளமாகின.

இளைய மகன், இந்த இளம் வயதிலும் பக்திப் பரவசத்துடன் கண்களை மூடி அமர்ந்திருந்த கோலத்தைக் கண்டு மரகதத்தின் மனம்... பாகாகக் கரைந்தது. சற்று முன் நெருக்கமாகத் தொடுத்து வைத்த பூச்சரத்தை சுருட்டி ஸ்ரீதரனின் எதிரில் வைத்து விட்டுத் திரும்பினாள்.

அடுக்களையில் நுழைந்து காபி தயாரிக்க ஆரம்பித்தவரின் மனம்... பாறாங்கல்லாக கனத்தது. ஏதோ கவலையில் மூழ்கி இருந்தவள்... 'புஸ்ஸ்' என்ற சத்தத்துடன் பால் பொங்கி வழிய ஆரம்பித்ததும் தான் சுய நினைவுக்கு மீண்டாள். சட்டென்று கேஸை அணைத்து விட்டு... சர்க்கரை டப்பாவை எடுத்துத் திறந்தாள்.

''ஹூம்! அவர் போயிருக்கறதுக்கு பதிலா... நான் போய்ச் சேர்ந்திருக்கக் கூடாதா? உயிரோட இருந்து இந்தக்



கண்றாவியைப் பார்க்கணும்னு என் தலையிலே எழுதியிருக்கு போல... ரெண்டையும் நான்தான் பத்து மாசம் சுமந்து பெத்தேன். ராம, லட்சுமணர் மாதிரி ஒரே ஜாடையில் இருந்தாலும்... நடந்துக்கிற விதத்துல, ரெண்டு பேத்துக்கும்... மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் இருக்கே?

'கிரியோட மனசு மாறி கல்யாணத்துக்கு சம்மதிச்சாத்தான் எல்லாத்துக்கும் விமோசனம் கிடைக்கும். கரடியா கத்தறேன்... என்னிக்கு மனசு மாறி 'சரி'ன்னு தலையாட்டப் போறானோ தெரியலையே?'' வாய் விட்டுப் புலம்பினாள் மரகதம்.

பனியனை எடுத்து அணிந்து கொண்டே உள்ளே நுழைந்த ஸ்ரீதரன் வியப்புடன் தாயை ஏறிட்டான். தாயின் கண்கள் சிவந்து போயிருப்பதைக் கண்டதும் துணுக்குற்றான்.

''என்னாச்சும்மா? ஏன் காலங்கார்த்தால கண்ணீர் சிந்தறீங்க? வர வர நீங்க தனியாகப் பேச ஆரம்பிச்சுட்டீங்க. டென்ஷன் ஆகாதீங்கம்மா! காலப்போக்குல எல்லாம் சரியாப் போகும்!'' ஆறுதல் கூறும் மகனை உற்றுப் பார்த்தாள் மரகதம்.

''காலப்போக்குலன்னா... எப்போ? எம் மனசும் உடம்பும் முன்ன மாதிரி இல்லடாப்பா. இந்த வயசுல இந்தக் கவலை எனக்குத் தேவைதானா? ஏன் தான் இப்படி சித்திரவதை பண்றானோ? வெளிப்படையா பேசி அவனைத் திட்ட முடியுதா? ஒரு அம்மா, புள்ளை கிட்ட பேசக்கூடிய விஷயமா அது? கூசிப் போகுது ஸ்ரீதரா! நீயாவது அவன் கிட்ட பேசக் கூடாதாப்பா?''

''நான்... நான் எப்படிம்மா பேசறது? அண்ணன் மேல எனக்குப் பாசமும், மரியாதையும் நிறைய இருக்கு. ஒரு காலத்துல.. நொடிஞ்சு சரியப் பாத்த நம்ம குடும்பத்தைத் தூக்கி நிறுத்தி... தூணாத் தாங்கினது அண்ணன். ராப்பகலா உழைச்சு நல்ல நிலைமைக்குக் கொண்டு வந்த மனுஷன். பெரிய படிப்பு முடிச்சிட்டு கண்ணியமா நான் நடமாடற துக்கும் அண்ணன் தானேம்மா காரணம்? அவர் கிட்ட நான் எப்படிப் பேசுவேன்?

''அதுலயும் நான் அவருக்குத் தம்பி... புத்தி சொல்றது சரியா? நீ பேசும்மா உனக்கு சகல உரிமையும் உண்டு. எங்கிட்ட இவ்ளோ பேசுறே? அதே ரீதியிலே பேசு! அண் ணன் ஜீனியஸ்மா! ஒரு கோடி காட்டினாலே... புரிஞ்சுப் பார். முயற்சி பண்ணும்மா. ஆமா! நீ என்னத்துக்குக் கிச்சன்லே வந்து அவஸ்தைப் படறே? எத்தன ஆளுங்க வேலைக்கு இருக்காங்க?... அவங்க பாத்துக்க மாட் டாங்களா?'' வேண்டுமென்றே அந்தப் பேச்சை திசை திருப்பி விட்டான் ஸ்ரீதரன்.

''அடப்போடா! என் கையால உங்க ரெண்டு பேத்துக் கும் செய்து போடணும்னு பிரியப்படறேன்.

''அதுல ஒரு திருப்தி இருக்குது தெரியுமா? அதை ஏன் கெடுக்கறே? சீக்கிரமா இந்த வீட்டுக்கு ஒரு மருமகள் வந்துட்டாள்னா... என் பாட்டுக்கு நிம்மதியா கோவில் குளத்தைச் சுத்தி வருவேன். ஹூம்! அந்த மாதிரி எங்க பொறந்திருக்காளோ... தெரியலை!'' காபியில் திட்டமாக சர்க்கரையைக் கலந்து கொண்டே புலம்பினாள் மரகதம்.

நங்கநல்லூர் ஆஞ்சநேயர் கோயிலில்... பக்தர்களின் கூட்டம் அலை மோதியது. கண்களிலிருந்து கண்ணீர் ஆறாகப் பெருக... தன் மனக்குறையைத் தீர்த்து வைக் கும்படி உள்ளம் உருக வேண்டிக் கொண்டாள் மரகதம். நல்ல தரிசனம் கிடைத்த திருப்தியில் கோவில் வாசலை விட்டிறங்கி... கோயில் மதில் சுவரோரமாக விட்டிருந்த காலணிகளில் கால்களைத் திணித்துக் கொண்டு நடந்தாள்.



எதிரில் நடந்து வந்த பெண்மணியைக் கண்டதும் சட்டென்று நின்றாள்.

''அட... கல்யாணி! சௌக்கியந்தானே?'' குசலம் விசாரித்தபடி சிநேக பாவத்துடன் அவளது கைகளைப் பற்றிக் கொண்டாள்.

''மரகதமா? நல்லா இருக்கீங்களா? ஆமா... ஏன் நீங்க ரொம்ப நாளா.. நம்ப மாதர் சங்கத்துக்கே வரதில்லை? போன மாசம் சங்கத்து உறுப்பினர்கள் எல்லாருமா புட்ட பர்த்திக்கு ஒரு டூர் போயிட்டு வந்தோம். மனசுக்கு எவ்ளோ நிம்மதியா இருந்துச்சு தெரியுமா?''

''ஹூம்! எம் பசங்களுக்கு கல்யாணம் காட்சி நடந்து முடிஞ்சதும்... நானும் உங்களோட கலந்துப்பேன். மனசுல சதா அதைப்பத்தின கவலை. அதான்... எங்கேயும் வராம வீட்டோட அடைஞ்சு கிடக்கிறேன்'' ஆதங்கப் பட்டாள் மரகதம்.

''பக்தி மார்க்கமா கோவில் குளத்துக்கு டூர் போற அதே சமயத்துல சேவை மனப்பான்மையோட செயல்பட ணும்னு... நாங்க தீர்மானம் செய்திருக்கோம். அதுபடியே சமீபகாலமா செயல்பட்டு வரோம் தெரியுமா?

''நாளைக்குக் கூட அயோத்தி நகர்லே இரத்த தானம் முகாம் நடக்கப் போகுது. சங்க உறுப்பினர்கள் அங்க போய், இரத்தம் டொனேட் பண்ணப் போற டோனர் ஸுக்கும், மத்தவங்களுக்கும்... நம்மளால முடிஞ்ச சகா

யத்தைப் பண்ணுவோம். மனசுக்குத் திருப்தியா இருக்கும். வீட்டுலேயே சதா கவலைப்பட்டுக் கிடக்கிறதை விட... இந்த மாதிரி கலந்துகிட்டீங்கன்னா... அதுவும் கடவுளுக்குப் பண்ற சேவை மாதிரிதான்! நாளைக்கு பத்து மணிக்குள்ள முகாமுக்கு வந்துடறீங்களா?'' கரிசனத்துடன் அழைப்பு விடுத்தாள் கல்யாணி!

''சரி! இவ்ளோ தூரம் வற்புறுத்தறீங்க! உங்க வார்த்தையை ஏன் மீறணும்? நாளைக்கு நான் கண்டிப்பா வரேன்'' சிரித்தபடி தலையாட்டி அவளிடம் விடை பெற்ற மரகதம் விரைந்து நடந்தாள்.

கிரிதரனைப் பற்றிய ஞாபகம் எட்டிப் பார்த்ததும்... மீண்டும் அவளது இதயம் இரும்பு போல் கனத்தது.

## 14

மக்கள் கூட்டம் அலை மோதியதால் தி.நகர், ரெங்கநாதன் தெருவே திமிலோகப்பட்டது. அன்று ஞாயிற்றுக் கிழமை! உமாவுக்கு, முன் தினம் தான் முதல் மாதச் சம்பளம் வந்தது. தங்கை ஸ்வேதாவுக்கும், அம்மா ருக்மணிக்கும், பாட்டிக்கும்... புதிய உடைகள் வாங்கித் தர வேண்டும் என்று உமா விரும்பினாள்.

தங்கை ஸ்வேதாவின் கையை இறுகப் பற்றிக் கொண்டு... ஜனக் கூட்டத்தில் நீந்தியபடி நாலாபுறமும் கவனமாகப் பார்த்துக் கொண்டு தான் நடந்தாள் உமா. ஸ்டேஷனிலிருந்து தி.நகர் ரங்கநாதன் தெருவில் காலை வைத்து விட்டால் போதும்!... நடக்கவே தேவையில்லை. மக்கள் வெள்ளத்தில் மிதந்து அலைப்புண்டு, நகர்ந்து செல்ல வேண்டியதுதான்!



''அக்கா 'பிளாட் ஃபார்மில இருக்கிற கடையிலேயே எனக்கு சுடிதார் வாங்கிக்கலாம். பெரிய கடைகள்லே விலை ஜாஸ்தியாக இருக்குமே!'' செலவை அதிகமாக இழுத்து விடக் கூடாது என்பதில் குறியாக இருந்தாள் ஸ்வேதா.

''ஒண்ணும் வேணாம்! பெரிய கடையிலேயே வாங்கிக் கலாம். நாம என்ன அடிக்கடியா... இது மாதிரி செலவழிக்கப் போறோம்? வாங்கறது வாங்கறோம்.. தரமா... நல்லா உழைக்கக் கூடியதாவே வாங்கிடணும்! எதைப் பத்தியும் விசனப்படாம வா ஸ்வேதா!''

அந்த பிரபலமான பெரிய ஜவுளிக்கடையை நெருங்கி விட்டிருந்தார்கள். விரும்பிய உடைகளை வாங்கிக் குவித்து விட்ட திருப்தியில்... ஒரு பெரும் கும்பல் ஜவுளிக் கடையிலிருந்து வெளிப்பட்டு இறங்கியது. நெற்றியில் சிறு விபூதிக் கீற்றுடன்... ஒரு கையில் பட்டுப் புடவை அடங்கிய அட்டைப் பெட்டியும், மறு கையில் கனத்த பர்ஸையும் வைத்துக் கொண்டு சாந்தம் தவழும் முகத்துடன் வெளிப்பட்ட வயதான பெண்மணியைக் கண்டதும் உமா, நெற்றியைச் சுளித்து யோசித்தாள்.

* * *

தனது பால்ய சிநேகிதி, தன பாக்கியத்தின் மூன்றாவது மகனுக்கு... அன்று இரவு ரிசப்ஷன்! சிநேகிதி நேரில் வந்து கொடுத்து விட்டுப் போயிருந்த இன்விடேஷனை... இன்று தான் எடுத்துப் பார்த்தாள் மரகதம்.

''அடடா! இன்னிக்குத்தானா ரிசப்ஷன்? அடுத்த ஞாயிறு என்றல்லவா நினைத்து விட்டேன்? வர வர கிரியைப் பத்தின கவலையில... நாளும் கிழமையும் கூட மறந்து போய் விடுகிறது! சரி.. தனத்தின் மருமகளுக்கு

நல்ல பட்டுப்புடவை வாங்கிப் பரிசளித்து விட வேண்டியதுதான்!''

ஜனசந்தடி மிகுந்திருந்த ரெங்கநாதன் தெருவில்... சற்று தூரத்திலேயே காரை பார்க் செய்து விட்டிருந்தான் டிரைவர் கந்தசாமி!

''டிரைவர்! துணைக்கு வரவேணாம். இங்கேயே இருப்பா! ஒரே ஒரு பட்டுப் புடவைதான்.. உடனே வந்துடுவேன்!''

மரகதத்தின் மனம் கல்லெறிபட்ட குளமாய் குழம்பித் தவித்ததால்... ஒரே ஒரு பட்டுப் புடவையைத் தேர்வு செய்து முடிப்பதற்குள்... அரை மணி நேரமாகி விட்டது.

பணத்தைக் கட்டி விட்டு ஜவுளிக்கடை வாசலை விட்டிறங்கிய மரகதத்திற்குக் கால்கள் பின்னின. தலை சுற்றியது. கால்கள் துணியாய் துவண்டு போக... தடாலென்று கீழே விழுந்தாள். கையில் இருந்த அட்டைப் பெட்டியும், பர்ஸும் பக்கத்திற்கு ஒன்றாக சிதறின.

''ஐயோ! விழுந்து விட்டாங்க! வயசான அம்மா... பாவம்!'' நிமிட நேரத்தில் மரகதத்தைச் சுற்றி கூட்டம் கூடியது. பச்சாதாபப்பட்டது. விழுந்த வேகத்தில்... மரகதத்தின் புடவை கணுக்காலுக்கும் மேல் விலகி இருந்தது. யாரோ ஒரு போக்கிரி சந்தடி சாக்கில் பர்ஸையும், மரகதத்தின் கழுத்திலிருந்த இரட்டை வடச் சங்கிலியையும் அபகரிக்க எண்ணம் கொண்டு நெருங்கினான்.

பர்ஸின் அருகே குத்துக்காலிட்டு அமர்ந்தான் அவன். ''யாராச்சும் சோடா இல்லைன்னா தண்ணி பாட்டில் வாங்கிட்டு வாங்களேன்'' பெருங்குரலில் கத்தினான்.

உமா மின்னல் வேகத்தில் கூட்டத்தைப் பிளந்து உள்ளே நுழைந்தாள். பரிதாபப்படுவது போல் நடித்து...



உடமைகளைச் சுருட்டிக் கொண்டு ஓடும் கூட்டத்தைப் பற்றி அவள் அறிந்திருந்தாள்.

''விலகுங்க! இவங்க என்னோட அத்தை தான்! தள்ளுங்க...'' சட்டென்று கணுக்காலுக்கு மேல் விலகியிருந்த சேலையை இழுத்து சீராக்கி விட்டு மரகதத்தைத் தூக்கி... அவளது தலையைத் தன் மார்பில் சாய்த்துக் கொண்டாள்.

''ஸ்வேதா! அந்தப் பர்ஸை எடு!... அட்டைப் பெட்டியை எடுத்துக்கோ!'' உத்தரவிட்டு விட்டு தன் ஹேண்ட் பாக்கில் வைத்திருந்த சிறு வாட்டர் பாட்டிலை எடுத்துத் திறந்து... மரகதத்தின் முகத்தைத் துடைத்து விட்டாள். சிறிது தண்ணீரைப் புகட்டி விட்டாள். கூட்டம் மாயமாய் கலைந்து போனது.

கண்ணிமைகளை சிரமப்பட்டுப் பிரித்தாள் மரகதம். தலையை இரண்டாகப் பிளந்து, உள்ளே பாறாங்கல்லை வைத்து தைத்தது போல் கனத்தது. கழுத்திற்குக் கீழே உடம்பு மிக மிக லேசாக இருப்பதைப் போல் உணர்ந்தாள். விழிகளைச் சுழற்றி, தன்னை தாங்கிக் கொண்டிருந்த இளம் பெண்ணை ஏறிட்டாள். இவள்... இவளா...?

சோர்வுற்ற முகத்தில் சட்டென்று ஆயிரம் வாட்ஸ் பல்ப் எரிந்தது போல் பிரகாசம் தோன்றியது.

''நீ... நீ... உன்னை''... திணறினாள்.

''கொஞ்ச நாளைக்கு முன்னால... இரத்த தான முகாம்ல உங்களை நான் பாத்திருக்கேன். மாதர் சங்கத்து உறுப்பினர்கள்லே... நீங்களும் ஒருத்தர் இல்லையா அம்மா?'' பரிவுடன் மரகதத்தின் முழங்கையில் அப்பியிருந்த மண்ணைத் தட்டி விட்டு... தன் சேலைத்

தலைப்பால் அவளது நெற்றியோரம் வழிந்த வியர்வையை ஒற்றியெடுத்தாள்.

''பாத்து வரக்கூடாதாம்மா? நல்லவேளை... பெரிசா காயம் எதுவும் படலைன்னு நினைக்கிறேன்! இதோ... இவ என் தங்கை ஸ்வேதா! கைத் தாங்கலா என்னைப் பிடிச்சு கிட்டு மெல்ல எழுந்துக்கோங்க... உங்க கூட யாரும் துணைக்கு வரலையாம்மா!'' தேன் போன்ற குரலில் பரிவுடனும், கரிசனத்துடன் பேசிய உமாவை... கண் இமைக்காமல் பார்த்தாள் மரகதம்.

வானத்திலிருந்து அழகு தேவதை இறங்கி வந்து தன் அன்புக் கரங்களால்... மரகதத்தைத் தாங்கிக் கொண்டிருப்பது போல் இருந்தது. யாரிந்த தேவதை? வறண்டு கிடந்த மரகதத்தின் மனதில்... ஓராயிரம் வண்ணப் பூக்கள் பூத்துக் குலுங்கியது போலிருந்தது. மனதிலிருந்த பாரம் நீங்கி... இலவம் பஞ்சு போல் இலேசானது.

''அம்மா நீங்க எப்படி வந்தீங்க? கார்ல தானே?'' மரகதத்தின் தோற்றமே... அவள் ஒரு பணக்கார வீட்டுப் பெண்மணி என்று பறை சாற்றிக் கொண்டிருந்தது.

''ஆமா! டிரைவர் கூட வரேன்னு சொன்னான். நான் தான் மறுத்திட்டேன்'' பலகீனமாய் பேசினாள் மரகதம்.

''கார் நம்பரை சொல்லுங்கம்மா... கார் பார்க் பண்ணியிருக்கிற இடத்துல தேடி டிரைவரைக் கூட்டிட்டு வரேன்!

''பரவாயில்ல... உன்னைக் கைத்தாங்கலா புடிச்சுக் கிட்டு என்னால நடக்க முடியும்!''

டிரைவரிடம் நடந்த விஷயத்தைக் கூறி, மரகதத்தைக் காரில் அமர வைத்தாள். பட்டுப் புடவைப் பார்சலையும், பர்ஸையும் மரகதத்திடம் கொடுத்தாள் உமா.



''அம்மாவை உடனடியா டாக்டர் கிட்ட கூட்டிட்டுப் போயி... கன்ஸல்ட் பண்ணணும். வீட்ல இருக்கறவங்க கிட்ட சொல்லுங்க. எக்காரணத்தைக் கொண்டும் அவங்களை வெளியில தனியாப் போக விடாதீங்க!''

டிரைவரிடம் கரிசனத்துடன் மனதில் பட்டதைக் கூறினாள் உமா.

## 15

எத்தனையோ முறை அந்த சந்துரு ஃபோன் செய்து கெஞ்சிக் கூத்தாடியும் பவித்ரா அவனைத் தனியே சந்திப்பதற்கு சம்மதிக்கவில்லை. ஆங்கிலப் புத்தாண்டு, பொங்கல், தமிழ்ப் புத்தாண்டு என்று ஒவ்வொரு விசேஷ தினங்களுக்கும் அவனாகவே ஃபோன் செய்து வாழ்த்து கூறிவிட்டு, வெகு நேரம் பேசிக் கொண்டிருப்பான்.

''மும்பை, கொல்கத்தா, டெல்லி, பெங்களூர், ஹைதராபாத்'னு பல நகரங்களையும் சுத்தி வந்திருக்கேன். ஃபாரின் கன்ட்ரீஸ்க்குக் கூட போனதுண்டு. உங்கிட்ட இருக்கற அந்த 'ஸ்டன்னிங் பெர்சனாலிட்டி'யை... வேற எந்தப் பெண்கிட்டயும் நா பாத்ததே இல்ல தெரியுமா?

''கிளியோ பாட்ராவுக்குத்தான் இந்த மாதிரி 'ஸ்டன்னிங் பெர்சனாலிட்டி' இருக்கும்னு நா படிச்சிருக்கேன். உன் அழகு... அப்படியே என் மனசைக் கொள்ளையடிச்சிருச்சு தெரியுமா பவி?''

இந்த ரீதியில் தான் உருகி அவளது அழகை வர்ணிப்பான். கண்களை வசீகரிக்கும் ஆணழன்... பவித்ராவின் பேரழகை சிலாகித்துப் பாராட்டும் போது... அவளுக்கு

அப்படியே அந்தரத்தில் மிதப்பது போலிருக்கும். தன் அழகிற்குக் கிடைத்த மிகப் பெரும் அங்கீகாரமாக இதைக் கருதினாள்.

'செல்'லில் சந்துரு இவ்வாறு உருகி, கெஞ்சுவதும், கொஞ்சுவதும் உள்ளூர பிடித்துத் தான் இருந்தது. ஆனால் அவனைச் சந்திப்பதற்கு மட்டும் அவள் சம்மதிக்க வில்லை. கிட்டத்தட்ட நாலைந்து மாதங்களாக... இந்தக் கண்ணாமூச்சி ஆட்டம் தான் நடக்கின்றது.

ஆயிரம் தான் 'ஜோவியல் டைப்'பாக இருந்தாலும்... தன் பெண்மையைக் காத்துக் கொள்வதில் எச்சரிக்கை யுடன் தான் நடந்து கொண்டாள் பவித்ரா.

'சந்துருவிடம் அவளுக்குக் காதலா?'' உள் மனம் கேள்வி கேட்டது.

''சீச்சீ... கண்டிப்பாக கிடையாது. நான் ஒரு படித்த மாடர்ன் கேர்ள். சுதந்திரமாக ஜாலியாக நடந்து கொண் டால் தவறா? இளமை பொங்கும் இந்தப் பருவத்தில் தான் ஜாலி இருக்கும்! ஒரு அழகான இளைஞன் அவளது அபரிமிதமான அழகைப் புகழும்போது... அதைக் காது குளிரக் கேட்டு வைத்தால் அதில் தவறு என்ன? பொழுது போக்கவும் ஒரு த்ரில்லை அனுபவிக்கவும் தான் இவ்வாறு நடந்து கொள்கிறேன்.''

இதே போல்... தன் மனசாட்சியுடன் மிக அழகாக வாதிட்டாள் பவித்ரா.

''ட்ரிங்... ட்ரிங்'' செல்ஃபோன் செல்லமாய் சிணுங் கியது. செல்லில் தெரிந்த நம்பரை கவனித்தாள்.

''ஹலோ மது! கம்ப்யூட்டர் சென்டருக்கு ஏன் ரெண்டு நாளா வரலே? நான் உன்னோட செல்லுக்கு ட்ரை பண்



றப்போ எல்லாம்... எங்கேஜ்டாவே இருந்தது. என்னாச்சு? வீட்ல ஏதாவது விசேஷமா?'' வழக்கம் போல் குதூகல மாகக் கேட்டாள் பவித்ரா.

''நீ வேற... அம்பிகா அக்காவுக்கு சரியான காய்ச்சல்பா... அத்தான் வழக்கம் போல டூர் போயிட்டார். அக்கா மட்டும் தனியாளா கஷ்டப்பட்டாங்க. விஷயம் தெரிஞ்சதும் எங்க வீட்டுலேர்ந்து... அம்பிகா அக்கா வீட்டுக்குப் போயிட் டேன். டெஸ்ட் பண்ணதிலே... அக்காவுக்கு மலேரியா ஃபீவர்னு சொல்லிட்டாங்க. நாளைக்கு நீ சென்டருக்குப் போனா... எனக்கு இன்னும் பத்து நாள் லீவு சொல்லிடு!

''ஹாஸ்பிடலுக்கும், ஃபார்மஸிக்குமா அல்லாடிக்கிட்டு இருக்கோம். அக்கா கிழிஞ்ச துணியாத் துவண்டு போயிட் டாங்க... இந்த சந்துரு வேறே... ரெண்டு நாளைக்கு முன்னாடி ஃபோன் பண்ணி 'வேலை விஷயமா பெங் களூர் வரைக்கும் போறேன். வாதுக்கு ஒரு வாரமாச்சும் ஆகும்'னு சொல்லிட்டு வச்சுட்டான். அத்தானும் சரி... இவனும் சரி... பிஸினஸ்லே இருக்கற ஆர்வத்துல மத்தவங்களப் பத்தி கண்டுக்கவே மாட்டேங்கிறாங்க... போ! சரி! நா வச்சுடவா பவி? பை!'' சலித்துக் கொண்டாள் மது.

''டேக் கேர் மது! பை!'' யோசனையுடன் செல்லை அணைத்தாள் பவித்ரா.

''பாவம்! மலேரியா ஃபீவர்னு வேற சொல்றா... பழக்க மில்லாட்டி பரவாயில்ல... எனக்கென்னன்னு இருந்துட லாம். ஆனா அந்த அம்பிகா அக்கா அன்பா.. பதவிசா நடந்துக்கிறவங்களாச்சே? 'பவி' 'பவி'ன்னு உரிமையா கைய பிடிச்சுக்கிட்டுப் பேசுவாங்களே? விஷயத்தைக் கேள்விப்பட்டும்... கண்டுக்காம இருந்தா நல்லாவா

இருக்கும்? கட்டாயம் ஒரு வாட்டி போய் அவங்களைப் பாத்துட்டு வரணும்!

'சந்துரு அங்க இருப்பானோன்னு சங்கடப்படத் தேவையில்லை. அவன் தான் பெங்களூர் வரைக்கும் கிளம்பிட்டானே! சந்துரு ஊரில் இல்லாததால்.. எந்த வித தர்ம சங்கடமும் ஏற்படாது. அவன் இருந்திருந்தால்... அழகை வர்ணிக்கிறேன் பேர்வழி!' என்று உருகி உருகிப் பேசி... சுற்றிச் சுற்றி வருவான். நல்ல வேளை... அவன் ஊருக்குச் சென்று விட்டான்.'

பவித்ரா எம்.எஸ்ஸி. படித்துக் கொண்டிருந்தாள். நடேசன் ஆரம்பத்தில்... அவள் மேற்கொண்டு படிக்க ஆசைப்பட்ட போது, அதற்கு சம்மதிக்கவில்லை. ''தரகர்கிட்ட சொல்லியாச்சு! நல்ல வரன்களா அமைஞ்சிட்டா... உமாவுக்கும், இவளுக்கும் கல்யாணத்தை முடிச்சிடலாம்னு இருக்கேன். இதை நான் அன்னைக்கே சொன்னேனே? என்னோட முடிவு தெரிஞ்சிருந்தும்... மேற்கொண்டு படிப்பு என்ன வேண்டிக் கிடக்காம் உன் பொண்ணுக்கு?'' கற்பகத்திடம் எரிந்து விழுந்தார்.

''அதில்லைங்க... வரன் அமைஞ்சிட்டா... நாளைக்கு நம்ம பவிக்கு கல்யாணத்தை நடத்துங்க! உங்க பேச்சை யாரும் மீறலை! அதுவரைக்கும் சும்மா பொழுது போகாம.. எவ்வளவு நேரம் வீட்டிலேயே அடைஞ்சு கிடப்பா..? சாயந்தரம் தான் கம்ப்யூட்டர் கிளாசுக்குப் போறா... பகல் முழுக்க வீட்டைச் சுத்தி சுத்தி வர்றா... பாவமாயிருக்கு! அதான்...'' மிடறு விழுங்கினாள் கற்பகம்.

''அடுத்த வீட்டுக்குப் போற பொண்ணு... முதல்லே சமைக்கக் கத்துக் கொடு! வீட்டு வேலைகளை நேர்த்தியா செய்யப் பழகிக்கச் சொல்லு! பொழுது போகலைன்னா...



டி.வி.யைப் பார்க்கச் சொல்லு!'' தழைத்திருந்த நாளிதழை உயர்த்தி தன் முகத்திற்கு நேராக விரித்துக் கண்களைப் பதித்தார்.

''அதெல்லாம் இடை இடையில கத்துக்கிட்டு வர்றா... நல்லாப் படிக்கிற பொண்ணு! ஆசைப்படறா... கல்யாணம் ஃபிக்ஸ் ஆகிற வரைக்கும் தான்! நம்ம பேச்சை அவ மீற மாட்டாங்க.... ஏய்! சொல்லு பவி!'' தன் முதுக்குப் பின்னால் தயங்கி நின்றவளை இழுத்து முன்னால் நிறுத்தினாள்.

''ஆமாப்பா! உங்க இஷ்டப்படி எல்லாம் செய்யுங்கப்பா. அலையன்ஸ் அமைஞ்சிட்டா... நா படிப்பை நிறுத்திட்டு வீட்டிலேயே இருக்கேன்பா! ப்ளீஸ்பா!'' கண்களில் குளம் கட்ட, பரிதாபத்துடன் நடேசனை ஏறிட்டாள் பவித்ரா.

செல்ல மகள் பவித்ராவின் மீது நடேசன் உயிரையே வைத்திருந்தார். பிடிவாதமாய் கல்லாக இறுகிப் போயிருந்தவரை... பவித்ராவின் கண்ணீர் இளக வைத்து விட்டது. அரைகுறை மனதுடன் தலையாட்டி வைத்தார்.

பவித்ரா தன் நிலைக்கு மீண்டாள். ''அப்பாடி! அப்பா, காலேஜ் போறதுக்கு சம்மதிச்சதே பெரிய விஷயம்! திருவான்மியூர் வரைக்கும் போயிட்டு வரனே'னு அனுமதி கேட்டா... அவ்ளோ தான்' பிரளயமே வந்துடும். தாம் தூம்னு குதிச்சு... அப்புறமா நா காலேஜுக்குப் போறதுக்கே மொத்தமா வேட்டு வச்சாலும் வச்சுடுவாங்க!'' தனக்குள் முணுமுணுத்தாள் பவித்ரா.

'இன்று காலேஜ் கேண்டீனில் லஞ்சை முடித்து விட்டு, மதிய வகுப்புகளைக் கட்டடித்து விட்டு... அந்த கடற்கரையோர பங்களாவுக்குச் சென்று வர வேண்டியதுதான்!' மனதில் தீர்மானித்துக் கொண்டாள்.

தீர்மானித்தபடியே தனது ஸ்கூட்டியில் திருவான்மியூருக்குக் கிளம்பினாள். மறக்காமல் ஹெல்மெட்டை தலையில் மாட்டிக் கொண்டாள்.

''இந்த அப்பா வேறே... எனக்கும், உமாவுக்கும் மாப்பிள்ளை பாருங்கன்னு... ஏகப்பட்ட ஃபோட்டோக்களை தரகருக்கு கிட்ட கொடுத்து தொலைச்சிருக்கார். இந்த வரன் வேட்டையில ஏகப்பட்டவங்களுக்கு நம்ப முகம் பரிச்சயமாகி இருக்கும். மதுவையும், அம்பிகா அக்காவையும் பாத்துட்டு சட்டு புட்டுனு கிளம்பி... நேரத்தோட வீடு போய்ச் சேர்ந்துடணும்.''

காற்றில் படபடக்காமல் இருக்கும் பொருட்டு, துப்பட்டாவின் முனைகளை ஒன்று சேர்த்து முடிச்சிட்ட பவித்ரா, அசுர வேகத்தில் ஸ்கூட்டியில் பறந்தாள்.

* * *

அந்த பங்களா வாசலுக்கு முன்பாக, வேப்ப மரத்தடியில் தனது ஸ்கூட்டியை நிறுத்தினாள். சாவியை எடுத்து ஹாண்ட்பேக்கில் போட்டுக் கொண்டு விரைந்து சென்றாள். குரோட்டன்ஸ் செடிகளுக்கு நீர் பாய்ச்சிக் கொண்டிருந்த வேலையாள், பவித்ராவைக் கண்டதும் சட்டென்று முண்டாசை அவிழ்த்து உதறிக் கொண்டு ஓடி வந்தான். திருதிருத்த பார்வையில் தினுசாக அவளைக் குறுகுறுவென்று பார்த்தான்.

''யாரைப் பாக்கணும்? அம்பிகா மேடமும், அவங்க தங்கச்சியும் வெளியில போயிருக்காங்க... மேடத்துக்கு உடம்பு சரியில்லைன்னு சொன்னாங்க... ஆஸ்பத்திரிக்குப் போயிருப்பாங்க போல!'' தனது ஊகத்தைச் சொன்னான்.



''ச்சே! நா வரதைப் பத்தி அவகிட்ட 'செல்'லுல இன்ஃபார்ம் பண்ணாம போயிட்டேனே?'' எரிச்சலில் காலை ஓங்கித் தரையில் உதைத்தாள் பவித்ரா.

''வேணும்னா இருந்து பாத்துட்டுப் போங்க. உள்ளே ஐயா இருக்காரு. இப்பத்தான் அவரும் வந்தாரு.''

''ஐயாவா?... யாரைப் பத்தி சொல்றே?'' புருவங்கள் மேலேற, ஆர்வத்துடன் அவள் கேட்டு முடிப்பதற்குள் 'டக்டக்' என்று ஓசையெழுப்பி விரைந்து நடந்து வந்தான் சந்துரு.

''இவன் எங்கே இங்க?... பெங்களூர்க்குப் போயிருக்கான்னு மது சொன்னாளே? இவன் இருக்க மாட்டான் என்று நம்பித் தானே கிளம்பி வந்தேன்? தனியா மீட் பண்ணலாமான்னு இவன் பலவாட்டி கேட்டும் நா அவாய்ட் பண்ணியிருக்கேன். இப்ப தன்னந்தனியா வகையா அவன் முன்னாடி நிக்க வேண்டியதாப் போச்சே?'' கேள்விகளை சுமந்த வண்ணம் எண்ண அலைகள் வந்து மோதின.

''ஹாய் பவி? ஹவ் ஆர் யூ? நான் காண்பது கனவா இல்லை... நனவா? எதிர்பாராத இன்ப அதிர்ச்சியைக் கொடுத்திருக்கியே...? பெங்களூர்லே, பிஸினஸ் டீலிங் நான் எதிர்பார்த்ததை விட சீக்கிரமாவே முடிஞ்சு போச்சு! அதனால கிடைச்ச ஃபிளைட்டை பிடிச்சு சீக்கிரமா இங்க வந்துட்டேன். அம்பிகா அக்காவைப் பாக்கலாம்னு வந்தா... அக்காவும், மதுவும் ஹாஸ்பிடல் போயிட்டாங்க போலிருக்கு...!

''நாளைக்கு ஆடிட்டிங் வேற இருக்கு! சரி.. நேரா ஆஃபீஸுக்குப் போயிட்டு.... அப்புறமா நைட்ல வந்து பாக்கலாம்னு கிளம்பறேன்... நீ வந்து நிக்கறே! உன்னை

இங்க நான் எதிர்பார்க்கவே இல்லை பவி! வெளியிலேயே நிக்கறே... வா உள்ளே வந்து உட்கார்!'' மரியாதை நிமித்த மாக அவன் பேச்சுக்குக் கட்டுப்பட்டு, மௌனமாக அவனது பின்னால் நடந்தாள் பவித்ரா.

'உள்ளே வர மறுத்து அப்படியே திரும்பிச் செல்லலாம் தான்! பத்தாம் பசலித்தனம் நிறைந்த பெண் என்றல்லவா என்னை நினைத்துக் கொள்வான் சந்துரு? நான் நவநாகரீக மங்கை! பங்களாவுக்குள் சென்று இரண்டொரு வார்த்தை பேசி விட்டுச் செல்வதில் தவறு என்ன?' தன்னைத் தானே சமாதானம் செய்தபடி உள்ளே சென்று, சோபாவின் நுனியில் தயக்கமாய் அமர்ந்தாள்.

சகஜமாக அருகில் அமர்ந்து அவள் முகத்தை சந்துரு நோக்கவும் பவித்ராவிற்கு உள்ளங்கைகள் வியர்க்க ஆரம் பித்தன. உள்ளூர எச்சரிக்கை மணி பலமாய் அடித்தது.

''இவன் எத்தனையோ முறை தனியே சந்திக்க வரும் படி அழைத்திருக்கிறானே? பல முறை மறுத்துவிட்டு... இப்போது அவன் எண்ணப்படி எதிரில் தனியே அமர்ந் திருக்கிறேனே? ஊஹூம்! இது முறையல்ல...இவன் என்ன வேண்டுமானாலும்... நினைத்துக் கொள்ளட்டும். இதற்கு மேல் நாகரீகம் கருதி இங்கிருந்தால்... ஆபத்து தான்!'' உள் மனம் அவளை எச்சரித்தது.

சட்டென்று எழுந்து கொண்டாள் பவித்ரா.

''என்ன பவி? எழுந்துட்டே! உட்கார்! ஜூஸ் ஏதாவது கொண்டு வரேன், சாப்பிட்டுட்டுப் போ...!'' அவளைத் தடுக்கும் விதமாய் அவளை... இடைமறித்து நின்றான் சந்துரு.

''நோ நோ! நான் போகணும். மது வந்த உடனே சொல் லிடுங்க! நா அப்புறமா ஃபோன் பண்ணி அம்பிகா



அக்காகிட்ட பேசிக்கறேன். ப்ளீஸ் வழியை விடுங்க!'' பவித்ராவுக்கு லேசாக பதற்றம் தொற்றிக் கொண்டது.

''உட்கார்ந்து ரெண்டு வார்த்தை கூட பேசாம போறே? என்ன பவி இது? அவ்ளோ மோசமானவனா நான்?'' முகத்தைப் பரிதாபமாக வைத்துக் கொண்டு பேசத் தொடங்கினான் சந்துரு.

''நமக்குள்ளே பேசறதுக்கு என்ன இருக்கு சந்துரு! நா போகணும் வழி விடுங்க!'' எரிச்சலுடன் ஏறிட்டாள் பவித்ரா.

''மது இருந்தாத்தான் என்கிட்ட பேசணுமா? கூட்டத் தோட வந்தா தான் நல்லா பேசுவே போலிருக்கே? யூ ஆர் மாடர்ன் கேர்ள்! இப்படி பத்தாம் பசலித்தனமா நீ பிஹேவ் பண்றியே?'' உருக்கமாய் அவன் பேசுவதைக் கண்டு அவளுக்குப் பற்றிக் கொண்டு வந்தது.

கிர்ரென்று கோபம் தலைக்கேறியது.

''மிஸ்டர் சந்துரு! எத்தனவாட்டி உங்களுக்கு சொல்றது? பேசறதுக்கு நமக்குள்ள எதுவுமே இல்ல... ப்ளீஸ் மூவ்!''

''ஓஹோ! ஃபோன்ல உன் அழகை வர்ணிச்சுப் பேசி னப்போ... உனக்கு உள்ளுக்குள்ளே சந்தோஷமா இருந் துச்சோ? அப்ப மட்டும் நீ ஏன் ஃபோனைக் 'கட்' பண் ணல்லே?'' நமட்டுச் சிரிப்புடன் பார்த்தான்.

அவ்வளவு தான்! பலங்கொண்ட மட்டும் 'அவனைப் பிடித்துத் தள்ளி விட்டு தலை தெறிக்க வெளியில் ஓடி ஸ்கூட்டரை ஸ்டார்ட் செய்து விருட்டென்று மறைந்தாள் பவித்ரா.

## 16

மரகதத்திற்கு அவமானத்தில் நாக்கைப் பிடுங்கிக் கொள்ளலாம் போல் இருந்தது. திருமண வரவேற்பில் கலந்து கொண்டு, சிநேகிதியின் மகனையும், மருமகளையும் வாழ்த்தி... கிஃப்ட் பார்சலை பரிசளித்து விட்டு உணவுக்கூடத்தில் வந்து அமர்ந்தாள்.

தி.நகர் ஜவுளிக்கடை வாசலுக்கு முன்பாக தான் மயங்கி விழுந்த சமாச்சாரத்தை... வீட்டில் சொல்லக் கூடாது என்று டிரைவருக்கு தடா சட்டம் போட்டு விட்டாள் மரகதம்.

பார்ப்பவர்கள் எல்லாம் உங்க மகனுக்கு எப்ப கல் யாணம் என்று கேட்டுக் குடைகிறார்கள். இன்னும் சிலரோ இவள் காதுக்கு கேட்கும்படி இவங்க மகன் யாரையோ செட்டப் பண்ணி இருக்கான். அது தான் கல்யாணம் வேண்டாம் என்கிறானாம் என்றனர். மனது அதிர்ந்து மயக்கத்தில் நின்றாள்.

உடம்பு அயர்ச்சியையும் பொருட்படுத்தாமல்.. வாங்கி வைத்த பட்டுப்புடவைப் பார்சலைப் பரிசளித்து வாழ்த்தி விட்டு, சிநேகிதியைப் பார்த்து இரண்டொரு வார்த்தை பேசி விட்டுப் போகலாம் என்று தான் வந்தாள் மரகதம். வராவிட்டால் சிநேகிதி கோபித்துக் கொள்வாளே? என்ற பயம் வேறு!

வாஸ்தவத்தில்... சமீப காலமாக எந்த விசேஷத்திலும் தலை காட்ட அவளுக்கு எட்டிக்காயாக கசந்தது.

''பொண்ணு பாத்துட்டிருக்கீங்களா?''

''எப்போ கல்யாண சாப்பாடு போடப் போறீங்க?''

''மருமகளை எப்போ கொண்டு வரப் போறீங்க?''



இந்த ரீதியில் நான்கு பேர் நான்கு விதமாக கேள்விக் கணைகளைத் தொடுக்கும்போது... மரகதத்திற்கு தொண்டைக்குள் முள் சிக்கிக் கொண்டு விடும். பதில் சொல்லத் திணறுவாள்.

இலையை மூடி விட்டு சட்டென்று எழுந்தாள். அவ மானத்தில் கூனிக் குறுகியதால் அவளுக்கு நடக்கவே சிரமமாக இருந்தது. ''இதற்கு முடிவு கட்டியாகணும்'' தீர்மானித்தாள் மரகதம்.

## 17

சிகரெட்டை ஆஷ்ட்ரேயில் அழுத்தி நசுக்கினான் ரமேஷ்.

''இது கொஞ்சம் ஓவர்தான்'' என்றான் எதிரே சோகமாய் அமர்ந்திருந்த கிரியைப் பார்த்து!

''இப்ப என்ன செய்யப் போறேன்னே ஒண்ணும் புரியலை ரமேஷ்!''

''பிடிக்கலேன்னா விட்டுட வேண்டியது தானே? உன்னை ஏன் இப்படி டார்ச்சர் பண்றாங்க?''

''ப்ச்! மகனுக்கு எப்படியாவது ஒரு கல்யாணத்தைப் பண்ணி வச்சுப் பாக்கணும்னு அம்மா தன்னைத் தானே வருத்திக்கிறாங்க. கத்தி கலாட்டா பண்ணி என்னைத் திட்டியிருந்தா கூட இந்தளவுக்கு நான் பீல் பண்ண மாட்டேன். வாயை மூடி மௌனமாக பச்சைத் தண்ணி பல்லுல படாம சத்தியாக்கிரகம் பண்றாங்க.''

''ஸ்ரீதர் கிட்டே சொல்லிப் பார்க்கிறது தானே?''

''அவனும் என்ன செய்யறதுன்னு தெரியாம கையைப் பிசைஞ்சிட்டு நிக்கறான். நேத்தைக்கி அவங்க பசியில

கிறங்கி மயக்கம் போட்டதும் பதறிப் போயிட்டான். போன் பண்ணி டாக்டரை வரவழைச்சதும் அவங்க வந்து ட்ரிப்ஸ் ஏத்திட்டாங்க. எத்தன நாளைக்கி இது தொடர முடியும்? அவங்க பிடிவாதம் பிடிச்சா பிடிச்சது தான். சாதிக்காம ஓயவே மாட்டாங்கடா'' கிரிதரனின் முகத்தில் அதீத சோகம் அப்பிக் கிடந்தது.

''உன்னைப் பெத்தவங்களாச்சே? சாதிக்காம என்ன பண்ணுவாங்க?'' பிஸினஸில் கிரியின் சாதனையைக் கண்டு இன்றளவும் பிரமித்துக் கொண்டிருக்கும் ரமேஷ்.

''ச்சே! அந்த அனுதான்டா எல்லாத்துக்கும் காரணம். அவ மட்டும் என் மனசை நொறுக்கிட்டுப் போகாம இருந்திருந்தா நானும் மத்தவங்களைப் போல இயல்பா கல்யாணம் பண்ணிக்கிட்டு லைப்லே செட்டிலாகியிருப் பேன்.

''எங்கம்மான்னா எனக்கு எவ்ளோ உயிர் தெரியுமா? இந்தளவுக்கு அம்மாவை மறைமுகமா நா வதைக்கிறாப் பல ஆயிடுச்சே?'' அந்த கம்பீரமான விழிகளில் கண்ணீர் குளம் கட்டி உடைப்பெடுத்து வழிய ஆரம்பித்தது.

''கிரி என்ன இது? கன்ட்ரோல் யுவர்செல்ப். பிஸி னஸ்லே சிம்ம சொப்பனமா இருக்கற நீ இப்படி உடைஞ்சு போலாமா? அந்த அனு மட்டும் உனக்கு துரோகம் பண் ணாம இருந்திருந்தா என்ன நடந்திருக்கும் யோசிச்சுப் பாரு!'' பீடிகை போட்ட நண்பனை திகைப்புடன் ஏறிட்டான் கிரி.

''வைராக்கியத்தோட இந்த அளவுக்கு உழைச்சு உசந் திருப்பியா? எல்லாரும் அண்ணாந்து பாத்து பிரமிக் கிறாப்பல சிகரங்களைத் தொட்டிருக்கே. இந்த வெறிக்கு யார் காரணம்? இந்த ரீதியிலே பார்த்தா... அனுவுக்கு நீ



நன்றி சொல்லணும். மறைமுகமா உன்னைத் தூண்டி உசத்தி உட்கார வச்சுட்டா.

''எப்பவோ கல்யாணம் பண்ணி லைப்லே செட்டி லாகியிருப்பேன்'னு நீ சொன்னியே? லட்சிய வெறி யோட நீ எந்திரிச்சப்பவே லைஃப்லே செட்டிலாகிட்டே! கல்யாணம் என்னடா கல்யாணம்? நீ நெனச்சா அரைமணி நேரத்துல கூட அதைப் பண்ணிடலாம். ஆனா பிஸி னஸ்லே இந்த அளவுக்கு அதுவும் சின்ன வயசிலேயே யாரால சாதிக்க முடியும் சொல்லு? எனக்குத்தான் பெத்த வங்க யாருமில்லாம தனிக்காட்டுப் பறவையா சுதந்திரமா மனம் போன போக்கிலே நடமாடிக்கிட்டிருக்கேன்.

''ஆனா உன் விஷயம் அப்படியில்ல... பெத்த அம்மா இருக்காங்க. தம்பி இருக்கான். உனக்குப் பிடிச்சிருக்கோ இல்லையோ அவங்களோட விருப்பு, வெறுப்புகளுக்கு நீ மதிப்பு குடுத்து தான் ஆகணும். இது நாள் வரைக்கும் விஷயம் இவ்ளோ சீரியஸாகப் போகல. அம்மா படற வேதனையை மனசுல வச்சுக்கிட்டு ஒரு நல்ல முடிவை எடு கிரி!'' தணிந்த குரலில் ரமேஷ் கூறியதைக் கேட்டதும், யோசனையுடன் நெற்றியைச் சுருக்கினான் கிரிதரன்.

* * *

ஆரஞ்சு வண்ணத்தில் பூத்திருந்த மாதுளைப் பூக்களில் மாதுளைப் பிஞ்சுகள் முளை விட்டிருந்தன. கடித்துக் குதற வந்த அணிலொன்று, ஜன்னல் வழியே வந்த சப்தத்தில் பயந்து தாவிக் குதித்து ஓடியது.

ஜன்னல் வழியாக தோட்டத்தை வெறித்துக் கொண் டிருந்த மரகதம், நடைச்சத்தத்தைக் கேட்டு திரும்பிப் பார்த்தாள். இறுகிப் போன முகத்தோடு வந்தான் கிரி. அவனைத் தொடர்ந்து சோகம் கப்பிய முகத்துடன் ஸ்ரீதரன்

வந்தான். மரகதம் மீண்டும் தன் பார்வையைத் தோட்டத்து மாதுளைப் பிஞ்சுகளில் பதித்தாள்.

கட்டிலில் வந்து அமர்ந்த கிரி வாத்சல்யத்துடன் தாயின் கரத்தைத் தொட்டான்.

''அம்மா! உங்களுக்கு என்னம்மா குறை? அப்பா இருந்த காலத்தை விட இப்போ மூணு மடங்கு லாபத்தோட பிஸினஸ் போயிட்டிருக்கு. எல்லா வசதி வாய்ப்பு இருந்தும் வேண்டாத கவலையை இழுத்துப் போட்டுக்கிட்டு என்னம்மா சின்னக் குழந்தை மாதிரி? எனக்கு இஷ்டமே இல்லாத காரியத்தை செய்யும்படி கட்டாயப்படுத்தினா எப்படிம்மா? நான் உங்க பிள்ளை! உங்களுக்கு சகலமும் தெரியும். ஏன் என்னைப் புரிஞ்சிக்க மாட்டேங்கிறீங்க? வீட்டுக்கு விளக்கேற்ற மருமக வேணும்னு ஆசைப்படறீங்க! பேசாம... நம்ம ஸ்ரீதரனுக்கு கல்யாணத்தைப் பண்ணிடலாமா?'' கெஞ்சும் குரலில் தொண்டை கரகரக்கப் பேசினான்.

அதுவரை பிடிவாதமாக இருவரையும் ஏறிட்டுப் பார்க்காமல், தோட்டத்தை வெறித்துக் கொண்டிருந்த மரகதம் விருட்டென்று திரும்பினாள்.

''என்ன பேசறேன்னு புரிஞ்சு தான் பேசறியா? ஸ்ரீதரன் இந்த வருஷம் தான் எம்.ஈ.முடிச்சிட்டு உங்கூட வந்து பிஸினஸ் கத்துக்கிறான். அவன் உன்னை விட ஆறு வயசு சின்னவன் தெரியுமா? வீண் பேச்சு எதுக்கு?'' தொண்டை கமற இருமினாள்... ''என் மனசு துடிக்குதடா ரொம்ப நாளைக்கு நான் இருப்பேன்னு தோணல கிரி.'' முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

''அ... அம்மா! நான் சம்மதிக்கிறேன். உங்க இஷ்டப்படி செய்யுங்க. உங்க சத்தியாகிரகத்தை முதல்லே கை விடுங்க. எ... எனக்கு நீங்க தான் முக்கியம்!'' தழுதழுத்த குரலில் கூறி விட்டு விருட்டென்று அறையை விட்டு அகன்றான்.



மரகத்தின் முகத்தில் ஆயிரம் வாட்ஸ் வெளிச்சம் பரவியது.

''டேய் ஸ்ரீதரா! கல்யாணிக்கு போன் போடு! நான் அவகிட்ட உடனடியா பேசணும்!'' உற்சாகத்தில் உரத்துக் கூவினார். ஸ்ரீதரன் கொடுத்த 'செல்'லை வாங்கினார்.

''ஹலோ! கல்யாணி! நா மரகதம் பேசறேன். சௌக்கியந்தானே? ம்ம்! எல்லாம் நல்ல விஷயந்தான். ஆமா... அன்னிக்கி ரத்த தான முகாமுக்கு நான் வந்தப்போ... அங்க ரத்தம் 'டொனேட்' பண்ண வந்தாளே... சிவப்பா லட்சணமா உயரமா ஒரு பொண்ணு...! அ... அ... உமாவே தான்! சரி... அவ வீடு குடும்பம் இதைப்பத்தி விசாரிச்சு வைக்கச் சொன்னேனே...? விசாரிச்சாச்சா! பலே! கல்யாணின்னா... சும்மாவா? சகல கலா வல்லி ஆச்சே?''

தாயின் முகத்தில் படர்ந்த அதீத மகிழ்ச்சியைக் கண்டு குறுநகை பூத்தான் ஸ்ரீதரன்.

* * *

உமாவின் இதயம் இரும்பு போல் கனத்துக் கொண்டிருந்தது. வாஸ்தவத்தில் அவள் நிஜ வாழ்க்கையின் நிதர்சனத்தைப் புரிந்து கொள்ளும் பக்குவத்தைக் கொண்டவள். தனக்கென்று தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகள் வைத்துக் கொள்ளாதவள்.

வயதுக்கு மீறின 'மெச்சூரிட்டி' உடையவள். ஆதலால்... சூழ்நிலைக்குத் தகுந்தபடி அனுசரித்துச் செல்லும் குணமும், கஷ்ட நஷ்டத்தை ஏற்றுத் தாங்கி... எதிர் நீச்சல் போடும் குணமும் அவளிடம் குடி கொண்டு விட்டன.

வத்சலாவின் வீட்டில் பார்த்த அந்த இளைஞனின் உருவம் அவளது உள்ளத்தில் பதிந்து போயிருந்தாலும் பெரியவர்கள் ஒன்று கூடி 'நல்ல வரன் வந்திருக்கு உனக்கு சம்மதமா?' என்று கேட்ட போது வீட்டுப் பெரியவர்கள், நோயாளி அம்மா, குடும்ப நிலைமையை கருத்தில் கொண்டு தலையாட்டி வைத்தாள்.

உள்ளுக்குள் பதிந்து போன உருவத்தை தன் கண்ணீரால் கழுவி அழித்து... நிஜ வாழ்க்கையை எதிர் கொள்ளத் தயார் படுத்திக் கொண்டாள்.

## 18

கண்மூடி கண் திறப்பதற்குள் மளமளவென்று கல்யாண வேலைகள் தொடங்கிவிட்டிருந்தன. நடேசன் இறக்கை கட்டிக் கொண்டு பறந்தார். பாட்டி மங்களத்திற்கு உற்சாகத்தில் பத்துவயது குறைந்து விட்டாற் போன்று அப்படியொரு துருதுருப்பு! கால்களில் சக்கரத்தை மாட்டிக் கொண்ட சினுசில் இந்த வீட்டுக்கும்,உமா வீட்டுக்குமாக ஓடிக் கொண்டிருந்தாள்.

ஒரு வாரத்திற்கு முன்பு நாலைந்து சுமங்கலிப் பெண்கள் புடைசூழ, மரகதம் அம்மாள் வரன் கேட்டு வந்த போது ருக்மணிக்கு கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை.

'ஒரே இனம் தான்! பிரச்சினையில்லை! அதிகப் பிக்கல் பிடுங்கல் இல்லாத குடும்பமாகத் தெரிகிறது. பணக்கார வீட்டுப் பெண்மணியாக இருந்தாலும் அந்த அம்மாளைப் பார்த்தால் ரொம்ப சாதுவா சாந்தமா இருக்காங்க' உள்ளூர திருப்திப்பட்டாள் ருக்மணி.



"எங்க மாமியாரும் பெரியவரும் வந்துடட்டும். அவர் போனதுக்கு அப்புறம் எங்க குடும்பத்துக்கு எல்லாமே அவங்க தான்! நானா எந்த முடிவும் எடுக்கறதே இல்ல. தகவல் சொல்லி அனுப்பியிருக்கேன். இப்ப வந்துடுவாங்க!" மெல்லிய குரலில் ருக்மணி கூறியதும் மரகதத்திற்கு பரிபூரணத் திருப்தி ஏற்பட்டது.

"தாயைப் போல பிள்ளை நூலைப்போல சேலைன்னு சொல்வாங்க. இந்த வயசுல கூட மாமியாரையும், மூத்தாரையும் மதிச்சு நடக்கறாங்க. இவங்க பெத்த பொண்ணும் அப்படித்தானே இருப்பா. உமாவோட இரக்க சுபாவத்தையும் நல்ல குணத்தையும் கண் கூடா பாத்திருக்கோம். கடவுளே! எப்படியாச்சும் இந்த வரன் கை கூடி வரணுமே!" மனதிற்குள் முணுமுணுத்தாள் மரகதம்.

விஷயத்தைக் கேள்விப்பட்டு சடுதியில் வந்தனர் நடேசன். தம்பதியினரும், பாட்டியும்! இரு குடும்பங்களுக்கும் பரஸ்பர திருப்தி ஏற்பட பெரியவர்கள் உமாவைத் தனியே அழைத்து அவளது சம்மதத்தைத் தெரிந்து கொண்டனர். அதிர்ஷ்டவசமாய் ஜாதகங்களும் ஏகமாய் பொருந்தி விட அடுத்து வந்த இரு தினங்களில் நிச்சயதார்த்தம் நடந்தேறியது.

அடுத்த மாதமே திருமணம் என்பதால் பத்திரிக்கை அச்சடித்து விநியோகிக்கவும், நகைக்கடைக்கு ஓடவும் நேரம் சரியாக இருந்தது.

"பெண்ணிற்கு எதுவும் வேண்டாம். எதையும் நாங்கள் எதிர்பார்க்கவில்லை" என்று சம்மந்தி அம்மாள் கூறினாலும்... நடேசன் தனது கௌரவத்தை விட்டுக் கொடுக்காமல், உமாவுக்கு ஐம்பது பவுன் நகை போடுவதற்கு ஆயத்தமாக இருந்தார்.

''உமாவுக்குத் துணிமணி எடுக்க நானும் கூட வர்றேன்'' பாகுபாட்டை மறந்து ஓரகத்திக்கு உதவ முன் வந்தாள் கற்பகம். அன்று காலை ஒன்பது மணிக்கே காரில் வந்து விட்டாள்.

''கடை கடையா ஏறி இறங்கி நல்லதா பாத்து வாங்கணும். ரொம்ப நேரமாகும். சீக்கிரம் கிளம்பினா தான் சாயந்தரத்துக்குள்ள முடிக்க முடியும். காரை எடுத்துட்டு வந்துட்டேன். மேட்சிங் ப்ளவுஸ்ல இருந்து கர்ச்சீப் ஹேர்பின் வரைக்கும் லொட்டு லொசுக்கை விட்டு விடாம எல்லாத்தையும் பர்ச்சேஸ் பண்ணிடலாம்'' கனத்த லெதர் பேக்கை மார்போடு இடுக்கியபடி முறுவலித்தாள் கற்பகம்.

நடேசன், கற்பகம், ருக்மணி ஆகியோர் காரில் ஏறிக் கிளம்பினார். உமா தனது வேலையை ராஜினாமா செய்து விட்டு வீட்டில் தான் இருந்தாள்.

''அக்கா! அக்கா!'' அழைத்தவாறே சமையலறைக்குள் புகுந்தாள் ஸ்வேதா. குக்கரில் பருப்பு வெந்து கொண்டிருந்தது. கீரையை ஆய்ந்து கொண்டிருந்த உமா நிமிர்ந்து பாராமலே ''என்ன ஸ்வேதா?'' என்றாள். ''என்ன சமையல்னு கேட்க வந்தியா? உனக்குப் பிடிச்ச மணத்தக்காளி வத்தக் குழம்பும், கீரைக்கூட்டும் பண்ணலாம்னு இருக்கேன்!''

''அக்கா... நா அதைக் கேட்க வரலை! நீ கல்யாணமாகிப் போயிட்டா... நானும் அம்மாவும் மட்டும்தான் இருப்போம் இல்லியா?'' ஸ்வேதாவின் விழிகளில் கண்ணீர் தளும்பி நின்றது.

''மக்கு! நா என்ன பாரினுக்கா போறேன்? பஸ்லே ஏறி உக்காந்தா ரெண்டே ஸ்டாப். நெனச்ச மாத்திரத்துல ஓடி வந்துர மாட்டேன்?'' தங்கையின் கரத்தை ஆதுரமாகத் தடவினாள் உமா.



''சரிக்கா...! மாமா... உன்ன மாதிரியே 'ரிசர்வ்ட்டைப்' போலிருக்கு. நிச்சயதார்த்தம் நடந்த அன்னிக்கு ஸபாரி சூட்ல ப்ரண்ட் கூட வந்தவரு லேசா சிரிச்சதோட சரி. நா பாத்த வரைக்கும் யார் கிட்டயும் ஒண்ணுமே பேசல!''

குப்பென்று உமாவின் முகம் சிவந்து போனது. அன்று சபையில் கனத்த இதயத்துடன் பொதுவாக நமஸ்கரித்து எழுந்த போது தற்செயலாக ஏறிட்டாள் உமா. தூக்கி வாரிப் போட்டது. அதுவரை இருண்டு கிடந்த முகத்தில் பளீரென மின்னல் தோன்றியது போல் சந்தோஷ வெளிச்சம் பரவியது.

உள்ளுக்குள் சாரல் அடித்தது. வறண்டு கிடந்த இதயத்தில் லட்சோப லட்சம் வண்ணப் பூக்கள் பூத்துக் குலுங்கின. கூடை நிறைய பூக்களை வாரி அப்படியே தலையில் கொட்டியது போலிருந்தது. 'அவனேதான்!' சந்தோஷத்தில் உள் மனம் கூச்சலிட்டது.

முப்பது வயதைத் தொட்டிருந்தாலும் கிரி பார்ப்பதற்குக் கல்லூரி மாணவனைப் போன்று இளமையாக இருந்தான். 'தான் காண்பதெல்லாம் கனவா நிஜமா' சந்தேகத்தில் யாரும் அறியாமல் கிள்ளிப் பார்த்துக் கொண்டாள்.

'நிஜம் தான்' கடவுளே உனக்கு நான் எப்படி நன்றி சொல்வேன்?' சந்தோஷத்திலும் அவளுக்குக் கண்ணீர் துளிர்த்தது. ஆனால் கிரியோ சலனமற்று அமர்ந்திருந்தான். இவளைப் பார்த்தவனது விழிகளில் சிறு திடுக்கிடலோ ஆச்சரியமோ வெளிப்படாமல் இருந்தது.

அது வரை கனத்த இதயம், இறகு போல் இலேசானது. மனதை இழுத்துக் கட்டுக்குக் கொண்டு வந்தாள். சந்தோஷமோ துக்கமோ எதையும் சமமாக ஏற்றுக்

கொள்ளும் பக்குவம் நிறைந்தவளாயிற்றே! ஆர்ப்பரித்த இதயம் கன நேரத்தில் அடங்கி இயல்பு நிலைக்கு வந்தது.

''அக்கா! நான் கேட்டதுக்கு நீ பதிலே சொல்லலை!'' ஸ்வேதா, தன் தோளைத் தொட்டதும் நினைவு கலைந்து தங்கையை ஏறிட்டாள்.

''சபை ஜனங்க மத்தியில பேசறதுக்கு அவருக்கு கூச்சமா இருந்திருக்கும்!'' முறுவலித்தாள்.

''பாருடா! இப்பவே மாமா மேல இருக்கற பாசத்தை! அவர் ஞாபகத்துல எங்களை எல்லாம் மறந்துடாதக்கா!'' ஸ்வேதா கிண்டலடித்தாள்.

## 19

ஒரு சுபயோக சுபதினத்தில் திருமணம் இனிதே நடந்தேறியது. மரகதம் மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்தாள்.

''பூஜை ரூம்லே விளக்கை ஏத்தும்மா. சாமி படத்துக்கு பூப்போட்டு விழுந்து கும்பிட்டுக்கோ. அப்படியே அந்தப் பக்கமா இருக்கற உங்க மாமனார் படத்துக்கும் பூப்போட்டு நமஸ்காரம் பண்ணிக்கம்மா!'' மருமகள் நமஸ்கரிப்பதை விழிகள் விரியப் பார்த்து ரசித்தாள் மரகதம்.

நமஸ்கரித்து முடிந்ததும் உறவுத் தலைகளுக்கு மத்தியில் காட்சிப் பொருளாய் தனித்து அமர்ந்திருந்தாள் உமா. நிமிடத்திற்கு ஒருமுறை செல்லில் அழைப்பு வந்து கொண்டே இருந்ததால் அகன்று சென்றிருந்தான் கிரிதரன்.

''புதுப் பொண்ணு கூட உட்காராம அப்படியென்ன தலைபோற விஷயமோ தடியன்'' மரகதம் மகனை செல்லமாகக் கடிந்து கொண்டாள்.



''பிஸினஸ்லே அவ்ளோ அக்கறை! இந்த செல்லை எவன் தான் கண்டுபிடிச்சானோ?'' அலுத்துக் கொண்டாள்.

முதலிரவு அறை! பால் டம்ளரை மேசையில் வைத்து விட்டு அவனது கால்களில் விழுந்து நமஸ்கரித்தாள் உமா. அவளை ஏற இறங்கப் பார்த்து விட்டு கட்டிலில் அமர்ந்தான் கிரிதரன்.

''உன் கிட்ட நான் கொஞ்சம் மனசு விட்டுப் பேசணும்'' சற்றே தயக்கத்துடன் அவளை ஏறிட்டான்.

''இந்தக் கல்யாணத்துல எனக்குத் துளிகூட விருப்பமே இல்ல!''

''எ... என்ன சொல்றீங்க?'' சிவந்த முகத்தில் திகைப்பு பரவியது.

''அம்மாதான் கட்டாயத்தாலி கட்ட வச்சிருக்காங்க!'' கேட்ட மாத்திரத்தில் உமாவின் உள்ளுக்குள் கட்டி வைத்திருந்த அழகான கோட்டை மளமளவென்று நொறுங்கிச் சரிந்தது.

புதுப் பெண்ணைச் சீண்டி விளையாடுகிறானோ என்ற நப்பாசையில் அவனது விழிகளைப் பார்த்தாள். 'இவன் விளையாடவில்லை. சீரியஸான முகபாவனையைப் பார்த்தால் நிஜம்தான் சொல்கின்றான் போலும்!' அவளது நா உலர்ந்து போனது. கை விரல்கள் ஜில்லிட்டன.

''தெரிஞ்சோ தெரியாமலோ நாம கணவன் மனைவியாயிட்டோம். என்னோட ஹிஸ்டரியை விலாவரியா நீ தெரிஞ்சுக்கணும். என்னோட சொந்த மாமா பொண்ணு அனு! பொறந்த உடனேயே அவ எனக்குத்தான்னு பெரியவங்க தீர்மானிச்சதாலே உயிருக்குயிரா அவளை நான் காதலிச்சேன். அவளும் உயிராத் தான் பழகினா.

எங்கப்பா மறைஞ்ச பின்னாடி பிஸினஸ்லே தொய்வு ஏற்பட்டு நொடிஞ்சோம். விஷயம் தெரிஞ்ச உடனே ''நா ரொம்ப பிராக்டிக்கல். உங்கள கட்டிக்கிட்டு காலம் பூரா என்னால கஷ்டப்படவே முடியாது' அப்படின்னு மூஞ்சிக்கு நேரா சொல்லிட்டு பசையுள்ள பார்ட்டியா பாத்துக் கல்யாணம் செய்துக்கிட்டா.

''அந்த ஆறாத ரணத்துக்காக மனசுக்குள்ளே எத்தனை நாள் ஊமையா அழுதிருக்கேன் தெரியுமா? வெறித்தனமா உழைச்சு இந்த அளவுக்கு நா உசந்திருக்கேன். பணம், புகழ் வந்து சேர்ந்ததும் பழைய கிரி செத்துப் போயிட்டான். அதே பணத்துக்காக சில பெண்கள் நாடி வந்ததும் வாழ்க்கைத் தடமே அடியோட மாறிப் போயிடுச்சு. ஏமாற்றம், அவமானம், வேதனை இவை எல்லாம் சேர்ந்து கிரியை ரணப்படுத்தி ரணப்படுத்தி அவனுக்குள்ளே இருந்த மெல்லிய உணர்வுகளை சாகடிச்சிருச்சு.

''பணம் வந்ததும் வேண்டாத குணங்கள் வந்து சேர்ந்து தடம் புரள வைச்சிருச்சு! ஒரு நல்ல தாய்க்கு மகனாப் பொறந்துட்டு இப்படித் தலைகீழா மாறிட்டோம்ங்கிற வருத்தம் இருக்கு! பல நாட்கள் நைட்ல தூங்காம தவிச்சிருக்கேன். தூக்கம் வரணும்னா நா குடிச்சாகணும்! அன்னக்கி என் பிரண்ட் கூட பேசிட்டிருந்தப்போ அந்த வீட்டுக்கு நீ வந்தே. எங்கியோ பார்த்த மாதிரி பல வருஷம் பழகின மாதிரி ஒரு உணர்வு ஏற்பட்டுச்சு. ப்ச்! எதிர் பார்க்காத திருப்பம் ஏற்படற மாதிரி... நாம ஹஸ்பெண்ட் ஒய்ப் ஆயிட்டோம்.

''எங்கம்மா, தம்பி கிட்ட கூட நா மனசு விட்டுப் பேசின தில்ல. 'வேவரிங் மைண்ட்...' மனசு குழம்பித் தவிச்ச தால... கல்யாண வாழ்க்கைக்கே தயாராக முடியல. வேண்



4/4/14

டாம்னு இத்தன வருஷம் பிடிவாதம் பிடிச்சேன். ஆனா அம்மா என்னைப் பாசத்தால கட்டிப்போட்டு வேற வழி இல்லாம இந்தக் கல்யாணத்துக்கு சம்மதிக்கும் படி பண்ணிட்டாங்க.

''இனம் புரியாத குழப்பம் அது தெளிவடையணும்! அந்தப் புரியாத புதிருக்கு எனக்கு விடை தெரிஞ்சாகணும். மனசுக்குள்ள ஒரு தேடல் இருந்துகிட்டே இருக்கு. அந்தத் தவிப்பு அடங்கணும். அது வரை... இப் யூ டோண்ட் மைண்ட்... ஐ நீட் சம் டைம்...! ஐ திங்க்... யூ வில் அண்டர்ஸ்டாண்ட்!'' குழறலாகப் பேசியபடி கட்டிலுக்கு அடியில் இருந்த அந்த சிறு விஸ்கி பாட்டிலை எடுத்து மிச்சமிருந்தவற்றை அப்படியே தொண்டைக்குள் சரித்துக் கொண்டான்.

மகிழ்ச்சியோ துக்கமோ எதையும் கணநேரத்தில் சகித்து ஏற்றுக் கொள்ளும் மனப் பக்குவம் வாய்ந்தவ ளாததால்... சட்டென்று அவன் மன உணர்வுகளைப் புரிந்து கொள்ள முடிந்தது. இதயத்தில் இடி விழுந்தது போன்ற வேதனையை மென்று விழுங்கிவிட்டு 'கணவனது கவலையை எவ்விதம் போக்குவது? அடுத்து என்ன செய்ய வேண்டும்?' உமாவின் மனம் தீவிரமாக யோசித்தது.

அவனது கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் வழிந்து கொண்டு இருந்தது. 'பாவம்! இவர் உள்ளூர மிகவும் அடிபட்டுப் போயிருக்கிறார். காலப்போக்கில் கொஞ்சம் கொஞ்சமாகத் தான் தேற முடியும்!

காலி பாட்டிலை கையில் வைத்தபடி அப்படியே படுக் கையில் சாய்ந்து கொண்டான் கிரி. அவனது வேதனையை யும், நிலையையும் கண்டு உள்ளுக்குள் புழுவாய்த் துடித்துப் போனாள். கண்களை மூடிக் கொண்டிருந்தவனது

விழியோரங்களில் கண்ணீர் கோடு போட்டுக் கொண்டு இறங்கியது.

சிறிது நேரம் செய்வதறியாமல் கற்சிலையாய் நின்று கொண்டிருந்தாள் உமா. கண்ணீர் வழிவது நின்று இலே சான குறட்டைச் சத்தம் கிளம்பியதும் மெல்ல அருகில் சென்று அவன் இறுகப் பற்றியிருந்த பாட்டிலை மிக மெதுவாக உருவி அப்பால் வைத்தாள்.

ஒரு கணம் நின்று கணவனது முகத்தை உற்று நோக்கி னாள். நிச்சலனமாய் உறங்கிக் கொண்டிருந்தான் கிரி. சூது வாது தெரியாத கள்ளம் கபடமற்ற முகம். மாசு மருவற்ற தெளிந்த முகம். இவர் உண்மையில் மிகவும் நல்லவர் தான்! கூடிய விரைவில் கெட்ட பழக்கங்களிலிருந்து விடுபட்டுத் திருந்தி விடுவார்!' உமாவின் உள்ளத்தில் சின்னதாய் ஒரு நம்பிக்கை முளை விட்டது.

ஒரு தலையணையை எடுத்துக் கொண்டு தரையில் ஒருக்களித்துப் படுத்தாள். கணவனின் மனதிலிருந்து குழப்பம் தெளியவேண்டும். குடிப்பழக்கத்தை நிறுத்த வேண்டும். இது எல்லாவற்றையும் விட பணத்தை நாடி அவனிடம் சில பெண்கள் வந்ததாகக் கூறினானே?

'ஆஞ்சநேயா! எனக்கேன் இந்த சோதனை?' இந்த விஷ யத்தை எண்ணும் போது இதயத்தில் ஈட்டியால் குத்தியது போல் வேதனையில் துடித்துப் போனாள். இத்தகைய அதிர்ச்சியை எந்தப் பெண்ணால் தான் தாங்கிக் கொள்ள இயலும்? அதுவும் திருமணமான முதல் நாள் இரவி லேயே அவள் தலையில் இடி விழுந்தாற் போலிருந்தது.

இத்தனை வறுமையிலும், பணக் கஷ்டத்திலும் போராடி வாழ்ந்தவள்தான். பல பிரச்சினைகளை எதிர்கொண்டு சமாளித்தவள்தான். ஆனாலும் அந்தக் கஷ்டங்களை



எல்லாம் தைரியத்துடனும், தன்னம்பிக்கையுடனும் தாங்கிக் கொள்வாள் உமா.

அவளது விழியோரங்களிலிருந்து வழிந்த கண்ணீர் வாய்க்கால் போட்டுக் கொண்டு ஓடி தலையணையை நனைத்தது. இலேசாய் முதுகு குலுங்க வெகு நேரம் கண்ணீர் உகுத்துக் கொண்டிருந்தாள் உமா. இத்தனை துக்கத்திலும் ஏதோ ஓர் மூலையில் சின்னதாய் ஒரு சந்தோஷப்புள்ளி மினு மினுத்தது நிஜம்!

வத்சலா வீட்டில் முதன் முதலாக அவளைச் சந்தித் ததை இன்னமும் ஞாபகம் வைத்துக் கொண்டிருக் கிறானே? பல வருடங்கள் பழகினாற்போன்ற உணர்வு ஏற்பட்டதாகக் கூறினானே? எனக்கும் அத்தகைய உணர்வு தானே ஏற்பட்டது? புன்னகை ததும்பிய களை யான முகம் பசை போட்டுக் கொண்டு ஒட்டிக் கொண்ட தினுசில் உள்ளத்தில் பதிந்து போனதே? இருவரது எண் ணங்களும் ஒரே அலைவரிசையில் இருந்ததை எண் ணியதும் மனதிலிருந்த பாரம் பனி போல் விலகியது.

இரண்டு மணி நேரம் கழிந்ததும் கிரிக்குச் சட்டென்று விழிப்புத் தட்டியது. கட்டிலிலிருந்து பூவலங்காரத்தைப் பார்த்ததும்தான் யதார்த்த உலகமே அவனுக்கு ஞாபகம் வந்தது. தலை பாறாங்கல்லாய் கனத்து வலித்தது. நெற்றிப் பொட்டை தன் இரு கைகளாலும் பற்றிக் கொண்டு எழுந்து அமர்ந்தான் கிரி.

தரையில் அவனுக்கு முதுகு காட்டிக் கொண்டு ஒருக் களித்துப் படுத்திருந்த உமாவை இமை கொட்டாமல் பார்த்தான். இரவு விளக்கின் மங்கிய வெளிச்சத்தில் சிற்பி செதுக்காத தங்கச் சிலையாய் சயனித்திருந்த உமாவைக் கண்டதும் தான் அவனுக்குத் தான் பேசியதெல்லாம் நினைவுக்கு வந்தது.

எந்த ஒரு மனிதனும் தான் ஒரு அன்பு உள்ளத்தால் நேசிக்கப்பட வேண்டும் என்று விரும்புவான். அந்த அன்பு உள்ளம் தன்னை மட்டும் நேசிக்க வேண்டும். வேறு எதையும் எதிர் பார்க்காமல் தன் மேல் அன்பை வர்ஷிக்க வேண்டும் என்று நினைப்பான்.

அன்று வத்சலாவின் வீட்டில் வைத்து கிரி அவளைப் பார்த்தானே? வியர்க்க விறு விறுக்க மசாலாப் பொருட்களை எடுத்துக் கொண்டு அவ்வளவு தூரம் வந்ததையும் அவன் கேள்விப்பட்டானே? வருமானம் போதாமல் கஷ்ட ஜீவனம் நடத்திய பெண் உமா! ஒரு வேளை இவளும் பணத்தைப் பிரதானமாக மதித்துத் தான் என்னைத் திருமணம் செய்து கொண்டாளா?

பணத்திலேயே பிறந்து வளர்ந்தவள் அனு! அவளே பணத்தை அவ்வளவு பிரதானமாக மதித்த போது பாவம்! அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்ய கடுமையாக உழைத்துச் சம்பாதித்து வந்தவள் உமா. அதனால் உமாவும் பணத்திற்குத் தான் முதலிடம் கொடுத்திருப்பாள். இதை எண்ணும் போதே கிரியின் உள்ளம் அனலில் இடப்பட்ட புழுவாய்த் துடித்தது.

'அப்போ என்மேல் உண்மையான அன்பு செலுத்த ஒரு ஜீவன் கூடக் கிடையாதா?' அவனது இதயம் ஏங்கித் தவித்தது.

'இவளைத் தொட்டு எழுப்பி இதைப் பற்றி அவளிடமே கேட்டு விடலாமா?' மனம் நப்பாசைப் பட்டது.

'சீச்சீ! இதைப் பற்றி எப்படிக் கேட்பது? கேட்டால் உண்மையை உள்ளது உள்ளபடி கூறுவாள் என்று என்ன நிச்சயம்?' மனம் வாதிட்டது.



'கண்டுபிடிக்கறேன். நானே கண்டு பிடிக்கறேன். அது வரை நம் மனதில் உள்ள போராட்டத்தை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளக் கூடாது. தெரிந்துவிட்டால் சுதாரித்து விடுவாள். என் தேடலுக்குரிய விடை கடைசி வரை கிடைக்காமலே போய் விடும்!' உள் மனம் எச்சரித்தது.

விடியும் வரை கொட்டக் கொட்ட கண் விழித்திருந்தான். அவன் உள்ளத்தில் பட்டி மன்றப் போராட்டமே நடந்து கொண்டிருந்தது.

'ஒரு வேளை என் கரம் பற்றி கடைசி காலம் வரை வாழ்க்கைப் பயணத்தைத் தொடர வந்த உமாவும் அனுவைப் போல் இருந்து விட்டால்' அந்த நினைப்பே அவனது நெஞ்சைக் கசக்கிப் பிழிந்தது.

'இத்தனை வருஷமா அந்த அனு ஏற்படுத்தின காயத்தால ஜீவ மரணப் போராட்டம் தான் நடத்திக்கிட்டிருக்கேன்! வேணுங்கிற மட்டும் வேதனையை அனுபவிச்சுத் துடிக்கிறேன் இனிமேலாவது எனக்கு நிம்மதி கிடைக்கணும் கடவுளே?' கண்ணீர் விட்ட கிரி உமாவின் உடல் அசைந்ததும் சட்டென்று கட்டிலில் படுத்துக் கொண்டான்.

## 20

திரைச்சீலை விலகிய கண்ணாடி ஜன்னலை ஊடுருவிக் கொண்டு, பகல் நேரக் கதிரவனின் கதிர்கள் சுள்ளென... கிரியின் முகத்தில் தாக்கியதும் தூக்கம் கலைந்து எழுந்தான். நிமிர்ந்து சுவர்க் கடிகாரத்தைப் பார்த்தவன், மணி ஒன்பதரையைத்

தாண்டியதைக் கண்டு வாரிச் சுருட்டிக் கொண்டு பாத்ரூமுக்கு விரைந்தான். குளித்து உடை மாற்றிக் கொண்டு மாடிப்படிகளில் தடதடவென்று இறங்கி டைனிங் ஹாலுக்குள் வந்து அமர்ந்தான்.

இடியாப்பத்தை சாப்பிட்டுக் கொண்டிருந்த ஸ்ரீதரன் நிமிர்ந்து பார்த்துப் புன்னகைத்தான்.

''இன்னிக்கு டிபன் சூப்பர். தொட்டுக்க வச்சிருக்கற குருமா தேங்காய்ப்பால் இரண்டுமே அமர்க்களம். குழிப்பணியாரம் கூட ரொம்ப ருசியா இருக்கு!'' ரசித்துப் பாராட்டினான்.

''அப்படீன்னா... இன்னும் கொஞ்சம் போட்டுக்கோ!'' சிரித்தபடி பரிமாறினாள் மரகதம்.

''சீக்கிரம் எனக்கும் வைங்கம்மா! தம்பி என்னோட பசியைத் தூண்டறானே?'' சிரித்துக் கொண்டே தட்டில் பரிமாறப்பட்ட பலகாரத்தை ஆவலுடன் எடுத்துச் சாப் பிட்டான். குருமா உண்மையில் காரசாரமாக சுவையும், மணமுமாக இருக்கவே... அளவுக்கு அதிகமாகவே அன்று சாப்பிட்டு விட்டான் கிரி.

''என்னாச்சுமா இன்னிக்கி? ரொம்ப பிரமாதமா ருசியா செய்திருக்கீங்க!'' மரகதத்தை ஏறிட்டான் கிரி.

''அட, என்ன அண்ணா? இவ்ளோ ருசியா இருக்கும் போதே... அது நம்ம அம்மா சமைச்சதில்லைன்னு தெரிஞ்சுக்க வேணாம்? அண்ணி தான் சீக்கிரமா எழுந்து இதை செஞ்சிருக்காங்க. நியாயமா நீங்க அவங்களைத் தான் பாராட்டணும்!'' ஸ்ரீதரன் கலாய்த்தான்.

மூன்று காபி டம்ளர்களை சின்ன ட்ரேயில் வைத்து எடுத்துக் கொண்டு, கிச்சனிலிருந்து வெளிப்பட்டாள்



உமா. ஈரக் கூந்தலில் டவலைச் சுற்றிக் கட்டி முடித் திருந்தாள். நெற்றி வகிட்டில் தீற்றலாய் குங்குமம் பளிச்சிட்டது.

ஆர்கண்டி காட்டன் புடவையில் மிக எளிய தோற்றத் தில் காணப்பட்டாள். கழுத்தில் தாலிச்செயின், காதுகளில் சிறிய ரோஜாத் தோடுகள், ஒரு ஜோடி மெல்லிய வளை யல்கள், இடது கை மோதிர விரலில் சிறிய பவள மோதிரம் என்று படு சிம்பிளாகத் தெரிந்தாள்.

''அம்மா! உங்களுக்கு காபியில சுகர் போடலை'' மாமியார் மரகதத்திற்கு பவ்யமாக எடுத்து நீட்டினாள். ஸ்தம்பித்துப் போன தினுசில், உமாவை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான் கிரி. வியப்பின் விளிம்பில் இருந்தான்.

'என்னது இது? இப்படியிருக்கா? அம்மாவோட நகை களே நிறைய இருக்கு. இது போறாதுன்னு... புது மாடல்லே வரப்போற மருமகளுக்குன்னு ஏகப்பட்டது வாங்கி வச்சாங்க! நாள் கிழமைக்கு தவறாம வாங்கி வச்ச பட்டுப்புடவைங்க பீரோவுல குவிஞ்சு கிடக்கு. புதுசா வந்த மருமகளுக்கு இதையெல்லாம் எடுத்துக் குடுக்க அம்மா மறந்துட்டாங்களா? ஆசை ஆசையா... பாத்து பாத்து வாங்கி வச்சாங்களே?' கிரியின் தலைக்குள் வண்டு குடைய ஆரம்பித்தது.

''காபியிலே சர்க்கரை போடாட்டி என்ன? இனிமே எதைப் பத்தியும் நா கவலைப்படமாட்டேன். எம் மருமக கையால கழுநீரை வாங்கிக் குடிச்சாலும்... அது தேனா இனிக்கும். இதுக்குத் தான் இத்தனை வருஷமா நா தவங்கிடந்தேன்'' உற்சாக மிகுதியில் உரத்துப் பேசினாள் மரகதம்.

''ஆனா.. இன்னொரு குறையும் இருக்கு. பெட்டி நிறைய இருக்கற நகைங்கள விதவிதமா உனக்குப் போட்டு ஆசைத் தீரப் பாக்கலாம்னு நான் நெனச்சது... நிறைவேறாது போலிருக்கு! கல்யாணத்துக்கு முதல் நாளே... எல்லா நகைங்களையும் எடுத்துட்டு வந்து உன் கிட்ட குடுக்க வந்தேன். ஆனா... நீ பிடிவாதமா நகைங்க மேல பிடித்தமே இல்லைன்னு சொல்லி... அதைக் கையால கூட வாங்க மறுத்திட்டே,

''என் ஆசை நிறைவேறாமப் போனாலும்... இந்த மாதிரி நகை நட்டு மேல ஆசைப்படாத, எளிமையான அடக்க மான மருமகள் எனக்கு வாய்ச்சிருக்காளேன்னு... எனக்கு ரொம்பவே பெருமையா இருந்துச்சு. கல்யாண வேலைல இந்த விஷயத்தை எம் பசங்க கிட்ட கூட நா சொல்ல மறந் துட்டேன் உமா!'' நெகிழ்ச்சியுடன் உமாவின் கரத்தைப் பற்றிக் கொண்டாள் மரகதம்.

கிரிதரனுக்குத் தன் காதுகளையே நம்ப முடியவில்லை. 'நகைகள் மீது ஆசைப்படாத பெண்ணா? கல் பதித்த நகைகள், வைரம், வைடூரியம், நவரத்தினம் பதித்த அட்டிகைகள், வளையல்கள் என்று மரகதம் ஆசையாய் வாங்கி வைத்தவற்றைப் பார்த்தாலே... பார்த்தவர்களின் மனதைக் கொக்கி போட்டு இழுக்குமே?

'கஷ்ட ஜீவனத்திலேயே வாழ்ந்த இளம் பெண்ணுக்கு நகைகள் மீது ஆசை கிடையாதா?' விழிகள் விரிய உமாவைப் பார்த்தான் கிரி. அவனது தவிப்புக்கும், தேட லுக்கும் கூடிய விரைவில் விடை கிடைக்குமா?' உமா வின் மேல் மதிப்பு கூடிக் கொண்டே போனது. உள்ளூர சின்ன சந்தோஷ நீரூற்று பொங்கி உயரத் தொடங்கியது.

''அது மட்டுமா? கார்த்தால அவ குளிச்சிட்டு வந்ததும்... பச்சைக்கலர் பட்டுப் புடவையைக் குடுத்து



கட்டிக்கிட்டு வரச்சொல்லி... பாத்து ரசிக்கலாம்னு நெனச்சு அதை எடுத்து வச்சேன். உமா பச்சைக்கலர் பட்டுப்புடவை கட்டிக்கிட்டு வந்து நின்னா... அப்படியே காளிகாம்பாளே நேர்ல வந்த மாதிரி தெய்வீகக் களை யோட மிளிரப் போறான்னு நெனச்சு கற்பனை செய்து கிட்டிருந்தேன்... ஆனா உமா இதுக்கும் ஒரேடியா மறுத் திட்டா...

''கல்யாணத்தன்னிக்கு என்னால தவிர்க்க முடியலை... பட்டுப்புடவை கட்ட வேண்டியதாயிடுச்சு...தயவு செஞ்சு மன்னிச்சுடுங்க. எனக்கு பட்டுப்புடவைங்க கட்டற துக்கு... மனசுக்குப் பிடிக்கலை. அதனால் வற்புறுத்தாதீங் கம்மா'ன்னு சொல்லிட்டா!

''இந்தக் காலத்துல இப்படியொரு பொண்ணா? அப் படின்னு எனக்கு ஆச்சரியம் தாங்கல! கல்யாணி கிட்ட இரண்டொரு வார்த்தை போன்லே பேசிட்டு வரேன்!'' கைகளைக் கழுவிக் கொண்டு எழுந்து கொண்டாள் மரகதம்.

குறுகுறுவென்று கிரி தன்னைப் பார்ப்பதைப் புரிந்து கொண்டாளோ என்னவோ... தப்பித் தவறி கூட உமா அவனை ஏறிட்டுப் பார்க்கவில்லை. அவனுக்கு துரோக மிழைத்த அனுவும் சரி... பணத்திற்கு வலிய வந்த சில பெண்களும் சரி... 'ஆடை அணி அலங்காரப் பூஷிதை கள்' தான்! அவர்களைப் பார்த்துச் சலித்த கிரியின் கண் களுக்கு உமாவின் எளிய கோலம் வியப்பைத் தந்தது.

அவள் மேல் அவன் கொண்டிருந்த சந்தேகம் இடிந்து பெயர்வது போல் இருந்தது. 'இவள் பணத்தை மதிக் காதவள்... என்னை... என்னை மட்டுமே நேசிக்கும் அன்பு மனைவியாக இவள் திகழ்வாள்' என்ற எண்ணம் ஆணிவேராய் ஆழமாய் உள்ளுக்குள் இறங்கியது.

திருமணமான மறுநாளே... சொல்லி வைத்தாற் போல்... அவளது குணாதிசியங்களைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு கிட்டியதால்... உள்ளூர மகிழ்ச்சியில் ஆர்ப்பரித்தான் கிரி.

'ஊஹூம்! அவசரப்பட்டு முடிவெடுக்கக்கூடாது. இன்னமும் உமாவைப் பற்றி பூரணமாகத் தெரிந்து கொள்ள வேண்டும். பல வருடங்களாகப் பழகிக் காதலித்த அனுவின் குணத்தையே அவனால் எடை போடமுடியவில்லையே? லெட் அஸ் வெயிட் அண்ட் ஸீ!' உள்மனம் எச்சரித்ததும் வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டது போல்... அவனது இதயமும் இரும்பாய் கனக்கத் தொடங்கியது. சற்று முன் தலைகாட்டிய மகிழ்ச்சி மங்கி மறைந்தது நிஜம்!

## 21

பவித்ராவுக்கு பார்த்த வரன்கள் ஒவ்வொன்றும் கை கூடி வரும் சமயத்தில் தட்டிப் போய்க் கொண்டே இருந்தன. பொது இடங்களில் அவளது ஜாலியான நடவடிக்கையை ஆங்காங்கே கவனித்த நபர்கள் வேறு.. அவளைப் பற்றி ஒன்றுக்கு நூறாக கதை கட்டி விட்டிருந்தனர்.

சென்ற வாரம் அடையாறிலிருந்து வந்து பவித்ராவைப் பெண் பார்த்து விட்டுச் சென்றனர். இந்த வரன் நிச்சயம் கை கூடி வந்து விடும் என்று நடேசன் ஆணித்தரமாக நம்பிக் கொண்டிருந்தார். ஆனால் தரகரிமிடருந்து வந்த போன் அவரது நம்பிக்கையைப் பெயர்த்து விட்டது.

''நடேசன் சாருங்களா? நா தரகர் பொன்னுரங்கம் பேசறேன். நான் அடையாறிலிருந்து தான் பேசறேன்.



அ...அவங்களுக்கு இந்த சம்பந்தத்துலே இஷ்டம் இல்லீங்களாம்... சரி! நாம வேற வரன் பாத்துறலாங்க... கவலைப்படாதீங்க!''

''என்னய்யா இது? 'பொண்ணு அழகா இருக்கா... எங்களுக்கு ரொம்பவும் பிடிச்சிருக்கு. இந்த சம்பந்தம் முடிக்கிறதிலே நாங்க உறுதியா இருக்கோம்'னு மாப்பிள்ளையோட தகப்பனார் சொன்னாரே? ஜாதகமும் சரியாப் பொருந்தி இருக்கே... எதுக்காக இஷ்டம் இல்லைன்னு விசாரிச்சியா?'' ஆவேசப்பட்டார் நடேசன்.

''அது... அது வந்து...!'' மறுமுனையில் தரகர் திணறுவது புரிந்தது. ''நீயா சொல்றியா? இல்ல.... மாப்பிள்ளை வீட்டுக்கே போன் போட்டு என்ன காரணம்னு நான் தெரிஞ்சுக்கவா?'' அதட்டினார் நடேசன்.

''இ... இல்ல நீங்க போன் பண்ணாதீங்க... நானே சொல்லிடறேன். அது... அது... வந்து... அவங்க சொன்னதை அப்படியே உங்ககிட்ட நா சொல்லிடறேன். திருவான்மியூர் பீச்சுல... கொஞ்ச நாளைக்கு முன்னாடி காலேஜ் பசங்க...ஆண் பெண் பாகுபாடு இல்லாம ஜாலியா சேந்து ஆட்டம் போட்டிருக்காங்க... அந்த கும்பல்லே பிரதானமா நம்ம பவித்ரா பொண்ணு இருந்துச்சாம்.

''இந்த விஷயம் மாப்பிள்ளை வீட்டுக்காரங்களுக்கு எப்படித் தெரிய வந்ததுன்னா... மாப்பிள்ளை வீட்டுலே, அவங்களுக்கு நெருங்கினவங்ககிட்ட.. பவியோட போட்டோவைக் காட்டி, ''இந்தப் பொண்ணைத்தான் எங்க வீட்டுப் பையனுக்கு பாத்திருக்கோம்னு சொல்லியிருக்காங்க... அதுக்கு அவங்க, 'பீச்சுல நாங்க கண் கூடா பாத்தோம். இந்தப் பொண்ணு சரிப்பட்டு வரமாட்டா. வேற, அடக்கமான பொண்ணா... குடும்பத்துக்கு

ஏத்தவளா பாத்து முடிங்க' அப்படின்னு அடிச்சு சொல் லிட்டாங்களாம்.''

''.........''

''பொண்ணு அழகா இருந்துட்டா மட்டும் போதாது. அடக்கமாகவும் இருக்கணும். நாகரீகம்கிற பேர்ல ஆம் பளைங்களுக்கு சமமா... தாம்தூம்னு குதிக்கற பொண்ணைக் கட்டிக்கிட்டு வந்து காலம் முழுக்க அவஸ்தைப்பட நாங்க தயாரா இல்லை'ன்னு பையனோட அம்மா சொல்லிட்டாங்க'' தரகர் தனக்குத் தெரிந்த தக வலைச் சொன்னதும்... ரிசீவரை நழுவ விட்டார் நடேசன்.

அவமானத்தில் உடல் முழுவதும் குப்பென்று வியர்த்துக் கொட்ட, கால்கள் தள்ளாட தொப்பென்று சோபாவில் சரிந்து அமர்ந்தார். அருகில் நின்று அவரது உரையாடலை கவனித்துக் கொண்டிருந்த மனைவி கற்பகமும், மங்களமும் பதறிப்போய் அவரைக் கைத்தாங் கலாகப் பிடித்துக் கொண்டனர். மனைவியும், தாயும் அவரது இரு புறமும் அமர்ந்து திகிலுடன் நோக்கினர்.

இரண்டு மாதங்களுக்கு முன்பே... பவித்ராவுக்கு அவப்பெயர் ஏற்பட்ட விஷயம் அரசல் புரசலாக அவர் களது காது வரை எட்டியிருந்தது. பவித்ராவைக் கூப்பிட்டு பெரியவர்கள் கண்டித்தனர். அனைவரும் உள்ளுக்குள் வெந்து புழுங்கிக் கொண்டிருந்தனர்.

நடேசன் தொய்ந்து விட்டிருந்தார். கற்பகம் இரண்டே மாதங்களில் இளைத்து ஆளே அடியோடு மாறி விட்டிருந் தாள். பவித்ரா கல்லூரிப் படிப்பை நிறுத்தி விட்டு வீட்டில் தான் இருந்தாள். கண் மூடித்தனமாக மனம் போன போக்கில் நடந்து கொண்டவளுக்கு... சமீபத்தில்தான்



தன்னைச் சுற்றியிருந்த உலகத்தைப் பற்றிப் புரிய ஆரம்பித்தது.

கம்ப்யூட்டர் கிளாசுக்குச் செல்வதையும் நிறுத்தி விட்டாள். செல்போனைத் தூக்கியெறிந்தாள். அழகு சாதனப் பொருட்களை அப்புறப்படுத்தினாள். நவ நாகரீக உடையைத் தவிர்த்து சேலைக்கு மாறியிருந்தாள். வருங்காலத்தைப் பற்றி பயம் வந்து அவளை ஆட்டிப் படைத்தது.

''நடேசா! என்னாச்சுப்பா? உடம்பெல்லாம் வேர்த்துக் கொட்டுது. உன் கையெல்லாம் திடீர்னு நடுங்குதே!'' பதறியபடி மகனின் கரங்களிரண்டையும் இறுகப் பற்றிக் கொண்டாள் மங்களம்.

தனது பருத்த தேகம் குலுங்கிட விம்மியழத் தொடங் கினார் நடேசன். ''நா... நா என்னத்தைச் சொல்றதும்மா? இந்தப் பாவிப் பொண்ணுக்கு செல்லம் கொடுத்து சுதந் திரமா நம்பி நடமாட விட்டது தப்பா போச்சே! வரன் ஒவ்வொண்ணும் தட்டிக் கழிஞ்சுகிட்டே போகுதே? நம்ம குடும்பத்துக்குன்னு.. ஒரு கவுரவம் இருக்குங்கிற நினைப்பே இல்லாம... ஜாலின்னு இவ ஆடின ஆட்டம்... நம்ம எல்லாத்தையும் காலி பண்ணிடும் போலிருக்கே... 'பூனை கண்ணை மூடிக்கிட்டா... பூலோகம் இருண்டிருமா?' இவ ஆடின ஆட்டம் நமக்கு வேணா தெரியாம இருக்கலாம். அங்கங்கே இவளை நேரில் பாத்தவங்க மூலமா வதந்தி பரவி... கரெக்டா மாப்பிள்ளை வீட்டுக்காரங்க காதுக்கு எட்டிடுத்து! விஷயத்தைக் கேள்விப்பட்டு அவங்களும் ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லிட்டு நிராகரிச்சுடறாங்க.

''அய்யோ நா என்ன பண்ணுவேன்? இந்த மாதிரி வதந்தி மட்டும் நெருப்பா பரவிடும்னு சொல்வாங்களே...

இன்னும் எத்தன பேருக்கு இந்த விஷயம் தெரியுமோ தெரியலையே? இந்த வதந்தியை மீறி துணிஞ்சு யார் வந்து இவளைக் கட்டுவாங்க?'' துக்கம் தாளாமல் கேவினார் நடேசன்.

''இளங்கன்று பயமறியாதுன்னு சொல்வாங்க! பவியோட வேகத்தையும், துள்ளலையும் பாத்துட்டு, நா அப்பப்ப ஏதாவது புத்திமதி சொல்லப் போய்... கற்பகத்துக் கிட்ட வாங்கிக் கட்டிக்கிட்டேன்.

''ஒண்ணு கிடக்க ஒண்ணு ஆயிடப் போகுதுன்னு... நா பயந்துட்டே இருந்தேன். இப்படி ஒரு களங்கம் வந்துடுச்சே? நாம அதை எப்படித் துடைக்கப் போறோம்?'' நா தழுதழுக்க புலம்ப ஆரம்பித்தாள் பாட்டி மங்களம்.

''என்ன அத்தை இது? ஏற்கனவே அவரு நெஞ்சு வலிக்காரரு. அவரைக் கவலைப்படாம இருக்கச் சொல்றதை விட்டுட்டு நீங்களும் சேந்து ஒப்பாரி வைக்கறீங்களே? எம் பொண்ணு பவிக்கு கடவுள் புண்ணியத்துலே நல்ல மாப்பிள்ளை கிடைக்கத் தான் போகுது'' சட்டென்று எழுந்து சமையலறைக்குள் புகுந்தாள் கற்பகம்.

''பவியாம் பவி? குடும்ப மானத்தைக் காத்துல பறக்க விட்ட பாவி... மகா பாவி!'' தலையில் அடித்துக் கொண்டார் நடேசன்.

அறைக்குள்ளிலிருந்து அத்தனையையும் கேட்டுக் கொண்டிருந்த பவித்ரா, பொங்கி வந்த விம்மலை அடக்குவதற்காக சேலைத் தலைப்பால் வாயைப் பொத்திக் கொண்டாள். சாத்தியிருந்த கதவையொட்டி சாய்ந்தமர்ந்து ''நான் பாவி.. பாவிதான்!'' மனதிற்குள் புலம்பியபடி குமுறிக் குமுறி அழுதாள்.



உமாவின் திருமணம் ஒன்றரை மாதத்திற்கு முன்பு நடந்தது. உள்ளுக்குள் அழுது புலம்பினாலும்... பெரியவர்களின் உத்தரவுப்படி உமாவின் திருமணத்தன்று வதந்தியால்... கேள்விக் குறியாகிப் போன தன் வருங்கால வாழ்க்கையையும், உமாவுக்குக் கிடைத்த நல்ல அந்தஸ்தான வாழ்க்கையையும் ஒப்பிட்டுப் பார்த்து... உள்ளூரக் கதறித் தீர்த்தாள்.

''நான் பாவி... நான் பாவி! நானே என் தலையில மண்ணள்ளிப் போட்டுக்கிட்டேனே? உயிரா இருந்த அப்பாவும், பெரியவங்களும் தலை குனியும்படி பண்ணிட்டேனே? கெட்டுப் போகாமலே... கெட்ட பெயர் வந்துட்டதே?'' நெஞ்சு வெடிக்கும்படி விம்மினாள்.

## 22

''ஸ்ரீதர், டெண்டர் பைல் இன்னைக்கி ரெடியாகி டேபிளுக்கு வந்துடும். சரியா இருக்கான்னு கேர்புல்லா செக் பண்ணிடு. ரெண்டு மூணு பைல்ஸ் பெண்டிங்லே இருக்கு. அதையும் ஒரு 'கிளான்ஸ்' பாத்து சைன் பண்ணி வை. நான் 'தாம்பரம் சைட்' வரைக்கும் போய் பாத்துட்டு வந்துடறேன்'' சொன்ன கிரியைத் தயக்கமாக ஏறிட்டான் ஸ்ரீதரன்.

''அண்ணா! உங்களுக்குப் புதுசா கல்யாணமாயிருக்கு. கொஞ்ச நாளைக்குப் பொறுப்பை எங்கிட்ட ஒப்படைச்சா... நா பாத்துக்க மாட்டேனா? அண்ணியை அழைச்சுக்கிட்டு எங்கியாவது போயிட்டு வர்றதை விட்டுட்டு... சதா ஆபீஸ் வேலையைக் கட்டிக்கிட்டு அழறீங்களே?'' ஆதங்கப்பட்டான்.

''என்னது? புதுசா கல்யாணமாச்சா? கல்யாணமாகி அஞ்சு மாதங்கள் பறந்து போயிடுச்ச. சகோதரா! இன்னும் நா வீட்டிலேயே உட்கார்ந்தா... அவ்ளோதான்! இந்த 'காம்ப்படிட்டிவ் வேர்ல்டு'ல நாம சாப்பிடற நேரம் தூங்கற நேரம் தவிர சதா ஓடிட்டே இருக்கணும். ஒரு நிமிஷம் அசந்து போயிட்டோம்னு வை... ஒரேயடியாக நம்மை ஓரங்கட்டிட்டு மத்தவங்க முன்னேறி ஜெயிக்க ஆரம்பிச் சுடுவாங்க.. சரிப்பா... அந்த 'தாம்பரம் சைட்' சூப்பர் வைசர் கோல்மால் பண்றதா தெரியுது. நேர்ல போய் பாத்து, சரி பண்ணாத்தான் நல்லாயிருக்கும். வரட்டுமா?'' தம்பியின் தோளைப் பாசத்துடன் தட்டிவிட்டு விரைந்து நடந்தான் கிரி.

கிரிதரன் சொன்னது போல் அவனுக்குத் திருமணமாகி ஐந்து மாதங்கள் மாயமாய் பறந்த விட்டிருந்தன. ஐந்தே மாதங்களுக்குள் உமா அவனது மனதை முழுவதுமாக ஆக்கிரமித்து விட்டிருந்தாள். திருமணமான மூன்றே நாட்களில்... அந்த பங்களாவில் அது வரை வேலை செய்த சமையற்காரரை 'செட்டில்மெண்ட்' பணத்தைக் கொடுத்து விட்டு வெளியே அனுப்பி விட்டாள். தடுத்துப் பார்த்த மரகதத்திற்கு தகுந்த காரணத்தைச் சொன்னாள் உமா.

''இருபத்து நாலுமணி நேரமும் வீட்டுல தானே இருக்கேன்? எனக்கும் டைம் பாஸாக வேண்டாமா? எப்பவும் சுறுசுறுப்பா செயல்பட்டாத் தான்... மனசுக்கும் உடம்புக்கும் தெம்பா இருக்கும். முன்னே ஏதோ ஒரு புக்குல படிச்சேன். அதிலே இருந்த சில வாசகங்கள்... அப்படியே பசு மரத்தாணி போல ஆழமா பதிஞ்சு போச்சு!



**'ஓட முடிந்தால் நடக்காதீர்கள்**

**நடக்க முடிந்தால் நிற்காதீர்கள்**

**நிற்க முடிந்தால் உட்காராதீர்கள்**

**உட்கார முடிந்தால் உறங்காதீர்கள்**

**உறங்கினாலும் பகல் கனவு காணாதீர்கள்**

**உழைக்க முடிந்தால் சோம்பேறியாக இருக்காதீர்கள்'...**

ஒரு வேலையும் பாக்காம என்னால இருக்க முடியாதும்மா!'' உறுதியாகக் கூறிவிட்டாள் உமா.

மூன்று வேளையும் வாய்க்கு ருசியாக சமைத்துப் போட்டாள். அதிகாலை எழுந்து குளித்து... தோட்டத்தில் மலர்ந்த பூக்களைப் பறித்துக் கொண்டு வந்து தொடுத்து ஸ்வாமி படங்களுக்குப் போட்டு விளக்கேற்றி பூஜித்து விட்டு... காபி போட்டு அனைவருக்கும் கொடுத்த கையோடு டிபன் வேலையைத் தொடங்குவாள்.

மரகதம் அம்மாளுக்கு நேரத்திற்குத் தர வேண்டிய மருந்து மாத்திரைகளை கவனமாக எடுத்துக் கொடுத்து... அன்புடன் அதட்டி அவளை உட்கொள்ளச் செய்வாள். உமா வந்ததிலிருந்து... கிரி வெளியில் ஹோட்டல்களில் சாப்பிடுவதை நிறுத்தி விட்டான். மதியச் சாப்பாட்டை ஆபீசுக்கே அனுப்பி வைத்து விடுவாள் உமா.

காலை மற்றும் இரவு நேரங்களில்... டைனிங் டேபிளின் முன் அனைவரும் ஒன்றாக அமர்ந்து சாப்பிடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். சுவையான உணவை உமா பரிமாற, ருசித்துக் கொண்டே ஒருவரை ஒருவர் விளையாட்டாய் பரிகசித்துப் பேசி கலகலப்பாகப் பொழுதை போக்கினர்.

மரகதத்திற்குப் பெருத்த நிம்மதி ஏற்பட்டு விட்டதால்... அடிக்கடி மாதர் சங்கத்துத் தோழியருடன் கோவில்

குளத்திற்கு சுற்றுலா செல்ல ஆரம்பித்து விட்டாள். மருமகள் உமாவின் அக்கறையான கவனிப்பினால், அவளுக்கிருந்த ஆஸ்துமா தொந்தரவு கூட சிறிது மட்டுப்பட்டிருந்தது.

கிரியின் நண்பன் ரமேஷ் வேறு வியாபார ரீதியாக சிங்கப்பூர் சென்று விட்டிருந்தான். அதனால் அலுவலகப் பணி முடிந்ததும்... வேறெங்கும் சென்று நேரத்தைக் கடத்தாமல் வீட்டைத் தஞ்சமடைந்தான். அதற்கு காரணம் இல்லாமல் இல்லை.

உமாவின் எளிய தோற்றமும், கனிவான பேச்சும், பண்பும் அவனைக் கொக்கி போட்டு ஈர்த்தன. முதலிரவின் போது அவன் பேசிய விஷயங்களை எண்ணி மனதிற்குள் வெட்கி மருகினான். திருமணத்திற்குப் பின்பு அவன் எந்தப் பெண்ணையும் ஏறிட்டுக் கூட பார்க்கவில்லை என்பது நிஜம்!

'தானுண்டு தன் கடமையுண்டு' என்று உமா தன் வழியில் போய்க் கொண்டிருந்தாள். மதியம் மூன்று மணிக்கு... தினமும் தனது அம்மா வீட்டிற்குக் கிளம்பி விடுவாள் மாலை ஐந்தரை மணிக்கு திரும்பி வந்து விடுவாள்.

''நா பஸ்சிலேயே போய்க்கிறேன் அம்மா.. கார் எதுக்கு? ரெண்டே ஸ்டாப் தான்! எனக்கு... கார்லே போறதுக்கு...'' உமா ஆரம்பிப்பதற்குள் மரகதம் குறுக்கிட்டாள்.

''நிறுத்து உமா! இந்த விஷயத்துல உன் பேச்சை நா கேக்கறதா இல்ல... நீ எங்க வீட்டு மருமக... நீ எதுல போகணும்னு தீர்மானிக்க வேண்டியது நாங்க... ரெண்டே ஸ்டாப் தானே? கார்லேயே போ! போர்டிகோவில மூணு கார் சும்மா நின்னுகிட்டிருக்கு... மறுத்துப் பேசாதே!'' மரகதம் கடுமையாக அதட்டி அவளைப் பணிய வைத்தாள்.



அவள் தினந்தோறும் பிறந்தகத்திற்குச் சென்று வருவதற்கு காரணம் இருந்தது. உமாவின் திருமணத்திற்கு.. இரு தினங்களுக்கு முன் நடேசன் பெரியப்பா சூட்கேசுடன் வீட்டிற்கு வந்தார்.

''வாங்க, பெரியப்பா உட்காருங்க!'' உபசரித்தாள் உமா. ஸ்வேதாவையும், ருக்மணியையும் ஏறிட்டு விட்டு உமாவிடம் திரும்பினார் நடேசன்.

''இதைப் பிடிம்மா.. இதுல அஞ்சு லட்சம் பணம் இருக்கு! ஸ்வேதாவோட படிப்பு முடிஞ்சதும் அவளோட கல்யாணத்தை நடத்தி வைக்க வேண்டியது என் பொறுப்பு!... உன் கல்யாணம் முடிஞ்சதும் ஸ்வேதாவும் ருக்மணியும் நம்ம வீட்டுக்கே வந்துடட்டும்... ருக்மணி உடம்புக்கு முடியாதவ... ஸ்வேதா காலேஜுக்குப் போயிட்டா... அவ தனியாத் தான இருக்கணும்...? நியாயமாப் பாத்தா சபேசன் போனதுமே... இதையெல்லாம் நா பண்ணி இருக்கணும். சுயநலப் பிசாசா இருந்துட்டேன். அதற்குரிய பலனை இப்போ நா அனுபவிக்கிறேன். என்னம்மா யோசிக்கிறே?'' பரிதாபமாக மூவரையும் மாறி மாறிப் பார்த்தார்.

''என்னம்மா ருக்மணி நீ என்ன சொல்றே?'' ருக்மணி பதில் சொல்லத் திணறியவளாய் உமாவை நோக்கினாள்.

''அப்பா ஸ்தானத்துலே இருந்து நீங்க இதையெல்லாம் செய்யறதைப் பார்த்தா... ரொம்ப சந்தோஷமா இருக்கு பெரியப்பா! அப்பளம், வத்தல், மசாலாப் பொருட்கள், ஊறுகாய் இவைகளுக்கு நல்ல வரவேற்பு இருக்கு பெரியப்பா! பக்கத்துல இருக்கற டிபார்ட்மெண்ட் ஸ்டோர்ஸ் உரிமையாளர் 'உங்க ஹோம் ப்ராடெக்ட்ஸுக்கு அமோக வரவேற்பு இருக்கறதால... கொஞ்சம் பெரிய அளவுல...

ஆட்களை வேலைக்கு வச்சு பண்ணித்தர முடியுமா? நிறைய ஆர்டர்ஸ் தரோம்.

''சிட்டியில பல இடங்கள்லே எங்க கிளைகள் இருக்கு. நிறைய ஆர்டர்ஸ் கிடைக்கும். வீட்டுலேர்ந்தே பிஸினஸ் பண்ணின மாதிரி இருக்கும். எதுக்கும் அலைய வேண்டாம். நாங்களே எல்லாத்தையும் பாத்துக்கறோம். ப்ராடெக்ட்ஸுக்கு நேம் வைங்க.

''முதலீடு பண்றதுக்கு உரிய பணத்தை அட்வான்ஸா நாங்களே தரோம்.' அப்படின்னு சொன்னார். நானும் அதைப்பத்தி தான் யோசிச்சுக்கிட்டிருந்தேன்.

''பக்கத்து குப்பத்துல எனக்குத் தெரிஞ்ச அஞ்சலைப் பாட்டி இருக்காங்க. அவங்க கூட அவங்க பேத்தி... கணவரால கை விடப்பட்டவ செண்பகமும் இருக்கா... அவங்க கிட்ட இதைப் பத்தி பேசினேன். சாப்பாட்டுக்கே கஷ்டப்படற ஆதரவற்ற நாலைந்து பெண்களைப் பாத்து பேசி வச்சிருக்கேன்.

''இதுல அஞ்சலைப் பாட்டியும், செண்பகமும் ரொம்ப பொறுப்பானவங்க! போன வாட்டி விடாம பெய்த மழையில அவங்க குடிசை ரொம்ப பழுதுபட்டிருக்கு... பிஸினஸ் ஆரம்பிக்கும் போது அவங்களை வீட்டோட தங்கச் சொல்லலாம்னு இருக்கேன்! அதனால அம்மாவையும், ஸ்வேதாவையும் பத்திக் கவலைப்படத் தேவையில்லை. நானும் தினமும் மதியம் மூணு மணியிலிருந்து அஞ்சு மணி வரைக்கும் இங்க வந்துட்டுப் போறதுக்கு... அனுமதி கேட்டுட்டேன்!'' முறுவலித்தாள் உமா.



''எல்லாம் முடிவே பண்ணியாச்சு போல... இதுக்கு மேல உங்க இஷ்டம்! ஆமா... யார்கிட்ட அனுமதி கேட்டே?''

''அ... அத்தைகிட்ட பெரியப்பா!'' உமாவின் முகம் சிவந்து போனது.

''கெட்டிக்காரி.. இந்தாம்மா பிடி சூட்கேஸை... யார் கிட்டயும் அட்வான்ஸ் வாங்க வேணாம். இது உங்களுக்குச் சேர வேண்டிய பணம் தானே? தயங்காம வாங்கும்மா!'' உமா தயங்கியபடி ருக்மணியை ஏறிட்டாள்.

''வாங்கிக்கோ உமா! பெரியப்பா சொல்றாரு இல்லே?''

''இந்த பிஸினஸ்லே... நீ அமோகமா வருவே உமா!'' சூட்கேஸைக் கொடுத்து விட்டு அவளது உச்சந்தலையில் கை வைத்து வாழ்த்தினார் நடேசன்.

* * *

'ஆஞ்சநேயர் ஹோம் ப்ராடெக்ட்ஸ்' அவர்களது இஷ்ட தெய்வமான ஆஞ்சநேயரின் பெயர் வைத்ததாலோ... அவர்களது அயராது உழைப்பினாலோ ஆர்டர் மேல் ஆர்டர் வந்து குவிந்தது. உமா தனக்கும் வீட்டுக்குமாக இரு செல் போன்களை வாங்கியிருந்தாள். சமயத்தில் அனைவரும் ஒன்றாக அமர்ந்து சாப்பிடும் தருணத்தில் அவளுக்கு அழைப்பு வந்து விடும்.

''சாம்பார் பொடி பாக்கெட்ஸ் இரு நூறு... ஆவக்காய் ஊறுகாய் பாட்டில்கள் நூறு... ஓ.கே.! ஸாரி சார்! கூழ் வடாம் இப்ப ஸ்டாக் இல்ல... உம்! நாளைக்கு ரெடியாயிடும்... ஓ.கே.! இட்லிப்பொடி பாக்கெட்ஸ் ரெடியாத்தான்

இருக்கு!'' மினி டைரியில் குறிப்பு எடுத்துக்கொண்டே உமா பேசுவதை கிரி ஆர்வம் ததும்பப் பார்ப்பான்.

''ஸ்வேதாவா? நா சொல்றதை நோட் பண்ணிக்கோ...! நோட் பண்ணியாச்சா? நார்த்தங்காய் உப்புல நல்லா ஊறட்டும்... அவசரப்பட வேணாம்...! சரி! நா வந்து டேஸ்ட் பாத்த பின்னாடி... பேக் பண்ணிக்கலாம். அவசரமில்லை!''

மோவாயை இரு கைகளாலும் தாங்கிக் கொண்டு அவளையே பார்த்தான் கிரி.

''ஏதேது? மிசஸ் உமா கிரிதரன் கூடிய சீக்கிரமே... பெரிய பிஸினஸ் வுமனா வலம் வருவாங்க போல!''

''அப்படிச்சொல்லு! மருமகளோட திறமைக்கு ஓஹோன்னு வருவா!'' மரகதம் பெருமிதப்பட்டாள்.

சங்கோஜத்துடன் ஏறிட்ட உமா... கண்களில் குறும்பு மின்ன.. கனிவுடன் கிரி தன்னைப் பார்த்துக் கொண் டிருந்ததைக் கண்டதும்... சட்டென்று பார்வையைத் தழைத்துக் கொண்டாள்.

'அப்பழுக்கில்லாத இந்த அன்பு தேவதைக்கு தான் தகுதி வாய்ந்தவன் தானா? நான் திருந்தி விட்டேன் என்பதை அவள் நம்பி ஏற்றுக் கொள்வாளா? கடந்த கால வாழ்க்கையை நினைத்து என்னை வெறுக்கிறாளா? என் மனத்தில் விஸ்வ ரூபம் எடுத்து உமா ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதை எவ்விதம் வெளிப்படுத்துவேன்?' சங்கோஜத்திலும் குற்ற உணர்விலும்... கிரிக்கு தன் மனதை வெளிப்படுத்த தைரியம் வரவில்லை.



''இன்னிக்கு வெள்ளிக்கிழமை! உமா...நீ சாயந்தரம் உங்க வீட்டிலேயே வெயிட் பண்ணு! கிரி... நீ என்ன பண்றே...? ஆபீஸிலிருந்து நேரா உமாவை பிக்கப் பண்ணிட்டு... அப்படியே அஷ்ட லஷ்மி கோவிலுக்குப் போய் தரிசனம் பண்ணிட்டு வாங்க!'' மரகதம் உத்தர விட்டாள்.

* * *

''அத்தே எப்படி இருக்கீங்க? ஸ்வேதா... இந்தா... இது உனக்குத்தான்!''

''வாவ்! இந்த சல்வார் கம்மீஸ் ரொம்ப நல்லாருக்கு மாமா! தேங்க் யூ! தேங்க் யூ ஸோ மச்!''

''என்ன மாப்பிள்ளை? இந்தப் பாட்டியை மறந்துட்டீங் களா?'' பாட்டி மங்களம் சீரியஸான முகத்துடன் கிரியை நோக்கினாள்.

''உங்களை மறப்பேனா பாட்டி? உங்களுக்கு என்ன வேணும்னு சொல்லுங்க... கண்ணை மூடித் திறக்கறதுக் குள்ள.. வாங்கிட்டு வந்துடறேன்!'' பாட்டியின் கரத்தைப் பற்றினான் கிரி.

''உம்! நா என்னத்தைப் பெரிசா கேட்டுடப் போறேன்? காலா காலத்துல... கொள்ளுப் பேரனையாவது... பேத் தியையாவது கண்ணுல காட்டுங்க. மடில போட்டு கொஞ் சிட்டு அந்த திருப்தியில நா கண்ணை மூடுவேன்ல?''

''அ... வந்து... உமா டயமாச்சு போலாமா?'' நழுவி னான்.

''காபியாவது குடிச்சிட்டுப் போங்க மாப்பிள்ளை!'' ருக்மணி கூறினாள்.

''இன்னொரு நாள் வந்து சாப்பிட்டுட்டே போறேன் அத்தே!''

காரில் முன் சீட்டில் வந்தமர்ந்த உமாவின் முகம் குங்குமமாய் சிவந்து போயிருந்ததைக் கண்டான். இன்றாவது மனதில் உள்ளதைக் கொட்டி விட வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டான்.

''கோவிலுக்குப்போறதுக்கு முன்னாடி பீச்சுக்குப் போயிட்டுப் போலாமா?''

சந்தனப் பாதங்களை அலைகள் முத்தமிட்டு விட்டுச் சென்றன. உமா தூரத்தில் தொடு வானத்தில் பார்வையைப் பதித்திருந்தாள். கிரிக்கு ஏனோ வார்த்தைகள் தொண்டையை விட்டு வெளி வர மறுத்தன.

''பாத்து... பாத்து... உமா!'' கிரிக்கு சர்வமும் பதறியது. இருவரது விழிகளும் கலந்தன. கிரியின் மேனி பதறுவதை உமாவால் நன்கு உணர முடிந்தது. குப்பென்று முகமும், காது மடல்களும் சிவக்க... மெல்ல தன்னை விடுவித்துக் கொண்டாள். தனக்காக அவன் பதறுவதைக் கண்டு சந்தோஷம் பீறிட்டது.

கிரியின் மனது அவளது அன்பிற்காகவும், அண்மைக்காகவும் ஏங்கித் தவித்தது. பிஸினஸில் நினைத்ததை சாதித்து சிம்ம சொப்பனமாக வெற்றி வாகை சூடுபவனுக்கு.. உமாவிடம் உள்ளதைச் சொல்வதற்குரிய தைரியம் வரவில்லை. ஏதோ ஒன்று அவனைத் தடை செய்தது. எந்த முகத்தை வைத்துக் கொண்டு அவளிடம் பிரஸ்தாபிப்பது என்ற தயக்கத்தில் நாட்களைக் கடத்திக் கொண்டிருந்தான்.



வீட்டை உமா நிர்வகிக்கத் தொடங்கியதிலிருந்து தரை கண்ணாடியாகப் பளிச்சிட்டது. காலையில் இவன் எழுந்து பாத்ரூமுக்குச் செல்லும் போது டவலும், லுங்கியும் தயாராக இருக்கும். குளித்து விட்டு வெளியே வந்தால் ட்ரஸ்ஸிங் டேபிளருகே... அன்று அவன் அணிந்து செல்வதற்கான உடைகள் அயர்ன் செய்யப்பட்ட நிலையில் தயாராக இருக்கும். வெளியில் ஷூக்கள் கூட பளிச் சென்று அவனுக்காகக் காத்திருக்கும். எங்கும் சுத்தம்.. எதிலும் சுத்தம்... ஒவ்வொன்றும் உமாவின் கை வண்ணத்தை அவனுக்கு ஞாபகப்படுத்தின.

காரைப் புயல் வேகத்தில் 'தாம்பரம் சைட்டை' நோக்கிச் செலுத்திக் கொண்டிருந்தான் கிரி. அவனது நெஞ்சம் முழுவதும் உமா நீக்கமற நிறைந்திருந்தாள். தனித்திருக்கும் சமயங்களில்... அவளது நினைவில் மூழ்கி விடுவான் கிரி. தாம்பரத்தைத் தாண்டி... புறநகர்ப் பகுதியில்... மெயின் ரோட்டிலிருந்து பிரிந்து சென்ற மண் சாலையில் காரை வெகு வேகமாகச் செலுத்தினான் கிரி.

## 23

மண் சாலையில் காரை ஓட்டிச் செல்வது பிரயத்தனமாக இருந்தது. குண்டும், குழியுமாக, கரடு முரடாக, பள்ளமும் மேடுமாக மண் சாலை காணப்பட்டது. அதோ! இருபதடி தூரத்தில் அவனது 'சைட்' வந்துவிட்டது. சாலையின் லட்சணத்தைப் பார்த்தால்... அதுவரை ஓட்டிச் சென்று

திரும்பி வருவது உசிதமாகப் படவில்லை. அதனால் ஒரு புளிய மரத்தின் பக்கமாக காரை ஓரங்கட்டி நிறுத்தி விட்டு விரைந்தான் கிரி.

கிரியின் திடீர் விஜயத்தை சைட் சூப்பர் வைசர் எதிர்பார்க்கவில்லை போலும்! அவனது முகத்தில் அந்த அதிர்ச்சி அப்பட்டமாகத் தெரிந்தது. கிரி தான் வந்த காரியத்தை செவ்வனே முடித்து விட்டு, திருப்தியுடன் கிளம்பினான். அந்த புறநகர்ப் பகுதியில் அங்கொன்றும், இங்கொன்றுமாக கட்டிடங்கள் முளைக்கத் தொடங்கி யிருந்தன. சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டே தனது காரை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

வானம் கருமேகங்கள் சூழ குமுறியபடி, இருண்டு கிடக்கவே... நடையைத் துரிதப்படுத்தினான். 'தட் தட்... தட்... தட்...என்று பெரிய பெரிய மழைத் துளிகள் விழ ஆரம்பிக்கவும் ஓட்டமும் நடையுமாக விரைந்தான். ஏற்கனவே சகதியும் சேறுமாக இருந்த மண் சாலையில் ஓடுவதற்கும் பயமாக இருந்தது.

செம்மண் சாலை வழுக்கி விட்டு விட்டால்? தனது காரை அடைவதற்குள் மழை வலுக்கவே தொப்பலாக நனைந்து விட்டிருந்தான் கிரி. காரில் வீட்டை நோக்கிச் செல்லும்போது... மழையில் நனைந்த உடம்பு வெடவெட வென்று குளிரில் நடுங்கியது.

* * *

''என்னங்க இது? மழையில நனைஞ்சுட்டீங்களா?'' பதற்றத்துடன் கேட்டபடி அவனது பின்னாலேயே தங் களது மாடியறைக்கு வந்தாள் உமா. சட்டென்று டவலை எடுத்துக் கொடுத்தாள்.



''தாம்பரம் சைட்டுக்குப் போயிருந்தேன். வர்ற வழி யில நல்ல மழை பிடிச்சிக்கிடுச்சு'' தலையைத் துவட்டிக் கொண்டே புன்னகைத்தான். ஒன்றும் பேசாமல் அவனை விழிகள் விரியப் பார்த்து விட்டு கீழே இறங்கி ஓடினாள் உமா. அவன் உடை மாற்றி முடித்து கட்டிலில் அமர்ந் ததும்... ஆவி பறக்கும் காபி டம்ளரோடு உள்ளே நுழைந் தாள் உமா.

''சுக்கு மல்லி காபி! சூடா இருக்கு... மழையில நனைஞ்சதுக்கு இதமா இருக்கும். குடிச்சிடுங்க!'' மடக் மடக்கென்று காபியை பருகி விட்டு டம்ளரை அவளிடம் நீட்டினான்.

''அம்மா எங்கே?''

''அம்மா அவங்க ரூம்லே... தேவி புராணம் வாசிச்சுட் டிருக்காங்க. அவங்ககிட்ட ஏதாச்சும் பேசணுமா?''

''நோ, நோ! அவங்களை டிஸ்டர்ப் பண்ணாதே! ஸ்ரீதர் டெண்டர் பைலை பாத்து முடிச்சிட்டு வரதுக்கு கொஞ்சம் நேரமாகும். அவன் வந்ததும், என்னை எழுப்பு! அதுவரை கொஞ்சம் படுத்து ரெஸ்ட் எடுக்கறேன்'' கட்டிலில் படுத்துக் கொண்டான் கிரி.

கீழே வந்த உமா, மரகதத்திற்குப் பிடித்த பயத்தம் பருப்பு சாம்பார் வைத்து, காரசாரமாக தக்காளிச்சட்னியும், கொத்தமல்லிச் சட்னியும் செய்தாள். இட்லி குக்கரை அடுப்பிலேற்றி விட்டுத் திரும்புகையில்... ஸ்ரீதரனது காரும் வந்து விட்டது.

மரகதமும், ஸ்ரீதரனும் டைனிங் ஹாலில் வந்து அமர்ந்ததும் கிரியை சாப்பிட அழைப்பதற்காக மீண்டும் மாடியேறினாள் உமா.

''என்னங்க! ஸ்ரீதர் வந்தாச்சு! சாப்பிட வாங்க... அம்மாவும் தம்பியும் உங்களுக்காக வெயிட் பண்றாங்க...! என்னங்க! என்னங்க...!''

'என்னது இது? ஒரு நாளும் இப்படி அடித்துப் போட்டது போல் தூங்கியதே இல்லையே...? ரொம்ப சுறுசுறுப்பான மனிதராச்சே?' மனதில் பொறி தட்டியது.

'உம்... உம்' இலேசான முனகல் சத்தம் வரவே... சந்தேகத்துடன் அவனது நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள் உமா. விருட்டென்று கையை எடுத்துக் கொண்டாள். சரியான காய்ச்சல்! பதறியடித்துக் கொண்டு கீழே ஓடினாள்.

ஸ்ரீதர் வந்து பார்த்து விட்டு, டாக்டருக்கு போன் செய்தான். அரை மணி நேரத்தில் டாக்டர் வந்து டெம்பரேச்சர் பார்த்தார்.

''ஒன் நாட் பைவ் இருக்கு! இன்ஜெக்ஷன் போடறேன்! எழுதித் தர்ற மருந்து மாத்திரைகளை போர் அவர்ஸ்க்கு ஒரு வாட்டி குடுங்க. கஞ்சி குடுங்க போதும். கிட்ட இருந்து பாத்துக்கங்க.... நான் நாளைக்கு காலைல வந்து பாக்கறேன். காய்ச்சல் குறையலேன்னா... டெஸ்ட் எடுத்துடலாம்!'' உமாவைப் பார்த்து, தலையாட்டி விட்டு நகர்ந்தார் டாக்டர்.

''நீங்க டேப்ளட்டை போட்டுக்கிட்டு போய் படுங்கம்மா... அவரை நா பாத்துக்கறேன். ஸ்ரீதர்! ப்ளீஸ்... கிளம்புங்க சாப்பிட்டுட்டுத் தூங்குங்க. ஆபீஸ்ல நாளைக்கு முக்கியமான வேலைகள் இருக்கும்! நீங்க தானே பாத்துக்கணும்!'' ஸ்ரீதரையும், மரகதத்தையும் வற்புறுத்திக் கீழே அனுப்பி வைத்தாள் உமா.



நடு ஜாமத்தில் ஜுர வேகத்தில் பிதற்றத் தொடங்கினான் கிரி.

''அ... அனு...! அனு... அனூ'' உமாவுக்கு அப்படியே தலை சுற்றுவது போலிருந்தது. இதயத்தில் ஈட்டி பாய்ந்தது போலிருந்தது.

## 24

''அனு...அனு... உடம்பெல்லாம் வலிக்குதே... அனு... நீயெல்லாம் ஒரு பெண்ணா? பச்சோந்தி... பணத்தாசை பிடிச்ச பிசாசு! உன்... உன்னால என்னோட வாழ்க்கையே சீரழிஞ்சுடுச்சே! உ... உன்னால தான் ட்ராக் மாறிப் போயிட்டேன். பர்ஸ்ட் நைட் அன்னிக்கே என்னைப் பத்தின எல்லாத்தையும் உமாகிட்ட சொல்லி... அவ மனசை நோகடிச்சுட்டேன்.

''இ... இப்போ நா மாறிட்டேன். திருந்திட்டேன். உமாவை உயிரா நேசிக்கிறேன். எம் மனசுல அவ தான் நிறைஞ்சிருக்கா... ஆனா...வாயைத் திறந்து என்னால எதையும் சொல்ல முடியலை... எல்லாத்துக்கும் நீ தான் காரணம்...? ப... பச்சோந்தி... பணப்பேய். என் முன்னாடி இன்னொரு வாட்டி வந்தே... என் கையாலேயே உன்னோட கழுத்தை நெரிச்சுக் கொன்னுடுவேன். பணப் பிசாசே! கண் காணாம போயிடு....!'' ஜுர வேகத்தில் திணறித் திணறி அவன் பிதற்றுவதை நெஞ்சம் படபடக்க ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டிருந்தாள் உமா.

அவன் உளறிக் கொட்டிய வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவள் வயிற்றில் பாலை வார்த்தன. கிரியின் உள்ளக் கிடக்கை அறிந்த பின்பு.. அவளது கண்களில் 'குபுக்' என்று கண்ணீர் கொப்பளித்தது. கட்டிலில் அவனருகில் அமர்ந்து கொண்டாள்.

''உ... உன்னை மாதிரியே உமாவும் பணத்தாசை புடிச்சவளோன்னு ரொம்ப பயந்தேன் தெரியுமா...? எ...! எனக்கு பரிசுத்தமான தேவதையைக் கடவுள் அனுப்பி யிருக்காரு... படுபாவி... நிக்காதே... போயிடு!'' தொடர்ந்து பிதற்றினான். குப்பென்று முகம் சிவக்க... நீர்த்திரையிட்ட விழிகளால் கிரியை ஊன்றிப் பார்த்தாள்.

''அந்த டெண்டர் பைல் ரெடியாயிடுச்சா... ஸ்ரீதர்?'' குழறலாகப் பிதற்றினான் கிரி.

''என்னங்க... என்னங்க... இதோ பாருங்க நான் உமா! கொஞ்சம் எந்திரிங்க. இந்த மாத்திரையைப் போட்டுக்கிட்டு படுத்துக்கோங்க'' அவனது புஜத்தைப் பற்றித் தூக்கி அவனை அமர வைத்தாள். காய்ச்சல் காரணமாக அவனது மூச்சுக்காற்று அதீத உஷ்ணத்தில் இருந்தது.

கிரியின் கண்கள் கோவைப்பழமாய் சிவந்திருந்தன. அவனது முதுகுக்கு ஒரு தலையணை வைத்து சற்று சாய்வாக அமர வைத்து விட்டு... வெந்நீரோடு மாத்திரை களை அவனுக்குக் கொடுத்தாள் உமா.

''வாயெல்லாம் கசக்குது உமா! இப்ப எனக்கு மாத்திரை வேண்டாமே'' வறண்ட உதட்டை நாவினால் ஈரப்படுத் தியபடி பேசினான் கிரி.



''அப்படியெல்லாம் சொல்லக் கூடாதுங்க... ஜுரத்துல அனத்த ஆரம்பிச்சுட்டீங்க தெரியுமா? டாக்டர் சொன்னபடி கேட்டா தானே ஜுரம் குறையும்? உடம்புக்கு முடியலைன்னா... வாயெல்லாம் கசக்கத்தான் செய்யும். எனக்காக... டேப்பிளட்ஸ் போட்டுக்கங்க... ப்ளீஸ்'' உமா வின் குரலில் இருந்த உண்மையான அக்கறை, கவலை, கரிசனம்... எல்லாம் சேர்ந்து கிரியை உலுக்கி விட்டன.

* * *

ஒருவாரம் காய்ச்சலில் அடித்துப் போட்டாற்போல் ஆகிவிட்டான் கிரி. ஆபீஸ் சம்பந்தமான அனைத்துப் பணிகளையும் ஸ்ரீதரன் தான் கவனித்துக் கொண்டான். தினமும் காலை, மாலை இரு வேளைகளிலும் அண்ண னிடம் அன்றைய அலுவலைப் பற்றி அலசி விட்டுச் செல்வான்.

இன்றும் கிரியிடம் ஏதோ பைலைக் காட்டிப் பேசி அவனது கையெழுத்தை வாங்கிக் கொண்டான் ஸ்ரீதரன். உமா ஒரு அகன்ற பேசினில் வெதுவெதுப்பான தண்ணீரை நிறைத்துக்கொண்டு, கையில் ஒரு சோப்பை எடுத்துக் கொண்டு மெல்ல நடந்து வந்தாள். அவளது தோளில் தும்பைப் பூவாக வெளுத்த துவாலை தொங்கிக் கொண்டிருந்தது.

''குட்மார்னிங் ஸ்ரீதர்! உங்க அண்ணாவுக்கு டவல்பாத் எடுக்கலாம்னு வந்தேன்!'' மெல்ல முறுவலித்தாள் உமா. அண்ணியை ஆர்வத்துடன் கவனித்தவன் சட்டென்று பைலை எடுத்துக் கொண்டு நடந்தான்.

''வரேன் அண்ணா! நீங்க பாத்துக்கங்க அண்ணி... எதுனா தேவைப்பட்டா உடனே போன் பண்ணுங்க. வரட்

அவன் உளறிக் கொட்டிய வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவள் வயிற்றில் பாலை வார்த்தன. கிரியின் உள்ளக் கிடக்கை அறிந்த பின்பு.. அவளது கண்களில் 'குபுக்' என்று கண்ணீர் கொப்பளித்தது. கட்டிலில் அவனருகில் அமர்ந்து கொண்டாள்.

''உ.. உன்னை மாதிரியே உமாவும் பணத்தாசை புடிச்சவளோன்னு ரொம்ப பயந்தேன் தெரியுமா...? எ...! எனக்கு பரிசுத்தமான தேவதையைக் கடவுள் அனுப்பி யிருக்காரு... படுபாவி... நிக்காதே... போயிடு!'' தொடர்ந்து பிதற்றினான். குப்பென்று முகம் சிவக்க... நீர்த்திரையிட்ட விழிகளால் கிரியை ஊன்றிப் பார்த்தாள்.

''அந்த டெண்டர் பைல் ரெடியாயிடுச்சா... ஸ்ரீதர்?'' குழறலாகப் பிதற்றினான் கிரி.

''என்னங்க... என்னங்க... இதோ பாருங்க நான் உமா! கொஞ்சம் எந்திரிங்க. இந்த மாத்திரையைப் போட்டுக்கிட்டு படுத்துக்கோங்க'' அவனது புஜத்தைப் பற்றித் தூக்கி அவனை அமர வைத்தாள். காய்ச்சல் காரணமாக அவனது மூச்சுக்காற்று அதீத உஷ்ணத்தில் இருந்தது.

கிரியின் கண்கள் கோவைப்பழமாய் சிவந்திருந்தன. அவனது முதுகுக்கு ஒரு தலையணை வைத்து சற்று சாய்வாக அமர வைத்து விட்டு... வெந்நீரோடு மாத்திரை களை அவனுக்குக் கொடுத்தாள் உமா.

''வாயெல்லாம் கசக்குது உமா! இப்ப எனக்கு மாத்திரை வேண்டாமே'' வறண்ட உதட்டை நாவினால் ஈரப்படுத் தியபடி பேசினான் கிரி.



''அப்படியெல்லாம் சொல்லக் கூடாதுங்க... ஜுரத்துல அனத்த ஆரம்பிச்சுட்டீங்க தெரியுமா? டாக்டர் சொன்னபடி கேட்டா தானே ஜுரம் குறையும்? உடம்புக்கு முடியலைன்னா... வாயெல்லாம் கசக்கத்தான் செய்யும். எனக்காக... டேப்பிளட்ஸ் போட்டுக்கங்க... ப்ளீஸ்'' உமா வின் குரலில் இருந்த உண்மையான அக்கறை, கவலை, கரிசனம்... எல்லாம் சேர்ந்து கிரியை உலுக்கி விட்டன.

* * *

ஒருவாரம் காய்ச்சலில் அடித்துப் போட்டாற்போல் ஆகிவிட்டான் கிரி. ஆபீஸ் சம்பந்தமான அனைத்துப் பணிகளையும் ஸ்ரீதரன் தான் கவனித்துக் கொண்டான். தினமும் காலை, மாலை இரு வேளைகளிலும் அண்ண னிடம் அன்றைய அலுவலைப் பற்றி அலசி விட்டுச் செல்வான்.

இன்றும் கிரியிடம் ஏதோ பைலைக் காட்டிப் பேசி அவனது கையெழுத்தை வாங்கிக் கொண்டான் ஸ்ரீதரன். உமா ஒரு அகன்ற பேஸினில் வெதுவெதுப்பான தண்ணீரை நிறைத்துக்கொண்டு, கையில் ஒரு சோப்பை எடுத்துக் கொண்டு மெல்ல நடந்து வந்தாள். அவளது தோளில் தும்பைப் பூவாக வெளுத்த துவாலை தொங்கிக் கொண்டிருந்தது.

''குட்மார்னிங் ஸ்ரீதர்! உங்க அண்ணாவுக்கு டவல்பாத் எடுக்கலாம்னு வந்தேன்!'' மெல்ல முறுவலித்தாள் உமா. அண்ணியை ஆர்வத்துடன் கவனித்தவன் சட்டென்று பைலை எடுத்துக் கொண்டு நடந்தான்.

''வரேன் அண்ணா! நீங்க பாத்துக்கங்க அண்ணி... எதுனா தேவைப்பட்டா உடனே போன் பண்ணுங்க. வரட்

டுமா?'' நாசூக்காக அறையை விட்டு அகன்றான் ஸ்ரீதரன்.

தலையணைகளை அப்பால் நகர்த்தி விட்டு சட்டையைக் கழற்றினான் கிரி. வெதுவெதுப்பான நீரில் சோப்பை நன்கு கரைத்துக்கொண்டு, டவலை அதில் நனைத்துப் பிழிந்து கொண்டு கிரியை நோக்கி நிமிர்ந்தாள் உமா.

உடைத்த கோதுமை நிறத்தில் உருண்டு திரண்டிருந்த தேகம்... கிரி அன்றாடம் எக்ஸர்சைஸ் செய்ததை கர்வத்துடன் வெளிப்படுத்தியது. டவலால் அவனது முகம், கழுத்து, மார்பு என்று துடைத்தெடுப்பதற்குள்... முத்து முத்தாக அவளது முகத்தில் வியர்வை பூத்து விட்டது.

மாமியாரிடமோ, ஸ்ரீதரிடமோ இந்தப் பணியைச் செய்யச் சொல்லி அவள் கேட்கலாம்! நாசூக்காக அவர்கள் இருவரும் இந்த விஷயத்தில் விலகி விடுவதால்... மேற்கொண்டு இது விஷயமாகப் பிரஸ்தாபிக்க உமாவுக்குத் தயக்கமாக இருந்தது. உமாவின் சங்கடத்தை கிரியால் நன்கு உணர முடிந்தது.

''உமா! இனிமே நானே டவல் பாத் எடுத்துப்பேன். முடிஞ்சா பாத்ரூம்லே குளிக்கப் பார்க்கறேன்!''

''என்னங்க, நீங்க! டெஸ்ட் ரிசல்ட்லே... உங்களுக்கு டைபாயிட் ஜுரம்னு டாக்டர் சொன்னதும் நானே நடுங்கிப் போயிருக்கேன். ஜுரத்துல உங்களுக்கு ஷிவரிங் இருந்துச்சு. ரொம்பவும் அனத்திக்கிட்டே இருந்தீங்க டாக்டர் சொன்னபடி நடந்துக்கணும்! எனக்கு இதுல ஒரு



சிரமமும் இல்லே!'' மெல்லிய குரலில் பதில் அளித்தாள் உமா.

''உமா! அயாம் ஸாரி!'' தணிந்த குரலில் கூறினான் கிரி.

''எதுக்கு ஸாரி?'' டவலை முறுக்கிப்பிழிந்து கொண்டே அவனை நிமிர்ந்து பார்க்காமல் கேட்டாள் உமா.

''அது வந்து உன்னப்போய் நா... சந்'' திணறிப் பேசுவதற்குள்... நடைச் சத்தம் கேட்டு இருவருமே அறைவாசலை நோக்கினர்.

''மாப்பிள்ளை... மாப்பிள்ளை... எப்படி இருக்கீங்க?'' பதறிக் கொண்டே உள்ளே வந்தாள் பாட்டி மங்களம். அவளைத் தொடர்ந்து நடேசன், ஸ்வேதா, ருக்மணி ஆகியோர் உள்ளே வந்தனர்.

''மாப்பிள்ளைக்கு உடம்பு முடியலைன்னு ஏன் எங்க கிட்ட சொல்லலை உமா? வீட்டுலே நிறைய வேலை இருக்கறதால... கொஞ்ச நாளைக்கு சாயந்தரத்துல என்னால வர முடியாதுன்னு ஏன் பொய் சொன்னே?'' கடிந்து கொண்டாள் மங்களம்.

''ஸ்ரீதர் தம்பி மனசு கேக்காம இன்னிக்கி போன் போட்டு சொல்லப் போய் தான் எங்களுக்கு விவரமே தெரியும்!'' அங்கலாய்த்தாள்.

''நீங்க வயசானவங்க! பெரியப்பாவும் சரி... எங்கம்மாவும் சரி... உடம்பு முடியாதவங்க. எல்லாரையும் ஏன் பதற வைக்கணும்னுதான்... நா அத்தை கிட்டயும் ஸ்ரீதர் கிட்டயும் சொல்ல வேண்டாம்னு கேட்டுக்கிட்டேன். என்னை மன்னிச்சுடுங்க பாட்டி!'' தழுதழுத்தாள் உமா.

"இப்போ உங்களுக்கு உடம்பு தேவலையா மாப்பிள்ளை? எங்க உமா கெட்டிக்காரி! எனக்கு அட்டாக் வந்தப்போ எப்படி கவனிச்சுக்கிட்டா தெரியுமா? சீக்கிரமாவே உங்க உடம்பைத் தேத்தி விட்டுடுவா... பாருங்களேன்! அவ குணத்துக்கு என்னைக்கும் ஒரு குறையும் வராது. அவளுக்கு ரொம்ப இளகின மனசு. ரெகுலர் ப்ளட் டோனர் தெரியுமா? அம்பது பவுன் போட்டேன். பொட்டலமா அதைக்கட்டி வேணாம் பெரியப்பான்னு எங்கிட்டயே குடுத்துட்டா... எளிய நிலைமையா இருந்தாலும்... பணங்காசுக்கு ஆசைப்படாதவ...மனித நேயத்தோட மனுஷங்களுக்கு உதவி பண்ற பொண்ணு.. அவ கிட்ட இருக்கற தன்னம்பிக்கையும் விடா முயற்சியும் தான் அவளோட வெற்றிக்குக் காரணம். என்ன மாப்பிள்ளை அப்படிப் பாக்கறீங்க? உங்களுக்கே அவளைப் புரிஞ்சு இருக்குமே!" நடேசன் பேசப்பேச விழிகள் வியப்பால் விரிய பிரமித்துப் போய் உமாவையே பார்த்துக் கொண்டிருந்தான் கிரி.

## 25

"உமாக்கண்ணு! முடிஞ்சா வீட்டுப் பக்கம் வர்றியா? மாப்பிள்ளைக்கு மருந்து மாத்திரைகளைக் குடுத்து... படுக்க வைச்சிட்டு வா.. வந்து பாத்த உடனே கிளம்பிடலாம். அங்க பவிப் பெண்ணோட நிலைமையே சரியில்லை. கற்பகம் அழுதுகிட்டே இருக்கா... உங்க பெரியப்பா எப்படி இளைச்சுட்டான் பாத்தியா?" உமாவை ஓரமாக அழைத்துப்போன பாட்டி... அடிக்குரலில் மெல்லக் கிசுகிசுத்தாள்.



"சரிங்க பாட்டி! கட்டாயம் வரனே்!" யோசனையுடன் கூறினாள் உமா. அடுத்து வந்த சில தினங்களில்... கிரி ஓரளவுக்கு வீட்டைச் சுற்றி வளைய வர ஆரம்பித்தான். அன்று காலை கிரி டைனிங் டேபிள் முன் அமர்ந்திருந்தான். ஸ்ரீதரனும், மரகதமும் ரவாதோசையை சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். கிரிக்குத் தனியாக கஞ்சி தயாரித்துக் கொண்டு வந்து டேபிளில் வைத்தாள் உமா.

"மழையில நனைஞ்சு காய்ச்சல்லே ஒரேயடியா நீங்க படுத்தாலும் படுத்தீங்க... அண்ணி ஏகத்துக்கும் இளைச்சுட்டாங்க பாவம்!"

"கிரிக்கு ஒண்ணுன்னா... அவளுக்குத் தாங்கலை. ரொம்பவே பயந்துட்டா! நைட்டெல்லாம் கண் முழிச்சு கவனிச்சிருக்காயில்ல... அதான்! நீ கொஞ்சம் ரெஸ்ட் எடும்மா... நான் பார்த்துக்கறேன்னு சொன்னா... கேட்டாத் தானே?" மரகதம் ஆதங்கப்பட்டாள்.

"ஹூம்! இந்த மாதிரி ஒரு மருமகள் கிடைக்கக் குடுத்து வச்சிருக்கணும். சின்னவனுக்கும் இதே மாதிரி அமைஞ்சிட்டா... இந்தியாவுக்குள்ள இருக்கிற புனித புண்ணிய ஸ்தலங்கள் அத்தனையையும் பார்க்க... நான் கிளம்பிடுவேன்!"

"ஒரு கண்டிஷனுக்கு சம்மதிச்சா... நான் கல்யாணத்துக்கு இப்பவே ரெடிம்மா!" பீடிகை போட்டான் ஸ்ரீதரன்.

"அண்ணிக்கு எப்படி சில கொள்கைகள் இருக்கோ... அதே மாதிரி எனக்கும் ஒரு கொள்கை இருக்கு. காலேஜில படிக்கும்போதே... நானும் என்னோட நண்பர்களும்

எங்களுக்குள்ள ஒரு உறுதிமொழி எடுத்துக்கிட்டோம். கல்யாணம்னு ஒண்ணு பண்ணிக்கிட்டா... நாம வாழப் போற வாழ்க்கையில ஒரு அர்த்தம் இருக்கணும். அதுக்காக... ஒரு ஊனமுற்ற பொண்ணையோ... ஆதர வில்லாம அநாதையா இருக்கற பொண்ணையோ... ஒரு... ஒரு விதவையையோ... இல்ல... ஏடாகூடமான மனுஷ னுக்குக் கழுத்தை நீட்டி கஷ்டப்பட்டு... வேற வழியில் லாம அவனை டிவோர்ஸ் பண்ணிட்டு வாழற பொண்ணையோதான்... கல்யாணம் பண்ணிக்கணும்னு தீர்மானிச்சோம்!'' தயங்கியபடி தன் லட்சியத்தைப் பற்றிக் கூறிய ஸ்ரீதரன், ஒருவித டென்ஷனுடன் மரகதத்தையும், கிரியையும் நோக்கினான். சிறிது நேரத்திற்கு அங்கே ஒரு வித கனத்த அமைதி நிலவியது.

''பாராட்டப்பட வேண்டிய நல்ல தீர்மானம்தான்!'' என்று கூறிய உமா, மரகதத்தை மெல்ல ஏறிட்டாள்.

''நான் ஏதாச்சும் தப்பா சொல்லிட்டேனா அம்மா?'' தயங்கினாள்.

''சேச்சே! அதெல்லாம் இல்லம்மா... ஸ்ரீதரன் மனசுல இருக்கிறதைப் பட்டுன்னு உடைச்சுப் பேசிட்டானா? அதான் யோசனையில இருந்தேன். நமக்கு உறவுத் தலை கள்னு சொல்லிக்கிறாப்பல யாருமில்லை... அப்படியிருக் கற ஒரு சில பேர்களும்... கஷ்டம்னு வந்தா கண்டுக்காம நழுவின சுயநலவாதிங்கதான்! அதனால ''சொந்தக்காரங்க ஏதாச்சும் சொல்வாங்களோ''ன்னு அதுகளுக்கு நான் பயப்படத் தேவையே இல்லை!

''அந்த மாதிரி சொந்தங்களும் இல்லைன்னு நினைக் கிறவ நான்.



''அவரு போனதுக்கப்புறம் இந்த ரெண்டு பசங்களுக் காகத் தான் வாழ்ந்தேன். இவங்களோட சந்தோஷம் தான் எனக்கு ரொம்ப முக்கியம்! இன்னும் எத்தனை வருஷத் துக்கு நான் இருக்கப் போறேனோ தெரியலை... ஆஸ்துமா, பி.பி., சுகர்னு எல்லா வியாதிகளையும் குத்தகைக்கு எடுத்துட்டு ஒப்புக்கு நடமாடிக்கிட்டிருக்கேன்.

''ஸ்ரீதரனுக்கு எது இஷ்டமோ... அதுபடியே நடக்கட் டும். ஏன்னா... வாழ்க்கை முழுக்கக் கூட வரப்போறது அவனோட மனைவி தானே? அதுவே மனசுக்குப் பிடிச்சது மாதிரி வாய்ச்சுட்டா... வாழ்க்கை முழுக்க அவனுக்கு ஒரு திருப்தியும், சந்தோஷமும் கிடைக்குமே?

''அந்த சந்தோஷத்துக்கு நான் ஏன் தடையா நிக்கணும்? கிரியை, கல்யாணத்துக்கு சம்மதிக்க வைக்கப் படாத பாடுபட்டேன். அந்த மாதிரி இல்லாம... இந்த மட்டு மாவது கல்யாணத்துக்கு ஒரு கண்டிஷனோட சம்மதிச் சானே? அதுவரைக்கும் எனக்குத் திருப்தி தான்மா!

''உமா! இந்த வீட்டை ரொம்ப திறமையா நிர்வகிக்கிறே... ஸ்ரீதரன் கிட்ட உட்கார்ந்து பேசி... ஒரு நல்ல மருமகளா தேர்ந்தெடுக்க வேண்டியது உன் பொறுப்பு! உன்னை மாதிரியே குணவதியா வந்துட்டாள்னா, எல்லோருக்கும் ரொம்ப ரொம்ப சந்தோஷம்தான்!'' நீளமாகப் பேசி விட்டு நிம்மதிப் பெருமூச்சு விட்டாள் மரகதம்.

''உங்களுக்கு ரொம்பப் பெரிய மனசும்மா! உங்கள மாதிரியே எல்லாரும் பெருந்தன்மையா நடந்துகிட்டா... ஊர் உலகத்துல மாமியார் மருமகளுக்குள்ளே எந்தவித சண்டை சச்சரவும் வராது. பிள்ளைங்களோட சந் தோஷத்தைப் பிரதானமா நினைக்கற உங்களுக்கு

மருமகளா ஆனதுக்கு... நான் ரொம்ப கொடுத்து வச்சிருக்கணும்!'' மரகதத்தின் கைகளை வாஞ்சையுடன் பற்றிக் கொண்டாள் உமா. மகிழ்ச்சிப் பெருக்கில் கிரியின் கண்களில் கூட நீர் திரண்டது.

கண்கள் பனிக்க எழுந்த ஸ்ரீதரன் ''ரொ... ரொம்ப தாங்க்ஸ் அம்மா!'' என்றவாறு சட்டென்று தாயின் மடியில் முகத்தைப் புதைத்துக் கொண்டான். கன்னத்தில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு... உமாதான் அங்கு நிலவிய நிசப்தத்தைக் கலைத்தாள்.

''ஸ்ரீதர்! ஆபீஸுக்குப் போக வேண்டாமா? என்னங்க... கஞ்சியை மீதம் வைக்காம குடிங்க. இந்த மாத்திரையைப் போட்டுக்கிட்டு மேல போய் ரெஸ்ட் எடுங்க! நான் மதியச் சமையலை முடிச்சிட்டு... ஒரு நடை வீட்டுக்குப் போயிட்டு வந்துடட்டுமா! சாயந்தரம் விளக்கு வைக்கிறதுக்குள்ள வந்துடறேன்!''

''ரெண்டு வாரமா... நீ அந்தப் பக்கமே போகலை இல்லியா? ஆர்டர்ஸ் நிறைய வர்றதால... வேலைக்கு இன்னும் சில பேரை சேர்த்துக்கணும்னு சொன்னியே?''

''ஆமா... அஞ்சலைப் பாட்டிக்கு தெரிஞ்சவங்க ரெண்டு பேரை வேலைக்கு சேத்துக்கிட்டதா... அம்மா போன்ல சொன்னாங்க! இப்போ பத்து லேடீஸ் வேலை செய்றாங்கம்மா... எதிர்காலத்துல இதுபோல நிறைய பேத்துக்கு வேலை வாய்ப்பை உருவாக்கித் தரணும்கிறது தான்... என்னோட ஆசை!''

''உன் மனசுப்படியே எல்லாம் நல்லபடியா நடக்கும்!'' சிரித்தாள் மரகதம். ''நான் அப்படியே பெரியப்பா வீட்டுக்கும் போயிட்டு வந்துடறேன் அம்மா... பெரியம்மா



வுக்கு உடம்புக்கு முடியலையாம்! அம்மா போன்ல சொன்னாங்க.''

''தாராளமா பார்த்துட்டு வாம்மா! வெறுங்கையோட போகாதே! கொஞ்சம் பழங்களையும், ஹார்லிக்ஸ் பாட்டிலையும் வாங்கிட்டுப் போ!'' என்றாள் மரகதம்.

''ஏம்மா! உடம்புக்கு முடியலைன்னா... உடனே ஹார்லிக்ஸ் பாட்டில் சகிதம் போய் பார்க்கணுமா? அதுவும் முகத்தைப் பரிதாபமா... பேயறைஞ்ச மாதிரி வச்சுக்கிட்டு போய் பார்க்கணும் இல்லையா?'' கிரி கிண்டலடித்தான்.

''அடப்போடா... எனக்குத் தெரிஞ்சதை சொன்னேன்! கேலி பண்றியே?''

* * *

புதிதாக வேலைக்குச் சேர்ந்த பெண்களைத் தனியே அழைத்து... அவர்களது குடும்பச் சூழ்நிலையைத் தெரிந்து கொண்டாள் உமா. பழைய வேலையாட்களிடமும் நின்று நிதானித்துப் பேசினாள். அங்கு வேலை செய்த ஒவ்வொரு பெண்களின் கஷ்ட நஷ்டத்தைத் தெரிந்து கொள்வதுடன், அவர்களது உணர்வுகளுக்கு மதிப்பளித்து கௌரவமாக நடத்தினாள்.

அவர்களுக்கு உமாவின் மேல் மதிப்பும் அக்கறையும் பெருகியதால்... முழு உற்சாகத்துடனும் ஈடுபாட்டுடனும் கடமையைச் செய்து வந்தனர். கடைசியாக செண்பகத்திடமும், அஞ்சலைப் பாட்டியிடமும் ஆர்டர்ஸ் சம்பந்தமாகப் பேசிவிட்டு உள்ளே சென்றாள்.

ருக்மணி உமாவை அடுக்களைக்கு அழைத்துச் சென்றாள்.

''அம்மா! பாட்டி அன்னக்கு வந்தப்போ... பவியைப் பத்தி பூடகமா ஏதோ சொன்னாங்க. பெரியம்மா உடம்புக்கு என்ன? சதா அழுதுகிட்டே இருக்காங்களாம்? போன்ல இதைப் பத்தி எப்படி கேட்கிறதுன்னுதான் கம்முனு இருந்துட்டேன்!''

ருக்மணியின் முகத்தில் கவலை தோய்ந்திருந்தது.

''நீ பெரியப்பா வீட்டுக்குப் போ! பாட்டி அங்கதான் இருக்காங்க. பவி கிட்ட ஜாக்கிரதையா பேசு! அவ குணம் உனக்குத் தெரியுமில்லே? முன்னப்பின்ன யோசிக்காம எடுத்தெறிஞ்சு பேசிடுவா... நீ அப்புறம் வருத்தப்படக்கூடாது இல்லையா?'' மகளை எச்சரித்தாள் ருக்மணி.

''அவ யாரும்மா? மூணாம் மனுஷியா? அக்கா தங்கச்சிக்குள்ளே... இதையெல்லாம் பெரிசு படுத்தக்கூடாதுன்னு நீ தானே புத்தி சொல்வே? சரிம்மா... நீ டென்ஷன் ஆகாதே! நான் பார்த்துக்கறேன்!'' அம்மாவின் கன்னத்தை வருடிவிட்டு, வாசலை நோக்கி விரைந்து நடந்தாள் உமா.

உமா பெரியப்பாவின் வீட்டிற்குச் சென்றபோது... ஆளுக்கு ஒரு பக்கமாய் அமர்ந்து கொண்டு சோகக்கடலில் மூழ்கியவர்களைப் போல் தோற்றமளித்தனர். கற்பகம் மிகவும் இளைத்துப் போயிருந்தாள். உமாவைக் கண்டதும் உடல் குலுங்கக் கதறினாள். பாட்டி மங்களத்திற்கு உமாவைப் பார்த்ததும் புதுத்தெம்பே வந்தது போலிருந்தது.

''வாம்மா உமா மாப்பிள்ளைக்கு இப்போ பரவாயில்லையா?'' சவரம் செய்யப்படாத முகத்துடன் பார்க்கவே சகிக்காமல் இருந்தார் நடேசன்.



''பரவாயில்ல பெரியப்பா!'' என்று கூறிவிட்டு பாட்டியை ஏறிட்டாள் உமா. பாட்டி புரிந்துகொண்ட தினுசில் அடுக்களைக்குச் சென்றாள்.

''பெரியம்மா என்னாச்சு? ஏன் இப்படி இளைச்சுப் போயிட்டீங்க? துக்கம் நடந்த வீட்டுலே உட்கார்ந்திருக்கிற மாதிரி... ஏன் எல்லாரும் இவ்ளோ சோகமா இருக்கீங்க?'' கற்பகத்தின் தோளை ஆதுரத்துடன் தொட்டாள்.

''எல்லாம் பவியாலதான்! பாவிப் பொண்ணு... வெளில தலைகாட்ட முடியாம பண்ணிட்டாளே? போ... நீயே போய் அவ கிட்ட கேளு!'' தேம்பினாள் கற்பகம்.

பவித்ராவின் அறைக்கதவை மெல்லத் தட்டினாள் உமா. கதவு தாழிடப்படாததை கவனித்த உமா, அதைத் தள்ளித் திறந்து கொண்டு அறைக்குள் பிரவேசித்தாள். கதவை மீண்டும் சாத்தி வைத்தாள்.

கட்டிலில் குப்புறப்படுத்துக் கொண்டு தலையணையில் முகம் புதைந்து விசும்பிக் கொண்டிருந்த பவித்ரா, அரவம் கேட்டு சட்டென்று எழுந்து அமர்ந்தாள்.

''பவிம்மா எப்படி இருக்கே?'' கனிவுடன் பார்த்தபடி அவளருகில் அமர்ந்தாள் உமா.

''உ... உமா... எ... என்னை மன்னிச்சுடு! நிறைய வாட்டி உன்னை நான் அவமானப்படுத்தியிருக்கேன். துச்சமா நினைச்சு உதாசீனம் பண்ணியிருக்கேன். என்னோட அகம்பாவம், ஆணவம், கர்வம், திமிர்... எல்லாத்துக்கும் சேத்து வச்சு கடவுள் எனக்கு மிகப் பெரிய தண்டனையைக் குடுத்துட்டார். தினம் தினம் மனசு புழுங்கி

சாகறதை விட ஒரேயடியா செத்துடலாம்னு தூக்குப் போட்டுக்கலாம்னு ட்ரை பண்ணினேன். ப்ச்! கயிறு அறுந்து விழுந்துட்டேன். எல்லாரும் என்னால நிம்மதியிழந்து தவிக்கிறாங்க... குடும்பத்து கவுரவத்தைக் குலைச்ச பாவி நான்! நான் ஏன் உயிரோட இருக்கணும்?

''எம்மேல உயிரையே வச்சிருந்தார் அப்பா! உடம்பு முடியாம படுத்தப்போ... மகளா இருந்து என்னோட கடமையைச் செய்யத் தவறிட்டேன். அந்தப் பாவத்துக்கு தான்... இப்போ கரையேற முடியாம தத்தளிக்கிறேன். என்னால இந்தக் குடும்பத்துல இருக்கறவங்க நடைப்பொணங்களா நடமாடுறாங்க. என்னோட எதிர்காலத்தைப் பத்தி கவலைப்பட்டு... எல்லாரும் வேதனையில் அணு அணுவா சாகறாங்க. ஆயிரம் குத்தூசிகள் உடம்பைத் துளைக்கிறாப்பல. மனசெல்லாம் ரணமா இருக்கு உமா! இந்த சித்திரவதையை அனுபவிக்கிறதைவிட நான் என்னை முடிச்சிக்கப் போறேன். அதான் எல்லாருக்கும் நல்லது. ஒரேயடியா தலை முழுகிட்டு நிம்மதியா இருப்பாங்கல்ல?'' துக்கம் தாளாமல் முகத்தில் அறைந்து கொண்டு கோவென்று அழுதாள் பவித்ரா.

சில நிமிடங்கள் கழித்து நிமிர்ந்தவள்... ஆரம்பத்திலிருந்து ஒன்று விடாமல் உமாவிடம் கொட்டித் தீர்த்தாள். சிறிது நேரம் யோசனையில் மூழ்கிய உமா நிமிர்ந்து பவித்ராவைப் பார்த்தாள்.

''இதோ பார் பவி! எந்தப் பிரச்சனைக்கும் ஒரு தீர்வு இருக்கும். அந்தத் தீர்வுக்கு வழி தேடாம, கோழைத்தனமா... சாகணும்னு முடிவெடுக்கக்கூடாது. கஷ்ட



நஷ்டம் தெரியாம வளர்ந்துட்டே... லைப்லே இருக்கற சீரியஸ்னஸ் உனக்குப் புரியல... உனக்குத் தெரிஞ்சதெல்லாம் ஜாலியா டைம் ஸ்பெண்ட் பண்ணணும்! அவ்வளவு தான்! ஒரு கூட்டத்துல நின்னா... சென்டர் ஆப் அட்ராக்ஷன் நீயா இருக்கணும்னு ஆசைப்பட்டிருக்கே? நம்ம அழகைப் பிறர் ரசிக்கணும் புகழணும்னு நினைச்சது... மகா தப்பு தான்! அதோட பலனைத்தான் நீ இப்ப அனுபவிச்சுட்டிருக்கே!''

''எனக்கு வேற வழி இருக்கா சொல்லு?'' மீண்டும் உடைந்து போய் கதறி அழுதாள் பவித்ரா.

பல நாட்களாக எண்ணெய் காணாத அவளது வறண்ட கூந்தலை மெல்லத் தடவியவாறு உமா உறுதியாகக் கூறினாள்.

''வழி இருக்கு பவி! கண்டிப்பாக உனக்கு வாழ்க்கை கிடைக்கும். நம்பு!''

## 26

பூஜையறையில் உள்ள வெள்ளி காமாட்சி விளக்கில் பசு நெய் ஊற்றி, திரியிட்டு விளக்கேற்றினாள் உமா. ''நித்யானந்தகரீ வரா பயகரீ...'' ஸ்லோகத்தை வாய் விட்டுக் கூறினாள். தோட்டத்தில் பூத்திருந்த பவள மல்லிகைப் பூக்களை... ஊசியால் கோர்த்து சரமாகத் தொடுத்து, அதை அம்பாள் படத்திற்குச் சாற்றியிருந்தாள்.

சந்தன ஊதுபத்தியின் மணமும், சாம்பிராணி வாசமும், பவள மல்லி சரத்தினின்று பரவிய நறுமணமும் சேர்ந்து...

பக்தி மணம் கமழ்ந்து கொண்டிருந்தது. கண்களை மூடி நீண்ட நேரம் பிரார்த்தனை செய்து விட்டு கற்பூரத்தை ஏற்றி ஆரத்தி காட்டினாள். அவசரமாக உள்ளே நுழைந்த ஸ்ரீதரன், அண்ணியின் எதிரில் வந்து நின்றான்.

அவள் காட்டிய ஆரத்தியைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டான். ஆரத்தி தட்டை அம்பாள் படத்திற்கு முன்பாக வைத்து விட்டு நிமிர்ந்தாள் உமா. அவளது நெற்றியோரம் முத்து முத்தாக வியர்வை அரும்பியிருந்தது. மென்மையாக முறுவலித்த உமா, ''குட்மார்னிங் ஸ்ரீதர்! நீங்க எனக்காக கொஞ்சம் டைம் ஒதுக்க முடியுமா? ரொம்ப முக்கியமான விஷயம்! அஞ்சாறு நாளா பேசறதுக்கு சந்தர்ப்பமே கிடைக்கலே... நீங்க பிஸியா இருந்தீங்க... நேத்திக்கி அம்மா, கல்யாணி அம்மாவோட... புட்டபர்த்திக்கு கிளம்பிட்டாங்க... உங்க கிட்ட பேசி உங்க அபிப்ராயத்தைத் தெரிஞ்சுக்கிட்டு அதுக்கு அப்புறமா... இந்த விஷயத்தை அம்மாகிட்டயும், உங்க அண்ணாகிட்டயும் சொல்லலாம்னு இருக்கேன்'' தயங்கியவளின் முகம் மிகவும் பரிதாபமாக இருந்தது.

''என்ன அண்ணி இவ்ளோ தயங்கறீங்க? வாங்க... அப்படி போய் உட்கார்ந்து நிதானமா சொல்லுங்க!'' சோபாவில் வந்தமர்ந்தனர்.

குழப்பத்துடன் கைகளைப் பிசைந்து கொண்டிருந்த உமாவை ஊன்றிப் பார்த்தான் ஸ்ரீதரன். அவளது கண்களில் ஒருவித கலவரம் படர்ந்திருந்தது.

''எல்லாம் உங்க கல்யாண விஷயமாத்தான்...'' எச்சிலை விழுங்கிக் கொண்டாள்.



''ஓ! அந்தப் பொறுப்பை அம்மா உங்க கிட்ட ஒப்படைச்சுட்டாங்களா? நீங்க எந்த முடிவு எடுத்தாலும்... எங்களுக்கு ஓகே! ப்ளீஸ் அண்ணி! சுத்தி வளைக்காம விஷயத்துக்கு வாங்க!'' சிரித்தான் ஸ்ரீதரன்.

''என் சிஸ்டரை உங்களுக்குக் கல்யாணம் செய்து வைக்கலாமான்னு...'' தயங்கி நிறுத்தினாள்.

''யாரு ஸ்வேதாவையா? என்ன அண்ணி? அவ ரொம்ப சின்னப் பொண்ணு! எந்த மாதிரி பொண்ணு வேணும்னு... நான் அன்னைக்கே தெளிவா உங்ககிட்ட சொல்லிட்டேனே? மறந்துட்டீங்களா அண்ணி?''

அதற்கு மேலும் தயங்குவது சரியல்ல என்று தீர்மானித்த உமா, பார்வையைத் தழைத்துக் கொண்டு தரையைப் பார்த்தபடி, பவித்ராவைப் பற்றி ஒன்று விடாமல் சகலத்தையும் கூறி முடித்தாள்.

''கஷ்டமே தெரியாம வளர்ந்த சூழல்! சகவாச தோஷம்! நாகரீகம்! நல்லது கெட்டதைப் பிரிச்சு பார்க்கத் தெரியாம... விளையாட்டுத் தனமா கண்ணை மூடிட்டு இருந்துட்டா... இப்போ தினம் தினம் கதறி சாகறா, தேம்பித் தேம்பி அழுதே ஆள் உருக்குலைஞ்சு போயிட்டா!'' பாசத்தில், துக்கம் தொண்டையைப் பந்தாக அடைத்துக் கொண்டது. நா தழுதழுத்தது.

''உங்களுக்கு விருப்பம் இல்லேன்னா... ஓபனா சொல்லிடுங்க. என்னடா இது... இந்த மாதிரி பொண்ணைத் தலையில கட்டறாங்களேன்னு தவறா நெனக்காதீங்க! அடிப்படையில அவ நல்ல பொண்ணு தான்! அதுவும் தவிர... இது நான் வாழ வந்த வீடு... நீங்க என்னோட

மைத்துனர்! எந்த காலத்துலேயும் உங்களுக்கு நான் தீங்கு நினைக்க மாட்டேன். நம்புங்க!

''பெரியப்பாவும், பெரியம்மாவும் அவ மேல உசுரையே வச்சிருந்தாங்க... ஆனா இப்போ... பவி சொந்த வீட்டி லேயே... பெத்தவங்களாலே வெறுக்கப்பட்டு அநாதை மாதிரி தான் இருக்கா! நாலு பேரும் நடைப் பிணங்களா நடமாடிக்கிட்டிருக்காங்க...! பெரியப்பா ஏற்கனவே ஹார்ட் பேஷண்ட்! பெரியம்மா உருக்குலைஞ்சு போயிட்டாங்க... பவி தூக்குல தொங்குறதுக்கு ஏற்கனவே ட்ரை பண் ணிட்டா... பாட்டி ரொம்பவே உடைஞ்சு போயிட்டாங்க... எந்த நிமிஷத்திலேயும் எது வேணும்னாலும் நடக்க லாம்...

''என் மனசுல பட்டதை நான் கேட்டுட்டேன்! சம்மதிக் கிறதும், மறுக்கிறதும் உங்க இஷ்டம்! நான் உங்களைக் கட்டாயப்படுத்தலை. உங்க பெருந்தன்மையை மனசுல வச்சுக்கிட்டு கேட்டேன். எதுவா இருந்தாலும் வெளிப் படையா சொல்லிடுங்க! உங்க திருப்தி தான் எனக்கு முக்கியம்!'' பேசி முடித்துவிட்டு ஸ்ரீதரனை நிமிர்ந்து பார்த்தாள்.

புருவங்கள் முடிச்சிட, நெற்றியைச் சுருக்கி யோசனை யுடன் அவளைப் பார்த்த ஸ்ரீதரன் தொண்டையைக் கனைத்துக் கொண்டான்.

''தப்பை உணர்ந்து வருந்தி திருந்தறவங்க... ஆயிரம் நல்ல மனுஷங்களுக்குச் சமம்னு சொல்வாங்க! பவியும் மனசளவில ஊனமான பொண்ணு! எல்லாருடைய வெறுப்புக்கும் ஆளாகி அநாதை மாதிரி நிக்கறா...



தற்கொலைக்கு ட்ரை பண்றான்னு சொன்னீங்க! கிட்டத் தட்ட இவளும் என் லட்சியத்துக்கு ஏத்தவ தான்! ஊர் கூடி ஆயிரம் பேசட்டும்! எனக்கு உங்க வார்த்தை தான் முக்கியம்!

''உங்களுக்கு நல்லவள்னா... எனக்கும் நல்லவள்தான்! உங்க முடிவு என்னைக்கும் தப்பாவே இருக்காது அண்ணி! இந்த வீட்டுக்கு இரண்டாவது மருமகளா உங்க பவியைக் கொண்டு வரலாம்னு முடிவெடுக்கிறதுக்கு முன்ன... நல்லா யோசிச்சுப் பேசியிருக்கீங்க... நீங்க என்ன முடிவெடுத்தாலும் அது ரொம்ப சரியாத்தான் இருக்கும் அண்ணி!

''எனக்கு உங்க மேல மதிப்பும் மரியாதையும் நிறைய உண்டு அண்ணி! எனக்கு சம்மதம்! அம்மா வந்ததும் பேசிட்டு மடமடன்னு ஆக வேண்டியதைப் பாருங்க!'' சற்றே சங்கோஜப்பட்டுக் கொண்டு மெல்ல எழுந்தான் ஸ்ரீதரன்.

நன்றி கலந்த கண்களோடு அவனை ஏறிட்ட உமா ''தேங்க் யூ ஸ்ரீதர்! யூ ஆர் வெரி கிரேட்!'' என்றாள்.

மகிழ்ச்சி கரை புரண்டு ஓடியது. மனதிலிருந்து பெரும் பாரம் இறங்கிய திருப்தியில் அவளுக்கு சிறகடித்துப் பறக்க வேண்டும் போலிருந்தது. வேகமாக மாடிக்கு ஓடினாள்.

பால்கனியில் போடப்பட்டிருந்த ஈஸி சேரில் சாய்ந்த மர்ந்து... தோட்டத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந் தான் கிரி.

''எ... என்னங்க! பவியை... அதான்! என் பெரியப்பா பொண்ணு பவித்ராவைக் கல்யாணம் செய்துக்க ஸ்ரீதர்

சம்மதிச்சுட்டார்! அப்பாடி என் வயித்துல அப்படியே பாலை வார்த்தாப்ல இருக்கு தெரியுமா? ஐயாம் வெரி ஹேப்பி!'' கன்னங்களில் கண்ணீர் வாய்க்கால் போட்டது. மகிழ்ச்சி தாங்காமல் சட்டென்று முழங்காலிட்டு அமர்ந்து அவனது கரத்தை இறுகப் பற்றிக் கொண்டாள்.

''நான்... அப்புறமா வந்து விவரமா சொல்லட்டுமா? பெரியப்பா வீட்டுக்குப் போயி இந்த விஷயத்தை சொல்லிட்டு ஓடி வந்துடறேன்! எவ்ளோ... திருப்தியா நிம்மதியா இருக்கு தெரியுமா?'' மகிழ்ச்சிக் கடலில் தத்தளித்தவளை ஆச்சரியமாகப் பார்த்தான் கிரி. 'எதிலும் நிதானத்தைக் கடைபிடிப்பவள்... இன்றோ மகிழ்ச்சியின் உச்சத்தில்...?' கண்களில் குறும்பு மின்ன தன் கரத்தைப் பற்றியிருந்த உமாவின் கைகளில் அவனது பார்வை தாவியது. அவளது கைகளை இழுத்து தன் கன்னத்தில் பொருத்தினான்.

'நான் வரேன்!' முல்லைப்பல் வரிசை தெரிய முறுவலித்து விட்டு ஓடினாள்.

## 27

வாசலில் கார் வந்து நிற்கும் சத்தத்தைக் கேட்டதும்... நடேசன் மெல்ல நடந்து வந்து எட்டிப் பார்த்தார். உமா வந்து கொண்டிருப்பதைப் பார்த்ததும்... மெல்ல அவரது முகத்தில் முறுவல் எட்டிப் பார்த்தது.

''வா உமா! அம்மா... உமா வந்திருக்கா பாருங்க!'' கற்பகமும் பாட்டியும் அடுக்களையிலிருந்து வந்தனர்.



''மாப்பிள்ளைக்கு இப்போ பரவாயில்லையாம்மா?'' நலம் விசாரித்தார் நடேசன்.

''உம்! நாளைக்கு ஆஃபீசுக்குப் போலாம்னு டாக்டர் சொல்லியிருக்காங்க!

''பாட்டி! பவியை கொஞ்சம் கூப்பிடுங்களேன். ஒரு முக்கியமான விஷயம்!'' பீடிகை போட்டவளை அனைவரும் சீரியஸான முக பாவனையுடன் ஏறிட்டனர்.

பவித்ரா தயக்கமாய் அறையிலிருந்து வந்தாள்.

''பெரியப்பா! என்னோட மைத்துனர் ஸ்ரீதர்... நம்ம பவியைக் கல்யாணம் செய்துக்க சம்மதிச்சுட்டார்! நான் எதையும் அவர் கிட்ட மறைக்கல... வெளிப்படையா எல்லாத்தையும் பேசிட்டேன். அவரும் சம்மதிச்சுட்டார் பெரியப்பா!'' என்றாள் உமா.

தகதகவென்று நெருப்பாய் கனன்று கொண்டிருந்த அடி வயிற்றில் சில்லென்ற பாலை ஊற்றியது போல் இருந்தது. வெந்த புண்ணில் இதமாய் மயிலிறகால் மருந்து தடவி விட்டதைப் போலிருந்தது.

சட்டென்று உமாவின் கரங்களை நடேசன் பற்றிக் கொண்டார்.

''நீ எனக்கு மகளாப் போயிட்டே... இல்லேன்னா நீ பண்ணின உபகாரத்துக்கு உன்னோட கால்லே விழுந்து நமஸ்காரம் பண்ணியிருப்பேன். தம்பி போனதுக்கு அப்புறம்... கொஞ்சம் கூட ஈவு இரக்கம் இல்லாம உங்க குடும்பத்தை நான் தவிக்க விட்டிருக்கேன். ஆனா எதையும் மனசுல வச்சுக்காம இவ்ளோ பெரிய நன்மையை எங்களுக்கு செய்திருக்கே? பணத்திமிர்லே எத்தனையோ

வாட்டி பவி உன்னைத் தூக்கியெறிஞ்சு வீசியிருக்கா... அதையெல்லாம் மறந்துட்டு... அவளுக்கு நல்ல வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுத்திருக்கியே!'' தாரை தாரையாக கண்ணீர் வடித்தார் நடேசன்.

''அம்மாடி உமா! நீ நல்லா இருப்பேடா!'' கற்பகம் கைகளைக் குவித்தாள்.

''சேச்சே! என்ன இது? நான் என்ன மூணாம் மனுஷியா? என்னோட கடமையை நான் செய்திருக்கேன். இதைப் போய் பெரிசு படுத்திக்கிட்டு...'' உமா புன்னகை பூத்தாள்.

'உமாக்கண்ணு எப்பவும் குணத்துல தங்கம் தான்! அவ அருமை இப்பவாவது உங்களுக்குப் புரியுதே!'' மங்களம் பெருமிதப்பட்டாள்.

பவித்ரா உமாவின் அருகில் வந்தாள். யாரும் எதிர்பாராத வண்ணம் தடாலென்று உமாவின் கால்களில் சாஷ்டாங்கமாக விழுந்தாள். பாதங்களைப் பற்றிக் கொண்டாள்.

''இந்தப் பாவியை மன்னிச்சு... இப்படி ஒரு வாழ்க்கையை எனக்கு ஏற்படுத்திக் குடுத்ததுக்கு நான் எப்படி நன்றி சொல்வேன்? காலம் பூராவும் உன் காலுக்கு செருப்பா இருப்பேன்!'' குரல் பிசிறடிக்கப் பேசினாள் பவித்ரா.

''எழுந்திரு பவி! அய்யோ... என்ன காரியம் இது? எழுந்து பெரியவங்க கிட்ட ஆசீர்வாதம் வாங்கிக்கோ... பாட்டி அட்வைஸ் பண்ணினா... முன்ன எரிஞ்சு விழுவே இல்லியா? பெரியவங்க எப்பவும் நன்மைக்குத்தான்



சொல்வாங்க. புத்திமதி சொன்னா எரிச்சல் படக்கூடாது. அவங்க காட்டற நேரான வழில நடக்கப் பழகிக்கணும்.

''இப்படித்தான் போவேன்னு அடம் பிடிச்சா... தடுக்கி குழிக்குள்ளே விழ, வேண்டியது தான்! உனக்கு ஒண்ணு ஆச்சுன்னா... பாட்டிம்மா எப்படித் துடிக்கிறாங்க தெரியுமா? உன்னைப் பத்தி விசனப்பட்டு மனசு தாங்காம... போன வாட்டி என் கணவரைப் பாக்க வந்தப்போ.. என் கிட்ட சொல்லி வருத்தப்பட்டுப் பேசினாங்க தெரியுமா? அவங்க எனக்கு சொல்லாம இருந்திருந்தா... நான் உன்னைப் பார்க்கவே வந்திருக்க மாட்டேன் இல்லையா?''

''எனக்கு இப்போ எல்லாம் புரியுது உமா!'' என்று கூறிவிட்டு மங்களத்திடம் வந்தாள்.

''என்னை மன்னிப்பீங்களா பாட்டி!'' தேம்பினாள்.

''நீயும் எம் பேத்தி தானே? உமா மாதிரியே உன் மேலயும் எனக்கு கொள்ளைப் பிரியம்! போதுமா?'' பாட்டி பேத்தியை அணைத்துக் கொண்டாள்.

''சரி! நான் கிளம்பட்டுமா? அவர் வீட்ல இருக்கார். சீக்கிரமா போய் சமைக்கணும்!'' தலையாட்டி விட்டுக் கிளம்ப யத்தனித்தவளின் கரத்தைச் சட்டென்று பிடித்துக் கொண்டாள் பவித்ரா.

உமாவின் விழிகளையே... கலங்கிய கண்களுடன் நோக்கியவள்,

''ந... நன்றி உமா!'' தழுதழுத்தாள்.

''தலை முடியெல்லாம் வறண்டு... கண்ணெல்லாம் குழி விழுந்து... கன்னமெல்லாம் ஒட்டிப்போய்... எப்படி

ஆயிட்டே பார் பவி? போய் நல்லா சாப்பிடு!... அத்தை ஊர்லே இருந்து வந்ததும்... முறைப்படி பொண்ணு கேட்டு வரோம். அப்போ... கல்யாணக் களையோட பழைய பவியா... ஐ மீன் பார்க்க ரொம்ப அழகா இருக்கணும் சரியா? நன்றி வேண்டாம் பவி! நம்ம குடும்பத்துக்கு ஒரு நல்ல மருமகளா... ஸ்ரீதருக்கு ஏத்த மனைவியா... நடந்து என் பேரைக் காப்பாத்து! அது போதும்!'' அவளது கன்னத்தைத் தடவிக் கொடுத்து விட்டு சிரித்தபடி வெளியேறினாள் உமா!

## 28

உமா, வீட்டிற்கு சீக்கிரத்தில் திரும்பி விட்டிருந்தாள். கிரி முன்னறையில் அமர்ந்தபடி ஏதோ ஃபைலைப் புரட்டிக் கொண்டிருந்தான். செல்லில் தனது செகரட்டரியிடம் ஏதேதோ கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தான். அலுவலக வேலையில் அவன் மூழ்கி விட்டால்... பக்கத்தில் இடி விழுந்தால் கூட திரும்பிப் பார்க்க மாட்டான் என்பதை உமா அறிவாள்.

மளமளவென்று சமையலை முடித்தாள். ஸ்ரீதருக்கு கேரியர் சாப்பாட்டை டிரைவரிடம் கொடுத்தனுப்பினாள்.

கிரி சாப்பிடும்போது கூட பலத்த யோசனையில் ஆழ்ந்திருந்தான். பாத்திரங்களை சிங்க்கில் ஒழித்துப் போட்டு விட்டு நிமிர்கையில்... அவளுக்கு செல்லில் அழைப்பு வந்தது. பேசி முடித்துவிட்டு... செல்லை மீண்டும் உயிர்ப்பித்து அம்மா ருக்மணியைத் தொடர்பு கொண்டாள்.



''அம்மா! பூண்டு ஊறுகாய் பாட்டில் அம்பது கேட்டிருக்காங்க! செம்பகத்தைக் கடைக்கு அனுப்பி பூண்டு வாங்கிடச் சொல்லுங்க... நாளைக்கு நான் வர்றப்போ... மார்க்கெட்டுல இருந்து நெல்லிக்காய் வாங்கி வரேன். நெல்லிக்காய் ஊறுகாய்க்கும் ஆர்டர்ஸ் வருதும்மா! நீங்க மாத்திரை போட்டாச்சா? ரெஸ்ட் எடுங்க! செண்பகம் பொறுப்பா பாத்துப்பா!''

மாலையில் முகத்தைக் கழுவி சீராக்கி பொட்டிட்டுக் கொண்டு வெளிர் நீல காட்டன் புடவையில் பளிச்சென்று கிளம்பத் தயாரானவளை... மெல்ல ஏறிட்டான் கிரி.

நாளை அலுவலகத்திற்குச் செல்லப் போகின்றவனுக்கு இன்றே அந்தப் பரபரப்பு வந்து தொற்றிக் கொண்டது போலும்! ஃபைலைப் புரட்டுவதும்... ஃபோனில் பேசுவதுமாக இருந்தான்.

''நங்கநல்லூர் ஆஞ்சநேயர் கோவிலுக்குப் போயிட்டு வந்துடறேன்!'' தலையாட்டிவிட்டு மீண்டும் ஃபைலுக்குள் தலையை விட்டுக் கொண்டான் கிரி.

பிரம்மாண்டமாய் விசுவரூபத்தில் அருள்பாலித்த ஆஞ்சநேயரைக் கண்கள் கலங்க சேவித்தாள். அவளையும் அறியாமல் மெய் சிலிர்த்தது. வடை மாலை சாற்றி... பிரசாதத்தைப் பெற்றுக் கொண்டு வீட்டிற்கு வந்து சேர்ந்தபோது இரவு எட்டரையைத் தாண்டி விட்டிருந்தது.

கட்டிலில் முதுகுக்கு ஒரு தலையணையைக் கொடுத்து சாய்ந்து அமர்ந்து கால்களை நீட்டிக் கொண்டிருந்தான் கிரி.

''இன்னிக்கி ஆஞ்சநேயர் கோவில்லே ஏகப்பட்ட கூட்டம்! நல்ல தரிசனம் கிடைச்சது!'' முறுவலித்தபடி குங்குமப் பிரசாதத்தை நீட்டினாள் உமா.

''நீயே இட்டு விடேன்!'' ஒரு கணம் விழித்து விட்டு குங்குமத்தை நெற்றியில் இட்டாள் உமா.

''உன்கிட்ட மனசு விட்டுப் பேசலாம்னு இருக்கேன்!''

''இந்தாங்க... வடை மாலைப் பிரசாதம்!'' கண்களில் ஒற்றிக் கொண்டு வாயில் போட்டுக் கொண்டான்.

''உ.... உமா! நீ நம்பறியோ இல்லையோ... கல்யாணத் துக்கப்புறம் நான் எந்தப் பெண்ணையும் ஏறிட்டுப் பார்க் கலை தெரியுமா? ச... சத்தியமா சொல்றேன்! உன்னை மனைவியா அடைஞ்சதுக்கு நான் ரொம்பப் புண்ணியம் பண்ணியிருக்கணும். எ... என்னை நம்பறியா உமா? என் மனசுல என்ன இருக்குன்னு தெரியுமா? ஃபர்ஸ்ட் நைட்லே நான் பேசினதைக் கேட்டு உன் மனசு என்ன பாடு பட்டிருக்கும். சாரி!'' கிரியின் கண்களில் கண்ணீர் பொங்கியது.

தனது முந்தானையால் அவனது கண்ணீரைத் துடைத்தாள் உமா.

''என்னது இது? படாத பாடுபட்டு இப்போதான் உங்க உடம்பு தேறியிருக்கு! ஏன் கண் கலங்கறீங்க? உங்க மனசுல என்ன இருக்குன்னு எனக்கு நல்லாத் தெரியும். போதுமா?''

''தெரியுமா?'' திகைப்புடன் கேட்டான் கிரி.

''தாய்க்குப் பின் தாரம்னு சொல்வாங்க! ஒரு தாய், தன்னோட பிள்ளையோட அங்க அசைவை வச்சே...



அவன் மனசுல என்ன இருக்குன்னு புரிஞ்சுப்பா... ஒரு நல்ல மனைவியும் அப்படித்தான்... நேருக்கு நேரா உங்களைப் பாக்காட்டியும்... உங்களோட அசைவைப் பாத்தே... எப்பவோ நான் உங்க மனசுக்குள்ள வந் துட்டேன்னு நல்லா புரிஞ்சுகிட்டேன்!'' வெட்கத்தில் கன்னம் குழிய சிரித்தாள் உமா.

''அப்போ நான் திருந்திட்டேன்னு நம்பறியா?''

''இன்னிக்கு வடை மாலை சாத்திட்டு வந்திருக்கேன். ஏன் தெரியுமா? ஃபர்ஸ்ட் நைட் அன்னிக்கி... 'கெட்ட சகவாசத்திலிருந்து நீங்க மீண்டு வந்தா... ஆஞ்ச நேயருக்கு வடை மாலை சாத்தறேன்'னு வேண்டியிருந் தேன்.

''நேர்த்திக்கடனை என்னைக்கோ செலுத்தியிருக்க வேண்டியது! இன்னிக்குத்தான் நேரம் வந்திருக்கு! நம்ம ஸ்ரீதர் விஷயம் உங்களுக்கு...'' கையை உயர்த்தினான் கிரி.

''ஸ்ரீதர் எல்லாத்தையும் சொல்லிட்டான். நல்ல முடிவு தான்!... சரி! நம்ம விஷயத்துக்கு வருவோம். என்னை உனக்கு நிஜமாவே பிடிச்சிருக்கா? இல்லே... வேற வழி இல்லாம என்னை சகிச்சிட்டிருக்கியா?'' கண்கள் ஏகத் துக்கும் கலங்கின.

''நிஜமாவே பிடிச்சிருக்கு!''

''இல்ல... நான் நம்ப மாட்டேன். என் மனசு வருத்தப் படக் கூடாதுன்னு பொய் சொல்றே?'' குரல் பிசிற டித்தது.

'தன் மனதில் உள்ளதை இவனிடம் வேறு எப்படி நிரூபிக்க முடியும்?' உமா ஒரு கணம் திணறினாள்.

''நேர்த்திக்கடனை இன்னிக்குத் தான் செலுத்திட்டு வந்திருக்கேன். பகவான் மேல ஆணையா சொல்றேன். உங்களை எனக்குப் பிடிச்சிருக்கு!... இன்னும் சொல்லப் போனா... வத்சலா வீட்டுலே உங்களைப் பார்த்தேனே... அ... அப்பவே என் மனசுல குடி வந்தாச்சு! போதுமா?... ஐ லவ் யூ!'' கிரியின் கையை எடுத்து தன் கன்னத்தில் பொருத்திக் கொண்டாள் உமா.

''இப்படியொரு அன்பு தேவதை கிடைப்பாள்னு நான் நெனைச்சுக் கூட பார்க்கலை! பிஸினஸ்லே அதிரடியா பல முடிவுகளைத் துணிஞ்சு எடுக்கக் கூடியவன். இத்தனை மாதங்களா... என் மனசுல இருக்கறதை வெளிப்படுத்தவே தயங்கினேன். இன்னிக்கு ஸ்ரீதர், பவியோட மேட்டரைப் பேசிக்கிட்டே என் கையை உரிமையா பிடிச்சியே? அப்போ தான் எனக்கு உயிரே வந்தது. என்னை ஏத்துப் பேங்கிற நம்பிக்கை வந்தது...

''காலைல ஒரு பைலைப் புரட்டிக்கிட்டிருந்தேனே? புது புராஜெக்டை ஆரம்பிக்கிறதுக்காகத் தான்! 'கங்காதரன் பில்டர்ஸ்'க்கு சொந்தமான லேண்ட் ஒண்ணு... இந்த ஏரியாவில இருக்கு! அதுல ஒரு பெரிய கம்பெனி கட்டலாம்னு இருக்கேன். அதை 'ஆஞ்சநேயா ஹோம் ப்ராடெக்ட்ஸ்' உரிமையாளர் உமா கிரிதரனுக்கு என்னோட அன்புப் பரிசா தரப் போறேன்.

''கஷ்டத்துல இருக்கற பத்து பெண்களுக்கு நீ இப்போ வேலை வாய்ப்பு தந்திருக்கே... இந்த கம்பெனி மூலமா எண்ணற்ற பெண்களுக்கு வாய்ப்பு தரலாம். 'ஆஞ்சநேயா ஹோம் புராடக்ட்ஸ்' நிறுவனம் எல்லாரும் பாராட்டும் நிறுவனமா வளரணும்! உன்னோட சேவை... நிறைய



பேத்துக்கு பயன் தரணும்... நான் சிகரத்தைத் தொட்ட மாதிரி... நீயும் உசந்து காட்டணும்!''

ஆச்சரியம் தாளாமல் விழிகள் விரியப் பார்த்தாள் உமா.

''அ... அது வந்து!''

''ப்ளீஸ்! உமா, என்னோட தேவதைக்கு நான் தர்ற அன்புப் பரிசு இது? மறுத்துடாதே... ப்ளீஸ்!'' அவளது கரத்தைப் பற்றியபடி கெஞ்சினான் கிரி.

''பல பேத்துக்கு நன்மையைத் தர்ற திட்டம் இது? மறுப்பேனா? பிஸினஸ்லே பல சிகரங்களைத் தொட்ட என்னவருக்கு... இன்னிக்குத்தான் என் மனசு...'' ஊடுருவிப் பார்த்தாள் உமா.

''சாரிடா!... ஐ லவ் யூ ஸோ மச்!'' இதமாக அவளைத் தன் தோளில் சாய்த்துக் கொண்டான் கிரி!

# வா... வா... வசந்தமே...!

## 1

ஆதவன் கண் திறக்க இன்னும் ஒரு மணி நேரம் இருந்தது. வழக்கமாய் சம்யுக்தா ஐந்து மணிக்கே கண் விழிப்பவள் என்பதால்... தன்னிச்சையாய் இன்றும் விழித்துக் கொண்டாள். இரு கைகளையும் பரபரவென்று தேய்த்து, உள்ளங்கையில் முகம் பார்த்துக் கொண்டாள்.

திறந்திருந்த ஜன்னல் கதவின் வழியாக முன் அனுமதியின்றி, உட்புகுந்த காற்று தோட்டத்தில் மலர்ந்திருந்த பவழ மல்லிப் பூக்களின் நறுமணத்தை சுமந்து கொண்டு வந்தது. ஆழ மூச்செடுத்து சுகந்த மணத்தை ரசித்த



சம்யுக்தா, கலைந்த முடியைக் கோதி கொண்டையிட்டுக் கொண்டு கூடத்திற்கு விரைந்தாள்.

வெயில் காலமாகட்டும், மழைக் காலமாகட்டும்... போர்வையைத் தலை வரை இழுத்துப் போர்த்திக் கொண்டால் தான் அண்ணன் சந்துருவுக்கு உறக்கமே வரும். உறக்கத்தில் போர்வை அவனது காலடியில் கிடந்தது. போர்வையை உதறி மடித்து வைத்து விட்டு சந்துருவின் புஜத்தில் மிருதுவாகத் தட்டினாள் சம்யுக்தா.

''அண்ணா...! எக்ஸாமுக்கு படிக்கணும்னு சொன்னியே!'' எக்ஸாம் என்றதும் படக்கென்று எழுந்து உட்கார்ந்து, கண்களை கசக்கி விட்டு அண்ணாந்து தங்கையைப் பார்த்து முறுவலித்தான் சந்துரு. பி.ஈ. என்ஜினியரிங் இறுதியாண்டு படித்துக் கொண்டிருப்பவன்.

''குட்மார்னிங், அண்ணா!'' முணுமுணுத்தபடி சற்றுத் தள்ளிப் படுத்திருந்த அம்மா தேவகியைப் பரிவுடன் ஏறிட்டாள். சீரான குறட்டையொலியுடன் அம்மாவின் நெஞ்சுக்கூடு ஏறித் தாழ்ந்து கொண்டிருந்தது. 'பாவம் அம்மா! ஆஸ்துமா நோயாளி. நேற்றிரவு தொண்டை வெடித்து விடுமளவு 'லொக்' 'லொக்' என்று விடாமல் இருமிக் கொண்டிருந்தாள். அம்மா இரவில் போட்டுக் கொள்ளும் மாத்திரையும், டானிக்கும்... இரு தினங்களுக்கு முன்பே தீர்ந்து விட்டிருந்தன.

இரவில் நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு வெளிப்பட்ட அம்மாவின் இருமல் சப்தத்தில் கருணாகரனும், சம்யுக்தாவும் கவலையுடன் விழித்துக் கொண்டு அனலிடைப்பட்ட புழுவாய் துடித்தனர். சந்துரு குடும்பக் கஷ்டத்தை உணர்ந்து அக்கறையாய்ப் படித்து முன்னேற

முயலும் பொறுப்பான இளைஞன்தான்! ஆனால் படுக் கையில் படுத்து விட்டால் பக்கத்தில் இடி விழுந்தால் கூட எழுந்து கொள்ள மாட்டான். அப்படியொரு கும்ப கர்ணன்.

அப்பா கருணாகரன் பள்ளிக்கூட வாத்தியார். அவரது சம்பளத்தை வைத்து கட்டும் செட்டுமாக குடும்பத்தை அருமையாக நடத்திக் கொண்டு வந்தாள் தேவகி. நிழலுக்கு ஒதுங்க அந்தக் கால பழைய ஓட்டு வீடு இருந்ததால்... மாதா மாதம் வாடகைச் செலவு இல்லை. அதிக வசதியில்லை. எனினும் அதிகத் தேவைகளை ஏற்படுத்திக் கொள்ளாததால் அதிக சிரமம் தெரியாமல் இருந்தது.

நாலைந்து வருடங்களாக அம்மா நோய் வாய்ப்பட்ட திலிருந்து குடும்பத்தில் இருந்த நிம்மதி தலைமறை வாகிப் போனது. மாதா மாதம் மருத்துவச் செலவுக்கு கணிசமான தொகையை ஒதுக்க வேண்டியிருந்தது. தமது அருமை மனைவியைப் பற்றி கவலைப்பட்டே கருணா கரனும் தன் பங்குக்கு பி.பி. ஷுகரை குத்தகைக்கு எடுத்துக் கொண்டார்.

முன்பெல்லாம் வசதி உள்ளவர்களுக்கு மட்டுமே வரும் பணக்கார வியாதிகள் பட்ஜெட் போட்டு வாழ்வைத் தள்ளும் பரிதாபத்துக்குரியவர்களையும் ஆக்கிரமித்து நிம்மதியான வாழ்வைத் தடம் புரள வைத்து விடு கின்றன. குருவி சேர்ப்பது போல் கருணாகரன் பேங்கில் போட்டு வைத்த கையிருப்பு மாயமாய் கரைந்தது.

அதே சமயம் சந்துரு கண்ணும் கருத்துமாகப் படித்து மெரிட்டில் தேறி விட்டதால் பிரச்சனை ஏதுமின்றி சுலப மாக என்ஜீனியரிங் காலேஜில் சேர்ந்து விட்டான். ஒவ்



வொரு செமஸ்டருக்கும் லம்ப் அமவுண்டை கட்டும் போது உண்மையில் கருணாகரனுக்கு விழி பிதுங்கி நாக்குத் தள்ளியது.

குடும்ப பாரத்தை இழுக்க முடியாமல் கருணாகரன் திணறும் போதெல்லாம் தேவகிக்கு சொர்ணத்தின் ஞாபகம் வந்து விடும். கருணாகரனின் ஒன்று விட்ட தங்கை சொர்ணம்! அண்ணாநகரில் அமோகமாக வாழ் பவள். கார், பங்களா என்று ஏகபோகமாய் கொடி கட்டிப் பறப்பவள்.

''என்னங்க! உங்க சித்தி மக சொர்ணத்துகிட்ட உதவி கேட்கலாமே! தகப்பனில்லாத குடும்பத்துல பிறந்து கல்யாணம் காட்சி ஆகாம ஏழ்மையில தத்தளிச்ச சொர் ணத்தை உங்க கூடப் பிறந்தவளா பாவிச்சு உங்க செலவுல கட்டிக் கொடுத்தீங்க. சொர்ணத்தோட கணவர் மட்டும் என்ன அசலா? அந்த விசுவநாதன் உங்களுக்கு சிநேகிதர் தானே?'' தன் ஆதங்கத்தைக் கொட்டித் தீர்ப் பாள் தேவகி.

''வலது கை குடுக்கறது இடது கைக்கே தெரியப் படாதுன்னு பெரியவங்க சொல்வாங்க. சொர்ணத்தை கரையேத்தி விட்டது என்னோட கடமை. அதைப்பற்றி பேசறதே தப்பும்மா.''

கண்டிப்பும் கறாருமாக கருணாகரன் பேசும் போது தேவகிக்கு வாயடைத்து விடும்.

கருணாகரனது உறவுக்காரி என்று தெரிந்தால் சொஸைட்டியில் தனது கௌரவத்திற்கு பங்கம் வந்து விடும் என்று பயந்து அவரை உதாசீனம் செய்து பாரா முகமாய் இருந்து வந்தாள் சொர்ணம். பல வருடங்களாய் ஒன்று விட்ட அண்ணனின் குடும்பத்தை ஏறெடுத்தும்

பார்க்காதவள்... திடீரென்று அண்ணன் குழந்தைகளின் படிப்புச் செலவை ஏற்றுக் கொண்டாள்.

திடுதிப்பென்று அத்தை சொர்ணம் மனம் மாறி உதவ முன் வந்ததும், சம்யுக்தாவின் அடி மனதில் சந்தேகம் முளை விட்டது. அவள் பி.எஸ்ஸி. இரண்டாமாண்டு படித்துக் கொண்டிருந்தாள். மெரிட்டில் தேறியிருந்தும் கூட அரை மனதோடு பி.எஸ்ஸியில் சேர்ந்து விட்டாள். அண்ணனைப் போல் என்ஜினியரிங் கோர்ஸ் படிக்க ஆசைதான்!

சொர்ணத்தின் குணத்தை முழுவதுமாக எடை போட்டு அறிய முடியாத சூழ்நிலையில் திடீரென்று அத்தை குணம் மாறி இவர்களுக்கு உதவுவதை நிறுத்தி விட்டால்... பெரிய படிப்பு நட்டாற்றில் விட்டது போலாகி விடுமே என்ற அச்சத்தில், சம்யுக்தா தனது ஆசையை மூட்டை கட்டிப் புதைத்து விட்டாள்.

'லொக்' 'லொக்' அம்மா இருமி விட்டு மறுபுறம் புரண்டு படுத்தாள். நேற்றிரவு விடாமல் இருமியபோது சம்யுக்தா சுக்கையும், மிளகையும் உரலில் லேசாக இடித்து தண்ணீரைக் கொதிக்க வைத்து கருப்பட்டி தட்டிப் போட்டு கஷாயம் தயாரித்து, தேவகிக்குக் குடிக்கக் கொடுத்த பின்பே இருமல் சற்றே மட்டுப்பட்டது.

கஷாயம் குடித்து விட்டு வெற்று டம்ளரை தலை மாட்டில் அம்மா வைத்து விட்டிருந்தாள். டம்ளரை அடுக்களையில் வைத்து விட்டு நிலைக் கதவைத் திறந்தாள் சம்யுக்தா. சில்லென்ற காற்று சுதந்திரமாய் உள்ளே புகுந்தது. இருண்டிருந்த பூமி சாம்பல் நிறமாய் மாறிக் கொண்டிருந்தது. வாசல் தெளித்து சிறிய கம்பிக்



கோலத்தைப் போட்டு விட்டு, கோலப் பொடிக் கிண்ணத்தை நிலைப்படியருகே வைத்தாள்.

வரக்காப்பியை தயாரித்து சந்துருவுக்கு கொடுத்து விட்டு, குளியலறைக்குள் புகுந்து சடுதியில் வெளிப் பட்டாள். அரிசியைக் களைந்து குக்கரில் ஏற்றி விட்டு சுண்டக்காய் வத்தக் குழம்பும், தேங்காய்த் துவையலும் அரைத்து விட்டு நிமிர்கையில் மணி ஆறரையைத் தொட்டிருந்தது.

தலையை வாரிப் பின்னலிட்டு முடித்து, சற்றே நிறம் மங்கிப் போன அரக்கு நிற காட்டன் சேலையை மடிப்பு வைத்துக் கட்டி... ஜாக்கெட்டுடன் இணைத்துப் பின் பண்ணினாள். சுவரிலிருந்த கண்ணாடியில் தன்னை ஒரு முறை பார்த்துக் கொண்டாள். சற்றே நீள் வட்ட முகம். மருண்ட விழிகள். குவிந்த சதை. திரட்சியான உதடுகள். அவள் உயரத்திற்கு ஏற்ற நடுத்தர உடல்வாகு. துடைத்து வைத்த தங்க குத்து விளக்கு மாதிரி 'பளிச்'சென்ற தோற்றம்!

''சம்யுக்தா!'' தயக்கமான குரலில் கருணாகரன் அழைத்தார்.

''என்னப்பா?''

''சந்துருவுக்கு பணம் கட்ட வேண்டியிருக்கு. இன்னிக்கு சாயந்திரம்...'' தடுமாறினார்.

''புரியுதுப்பா! காலேஜ் முடிஞ்சதும் நேரே சொர்ணம் அத்தை வீட்டுக்குப் போய் வாங்கிட்டு வரேன். அத்தை இன்னக்கி வரச் சொன்னது எனக்கு ஞாபகம் இருக்குப்பா!'' ஹேண்ட் பேக்கில் டிபன் பாக்ஸை திணித்துக் கொண்டே முறுவலித்தாள் சம்யுக்தா.

''நான் கிளம்பறேன்பா. ஜனனி, ரஞ்சனி வீட்டுலே மார்னிங் டியூஷனை முடிச்சுட்டு நான் காலேஜுக்குப் போகணும்!'' சம்யுக்தா அவசரமாக நகர முற்பட்டபோது சந்துரு வாரிச் சுருட்டிக் கொண்டு ஓடி வந்தான்.

''சம்யுக்தா... மார்னிங் டியூஷன் எடுக்க நீ அந்த வீட்டுக்குப் போக வேணாம். அந்த வீட்டு மனுஷன் நல்ல டைப் இல்லையாம்! அப்பா! நீங்களாவது சொல்லுங்க'' என்றவனின் குரலில் பதற்றம் தொற்றி நின்றது.

அவனது கரிசனத்தையும், பதற்றத்தையும் கண்ட சம்யுக்தாவின் அகன்ற விழிகளில் நீர் திரையிட்டது.

''அண்ணா! பதட்டப்படாதே. அந்த வீட்டுலே ஒரு அத்தைப்பாட்டி, தாத்தா, மாமின்னு ஏகப்பட்ட ஆட்கள் இருக்காங்க. நான் எப்பவும் கேர்புல்லா இருப்பேன். வரட்டுமா?'' ஓட்டமும் நடையுமாக விரைந்தாள் சம்யுக்தா.

## 2

பிரபலமான கலைக்கல்லூரி.

பெரிய கட்டிடங்களும், கண்கள் திரும்பும் இடமெல் லாம் பசுமையான மரம், செடி, கொடிகளும், அழகிற்கு அழகு சேர்த்த டீன் ஏஜ் தளிர்களுமாய்... ஏக அமர்க்கள மாய் இருந்தது.



உள்ளே நுழைந்ததும் வலது பக்கமாய் நான்கைந்து படிக்கட்டுகள் இறங்கினால், புல்வெளிகளும், செடி கொடிகளுமாய்... ஒரு சிறிய நந்தவனம் இருந்தது. மீன்கள் துள்ளிக் குதிக்கும் அல்லிக்குளம்... அதைச் சுற்றி... சருகுகளுடன் உதிர்ந்த மகிழம்பூக்கள். அல்லிக் குளத்தின் சுற்று சுவற்றைச் சுற்றி மாடர்ன் யுவதிகள் அமர்ந் திருந்தனர்.

அக்ஷரா மகிழம்பூவை முகர்ந்தபடி ஏதோ யோசனை யில் ஆழ்ந்திருந்தாள்.

''அக்ஷரா... எங்கயோ போயிட்டே போலிருக்கே?'' அவளது தோளைத் தொட்டு அசைத்தாள் ப்ரியா.

''ப்ச்... ஒண்ணுமில்லை'' அக்ஷராவின் குரலில் சோகம் இழையோடியது.

''ம்ஹூம்! பரபரப்புக்கும், கலகலப்புக்கும் மறு பேர் இருக்குன்னா, அது அக்ஷராவாகத் தான் இருக்கும்னு இந்தக் காலேஜ் முடிவு பண்ணிடுச்சு. உன் அமைதி இயற் கைக்கு முரண் பட்டுத் தெரியுதே? என்ன காரணம்?'' என்றாள் ஜானகி.

அக்ஷரா சுற்றிலும் ஒரு பார்வை பார்த்து விட்டுப் பெரு மூச்சு விட்டாள்.

''இன்னும் எத்தனை நாளைக்கு இந்த சந்தோஷ மெல்லாம்?''

''எந்த சந்தோஷமெல்லாம்?''

''காலேஜ், க்ளாஸ், ஃப்ரண்ட்ஸ், கார்டன், இந்த அல் லிக்குளம்... எல்லாரும் ஒண்ணா சேர்ந்து கலாய்க்கறது... எல்லாமே அடுத்த வருஷம் முடிஞ்சு போயிடுமே?''

சட்டென அந்த இடத்தில் கனத்த நிசப்தம் நிலவியது. அக்ஷரா சொன்னதில் இருந்த நிஜம், அந்த மாடர்ன் யுவதிகளைச் சுட்டது. ஒருவரையொருவர் ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டனர்.

''என்னப்பா இது? இன்னும் ஒரு வருஷம் இருக்கே? எதுக்கும் கவலைப்படாம கடைசி நிமிஷம் வரைக்கும் கலாய்ச்சுட்டே இருக்கணும். அதுதான் என்னோட பாலிசி!'' என்றாள் ஜான்சி.

''கடைசி நிமிஷம் வரைக்கும் கம்முனு இருந்துட்டு... அப்புறம் அவசரத்துல அள்ளித் தெளிச்ச கோலமா.. சட்டு புட்டுன்னு ஒரு முடிவை எடுக்கறதுல. எனக்கு என்னிக்குமே உடன்பாடு கிடையாது. ஆர அமர தீவிரமா சிந்திச்சு எடுக்கற முடிவு என்னிக்குமே தவறா இருக்காது. அதான்... ஃப்யூச்சர்ல என்ன பண்ணலாம்னு சிந்திச்சுகிட்டு இருக்கேன்'' அதுவரை அவள் சொல்வதை அமைதியாய்க் கேட்டுக் கொண்டிருந்த ப்ரியா வலிய சிரிப்பை வரவழைத்துக் கொண்டாள்.

''சரி! ஃப்யூச்சர்லே என்ன பண்ணலாம்னு முடிவு பண்ணியிருக்கே?'' ப்ரியாவின் கண்களில் ஆர்வம் மின்னியது.

''பணம், அந்தஸ்து, அழகு... இதெல்லாம் இன்னக்கி இருக்கும், நாளைக்குப் போயிடும். இந்த மூணையும் எதிர்பார்க்காம, நம்ம மனசைப் புரிஞ்சுகிட்ட ஒருத்தனுக்கு தான் நாம கழுத்தை நீட்டணும். பெத்தவங்க எல்லாம் 'பாஸிங் க்ளௌவுட்ஸ்' மாதிரி, கொஞ்ச காலம் இருந்துட்டுப் போய் சேர்ந்துடுவாங்க. ஆனா அதுக்கப்புறம் நம்ப வாழ்க்கை நல்லபடியா இருக்கணும்னா... அது நம்ம கையில தான் இருக்கு!''



அண்ணாந்து மகிழ மரத்தை வெறித்தபடி அக்ஷரா பேசினாள். அம்மாவின் அதிகார தோரணையும், அண்ணியின் பயந்து வெளிறிய முகமும் ஒரு கணம் அவளது மனக்கண்ணில் தோன்றி மறைந்தது. தாடை நரம்புகள் முறுக்கேற பற்களைக் கடித்துக் கொண்டாள் அக்ஷரா.

அண்ணன் ஆனந்தின் போக்கை நினைத்தால் அவளுக்குள் ரத்தம் தளபுளவென்று கொதித்தது. மனசாட்சியை அடகு வைத்து விட்டு விட்டேற்றியாக அவன் உலா வருவதை நினைக்கும் போதே ஆத்திரம் பீறிட்டுக் கிளம்பியது.

''ச்சீ! கவர்ட்! சுத்த பயந்தாங்கொள்ளி. எனக்கு மட்டும் இந்த மாதிரி எவனாவது வாய்ச்சா, தெரியும் சங்கதி! ப்ளடி நான்சென்ஸ்!'' கையிலிருந்த மகிழம்பூவை வீசியெறிந்து விட்டு, வலது காலால் உலர்ந்த சருகுகளை ஓங்கி மிதித்தாள்.

''அக்ஷரா... என்னடீ இது? என்னாச்சு? வீட்டுல ஏதாவது பிராப்ளமா?'' தோழிகள் பதறிப் போய் அவளது கைகளைப் பற்றிக் கொண்டனர்.

அக்ஷரா, பி.எஸ்ஸி. கம்ப்யூட்டர் சயின்ஸ் படிக்கும் மாணவி. ஐந்தாறு கார்களில் மாறி மாறி வலம் வரும் பணக்கார யுவதி. அவளது கடைக்கண் பார்வை தன் மேல் படாதா என்ற ஏக்கத்தில் வாலிப வட்டங்கள் கல்லூரி வாசலில் பழியாய் காத்துக் கிடந்தனர்.

அவளது தந்தை வியாபார சூட்சமங்கள் புரிந்த பிஸினஸ் மேனாக இருந்ததால் அவர் மண்ணைத் தொட்டாலும், அது பொன்னாக மாறிக் கொண்டிருந்தது. அப்பா விஸ்வநாதனைப் பற்றி எந்தப் பிரச்சனையும்

இல்லை. சதா பிஸினஸைக் கட்டிக் கொண்டு அலை பவர்.

அம்மா சொர்ணம் அடி மட்டத்திலிருந்து வந்தவள். புதிதாய் பணத்தைப் பார்த்ததும் அர்த்த ராத்திரியில் குடை பிடிக்கும் ரகத்தைச் சார்ந்தவள். விஸ்வநாதனுக்கு சொர்ணத்தின் மேல் கொள்ளைப் பிரியம்! அவர் சொர் ணத்தைக் கைப்பிடித்த நேரம், அதிர்ஷ்டம் கொட்டோ கொட்டென்று கொட்டி... சாதாரணமாய் இருந்தவரை உச்சிக்கு உயர்த்தி சிகரங்களைத் தொட வைத்தது.

சொர்ணம் அழகியாகவும், அதிர்ஷ்ட தேவதையாகவும் வாய்த்ததும், விஸ்வநாதன் தலையாட்டிப் பொம்மையாக, அடிமையாக மாறிப் போக.. சொர்ணமோ சர்வாதிகாரியாக அனைவரையும் ஆட்டிப் படைத்தாள். சொர்ணத்திற்குப் பிறந்த ஆனந்தும் சரி அக்ஷராவும் சரி... தாயைக் கொண்டு லட்சணமாக, நல்ல நிறத்தோடு கண்களை வசீகரித்தனர்.

சொர்ணம் தனது மகளை படு மாடர்னாக, நளினமாக வளர்த்து விட்டிருந்தாள். ராயல் சொஸைட்டியில் பிறந்த பெண் இப்படித்தான், இருக்க வேண்டும் என்று தனக்குள் ஒரு வரைமுறை வைத்துக் கொண்டிருந்தாள் போலும்.

சினிமா நடிகை போன்று கண்ணைக் கட்டிப் போடும் அழகுடன் விரிந்த கூந்தல் காற்றில் பறக்க பவனி வரும் அக்ஷராவைக் கண்டு... சொர்ணத்திற்கு உள்ளூர பெருமை பொங்கி வழிந்தது.

''அக்ஷரா என்னாச்சுடி உனக்கு?'' தோழிகள் உலுக் கியதும் தன்னிலை மீண்டாள்.



''எங்கண்ணா ஆனந்த் மாதிரி நான் கோழையா இருக்கப் போறதில்லை. என்னோட லைஃப் பார்ட்னரை நானே செலக்ட் பண்ணிப்பேன். ஸாரி செலக்ட் பண்ணி யாச்சு! அட் பிரஸண்ட் என்னை அவருக்குச் சுத்தமா பிடிக்கலை. ஒரு வருஷம் ஆனாலும் சரி... ஒன்பது வருஷம் ஆனாலும் சரி... சளைக்காம அவரோட மனசில இடம் புடிக்கிற வரைக்கும் நான் விடப்போறதில்லை'' சவால் விடும் தொனியில் பேசியவளைக் கண்டு தோழிகள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண் டனர்.

''யாருடி? அந்த பாக்கியசாலி?'' கோரஸாய் கேட்டனர்.

''ம்! எதுக்காம்? எனக்குப் போட்டியா.. நீங்களும் ட்ரை பண்றதுக்கா?'' கண்களில் குறும்பு மின்னப் புன்னகைத் தவளின் முகத்தில் முன்பிருந்த இறுக்கம் தளர்ந்திருந்தது.

''சரி! என் உள்ளம் கவர்ந்த கள்வனோட பேர்... சந்துரு.''

# 3

ஆனந்த் அழகான நாகரீகமான இளைஞன். அப்பா விஸ்வநாதன் பிரபலமான நாலைந்து கம்பெனிகளுக்குச் சொந்தக்காரர். பினாமி பெயரில் வேறு இரண்டு குளிர் பானக் கம்பெனிகளை சமீபத்தில் தொடங்கியிருந்தார். இத்தனை கம்பெனிகளுக்கும் உரிமையுள்ள ஏக போக,

ஆண் வாரிசாக இருந்தும், ஆனந்த் பிரபல தனியார் கம்பெனி ஒன்றில் சாஃப்ட்வேர் என்ஜினீயராகப் பணி யாற்றி வருகின்றான்.

''ஏண்டா, அப்பாவோட சேர்ந்து நம்ம கம்பெனிகளின் நிர்வாகத்தைப் பார்த்துக்கக்கூடாதா? எவனோ ஒரு மூணாம் மனுஷனுக்கு உன்னோட உழைப்புப் பயன்பட ணுமா?... அக்ஷரா சீக்கிரம் கல்யாணம் பண்ணிட்டுப் போயிடுவா! ஆண் பிள்ளை நீ தானே நிர்வாகத்தை ஏத்துக்கிட்டு அப்பாவோட சுமையை இறக்கி வைக் கணும். அவருக்கும் வயசாகிட்டே போகுது! லேடீஸ் கிளப்புலே எல்லாரும் இதைப் பத்தி தாண்டா என் கிட்ட கேக்கறாங்க! பேசாம அந்த வேலையை முழுக்குப் போட்டுட்டு நம்ம கம்பெனிகளைக் கட்டிக் காப்பாத் துப்பா!'' அம்மா சொர்ணம் எத்தனையோ முறை கெஞ்சி மன்றாடிப் பார்த்து விட்டாள்.

''அம்மா! கம்ப்யூட்டர்லே நிறைய சாதிக்கணும்னு ஆசை! நமக்கு இருக்கற அத்தனை கம்பெனிகளும் அப்பாவோட உழைப்புல உருவானது இல்லையா? இப்போ நான் ஒர்க் பண்ற கம்பெனியிலே நான் உருவாக் கிற பிராஜெக்ட்டுக்கு நல்ல வரவேற்பு இருக்கு.

''இந்தியாவில் மட்டுமில்லாம... சிங்கப்பூர், மலேசியா, ஜப்பான், ஜெர்மனி நாடுகள்லே கூட அதே ஆபீஸ் இருக்கு. நல்ல டேலண்டான கைய் அப்படிங்கிறதால வெளிநாட்டுல இருக்கற ஆபீஸ்கள்லே இருந்து, பிராஜெக்ட் ப்ரிப்பேர் பண்றதுக்கு எனக்கு அழைப்பு விடுக்கிறாங்க.

''எனக்கும், மரியாவுக்கும் இந்த மாதிரி அரிய வாய்ப்பு கிடைச்சதைப் பத்தி... நிறைய பேருக்கு வயித்தெரிச்சலா



இருக்கும்மா... சர்வதேச அளவுல எனக்குப் பேர் கிடைச்சா. உனக்குத்தானம்மா பெருமை? எனக்குன்னு பேரை உருவாக்கிட்டு வரேன். ஃப்யூச்சர்லே பெரிய அளவுல ஒரு கம்பெனி உருவாக்குவேன். அது உலக அளவுலே பேசப்படணும். இதுதான் என்னோட லட்சியம்! அதுக்குத் தடை சொல்லாதம்மா... ப்ளீஸ்!

''நம்ம கம்பெனிகளோட நிர்வாகத்தை நான் எப்ப வேணாலும் ஏத்து நடத்தலாம்மா! அதுல எந்தப் பிரச்சனையும் இல்ல... மத்தபடி நீ கிழிச்ச கோட்டை நான் தாண்டவே மாட்டேன்மா. நான் என்னிக்கும் உன் பிள்ளை தான்!''

தணிவான குரலில் பவ்யமாய் ஆனந்த் கெஞ்சியபோது சொர்ணத்திற்கு உள்ளூரப் பெருமிதமாய் இருந்தது.

மனதில் மகிழ்ச்சிப் பிரவாகமெடுத்தது. சொர்ணத் திற்குத் தலை கால் புரியவில்லை. பணக்காரத் தோழி களிடம் நேரிலும் போனிலும் வாய் சளைக்காமல் பீற்றிக் கொண்டாள். ஆனால் அதே சமயத்தில் உள்ளத்தின் மூலையில் 'நெருஞ்சி முள்ளாய்' ஒரு விஷயம் உறுத்திக் கொண்டிருந்தது.

ஆளப்பிறந்த ஆண் வாரிசு ஆனந்த் அடிக்கடி உச் சரிக்கும் திருநாமம் அவளது அடி வயிற்றைக் கலக்கியது. 'மரியா! கிறிஸ்டியன் பெயராக இருக்கிறதே! இருவரும் சேர்ந்து வெளிநாடுகளுக்குப் பயணிப்பதாகக் கூறுகின் றான்?'

சொர்ணம் அடிமட்டத்திலிருந்து வந்தாலும்... வசதி வாய்ப்புகள் குவிந்த பின்பு ராயல் சொஸைட்டிக்கே உரிய குணாதிசியங்களோடு வலம் வர பிரயத்தனப்பட்டாள்.

ஆணும், பெண்ணும் பழகினால் அதை சகஜமாக எடுத்துக் கொள்ளும் மனப்பக்குவத்தை வளர்த்துக் கொண்டாலும், உள்ளூர இருந்த ஒரிஜினல் சொர்ணம் அவ்வப்போது எட்டிப் பார்த்தாள்.

'இது சரியல்ல. விஷயம் முற்றிப் போவதற்குள் முடி வெடுக்க வேண்டும்' என்று அவளது மூளை அதி தீவிர மாகச் சிந்தித்தது.

''தோ... பாருங்க! ஆனந்துக்கு சீக்கிரம் கல்யாணத்தை நடத்திடணும். நம்ப அந்தஸ்துக்கும், கவுரவத்திற்கும் ஏத்த இடமா... தரகரைப் பாக்கச் சொல்லுங்க. இன்னிக்கு லேடீஸ் மீட்டிங்கை ஹோட்டல் தாஜ்ல வைச்சிருக்கோம். நா மீட்டிங் முடிச்சுட்டு வர லேட்டாயிடும்! சீக்கிரம் சாப் பிட்டுட்டு தூங்குங்க!'' கணவனுக்கு 'செல்லில்' உத் தரவுகளைப் பிறப்பித்து விட்டு, விலையுயர்ந்த பட்டுச் சேலை சரசரக்க காரில் ஏறி அமர்ந்தாள் சொர்ணம்.

அந்த லேடீஸ் மீட்டிங்கில் சக உறுப்பினர் கோமதி ராஜேந்திரன் இவளை வம்புக்கிழுத்து விட்டாள்.

''ஹூம்! சோஷியல் சர்வீஸைப் பத்தி திருமதி. சொர்ணம் விஸ்வநாதன் ரொம்ப அழகாப் பேசினாங்க. புவர் பீப்பிளுக்கு ஏதாவது செய்தே ஆகணும்னு தீவிரமா பேசி நம் உடம்பைப் புல்லரிக்க வச்சிட்டாங்க. பேர் வாங்கறதுக்கும், கைதட்டல் வாங்கறதுக்கும் இப்படிப் பேசறாங்கன்னு நான் நினைக்கிறேன்'' காட்டமாகக் கூறி விட்டாள்.

''கை தட்டலுக்கு மயங்கி.. வேணும்னே பேசறவ நான் இல்ல! எனக்கு உண்மையான அக்கறை இருக்கு. நான் எப்படி நிரூபிக்கிறதுன்னு நீங்க எல்லாம் திருமதி. கோமதி



ராஜேந்திரன் கிட்ட கேட்டுச் சொல்லுங்க'' ஏதோ ஒரு உத்வேகத்தில் மைக்கிலேயே சவால் விட்டு விட்டாள் சொர்ணம்.

''சாப்பாட்டுக்கே வக்கில்லாத ஒரு ஏழைப் பொண்ணை கட்டின புடவையோடு உங்க வீட்டு மருமக ளாக்க... சம்மதிப்பீங்களா சொர்ணம் விஸ்வநாதன்? பதிலை மைக்கிலேயே சொல்லிடுங்க!'' நக்கலாகப் பேசிவிட்டு அமர்ந்து விட்டாள்.

அளவுக்கு அதிகமாக நன்கொடை வழங்கி பெருமை பொங்க உலா வரும் சொர்ணத்தின் மீது அவளுக்கு அப்படியொரு வயிற்றெரிச்சல். வசமாக சபை ஜனங் களுக்கு மத்தியில் அவளை மாட்டி விட்டு, குரூர திருப்தி யுடன் பெருமூச்சு விட்டாள்.

சொர்ணத்திற்கு அந்த ஏ.ஸி. ஹாலிலும் குப்பென்று வியர்த்து விட்டது. பணக்கார சீமாட்டியாகப் பார்த்து சீமந்த புத்திரனுக்குக் கட்டி வைக்க வேண்டும் என்று கனவு கண்டவளுக்கு... தலையில் இடி விழுந்தது போலிருந்தது. கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டு விட்டது.

பாதிப்பேர் சொர்ணத்தின் சார்பிலும், பாதிப்பேர் கோமதியின் சார்பிலும் கத்தி வாதாட ஆரம்பித்தனர். தலைவியும், செகரட்டரியும் சொர்ணத்தையே கூர்ந்து பார்க்கவும் வேறு வழியின்றி... 'இது மிகப்பெரும் கௌரவப் பிரச்சனை. ஊர்ப் பெருமைக்காக தயாள மனத்துடன் நடந்து கொள்ள வேண்டியதுதான்!'

'சமூக சேவையைப் பத்தி பேசினது தப்பா போச்சே!' உள் மனது அழுது புலம்பியது. கைதட்டல் பெற வேண் டும் என்று அவள் அளவுக்கு அதிகமாகவே... அன்று பேசி விட்டாள்.

அதுதான் சொர்ணத்தை இக்கட்டில் மாட்டி வைத்து விட்டது. பயத்தில் தொப்பலாக நனைந்து விட்டிருந்தாள். முகத்தில் வழிந்த வியர்வையைத் துடைக்கக் கூடத் தோன்றாமல், நிமிர்ந்து கோமதியை நேர்ப்பார்வை பார்த்தாள்.

''நான் என்னோட கொள்கையிலே உறுதியாத்தான் இருக்கேன். இவ்ளோ பேசறீங்களே... அந்த மாதிரி பொண்ணைக் காட்டுங்க. மேள தாளத்தோட அவளை என் மருமகளாக்கிக் காட்டறேன்!'' சொல்லி முடிப்பதற்குள் நா உலர்ந்து போனது. உடலும், மனமும் தளர தொப்பென்று அமர்ந்து கொண்டாள்.

கண்ணாடிக் கோட்டையில் கல்லெறிந்தாற்போல்... சொர்ணத்தின் கனவு நிமிட நேரத்தில் தூள் தூளாகச் சிதறியது. பொங்கி வந்த கண்ணீரை சிரமப்பட்டு அடக்கி இயல்பாக இருப்பது போல் பாவனை செய்தாள். பலத்த கரகோஷத்தில் அந்த அரங்கமே அதிர்ந்தது.

''என்னோட டிரைவர் பேமிலியோட எங்க அவுட் ஹவுசிலே தான் இருக்கான். அவனோட அண்ணன் பொண்ணு விபத்துல பெத்தவங்களைப் பறி கொடுத்துட்டு அனாதரவா இருக்காள்னு இவனே அழைச்சுட்டு வந்துட்டான். டிரைவர் கந்தசாமியோட மனைவி குணம் கெட்டவ. அந்தப் பொண்ணைக் கரிச்சுக் கொட்டி படாதபாடு படுத்தறா. அனாதைப் பொண்ணு. பாவம்! போக்கிடமில்ல. எனக்கு இரண்டே பெண்கள். எனக்கு மட்டும் பிள்ளை இருந்திருந்தா நானே அவளை மருமகளாக்கியிருப்பேன்'' அமர்த்தலாக பதிலளித்து விட்டு அமர்ந்தாள் கோமதி.



''சரி! வர்ற முகூர்த்தத்திலேயே கல்யாணத்தை நடத்தி அவளை எங்க வீட்டுக்கு அழைச்சுட்டுப் போறேன்!'' சொர்ணம் ஜம்பமாகப் பேசி விட்டாளே தவிர தன் மனக் கோட்டை திடீரென்று சரிந்து விட்டதில் உள்ளுக்குள் கிளம்பிய ஆங்காரமெல்லாம் ஒன்றுமறியா அப்பாவிப் பெண் கங்காவின் மீது திரும்பியது.

சொர்ணத்தின் வாய்ச் சவடாலால் திடீர் திருப்பம் ஏற்பட்டு அதுவரை நாதியற்று நின்றிருந்த கங்கா அந்த பங்களாவுக்குள் மருமகளாக அடியெடுத்து வைத்தாள்.

## 4

ஆனந்த் எதையாவது சாதிக்க வேண்டும் என்ற லட்சிய வெறி கொண்ட இளைஞன். கம்ப்யூட்டர் முன் அமர்ந்து விட்டால் அவ்வளவுதான். 'தவுசண்ட் வாலா' சரவெடியைப் பற்ற வைத்து வெடிக்கச் செய்தால் கூட திரும்பிப் பார்க்க மாட்டான்.

அவனது லட்சியத்தில் மண்ணள்ளிப் போடும் விதமாக சொர்ணம் செய்த செயல் விரக்தியடைய வைத்தது.

''என்னம்மா இது? மீட்டிங்லே யாரோ வம்பு பிடிச்ச லேடி... உங்களை டீஸ் பண்ணிட்டாங்கிற காரணத்துக்காக உண்மையிலேயே கல்யாணம் வரைக்கும் போக

ணுமா? யாரோ என்னவோ உளறிட்டுப் போகட்டும்! கண்டுக்காதேம்மா... எஸ்! யூ ஜஸ்ட் இக்னோர் இட்!''

''டேய் நான் வெளிய தலை காட்டவே முடியாதப்பா! எல்லா மெம்பர்ஸும் கை கொட்டி சிரிப்பாங்க. இப்படி யோசிச்சுப் பாரேன். இவ்ளோ சொத்து பத்து இருந்தும் ஒரு வக்கத்த பொண்ணைக் கட்டிக்கிட்டா... அது நமக்குத் தானே பெருமை? நம்ம பெருந்தன்மையை நாலு பேர் புகழ்ந்து பேசுவாங்க. இதுக்கு நீ சம்மதிக்காட்டி என்னோட கவுரவமே போயிடும்.

''அப்புறம் நான் உயிரோடவே இருக்க மாட்டேன். இது வெறும் வாய் வார்த்தைக்குச் சொல்லலை! இதோ பாரு!'' தேம்பியழுது கொண்டே இடுப்பில், புடவை மறைப்பில் சொருகி வைத்திருந்த 'பாய்ஸன்' பாட்டிலை எடுத்துக் காட்டினாள்.

ஆடிப்போய் விட்டான் ஆனந்த். அம்மாவின் குணத்தை நன்கு அறிந்தவன் தான் என்றாலும் சொர்ணம் இந்த அளவுக்குப் போவாள் என்று அவன் எதிர்பார்க்க வில்லை. அவள் வீம்புக்காரி! பிறத்தியாரின் பேச்சுக்கும், புகழுரைக்கும் தான் செவி மடுப்பாள்.

அப்பா விஸ்வநாதனை ஏறிட்டான். தனக்கும் இதற் கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பது போல் விட் டேற்றியாக... தங்க பிரேமிட்ட கண்ணாடியைக் கழற்றி, இல்லாத தூசியை கவனமாக துடைத்துக் கொண்டிருந் தார்.

அவரிடம் எந்த சகாயத்தையும் எதிர்பார்ப்பதில் பயனில்லை என்று புரிந்தது. மனைவிக்கு மண்டியிட்டு சலாமடிப்பவர். மகனுக்கு பரிந்து பேசுவார் என்று நம்புவது



முட்டாள் தனம். இதுவும் தவிர ஆனந்த் உண்மையில் தாயைப் போற்றும் தனயன்.

''அம்மா ஒன்று கிடக்க ஒன்று செய்து விட்டால்...?'' பதை பதைத்துப் போனான். வேறு வழியின்றி சம் மதித்தான். அதற்குப் பின் நடந்த அனைத்தும் கனவு போன்றிருந்தது.

முதலிரவு அறை! பால் டம்ளரைக் கையிலேந்தி அறைக்குள் மெல்ல வந்த கங்கா தயங்கித் தயங்கி இவன் அருகில் வந்தாள். டம்ளரை சிறு மேசையில் வைத்து விட்டு அவனது கால்களில் விழுந்து நமஸ்கரிக்க முயன் றாள். சட்டென்று கையை உயர்த்தித் தடுத்தான் ஆனந்த்.

''ஷிட்! இதெல்லாம் எனக்குப் பிடிக்காது!''

''மு... முதன் முதலா வாழ்க்கையைத் தொடங்கறதுக்கு முன்ன... க... கணவரோட காலைத் தொட்டு வணங்கறது சம்பிரதாயம்!'' மெல்லிய குரலில் பேசிய கங்காவை அப்போதுதான் நன்றாக கவனித்தான்.

மாநிறம், நடுத்தர உயரம், கட்டான உடல்வாகு, பன்னீர்ப் பூவைப் போன்ற மூக்கு. மெல்லிய அதரங்கள், சிறிய கண்கள்... அந்த விழிகளில் தேங்கியிருந்தது சோகமா, ஏக்கமா என்று தெரியவில்லை. ஆனாலும் இயற்கையாக வளைந்த புருவங்களோடு பளிச் என்று தான் இருந்தன. அபரிமிதமான பேரழகு என்று இல்லாவிட்டாலும் பார்க்க பதவிசாக களையாகத்தான் இருந்தாள்.

''பச்! பாழாய்ப் போன சம்பிரதாயத்தைப் பத்திப் பேசாதே!'' எரிச்சலுடன் கட்டிலின் மேல் அலங்காரமாகத் தொங்க விடப்பட்ட பூச்சரத்தைப் பற்றி அறுத்தெறிந்

தான். தங்கை அக்ஷரா அவனைத் திட்டித் தீர்த்தது... இன்னமும் காதுகளில் ரீங்காரமிட்டுக் கொண்டிருந்தது.

''பூ... கவர்ட்! தொடை நடுங்கி! சுயமா சிந்திக்கவே மாட்டியாண்ணா? ரீசண்டா... அம்மா, கருணாகரன் மாமாவோட பேமிலிக்கு ஹெல்ப் பண்றாங்க. மாமாவோட டாட்டர் சம்யுக்தாவை நீ நேர்ல பாத்துருக்கே. அவ எந்த காலேஜுல படிக்கிறாள்னு எங்கிட்ட விசாரிச்சே? அடிக்கடி அவளைப் பத்தி ஏதாவது விசாரிப்பியே? உன் மனசுல அவ இருக்கிறா... அவளை நேசிச்சே. அது தான் நிஜம்!

''இந்த விஷயத்தை சந்தர்ப்பம் வரும்போது அம்மா கிட்ட வெளிப்படையா நீ பேசுவேன்னு எதிர்பார்த்தேன். ஊமை கனவு கண்டாப்பல அந்த விஷயம் உன் அடி மனசுக்குள்ளே சமாதியாயிடிச்சு! ஊர்ப் பெருமைக்காக சவாலை நிறைவேத்துறேன்னு மூணாம் மனுஷியை இப்போ உன் தலைலே கட்றாங்க பாத்தியா? இப்பவும் கடப்பாரையை முழுங்கிட்டு கம்முனுதான் இருக்கே?

''சர்வதேச அளவுல உன் திறமைகள் பாராட்டப் பட்டாலும்... நீ இன்னமும் அம்மாவோட முந்தானை யிலே மூஞ்சிய மறைச்சுக்கற கோழைதான். ஆம்பளையா, லட்சணமா எப்போ தான் கம்பீரமா உன் இஷ்டப்படி நடந்துக்கப் போறியோ? இதுல என்ன ஒரு ஆறுதல்னா... புவர் கேர்ள்க்கு வாழ்க்கை கொடுக்கறே. அதான்! உண்மையான நேசத்தோட அன்போட அவங்களை அரவணைச்சுக்கோ! அவ்ளோ தான் நான் சொல்வேன்.''

ஹை ஹீல்ஸ் டக் டக் என்று ஒலியெழுப்ப கோபமாக எழுந்து சென்றாள் அக்ஷரா.



''இந்தப் பாலையாவது குடிச்சிட்டு...'' கங்காவின் மிருதுவான குரல் அவனைக் கலைத்தது.

அக்ஷராவின் பேச்சிலிருந்த உண்மை, அவனது நெஞ்சில் முள்ளாக உறுத்தியது. ''இவள் என் மனைவி! சுகத்திலும் துக்கத்திலும் பங்கெடுக்க வந்த சக தர்மிணி! கோப தாபங்களையும், எரிச்சலையும் இவள் மேல் காட்டுவது சரியல்ல. படித்த படிப்புக்கும் அது அழகல்ல!' நிமிட நேரத்தில் இத்தனையும் அவன் மனதில் மின்ன லெனத் தோன்றி மறைந்தது.

''எதிர்பார்க்காத தருணத்துல... 'சடன்'னா இந்த மேரேஜ் நடந்ததால... அப்செட்டா இருக்கு. ஐ நீட் சம் டைம்! எனக்குன்னு ஒரு டார்கெட் வெச்சிருக்கேன். அச்சீவ் பண்ணி முடிச்சாத்தான் என்னால இந்த லைப்ல கான்செண்ட்ரேட் பண்ண முடியும்!'' கறாராகக் கூறிவிட்டு தலையணை, பெட்ஷீட்டை எடுத்துக் கொண்டு நகர முயன்றான்.

''இந்த பெட்ரூமை ஒட்டியிருக்கற... இந்த ரூம்ல என்னோட ஆபீஸ் வேலைகளை... கம்ப்யூட்டர் எல்லாம் இருக்கு. நா அங்க... அங்க படுத்துக்கறேன்!'' வார்த்தை கள் தட்டுத் தடுமாறி வெளிவந்தன.

அட்டாச்ட் பாத்ரூமுடன் கூடிய விஸ்தாரமான படுக்கையறை அது. வலது பக்கச் சுவரையொட்டியுள்ள கதவைத் திறந்தால்... அவனது அலுவலக அறை! அதற்குள் அவன் நுழைய முற்படுகையில்... கங்காவின் குரல் இடைமறித்தது.

''கொஞ்சம் நில்லுங்க! பணத்துலேயே பிறந்து வளர்ந் தவர் நீங்க. ஆயிரம் ஆசைக் கனவுகள் உங்களுக்கு

இருந்திருக்கும். அதையெல்லாம் கலைச்ச பாவம்... எனக்கு! எல்லாம் என்னால தான்! நிம்மதியிழந்து தவிக்கிற உங்க மனசுக்கு... மேற்கொண்டு எந்தவித சங்கடத்தையும் நான் ஏற்படுத்த மாட்டேன். தயவு செய்து நீங்க உ... உங்க கட்டில்லேயே படுங்க. நான் உங்க கண்ணுல படாம ஓரமா இங்க எங்கயாவது படுத்துக் கறேன். இ... இந்தப் பாலை சாப்பிடுங்களேன்'' நா தழுதழுக்க கங்கா வேண்டியபோது அவனால் மறுக்க முடியவில்லை. பாலை அருந்தி விட்டு தனது கட்டிலில் சாய்ந்து படுத்தான்.

அந்த அறையின் மறுகோடியில் பால்கனிக்குச் செல் லும் கதவு சாத்தப்பட்டிருந்தது. அந்தக் கதவருகே தலை யணையைப் போட்டு கங்கா, சுவரோரமாக கதவைப் பார்த்தபடி படுத்துக் கொண்டாள். ஆறு மாதங்களாக இதே நிலைதான்!

வலது கையை மடித்து தலைக்கடியில் வைத்து வழக்கம் போல் கண்ணீர் உகுத்தாள். சதா இறுகின முகத் தோடு வளைய வரும் ஆனந்தைக் காணும்போது நெஞ்சைக் கசக்குவது போன்ற வேதனைக்கு ஆட்படு வாள். அந்த வீட்டில் அவள் அடியெடுத்து வைத்ததும் சமையல்காரிக்கு செட்டில்மெண்ட் கொடுத்து அனுப்பி விட்டாள் சொர்ணம். மூன்று வேளைக்கும் விதவிதமான மெனுக்களை செய்யும்படி கங்காவுக்கு உத்தரவிடுவாள்.

சுவையும், மணமுமாகச் சமைப்பதில் கங்கா கெட்டிக் காரி! கண்ணும் கருத்துமாகச் சுவைபட சமைத்துப் போட்டாள். அந்த பங்களாவில் சுற்று வேலை செய்யும் அஞ்சலையும், தோட்டக்கார முனியனும் கணவன், மனைவி என்பதால் வீட்டோடு அவுட் ஹவுஸில் தங்கி



இருந்தனர். அதிலும் சொர்ணம் வேலைக்காரர்கள் எதிரில் கூட கங்காவை வசை பாடத் தயங்குவதில்லை. கங்காவைக் காணும் போதெல்லாம் கரித்துக் கொட்டி னாள்.

அந்த வீட்டில் கங்காவுக்கு இருந்த ஒரே ஆறுதல்... அக்ஷராதான்!

''அண்ணி! அண்ணி! இன்னக்கி காலேஜுல ஒரு கூத்து நடந்துச்சு தெரியுமா? உங்ககிட்ட சொல்லணும்னு ஓடி வந்தேன். சரியான காமெடி தெரியுமா?'' கங்காவை அழைத்து அருகில் அமர்த்திக் கொண்டு கலகலப்பாகப் பேசுவாள். அக்ஷராவிடம் பேசும்போது கங்காவின் மனதில் உள்ள சூன்யமும், பாரமும் நீங்கியது போல் இதமாக ஆறுதலாக இருக்கும். இதயத்திலுள்ள கனம் குறைந்து இறகு போல் லேசாகும்.

கால்களில் சக்கரத்தைக் கட்டிக் கொண்டு பறக்கும் மாமனார் விஸ்வநாதன் எதிர்ப்படும் தருணங்களில் மட்டும் இதமாகப் பேசி புன்னகைப்பார். ஆனந்த் அடிக்கடி வெளி மாநிலங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் பறந்து கொண்டிருந்தான். அவனில்லாத சமயங்களில்... அந்த விசாலமான அறையில் தனித்துப் படுக்க கங்காவுக்கு பயமாக இருந்தது.

சுவர்க்கடிகாரத்தின் டிக் - டிக் என்ற சிறிய ஓசை கூட... அவளது செவிகளைப் பிளக்கும் இடியோசையாகத்தான் அவளை அச்சுறுத்தியது. லேமினேட் செய்யப்பட்ட கணவனின் சிறிய படத்தை தலைமாட்டில் வைத்து வருடிக் கொண்டு விட்டத்தை வெறிப்பாள். 'அனாதர வான பெண்ணிற்கு கணவன் தானே கடவுள்?'

ஆனந்த் அவளிடம் பாராமுகமாக நடந்து கொண்டாலும்... கங்காவுக்கு அவன் மேல் நாளுக்கு நாள் அன்பும், காதலும் கூடிக் கொண்டே போனது. ஒரு தலைப் பட்சமாக அவனை மிகவும் நேசித்தாள். அவன் அன்பிற்கு மிகவும் ஏங்கினாள்.

கடைசி வரை தன் வாழ்க்கை இப்படியே கழிந்து விடுமோ? என்று நினைக்கும் போதே கங்காவின் இதயம் தீக்கோலால் சுடுபட்டது போல் துடித்து விம்மியது.

வெகு விரைவில் அவளே எதிர்பார்க்காத சம்பவம் நடந்தேறியது. கங்காவை மரணப் பாதையில் அசுர வேகத்தில் பயணிக்க வைத்தது விதி!

## 5

சம்யுக்தா அந்த வீட்டிற்கு டியூஷன் எடுப்பதற்கு இரண்டு மாதங்களாகச் சென்று வந்தாள். தினமும் காலை ஏழு மணி முதல் ஒன்பது வரை டியூஷன்! அந்த வீடு கூட அதிக தூரமில்லை. பக்கத்துத் தெருவில்தான் இருக்கிறது. டியூஷன் முடித்து விட்டு சம்யுக்தா அப்படியே காலேஜுக்குச் சென்று விடலாம். பஸ் ஸ்டாப் கூட அதற்கு அருகாமையிலேயே அமைந்து விட்டது.

சம்யுக்தா ஆரம்பத்தில் அந்த வீட்டிற்குச் சென்று டியூஷன் எடுக்கத் தயங்கத்தான் செய்தாள். அவள் கிட்



டத்தட்ட ஒன்றரை வருடங்களாக தனது வீட்டில் அக்கம் பக்கத்து மாணவர்களுக்கு மாலை ஐந்தரை மணி முதல் எட்டு மணி வரை டியூஷன் கற்றுக் கொடுத்து வருகிறாள்.

வருமானப் பற்றாக்குறையினால் மாதந்தோறும் பட்ஜெட்டில் 'பெரிய துண்டு' விழுந்து கொண்டிருந்தது. சில சமயம் பெற்றோர்களின் நோய் தீவிரம் அடைந்து மருத்துவச் செலவு கிர்ரென்றும் எகிறும்போது 'பெரிய துண்டு'க்குப் பதிலாக சமயத்தில் பட்ஜெட்டில் 'பெரிய வேஷ்டி'யே விழுந்து தொலைக்கும்.

அந்த மாதத்தைக் கடத்துவதற்குள் 'என் பாடு உன் பாடு' என்றாகி விழி பிதுங்க நேரிட்டதால் குடும்பத்தைச் சமாளிக்க சம்யுக்தா டியூஷன் எடுக்க ஆரம்பித்தாள். அண்ணன் சந்துருவுக்கு இந்த விஷயத்தில் துளி கூட உடன்பாடு கிடையாது. வயதுக்கு வந்த தங்கை நிம்மதியாக, நிச்சலனமாக இருப்பதை விட்டு விட்டு டியூஷன் மாணவர்களுடன் தொண்டைத் தண்ணீர் வற்றக் கத்தி உழைக்கின்றாளே என்று உள்ளூர அதீத வருத்தம் தான்!

சந்துரு மட்டும் சளைத்தவனா? அவனும் சாயந்தர நேரத்தில், பஜாரில் தனக்குப் பரிச்சயமான டிபார்ட்மெண்ட் ஸ்டோரில் கணக்கு வழக்குகளைப் பார்த்து வருகிறான். அது அவனது கைச்செலவிற்கும், பிரபல நிறுவனங்களுக்கு இப்போதிருந்து வேலைக்கு அப்ளிகேஷன் போடுவதற்கும் சரியாக இருந்தது. பணம் மீதமிருந்தால் பைசா செலவழிக்காமல் அப்படியே சம்யுக்தாவிடம் கொடுத்து விடுவான். தங்கையைக் கஷ்ட நஷ்டம் தெரியாமல் பூப்போல் தாங்க வேண்டும் என்று ஏகத்துக்கும் ஆதங்கப்படுவான்.

''வயசுப் பொண்ணு... வெளியிடத்துக்குப் போய் டியூஷன் எடுக்கறது எனக்கு ரொம்ப வேதனையா இருக்கு. இந்த மாசத்தோட நிறுத்திக்கோம்மா!'' தழுதழுத் தான் சந்துரு.

''அந்த வீட்டிலே... பெரிய பொண்ணு ரஞ்சனிக்கு கால் கொஞ்சம் ஊனம். அதுக்குத்தான் நா ஒப்புக் கிட்டேன். டென்த் படிக்கிற அந்த ஊனமான பொண் ணோட எக்ஸாம் முடியறவரைக்கும் போறேன். போதுமா? பயப்படாதே சந்துரு அண்ணா!

''இன்னொரு விஷயத்தை டோட்டலா மறந்துட்டியா? நான் உன்னோட தங்கை! என்னோட மனசுக்கு உறுத்தலா ஒரு விஷயம் பட்டுச்சுன்னா... அந்த திசைப்பக்கம் தலை வச்சுப் படுப்பேனா?'' தமையனின் பாசத்தில் பாகாகக் கரைந்தாள் சம்யுக்தா.

சம்யுக்தா அதுவரை எதிர்பார்த்துக் கொண்டிருந்த பஸ் பெருங்குலுக்கலோடு வந்து சேர்ந்தது. கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்கள் பலரும் முண்டியடித்துக் கொண்டு பஸ்ஸில் தங்களைத் திணித்துக் கொண்டனர். சம்யுக்தா இடித்துப் பிடித்து ஏறினாள். ஏற்கனவே ஒரு பெருங் கும்பல் பஸ்சுக்குள் இருந்தது.

மெல்ல நகர்ந்து கம்பியருகே சென்று நின்று சாய்ந்து கொண்டாள். அண்ணா நகர் செல்ல டிக்கெட்டை வாங்கிக் கொண்டு நிமிர்ந்தவளது மனம் பாறாங்கல்லாய்க் கனத்தது. சம்யுக்தாவின் அகன்ற விழியோரங்களில் இளஞ்சூடான கண்ணீர் மெல்ல எட்டிப் பார்த்தது. தொண்டை அடைத்துக் கொண்டு வந்தது.

சம்யுக்தாவின் அருகில் நின்றிருந்த கிழவி... அவளை மூன்றாம் முறையாக உற்றுப் பார்க்கவே, சட்டென்று



சுதாரித்து தன்னை சிரமப்பட்டுக் கட்டுப்படுத்தி இயல்பு நிலைக்கு வந்தாள்.

''ஏம்மா? மணி என்னாச்சு?'' வெற்றிலைக் குதப்பிய வாயைத் திறந்து கேட்டாள் கிழவி.

''அஞ்சு மணி!'' மணிக்கட்டிலிருந்த வாட்ச்சைத் திருப்பிப் பார்த்துக் கூறினாள். அதற்கு மேல் பேச்சை வளர்க்கப் பிடிக்காமல் முகத்தை வேறு புறம் திருப்பிக் கொண்டாள். 'அத்தை சொர்ணம் இம்முறை எப்படி நடந்து கொள்ளப் போகின்றாளோ? தெரியவில்லை!' அத்தை அளவுக்கு மீறி அகம்பாவத்துடன் நடந்து கொண் டாலும், அவமானப்படுத்தினாலும் அதை ஒரு பொருட் டாகவே எடுத்துக் கொள்ள மாட்டாள் சம்யுக்தா!

சந்துரு அப்படியில்லை. 'சென்சிடிவ் டைப்.' சின்ன விஷயத்தையும் தாங்கிக் கொள்ள முடியாமல், புலம்பித் தள்ளி மாய்வான்.

''அப்பா! எனக்கு வேலை கிடைச்ச உடனே... அவங்க கடனை அடைச்சுடணும். பைசா பாக்கி இல்லாம வட்டி போட்டுக் கொடுத்துடணும் அப்பா!'' உறுதியாகக் கூறு வான். சமயத்தில் தாழ்வு மனப்பான்மையில் விரக்தி தாளாமல் பேசவும் செய்வான்.

அப்போதெல்லாம்...

''கற்கை நன்றே! கற்கை நன்றே! பிச்சைப் புகினும் கற்கை நன்றே! அப்படின்னு நாம படிச்சிருக்கோமே! அப்பா அதுக்கு எவ்ளோ அருமையா விளக்கம் சொல் வாரு. மறந்துட்டியா? கொஞ்ச நாள் பொறுமையா இருண்ணா...

''உன்னோட தகுதிக்கு ஏத்த வேலை கிடைச்சதும் அத்தையோட பணத்தை திரும்பக் கொடுத்துடலாம். அவ்வளவு தானே? அந்தக் காலத்துல அப்பா தன்னோட சேமிப்புப் பணத்தை ஒண்ணு விட்ட தங்கையைக் கரையேத்தறதுக்காக செலவு செய்திருக்காரு! அப்படிப் பார்த்தா... அத்தை நமக்கெல்லாம் செய்யறது ரொம்பக் குறைச்சல் தான்னு நான் சொல்லுவேன்!'' கூனிக் குறுகும் சந்துருவுக்கு அவளது வார்த்தைகள் ஆறுதலையும், தெம்பையும் அள்ளித் தெளிக்கும்.

பஸ் திடீரென்று சடன் பிரேக் போட்டதில், சம்யுக்தா தடுமாறி விழப் போனாள். சட்டென்று சமாளித்து நின்று கொண்டாள்.

''ஏம்மா! மேல இருக்கற கம்பியைப் புடிச்சுகிட்டா என்ன? கூட்டம் சாஸ்தியா இருக்க சரியாப் போச்சு! கூட்டம் குறைச் சலா இருந்தாக்க... சட்டுனு கீழே நீ விழுந்திருப்பேல்ல? பிரயாணம் பண்ணும்போது கவனமா இருக்கணும்.''

''ஹூம்! வேற ஏதோ நெனப்புல இருந்தாக்க, இப்படித்தான்! இந்தக் காலத்துல பொண்டு புள்ளைங்க காதல் ஊதல்னு சதா வேற நினைப்புல இருந்து பொழைப்பக் கெடுத்துக்கிடுதுங்க! அந்த நாள்ல... நாங்கெல்லாம் சூரிய வெளிச்சத்தைப் பாத்துருப்போமோ? ஹூம்! காலம் ரொம்பவும் கெட்டுப் போச்சு! அதான் சுனாமி சூறாவளி பூகம்பம்னு உருவாகுது'' அந்த வம்பு பிடித்த கிழவி தனது 'ஏழுகட்டைக் குரலில் மூச்சு விடாமல் அங்கலாய்த்தாள்.

குப்பென்று சம்யுக்தாவுக்கு முகமும், காது மடல்களும் சிவந்து போயின. கீழுதட்டை சட்டென்று கடித்துக் கொண்டாள்.



'அம்மாடி! கிழவி லேசுப்பட்டவள் அல்ல! பயங்கர மான கில்லாடி தான். முன்பின் தெரியாத தனது மன வோட்டத்தைப் பற்றி படம் பிடித்தது போலல்லவா சொல்லி விட்டாள்! படிப்பறிவில்லாத பாமரக் கிழவிக்கு என்ன ஒரு மதியூகம்?' உள்ளூர வியந்து போனாள்.

மீண்டும் முகத்தை வேறுபுறம் திருப்பிக் கொண்டாள். 'ஆம்! காதல் தான்... ஆனால் அது கை கூடவில்லையே! அவள் உள்ளத்தில் மொட்டவிழ்ந்து காதல் மலர்ந்தது உண்மைதான்! இரு வருடங்களுக்கு முன் இவளுக்குள் மலர்ந்த காதல்... அவனுக்குள்ளும் மலர்ந்ததா என்றே தெரியவில்லையே?

'அவள் இதயத்தில் இடம் பிடித்த அருமைக் காதலன் தற்போது வேறொருத்திக்கு சொந்தமாகி விட்டானே? காதல் தோல்வியடைந்து விட்டதே? இது ஒரு தலைக் காதல்தான்! ஏழையாகப் பிறந்து விட்டால்... ஒரு பெண் அறிவும், அழகும் ஒருங்கே பெற்றவளாக இருந்தாலும்... தன் மனதில் ஊற்றெடுத்த அன்புணர்வை அடியோடு புதைத்துச் சமாதி கட்டிவிட வேண்டியதுதான்!

'எட்டாத கனிக்கு ஆசைப்படுவது முட்டாள்தனம் தான்! காதலுக்குக் கண்ணில்லை என்பது வாஸ்தவம் தான்! ஏணி வைத்தாலும், எட்டாத உயரத்திலிருக்கும் வாலி பனைப் பேதை மனம் விரும்பித் தொலைத்து விட்டதே...'

கிடைக்காத பொருளுக்கு ஆசைப்படுபவள் அல்ல சம்யுக்தா! 'விரலுக்கேத்த வீக்கம்! தகுதிக்கேற்ற தாரம்' என்று நடைமுறை வாழ்க்கையின் யதார்த்தத்தைப் புரிந்து கொண்ட புத்திசாலிதான் அவள்...

அவளின் அனுமதியின்றி அவள் இதயக் கதவுகள்... அந்த வாலிபனைக் குடியேற்றி சிறைப்படுத்தியது நிஜம்!

அவன் வேறு யாருமல்ல... சொர்ணத்தின் சொத்தை ஆளப் பிளந்த ஆனந்த் தான். வீணாக ஆசை வைத்து விரக்தியடைந்தது தான் மிச்சம்!'

இதயத்தில் ஆயிரம் அம்புகள் ஒரு சேரப் பாய்ந்தது போல் வேதனையில் துடித்துப் போனாள் சம்யுக்தா.

## 6

பேருந்தை விட்டிறங்கி அத்தை சொர்ணத்தின் பங்களாவை நோக்கிச் சென்றாள் சம்யுக்தா. அடுத்த வளைவில் திரும்பி நேராக நடந்து வலது பக்கம் திரும்பி னால் அந்த பங்களா வந்து விடும். ஒரு தெருவையே வளைத்துப் போட்டு காம்பவுண்ட் சுவர் கட்டி பாது காப்பாக நட்ட நடுவில் அமைந்திருந்த பிரமாண்டமான பங்களா! நீச்சல் குளமும், டென்னிஸ் கோர்ட்டும் இல்லாவிட்டால் கவுரவமில்லையே! அதுவுமிருந்தது.

பங்களாவைச் சுற்றி நந்தவனம்! நாலைந்து நாய்களை சங்கிலியால் கட்டி அவை இழுத்த இழுப்பிற்கெல்லாம் வாக் போயினர் தோட்டக்காரனும், வாட்ச் மேனும். சம்யுக்தாவின் தேய்ந்து போன செருப்புகள் பட்டு புற்கள் அமிழ்ந்தன. தயக்கமாய் நடந்தாள். இவளைப் பற்றி நன்கறிந்திருந்ததால்.... மறு பேச்சின்றி அனுப்பி வைத் தனர்.



பலமுறை பார்த்திருந்தாலும் பங்களாவின் உட்புற அமைப்பு இன்றைக்கும் அவளுக்குத் திகைப்பைத் தந்தது. இன்டீரியர் டெகரேஷனுக்கு மட்டும் பல லட்சங்கள் செலவாகியிருக்கும். அவ்வளவு நளினம். கலை நயமிக்க வேலைப்பாடுகள். வட்ட வடிவ சோபாவில் தனது கனத்த சரீரம் புதைய சொர்ணம் அமர்ந்திருந்தாள்.

ஏகப்பட்ட சவரனில் பளபளத்த கனத்த அட்டிகை, இரு கைகளிலும் டஜன் கணக்கில் டாலடித்த கல் பதித்த வளையல்கள், காதுகளில் வர்ண ஜாலம் காட்டிய வைரத் தோடுகள் கம்பீரத்தைக் காட்டிக் கொடுக்கும் கண்ணாடி என்று மிடுக்காக அமர்ந்திருந்தாள்.

''வணக்கம் அத்தே!'' கை கூப்பினாள். ''சவுக்கியமா இருக்கீங்களாத்தே?''

''ம் ம்! அதெல்லாம் இருக்கட்டும். பணத்தை வாங் கிக்கோ முதல்லே. பணங்காசு இனாமா கிடைச்சா. அதோட மதிப்பை யாருமே உணர மாட்டாங்க. ரொம்ப நெருங்கின சொந்தம்கிறதால நான் பரிதாபப்பட்டு உதவறேன். அக்கறையா படிச்சு நல்ல வேலையைத் தேடிக்கோங்க. உன் அண்ணன் கிட்ட சொல்லி வை!'' அதட்டினாள்.

சம்யுக்தாவுக்கு 'சுருக்' 'சுருக்' என்று நெஞ்சில் முள் குத்தியது. ''நெருங்கின சொந்தமா? இனாம்! இந்தப் பணத்தை நீங்கள் ஒன்றும் இனாமாகத் தர வேண்டாம். இதை நாங்கள் கடனாகத் தான் பாவிக்கிறோம். படித்து முடித்து வேலை கிடைத்ததும், வட்டியும் முதலுமாகத் தந்து விடுகிறோம் அத்தே!'' என்று சொல்லிவிட அவளது நாக்குத் துடித்தது. கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

'நுணலும் தன் வாயால் கெடும்!' என்ற பழமொழியை இவள் நன்கறிவாள். இந்நேரம் சந்துரு வந்திருந்தால் இவளைப் போல் வாய் மூடி மவுனியாக இருக்கவே மாட்டான். அதிகார அதட்டலுக்கும், ஏளனப் பேச்சுக்கும் சுடச்சுட பதில் கொடுத்திருப்பான்.

''பெரிசா ஆகாசத்துலேர்ந்து குதிச்சு வந்துட்ட மாதிரி பேசறீங்களே? தனக்குன்னு எந்த சேமிப்பும் வச்சுக்காம, தன் சக்திக்கும் மீறி ஒண்ணு விட்ட தங்கையான உங்களுக்கு சீர் செனத்தி செஞ்சு கரையேத்தினாரே... எங்க அப்பா? அதெல்லாம் மறந்துட்டீங்களா அருமை அத்தே!'' நாக்கைப் பிடுங்கிக் கொள்ளும்படி சந்துரு கேட்டு விட்டிருப்பான். சம்யுக்தாவின் இதழ்க்கடையில் குறுநகை பூத்தது.

''என்ன?... பதிலையே காணோம்? சிரிச்சுட்டு நிக்கறே?''

''இ... இல்ல அத்தே! அண்ணா கிட்ட கண்டிப்பா சொல்றேன் அத்தே!'' பவ்யமாகக் கூறினாள் சம்யுக்தா. அவள் வாய்க்கு வாய் 'அத்தை' 'அத்தை' என்றழைப்பதை சொர்ணம் அடியோடு வெறுத்தாள்.

''சரி, சரி! பணத்தை பத்திரமா பேக்லே வெச்சுக்கோ!'' வந்த வேலை முடிந்து விட்டதே... சீக்கிரம் இடத்தைக் காலி பண்ணு'' சொர்ணத்தின் கண்கள் சொல்லாமல் சொல்லியதைப் புரிந்து கொண்டாள் சம்யுக்தா.

''மிக்க நன்றி, நான் வரேன் அத்தே'' மீண்டும் கை கூப்பி வணங்கி விட்டு நடந்தாள்.

சொர்ணத்தின் மனம் எரிமலையாய் குமுறிக் கொண்டிருந்தது.



''ச்சே! எல்லாம் அந்த கோமதி ராஜேந்திரனால் வந்த வினை! கிளப் மெம்பர்ஸ் முன்னாடி ஒரு நாள் என்னோட பழைய கதையைக் கிளறியதால் வந்த பிரச்சனை!'' கோபத்தில் சோபாவில் ஓங்கிக் குத்தினாள்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ஏதோவொரு வி.ஐ.பி. யின் திருமண வரவேற்பில் அனைவரும் கலந்து கொண்டனர். கல்யாண மண்டபத்தை கலகலக்க வைத்துக் கொண்டிருந்தனர்.

''சொர்ணம்! உன்னோட புது வைர அட்டிகை அபாரமா இருக்கு!'' தோழி தெய்வானை புகழாரம் சூட்டினாள்.

''சொர்ணம் எதை வாங்கினாலும்... ஒரு தினுசாத்தான் இருக்கும். அப்படியொரு அழகு. நேர்த்தி. அது லேசுல யாருக்கும் வராது'' பாராட்டுப் பத்திரம் வாசித்தாள் பங்கஜம். எதிரில் அமர்ந்திருந்த கோமதி ராஜேந்திரனுக்குப் பற்றிக் கொண்டு வந்தது.

''இருங்க! விதவிதமா நகையும், புடவையும் வாங்கி அலங்கரிச்சுக்கிட்டு... அழகா வளைய வராங்க. நான் ஒத்துக்கறேன். இவங்களோட ஒண்ணு விட்ட அண்ணன். பாவம் ஸ்கூல் டீச்சராம்! கஷ்ட ஜீவனம் நடத்தறாராம். ஒரு காலத்துல தன்னோட கையிருப்பைப் போட்டு திருமதி சொர்ணத்துக்கு கல்யாணம் பண்ணி வச்சிருக்கார். இப்போ கைக்கும் வாய்க்கும் பத்தாம அவரோட குழந்தைங்க மேற்படிப்பு படிக்க திண்டாடுதுங்க.

''இன்னிக்கு மட்டும், நகையுமா படாடோபமுமா உலாவுறாங்களே அதுக்கு சூத்ரதாரியே அந்த அண்ணன்தான்! அதப்பத்தி என்னைக்காவது திருமதி. சொர்ணம் நினைச்சுப் பார்த்தாங்களா? மிசஸ். பங்கஜம், சொர்ணத்

தோட விசாலமான மனசையும், தயாள குணத்தையும் சேத்து வச்சுப் பாராட்டுங்களேன்!'' கணீரென்று பழைய கதையைப் போட்டு உடைத்து எள்ளி நகையாடி விட்டாள்.

யார் மூலம் இந்த விவரத்தைத் தெரிந்து கொண்டாளோ... தெரியவில்லை! அவமானத்தில் உடம்பெல்லாம் திகுதிகுவென்று பற்றி எரிந்தது போலிருந்தது. கூசிப் போனாள் சொர்ணம்.

இந்த சம்பவத்திற்கு அப்புறம் தான் கருணாகரனின் பிள்ளைகளுக்கு திடீரென்று உதவ ஆரம்பித்தாள். இந்த தண்டச் செலவை இழுத்து விட்டதோடு, ஊர் பேர் தெரியாத அனாதைப் பெண்ணை அவளுக்கு மருமகளாக்கியும் விட்டாள் கோமதி ராஜேந்திரன்.

'பழிகாரி! எந்த ஜென்மத்துப் பகையாளியோ தெரியலையே? அப்பப்போ வந்து சமயம் பார்த்து கவிழ்த்து விடுகிறாளே. அவள் நன்றாகவே இருக்கக் கூடாது' சொர்ணம் மனமார சபித்தாள்.

சம்யுக்தா யோசித்தபடி நடந்தாள். ''வாம்மா! உட்கார்! வீட்ல எல்லாரும் சவுக்கியமா? இருந்து ஒரு வாய் ஏதாச்சும் சாப்பிட்டுப் போ!'' என்று வாய் வார்த்தைக்குக் கூட சொர்ணம் உபசரிக்க மாட்டாள். ''நல்ல பண்பான மனிதராயிற்றே அப்பா கருணாகரன்? அவரது வம்சத்தில் பிறந்து வளர்ந்த சொர்ணத்திற்கு ஏன் அடிப்படை நாகரீகம் கூடத் தெரியாமல் போய்விட்டது? உள்ளூர வியந்தபடி நடந்தவளின் முன்பு வந்து நின்றாள் அக்ஷரா.

''ஹாய்... சம்யுக்தா! எப்படியிருக்கே? மாமா, அத்தை, சந்துரு எப்படியிருக்காங்க?'' நலம் விசாரித்தாள். டென்



னிஸ் விளையாடுகிறாள் போலும். தோழி பத்மஜா ராக்கெட்டை ஓங்கி அடிக்க... பந்து மேலே உயர்ந்து கண்ணுக்குத் தெரியாமல் போய் விட்டு தொப்பென்று தோட்டத்தில் விழுந்தது. பந்தைத் தேடிக் கொண்டு வந்தவளின் கண்களில் சம்யுக்தா பட்டு விட்டாள்.

''நல்ல சவுக்கியம்தான்! நீங்க எப்படியிருக்கீங்க?'' பதிலுக்கு நலம் விசாரித்தாள்.

''நல்லாருக்கோம்! வா... கங்கா அண்ணி கிட்ட ரெண்டு வார்த்தை பேசிட்டுப் போயேன்!'' என்றாள் அக்ஷரா. தூரத்தில் பசும் புல்வெளியில் போடப்பட்டிருந்த பிரம்பு கூடை நாற்காலியில் சோர்வுடன் அமர்ந்திருந்தாள் கங்கா. தோட்டத்து மரத்தில் குதித்தோடிய அணிலை வெறித்துக் கொண்டிருந்தாள்.

கங்காவின் விழிகள், பிரகாசம் குறைந்து போய் ஜீவனற்று காணப்பட்டன. ''தன்னருமைக் காதலனின் மனைவி... மிகவும் புண்ணியம் செய்த பாக்கியவதி தான்.'' சம்யுக்தாவுக்கு அவளைப் பார்க்கும்போது ஏதோ ஒரு வித நெகிழ்ச்சி தோன்றுமே தவிர கொஞ்சம் கூட பொறாமை உணர்ச்சி தலை தூக்கியதில்லை.

'பாவம்! நமக்காவது அப்பா, அம்மா, பாசத்தைப் பொழியும் அண்ணன்னு நல்ல உறவுகள் கிடைச்சிருக்கு. ஆனா... கங்கா திடுதிப்பென்று பெற்றவர்களை இழந்துருக்கா. எவ்வளவு பெரிய இழப்பு! அந்த இழப்பை ஈடுகட்டத்தான் கடவுள் இப்படி அவளை உசரத்துல தூக்கி அமர்த்தியிருக்கார்'' இந்த ரீதியில்தான் பச்சாதாபப் பட்டாள் சம்யுக்தா.

''அண்ணி! சம்யுக்தா வந்திருக்கா...'' ஆழ்ந்த சிந்தனையிலிருந்த கங்கா சட்டென்று எழுந்தாள். எழுந்த

வேகத்தில் நிலை தடுமாறி சரிந்து விழப் போனவளை, கண்ணிமைக்கும் நேரத்தில் தோள்களைப் பற்றி நிமிர்த்தினாள் சம்யுக்தா.

''பாத்து... பாத்து... கவனமா இருக்கக்கூடாதா?'' உண்மையான கரிசனத்துடன் புன்னகைத்தாள் சம்யுக்தா.

''ரொ... ரொம்ப தேங்க்ஸ்'' சங்கோஜத்துடன் சற்றே பின் வாங்கினாள் கங்கா. ''இப்படித் தான் எதுக்கெடுத்தாலும் சங்கோஜப்படுவாங்க! ஹூம்! இவங்களோட எங்க ஆனந்த் எப்படிக் காலந்தள்ளறானோ தெரியலையே! எல்லாம் அந்தக் கடவுளுக்கே வெளிச்சம்பா!'' என்று அக்ஷரா கூறியதும் தோழி பத்மஜா 'களுக்' என்று சிரித்து விட்டாள்.

''இருந்தாலும்... உனக்கு குறும்பு ஜாஸ்திடி!'' என்றாள் அக்ஷராவின் முதுகைத் தட்டியவாறே!

கங்காவும், சம்யுக்தாவும் நேர்ப்பார்வை பார்த்து விட்டு அடுத்த நொடியே பார்வையைத் தழைத்துக் கொண்டனர். இருவரது முகங்களும் அந்திச் சூரியனாய் செக்கச் சிவந்தன. இருவரும் தத்தம் முகத்தில் பிரதிபலித்த உணர்வுகளை மறைக்கப் பிரயத்தனப்பட்டனர்.

# 7

ஜன்னல் வழியே உட்புகுந்த காற்று திரைச்சீலைகளை நர்த்தனமாட வைத்தது. ஜன்னலருகே ஒரு



நாற்காலியை இழுத்துப் போட்டு அதில் அமர்ந்திருந்தாள் அக்ஷரா. பருத்தி வெடித்தாற்போல், நீலவானத்தில் ஆங்காங்கே பஞ்சு பஞ்சாய் மேகங்கள் மெதுவாகத் தவழ்ந்து கொண்டிருந்தன.

குறை நிலவாயினும் பிரகாசத்திற்கு குறைவின்றி மேகங்களுக்கிடையில் அவ்வப்போது எட்டிப் பார்த்தது. டீப்பாயின் மீது அண்ணி கங்கா வைத்து விட்டுப் போன உணவுப் பொருட்களின் மூடி இன்னமும் திறக்கப் படாமல் இருந்தன. காலையிலிருந்து அக்ஷரா எதுவுமே சாப்பிடவில்லை. நெஞ்சு நிறைய சுமை இருந்ததாலோ என்னவோ இதுவரை பசிக்கவே இல்லை.

கீழே இருந்து ஆரவாரமான சிரிப்பொலி கேட்டது. அம்மா சொர்ணத்தின் குரல் தான் அது! தன் லேடீஸ் கிளப் தோழிகளோடு அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கிறாள். மாதத்திற்கு ஒரு முறை தோழிகள் யார் வீட்டிலாவது 'கெட் - டு - கெதர்' என்ற பெயரில் ஒன்று கூடுவார்கள்.

மாதமொரு முறை தோழிகள் ஒன்று கூடும் புரோகிராமை அனைவரும் ஆவலாய் எதிர்பார்த்திருப்பர். இந்த முறை சொர்ணத்திற்கு அந்த வாய்ப்பு கிட்டி விட்டது. ஷோ ரூம்களுக்குச் சென்று புதிய ரக அலங்காரப் பொருட்களை வாங்கிக் குவித்து... தனது செல்வச் செழிப்பை தம்பட்டம் அடிக்காத குறையாகப் பறைசாற்றிக் கொண்டாள்.

மருமகள் கங்காவை உண்டு, இல்லை என்று ஆக்கி விட்டாள். முதல் நாளே வீட்டை அலங்கரித்து, பொருட்களை அங்குமிங்கும் நகர்த்தி வேலை செய்ததில் கங்காவின் முதுகுத் தண்டு விண்டு விடும் போல் 'விண்'

'விண்' என்று வலித்தது. என்னதான் வீட்டு வேலைகளில் உதவ அஞ்சலை முன் வந்தாலும்... கங்கா நாசூக்காக மறுத்து விட்டாள். மாமியாரின் மனமறிந்து கங்காவே அனைத்தையும் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்தாள்.

''தோ பாரு! என்னோட தோழிங்க... அவங்க வீட்ல விருந்து கொடுக்கறப்போ... பெரும்பாலும் ஸ்டார் ஹோட்டல்லே இருந்து வாங்கி வச்சிடுவாங்க. ஆனா... நம்ம வீட்டுலே வித்தியாசமா தென்னாட்டு சமையல் வகையறாக்களை செய்து போட்டு ஒரு அசத்து அசத்தலாம்னு இருக்கேன். காலை டிபனுக்கு, மதியம் சாப்பாட்டுக்கு என்னென்ன செய்யணும்னு சொல்றேன். சொர்ணம் வீட்டுல வந்து சாப்பிட்டுப் போனா, அந்த ருசி காலத்துக்கும் மறந்துடாம நாக்கில் நிக்கணும் புரிஞ்சுதா?

''இன்னொரு முக்கியமான சமாச்சாரம். ஜட்ஜ் சுந்தர மூர்த்தியோட சம்சாரமும் நாளைக்கு வருவாங்க. அவங்களோட மூத்த மகனுக்கு போன மாசந்தான் கல்யாணமாச்சு! கோடீஸ்வரன் வீட்டுலேர்ந்து பொண்ணு எடுத்தாங்க. ஹூம்! எல்லாத்துக்கும் ஒரு குடுப்பினை வேணும். அவங்களோட இரண்டாவது புள்ளை அமெரிக்காவுலே டாக்டரா இருக்கானாம். அந்தப் பையனை நம்ம அக்ஷராவுக்குப் பேசி முடிக்கலாம்னு இருக்கேன். நம்ம பேமிலியைப் பத்தி நல்ல அபிப்பிராயம் அந்தம்மாவுக்கு வரணும் புரியுதா?

''காலைலே சீக்கிரமா எந்திரிச்சி ஆக வேண்டியதைப் பொறுப்பா செய்! தண்டத்துக்கு உக்காந்து தின்னுட்டு தூங்கி எந்திரிக்கறே! சீர் செனத்தி எதுவுமில்லாம வெறுங்கைய வீசிட்டு வந்துட்டே! அனாதைப்



பெண்ணுக்கு அடைக்கலம் கொடுத்து மருமகளாக்கினதுக்கு... கொஞ்சமாச்சும் உடம்பால உழைச்சுப் போட்டு நன்றியுணர்ச்சியைக் காட்டு!'' நீளமாய்ப் பேசி கங்காவை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, பட்டுச்சேலை சரசரக்க மமதையுடன் நடந்து சென்றாள் சொர்ணம்.

கங்காவுக்கு அவமானத்தில் காது மடல்களும், மூக்கு நுனியும் சிவந்து போயின. எஜமானி அம்மாள் மருமகளைத் திட்டுவதைக் கண்டு அஞ்சலைக்கு தர்ம சங்கடமாய் இருந்தது. கங்காவின் விழிகளில் பொங்கிய கண்ணீர், அணை உடைத்துக் கரை தாண்டி கன்னங்களில் வழிய ஆரம்பித்தது. கீழுதட்டை அழுத்திக் கடித்துக் கொண்டு கிச்சனுக்குள் மறைந்தாள் கங்கா.

அண்ணியைத் தாளித்துக் கொண்டிருக்கும்போதே உள்ளே நுழைந்திருந்தாள் அக்ஷரா. சுர்ரென்று கோபம் தலைக்கேற ஆத்திரத்துடன் சொர்ணத்தைப் பின் தொடர்ந்தாள்.

''ஏம்மா! இது உனக்கே நல்லாருக்கா? சதா அண்ணியைத் திட்டிக்கிட்டிருக்கே? ஏதாவது ஒரு சாக்கு வைச்சு, அவமானப்படுத்தி அழ வைக்கிறே. இது எதுலே போய் முடியும்னு தெரியலை! நீயும் ஒரு பெண்ணைப் பெத்துருக்கே. ஞாபகம் இருக்கட்டும்.

''எப்பப் பார்த்தாலும் வக்கில்லாதவள்னு குத்திக்காட்டறே? நீ உன்னோட ஊர்ப் பெருமையை நிரூபிக்கிறேன்னு வலியப் போய் அவங்களை மருமகளாக்கி அழைச்சுட்டு வந்தே... வாழ வந்த பொண்ணு கண்ணீர் சிந்தினா குடும்பம் விளங்காதும்மா. லேடீஸ் கிளப் மெம்பர்சுக்கு உன்னோட சுயரூபம் தெரிஞ்சா காறித்

துப்பிட்டுப் போயிடுவாங்க. அதுவும் முக்கியமா அந்த கோமதி ராஜேந்திரனுக்குத் தெரிஞ்சா. அவ்ளோதான். உன் கதையை கந்தலாக்கி விட்ருவா!

'ஜட்ஜ் வீட்டு சம்பந்தம் அது இதுன்னு சொன்னியே... படிப்பு முடியற வரைக்கும் என்னை நிம்மதியா இருக்க விடேன்?'' காட்டமாகக் கேட்டு விட்டாள் அக்ஷரா.

''ச்சு! எதிர்த்து பேசற வேலையெல்லாம் இங்க வேணாம். என் விஷயத்துல இது வரைக்கும் உன் அப்பாவும், அண்ணாவும் தலையிட்டதே இல்ல. இதுக்கு மேல ஒரு வார்த்தை பேசினே... நடக்கிறது வேற தெரிஞ்சுக்கோ! எங்க... அந்த ஊமைக்கோட்டான்? எனக்கு எதிரா உன்னைத் திருப்பி விட்ருக்காளா? சதிகாரி! அவ பருப்பு எங்கிட்ட வேகாது. 'இதற்கு மேல் தான் வாதாடினால் அது அண்ணி கங்காவின் தலையில் மொத்தமாக விடியும்' என்று புரியவும் சொர்ணத்தை வெறுப்புடன் ஏறிட்டு விட்டு மாடிப் படிகளை இரண் டிரண்டாகத் தாவி ஏறி தன் அறைக்குள் புகுந்து கொண் டாள் அக்ஷரா.

மறுநாள் அதிகாலையிலேயே எழுந்து கொண்ட கங்கா அன்றைய சமையலுக்கு வேண்டிய முஸ்தீபுகளை செய்து கொண்டிருந்தாள். ஈரத் தலைமுடியை நுனியில் முடிந் திருந்தாள். இன்னமும் கூந்தலிலிருந்து ஈரம் சொட்டி... கங்கா கட்டியிருந்த கத்தரிப்பூ நிற காட்டன் சேலையில் ஈரம் படிந்து நனைந்திருந்தது. அதற்குள் பூஜையறையில் விளக்கேற்றி விட்டிருந்தாள்.

அக்ஷரா அலாரம் வைத்து எழுந்து வந்தாள். முகம் அலம்பி டவலால் துடைத்தபடி கிச்சனுக்குள் நுழைந் தாள்.



''அண்ணி! நானும் உங்களுக்கு ஹெல்ப் பண்றேன். அஞ்சலை இன்னுமா வரலை?''

''இல்ல... வழக்கம் போல ஆறு மணிக்கு வரச் சொல் லிட்டேன்'' முறுவலித்தாள் கங்கா.

''ஏன்னா... அஞ்சு மாச கர்ப்பிணி பொண்ணு விடியற் காலை அசந்து தூங்குவாங்க... பாவம்'' என்ற அண் ணியை விழிகள் விரிய ஏறிட்டாள் அக்ஷரா.

என்ன ஒரு இரக்கம்... இளகின மனசு!

ஷெல்பில் வைத்திருந்த லிஸ்ட்டை ஒரு தரம் பார்த்து விட்டு, பத்திரமாகச் சுருட்டி அதனிடத்தில் வைத்து விட்டு, ஊற வைத்த உளுத்தம் பருப்பை கிரைண்டரில் போட்டு வடைக்கு அரைக்க ஆரம்பித்தாள் கங்கா.

''என்ன லிஸ்ட் அண்ணி? இன்னக்கி செய்ய வேண் டிய மெனுவா?'' திகைப்புடன் கேட்டாள் அக்ஷரா.

''லிஸ்ட்டா இது! அனுமார்வால் மாதிரியில்ல... நீட்டமா இருக்கு! இவ்ளோ வசதி இருக்கு! சமையல் காரரை ஏற்பாடு பண்ணியிருக்கலாம். இல்ல பெரிய ஓட்டல்ல ஆர்டர் பண்ணியிருக்கலாம். கல்யாண பந்தி யில கூட இத்தனை அயிட்டம்ஸ் இருக்காது போலி ருக்கே! உங்களை இந்த வீட்டு மருமகள்னு நினைச் சாங்களா? இல்ல மாடுன்னு நினைச்சுட்டாங்களா? இவங்க பண்ற அட்டூழியத்தை கிளப் மெம்பர்ஸ் முன்னாடி போட்டு உடைச்சாத்தான் அடங்குவாங்க'' எரிமலையாய் குமுறியவளை இடைமறித்தாள் கங்கா.

''ப்ளீஸ்மா! இவ்ளோ பெரிய கோபுரத்துல... குப்பைக் காகிதம் போல பறந்து உசரத்துல நான் ஒட்டிட் டிருக்கேனே?... அது யாரால? இந்த வாழ்க்கை அவங்க

போட்ட பிச்சை! மூணாம் மனுஷங்க முன்னாடி அத்தையைப் பத்தி எதுவும் பேசிடாதே! தயவு செஞ்சு நீ கிச்சனை விட்டு நகரும்மா... ப்ளீஸ்!'' மெல்லிய குரலில் பேசிய கங்காவின் விழிகளில் நீர்க் குளம் கட்டியது.

நெகிழ்ந்து போனாள் அக்ஷரா. ''குட்டியூண்டு ஹெல்ப் பண்ணிட்டு போயிடறேன் அண்ணி'' சின்ன வெங்காயத்தை எடுத்து சிறுக நறுக்க ஆரம்பித்தாள். மூன்றாவது வெங்காயத்தை நறுக்கியவளின் கண்களில் அருவியாக கண்ணீர் வழிந்தது. தாளமாட்டாமல் கத்தியைக் கீழே போட்டு விட்டு, சிறு குழந்தை போல் கண்களைக் கசக்கினாள்.

''அண்ணி! கண் ரொம்ப எரியுது... அண்ணி!'' என்றதும் 'களுக்' என்று சிரித்தாள் கங்கா.

''உம்! அடம் பண்ற இந்தக் குழந்தையை அடுப்படியிலேர்ந்து எப்டி விரட்டறதுன்னு... தவிச்சேன். சின்ன வெங்காயம் அழ வைச்சு விரட்டுது பாத்தியா?... நேரா உன்னோட ரூமுக்குப் போம்மா செல்லம்!... கண் எரிஞ்சா அது நல்லது தான். பாத்துப் போ!'' என்ற அண்ணியின் முகம் தாமரையாய் மலர்ந்து பொலிந்ததை கண் எரிச்சலிலும் ஆசை தீர ரசித்தாள் அக்ஷரா.

அந்தகாரமாய் இருண்டு கிடக்கும் வானத்தில் பளீரென்று மின்னல் வெட்டியதைப் போலிருந்தது. அக்ஷராவுக்கு உள்ளூர திருப்தியாக இருந்தது.

''அண்ணி இங்கு வந்ததிலிருந்து... இது போன்று அழகாய் சிரித்ததே இல்லையே! கடைசி வரை அண்ணி மகிழ்ச்சியோடு இருக்க வேண்டும்' மானசீகமாய் கடவுளிடம் வேண்டிக் கொண்டாள்.



அன்று காலைப் பந்தி முடிவதற்குள் அண்ணி கங்கா அடைமழை கொட்டுவதைப் போன்று அழப் போகின்றாள் என்பதை அக்ஷரா சற்றும் உணரவில்லை.

4/4/14

## 8

ஹாலில் அலங்காரமாக மாட்டப்பட்டிருந்த கடிகாரத்தில் ''குக்... குக்... குக்'' என்று இரட்டைக் குருவிகள் ஐந்து முறை வெளியில் தலைகாட்டி, கதவை மூடிக் கொண்டு அடங்கின. அக்ஷரா அரை மனதுடன் கிச்சனை விட்டு வெளியே வந்தாள்.

அப்பா விஸ்வநாதன் தனது அறைக்கதவை மெல்லத் திறந்து கொண்டு வெளிப்பட்டார். தினமும் ஐந்து மணிக்கு வாக்கிங் செல்லும் பழக்கமுடையவர். வியர்க்க விறுவிறுக்க கடற்கரையோரம் வேக நடை போட்டு விட்டு ஆறு மணிக்குத்தான் திரும்புவார்.

''அக்ஷரா என்னடா... இவ்ளோ சீக்கிரமா எழுந்துட்டே?'' செல்ல மகளின் முகத்தை ஊன்றி கவனித்தார்.

''ப்ச்! இந்த அம்மா பண்றது கொஞ்சம் கூட நல்லா இல்லேப்பா...! 'கெட் டு கெதர்' பார்ட்டிக்கு... ஏகப்பட்ட மெனுவை லிஸ்ட் போட்டு பிரிப்பேர் பண்ணச் சொல்லி... அண்ணியைப் பிழிஞ்சு எடுக்கறாங்க! அண்ணிக்குப் பரிஞ்சு நான் ஏதாவது சொன்னா... அதுக்கும்

சேத்து அண்ணியை வறுத்தெடுக்கிறாங்க. அஞ்சலை கூட இன்னும் வரலை... நாலு மணிக்கே எந்திரிச்சு பம்பரமா சுழண்டுகிட்டு இருக்காங்க அண்ணி. பாவம்பா... இந்த அண்ணன். இப்படி விட்டேத்தியா சிங்கப்பூருக்கும், மலேசியாவுக்கும் பறந்துட்டு இருக் கிறதால தான் அம்மாவுக்கு ஒரேடியா அண்ணி மேல இளக்காரமாயிடுச்சு!''

அக்ஷரா குணத்தில் அப்பாவைக் கொண்டிருந்தாள். கங்காவின் பரிதாப நிலையைக் கண்டு கொதித்துப் போய் பேசியவளின் ஆதங்கத்தை விஸ்வநாதன் புரிந்து கொண்டார். யோசனையுடன் நடந்து கிச்சனுக்குச் சென் றார். சப்பாத்தி மாவைப் பிசைந்து கொண்டிருந்த கங்கா இவரைக் கண்டதும் மலர்ந்து ''குட்மார்னிங் அப்பா!'' என்றாள்.

''கங்கா! ஸாரிம்மா... சமையலுக்கு உடனே நல்ல ஆள் பாத்து ஏற்பாடு பண்ணிடறேன்மா!''

''வே... வேண்டாம்பா! எனக்கு ஒரு சிரமமும் இல் லேப்பா! அதுக்கும் ஆள் போட்டுட்டா, நான் இங்க சும்மா... எப்படிப்பா? இந்த திருப்தியாவது எனக்குக் கிடைக்குதே... அப்புறம் இதுவும் எனக்குக் கிடைக்காம போயிடும். ப்ளீஸ்ப்பா!'' கங்காவின் குரல் பிசிறு தட்டி தழுதழுத்தது. கண்களில் 'மளுக்' என்று கண்ணீர் எட்டிப் பார்த்தது.

''சரிம்மா! உனக்கு இஷ்டமில்லாததை நான் செய்ய மாட்டேன்மா. உன்னோட பிலீங்ஸ்க்கு நான் மதிப்பு தர்றவன் சரியா?'' தலையாட்டிவிட்டு போர்டிகோவை நோக்கி நடந்த தந்தையைப் பின் தொடர்ந்தாள் அக்ஷரா.



''கட்டின கணவர்கிட்ட நியாயமா கிடைக்க வேண்டிய அன்பே... நிராகரிக்கப்பட்டா... ஒரு பொண்ணு மனசளவுல நொறுங்கிட மாட்டாளாப்பா? ஆனந்த் கிட்ட இது பத்தி நீங்க பேசியே ஆகணும்ப்பா!''

''பிசினஸ், பிஸினஸ்னு கால்லே சக்கரத்தைக் கட்டிப் பறக்கறவனோட கண்ணைத் திறந்துட்டேம்மா. கங்காவும் என்னோட மகள் தான். சகலத்தையும் சீக்கிரம் சரி பண்ணிடலாம்மா!'' மகளின் தலையை வருடி விட்டு காரில் ஏறிக் கிளம்பினார்.

கார் கேட்டை கடக்கும் சமயத்தில் அரக்கப் பரக்க... அவிழ்ந்த கூந்தலை அள்ளி முடிந்து கொண்டு அஞ்சலை விரைந்து வந்தாள்.

''சீக்கிரம்... அண்ணி தனியாகவே அத்தனை வேலையையும் பண்றாங்க. ஹெல்ப் பண்ணு அஞ் சலை'' வேலைக்காரியை துரிதப்படுத்தி விட்டு தன் அறைக்குச் சென்றாள் அக்ஷரா.

இடியாப்பம் - தேங்காய்பால், குழிப்பணியாரம், சப் பாத்தி - சன்னா மசாலா, பருப்பு அடை - அவியல், காஞ்சிபுரம் இட்லி, சாம்பார் வடை, தக்காளித் தொக்கு என்று ஏகப்பட்ட அயிட்டங்களைத் தயாரித்து விட்டிருந் தாள் கங்கா. ஒன்பது மணிக்குள் கிளப்பின் உறுப்பினர்கள் தத்தம் கார்களில் வந்திறங்கினர்.

பொருத்தமான பதார்த்தங்களுடன் தட்டில் பரிமாறப் பட்ட உணவை அனைவரும் ருசித்துப் புசித்தனர். ''மிசஸ் சொர்ணம் விஸ்வநாதன்! புது சமையல்காரி வந்திருக் காளா?''

ரோடு ரோலர் சைசிலிருந்த நீல வண்ணப் பட்டுச் சேலைக்காரி ஆவலுடன் கேட்டாள்.

முகத்தில் பெருமிதம் ஊற்றெடுத்து வழிய நிமிர்ந்த சொர்ணம் ''எல்லாம் நான் குடுத்த லிஸ்ட் பிரகாரம்... கங்கா தான் சமைச்சிருக்கா'' என்றாள்.

''சுவையும் மணமுமா தென்னாட்டு சமையல் ரொம்ப அபாரமா இருக்கு கங்கா! வெரிகுட்!'' ஜட்ஜ் மனைவி மரகதாம்பாள் மனமாரப் பாராட்டினார்.

''கெட் டு கெதர் பார்ட்டிக்கு இனிமே உங்காத்துக்கு அடிக்கடி வர வேண்டியது தான். சிம்ப்ளி சூப்பர்ப்! கங்கா! பேஷ் நன்னாயிரு!'' அந்த மடிசார் மாமி வைதேகி நல்லாசி வழங்கினாள்.

ஆள் ஆளுக்குப் புகழாரம் சூட்ட ஆரம்பித்தார்கள். மருமகளை அனைவரும் மெச்ச ஆரம்பித்ததும் சொர்ணத்திற்கு அடி வயிற்றில் திகுதிகுவென பற்றி எரிந்தது. ''பாராட்டையும், பெருமையையும்... கடைசிலே இந்த வக்கத்த பிச்சைக்காரி தட்டிட்டுப் போயிட்டாளே... இவளை ஒரு வழி பண்ணினாத்தான் என்னோட கொந் தளிப்பு அடங்கும்'' மனதுக்குள் கறுவிக் கொண்டாள் சொர்ணம்.

சொர்ணத்தின் நெருங்கின சிநேகிதிகளான பங்கஜமும், தெய்வானையும் எப்போது சந்தித்துக் கொண்டாலும்... கிளப் உறுப்பினர்களிடம் இருந்து கழன்று தனியாகக் கூடி குடும்ப ரகசியங்களைப் பகிர்ந்து கொள்ளா விட்டால் மூவருக்கும் தலையே வெடித்து விடும்.

இன்றும் அப்படித்தான். கிளப் உறுப்பினர்கள் டிபனை ஒரு கை பார்த்துவிட்டு அரசியலை அலச ஆரம்பித் ததும்... இதுதான் சமயம் என்று பங்கஜமும், தெய் வானையும் சொர்ணத்துடன் நழுவி மாடிக்குச் சென்றனர்.



''தோ பார் சொர்ணம்! எல்லாருமா 'ஓஹோ'ன்னு புகழ்ந்து பேசி உன் மருமகளை ஏத்தி விட்டாளுங்க. இப்படியே லூசா விட்டா... சோத்துக்கு வழியில்லாம கிடந்தவ, சொத்தை ஆளணும்னு திட்டம் போடுவா! அப்பப்ப தட்டி வை. ஏதாவது ஒரு காரணம் காட்டி... அவளை டைவர்ஸ் பண்ணிட்டு உன்னோட கவுரவத் துக்கு ஏத்த பொண்ணா பாத்து கட்டி வச்சிடேன்!''

குடும்பம் விளங்குவதற்கான நல்ல யோசனைகளை இருவரும் அள்ளி வழங்கினார்கள். மாமியாரின் கட் டளைப்படி மூவருக்கும் லெமன் ஜூஸைப் போட்டு டிரேயில் வைத்து மாடிக்கு வந்த கங்காவின் காதுகளில் அவர்களின் பேச்சு ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியது போலிருந்தது.

தோழிகள் தூபம் போட்டதில் சொர்ணத்திற்கு ஆத் திரமும், ஆவேசமும் மண்டிக் கொண்டு வந்தது.

# 9

''த்தூ! எனக்கு சுகர் இருக்குன்னு தெரியுமில்ல? ஜூஸ்லே சர்க்கரை போட்டிருக்கே? உப்பு போட்டு எடுத்துட்டு வரவேண்டியது தானே? சீக்கிரம் என்னை மேல அனுப்பிட்டு... சொத்தை ஆளலாம்னு கணக்கு பண்றியா?'' லெமன் ஜூஸை கங்காவின் தலையில் கொட்டினாள் சொர்ணம்.

''சனியனே! வியர்த்து வழியற முகத்தோட... கெஸ்ட்டுக்கு உபசரிக்க வந்தியா?'' பளாரென்று முகத்தில் அறைந்தாள். அறை பட்ட கன்னம் ஜிவுஜிவென்று எரிந்தது. சொர்ணம் கோபத்தில் கண்ணாடி டம்ளரை தரையில் வீச, அது உடைந்து சிதறியது. கதறி அழுது கொண்டே சுத்தம் செய்ய முனைந்தாள் கங்கா.

காதுகளில் வாக்மேனைப் பொருத்திக் கொண்டு வராண்டாவில் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்த அக்ஷரா, அண்ணி கங்கா அந்த அறைக்குள் செல்வதை கவனித்து விட்டுப் பின் தொடர்ந்தாள். வாக்மேனைக் கழற்றியவளின் செவிகளில் குத்தீட்டி பாய்ந்தது.

அம்மா சொர்ணம் இந்த அளவுக்கு கீழ்த்தரமாக இறங்கி செயல்படுவாள் என்று அக்ஷரா கனவிலும் நினைக்கவில்லை. சொர்ணம் தற்பெருமை பிடித்தவள். தனக்கு கவுரவமும், பாராட்டும் கிடைக்குமென்றால், அதற்காக எதையும் விட்டுக் கொடுப்பவள்தான். பணத்திற்குத் தரும் மதிப்பை மனிதர்களுக்குத் தராதவள் தான்! ஆனால் சினிமாவிலும், மெகா சீரியல்களிலும் வருவதைப் போல்... மருமகளிடம் மிகக் கொடூரமாக நடந்து கொண்டதைக் காணும் போதே அவளது நெஞ்சம் பதை பதைத்தது.

''அம்மா! மூணாம் மனுஷங்க முன்னாடி உன் மருமகளைக் கேவலப்படுத்திட்டிருக்கே... இது நம்ப குடும்பத்துக்குத் தான் அசிங்கம். அண்ணன் ஊர்லே இல்லாத நேரத்துல இப்படி அராஜகம் பண்றீங்களே? இந்தப் பாவம் நம்மளை சும்மா விடாது. குடும்பத்துல குழப்பத்தை ஏற்படுத்தி வைக்கிற உங்க பிரண்ட்ஸ் நல்லவங்களே



கிடையாது'' அக்ஷரா ஆவேசத்துடன் கொட்டித் தீர்த்தாள்.

கண்ணாடித் துண்டங்களைப் பொறுக்கியெடுத்துக் கொண்டிருந்த கங்கா திகிலில் உறைந்து போனாள். அக்ஷரா தனக்காகப் பரிந்து பேசினால், மாமியாரின் உக்கிரம் உச்சியில் ஏறி விடும் என்று அவள் நன்கறிந்திருந்தாள். அக்ஷராவின் கோபம் எல்லையைத் தாண்டிய ஆவேச நிலையில் இருந்தது.

'அவளைக் கையைப் பிடித்திழுத்து, அழைத்துச் செல்ல வேண்டியது தான்!' என்று எண்ணியபடி கங்கா நாத்தனாரை நோக்கி விரைய, கீழே கிடந்த கண்ணாடித் துண்டில் கவனிக்காமல் வலது காலைப் பதித்து விட்டாள். உள்ளங்காலில் 'நறுக்' என்று கண்ணாடித் துண்டு தோலைக் கிழித்து பதம் பார்த்தது. ரத்தம் குபுக் என்று பீறிட்டுப் பொங்கி வந்தது.

''ஆ... அம்மா! ஸ்ஸ்!'' வலது பாதத்தைப் பற்றியபடி கங்கா அமர்ந்து விட்டாள். ''அய்யோ அண்ணி! ரத்தம் வருது பாருங்க!'' பதறிக் கொண்டு அக்ஷரா குனிந்தாள்.

''காலை என் மடியிலே வைங்க அண்ணி! தயங்காதீங்க... கண்ணாடித் துண்டு வெளிலே கொஞ்சம் துருத்திட்டிருக்கு. நான் மெதுவா எடுத்துடறேன்'' வாகாக அதை வெளியில் இழுத்து எறிந்தாள். ரத்தம் மேலும் பொத்துக் கொண்டு பாய்ந்தது.

''கண்ணாடி பெரிசா கிழிச்சிடுச்சுன்னு நினைக்கிறேன். கையால அழுத்திப் பிடிங்க அண்ணி. ப்ளீடிங் ஜாஸ்தியா போயிடும். இதோ வரேன்...'' துரித கதியில் ஓடி கர்ச்சீப்பை நனைத்து காலில் கட்டி விட்டு, செல்லில்

குடும்ப மருத்துவரை அவசர உதவிக்கு அழைத்தாள் அக்ஷரா.

சொர்ணத்திற்கு 'அப்பாடா' என்றிருந்தது. சற்று முன் அக்ஷராவின் ஆவேசப் பேச்சை கேட்டு பயந்து போனாள். 'மகள் கோபந்தாளாமல் கீழே சென்று கிளப் உறுப்பினர்களிடம் தனது அடாவடித் தனத்தை வெட்ட வெளிச்சமாக்கி நியாயம் கேட்டு விட்டால்?'' நிச்சயம் செய்யக் கூடியவள் தான் என்பது பெற்றவளுக்குத் தானே தெரியும்!

நல்ல வேளையாக கங்காவுக்கு காயம் ஏற்பட்டு, அக்ஷராவின் கவனம் திசை திரும்பி விட்டது. நிம்மதிப் பெருமூச்சு விட்டாள் சொர்ணம்.

''இதான் சாக்குன்னு... உக்காந்துடாதே! டாக்டர் வந்ததும் மருந்தை வாங்கி தடவிக்கிட்டு மதியச் சமையலை கவனி!'' அதட்டிவிட்டு அகன்றாள்.

நல்ல விறுவிறுப்பான காட்சிகளைப் பார்த்த திருப்தியில் அவளது தோழிகளும் கீழே விரைந்தனர். பத்து நிமிடங்களில் டாக்டர் வந்து காயத்தை நன்கு துடைத்து சிகிச்சை அளித்து இஞ்செக்ஷன் போட்டு விட்டார். ''ஸ்டிச்சஸ் தேவைப்படாதும்மா. செப்டிக் ஆகாம இருக்க ஊசி போட்டிருக்கேன். பெயின் குறைய டாப்லெட்ஸ் தரேன். தண்ணி படாம பாத்துக்கணும். ஸ்ட்ரெயின் பண்ணாதீங்க. ரெஸ்ட் எடுங்க. இல்லன்னா பெயின் ஜாஸ்தியா தெரியும்'' டாக்டர் வந்து சென்றதும் ஒப்புக்கு கால் மணி நேரம் கால்களை நீட்டிப் படுத்தாள் கங்கா.



அதன் பின் அக்ஷரா எவ்வளவோ தடுத்தும் கேளாமல் நொண்டி நடந்து கொண்டே கிச்சனுக்குச் சென்றாள். அக்ஷரா அதட்டி அண்ணியை சேரில் அமர்த்தினாள்.

''நீங்க கைட் பண்ணுங்க. நானும் அஞ்சலையும் செய்றோம். பருப்புத் தண்ணியை விட்டாச்சு. அப்புறம் எத்தன ஸ்பூன் ரசப்பொடி சேக்கணும்? போட்டாச்சு! பெருங்காயப் பவுடர் தூவியாச்சு. வத்தக்குழம்புக்கு உப்புக்காரம் சரியா இருக்கா? பாருங்க'' அண்ணியின் உள்ளங்கையில் சிறிது ஊற்றினாள் கங்கா.

''உம் சூப்பர்! ஒரே ஒரு சிட்டிகை கை உப்பு சேர்த்துக்கோ!'' முறுவலித்தாள் கங்கா. இதே ரீதியில் மதியச் சமையலுக்கான மெனுவை ஒரு வழியாக முடித்தார்கள். சமையல் முடிந்ததும் அண்ணியைக் கைத்தாங்கலாக அழைத்துக் கொண்டு அவளது படுக்கையில் அமர்த்தினாள் அக்ஷரா.

''தோ பாரும்மா! இதுக்கு மேல அண்ணியை கஷ்டப்படுத்தினா... கோபத்துல அவங்க முன்னாடி வந்து கத்துவேன்'' அக்ஷரா எச்சரித்துவிட்டிருந்தாள். அறைக்குள்ளேயே அடைபட்டுக் கிடந்தாள் அக்ஷரா.

பணக்கார சீமாட்டிகளின் சிங்கார சிணுங்கல்களும், சிரிப்பொலிகளும் கேட்க நாராசமாக இருந்தது. இரவு வரை கும்மாளமடித்தனர். ஜன்னலருகே அமர்ந்து இருட்டை வெறித்த அக்ஷராவின் அருகே மெல்ல நொண்டியபடி வந்தாள் கங்கா.

''ஏம்மா! ஒண்ணுமே சாப்பிடாம... அப்படியே வச்சிட்டியா?'' என்றாள்.

''ப்ச்! ஏன் அண்ணி? இப்படியெல்லாம் கஷ்டப்பட ணும்னு விதி எழுதியிருக்கோ?'' அக்ஷராவின் விழிகளில் நீர்த்திரையிட்டது.

அதே விதி வினையாக மாறி... தனது அண்ணி கங்காவின் உயிரை அபகரிக்கப் போகிறதென்று அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

# 10

சம்யுக்தா நிலை கொள்ளாமல் தவித்துப் போனாள். அவளுக்கு ஒன்றுமே ஓடவில்லை. அந்தப் பெண் கங்காவைப் பார்த்ததிலிருந்து அவளுக்கு நெஞ்சைப் பிசைவது போல் இருந்தது. ''பாவம்... பெற்றோரை இழந்து தனி மரமாய் நின்றவள் கங்கா. அதனால் தானோ என்னவோ அவள் மீது கருணை கொண்டு கடவுள் ஆனந்தை அவளுக்குக் கணவனாக்கி விட்டார்.''

சம்யுக்தா இப்படித்தான் தினமும் சமாதானம் செய்து கொள்வாள். ஆனால் நேரில் கங்காவின் நிலைமையைக் கண்ட பின்புதான், இதுவரை தான் போட்டது வெறும் தப்புக் கணக்கு என்று புரிந்து கொண்டாள்.

'ஒரு கணவனின் அன்பும், காதலும், கனிந்த பார்வையும் கிடைக்குமென்றால்... சொல்லொணாத் துயரத்தையும், ஓராயிரம் வசை சொற்களையும் துச்ச மெனக் கருதி ஒரு பெண் தாங்கிக் கொள்வாள்.



'கட்டிய கணவனின் இதமான அணைப்பில் அடங்கி னால், வேதனையும், துயரமும் ஒரு பொருட்டாய்த் தோன்றாதே? ஆனால் கங்காவின் விழிகளைப் பார்த்தால், ஏக்கம் தானே தேங்கிக் கிடக்கிறது? அவளுக்குத் தாலி கட்டி மனைவியாக்கிக் கொண்ட ஆனந்த், அவளை சரியாக நடத்துவதில்லை போலும்!'

பற்றிப் பிணைய பிடிப்பேதுமின்றி, சூறாவளிக் காற்றில் அலைக்கழியும் சிறு பூங்கொடியைப் போன்று கங்கா தவிப்பதையும் சம்யுக்தாவால் நன்கு உணர முடிந்தது.

'தாயின் வார்த்தைக்கு மதிப்பளிக்க வேண்டியது தான். அதற்காக மனைவியின் மனதை இம்சிக்க வேண்டிய அவசியம் என்ன? சொர்ணம் 'பணம் - பணம்' என்று வெறி பிடித்த காட்டேரியைப் போல் நடந்து கொள் கிறாள்.

'ஆனந்துக்கு என்னவாம்? ஏழைப் பெண் மனைவியாக வாய்த்தால்... கண்டு கொள்ள மாட்டாரோ? மெத்தப் படித்தவர் நடந்து கொள்ளும் முறையா இது? இது பற்றி அக்ஷராவும், விஸ்வநாதன் மாமாவும் அவருக்கு எடுத்துச் சொல்லக் கூடாதா?

'இன்னமும் எத்தனை கொடுமைகளை கங்கா தாங்கிக் கொள்ளப் போகிறாளோ... தெரியவில்லை. அண்ண னுக்கு வேலை கிடைத்ததும், சீக்கிரத்தில் சொர்ணம் அத்தையின் கடனை அடைத்து விட வேண்டும்.

'அதன் பின் அந்த பங்களா இருக்கும் திசைக்கே ஒரு கும்பிடு தான்!' ''புஸ்ஸ்'' என்ற விசில் சத்தத்தில் நினைவு கலைந்து குக்கரை இறக்கினாள் சம்யுக்தா.

அடி மனதில் அதுவரை ரகசியமாய் கனன்று கொண்டிருந்த காதலுக்கு பதிலாக வெறுப்பும் கோபமும் தான் மண்டிக் கொண்டு வந்தன.

சொர்ணத்தின் பிரமாண்டமான பங்களாவைப் பற்றிய நினைப்பு எட்டிப் பார்த்தாலே... உள்ளுக்குள் உலை கொதித்தது.

அதே பங்களாவில் தான் வாழப் போகும் நிலைமை ஏற்படும் என்பதை சம்யுக்தா சற்றேனும் கற்பனை செய்து கூடப் பார்க்கவில்லை!

## 11

கடற்கரையோரம் அமைந்திருந்த உணவகத்தில் காற்று இதமாய் உடலைத் தழுவியது. சந்துருவும், அக்ஷராவும் ஒதுங்கியிருந்த மேஜையில் எதிரும் புதிருமாய் அமர்ந்திருந்தனர். சந்துரு இரு கைகளையும் கன்னத்தில் தாங்கிக் கொண்டு அக்ஷராவையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். பார்வை வீச்சைத் தாங்கிக் கொள்ள முடியாமல் வெட்கி வேறு பக்கம் வேடிக்கை பார்த்தாள் அக்ஷரா.

''உன்னைக் கட்டிக்க எத்தனையோ பணக்காரங்க க்யூவுல நிக்கிறாங்க! நீ என்னைத் தேர்ந்தெடுத்து விரட்டி விரட்டி... காதலிச்சு கடைசியா என்னையும் லவ் பண்ண



வச்சுட்டியே? இத்தனைக்கும் ஆரம்பத்துல நான் உன்னைக் கண்டபடி திட்டியிருக்கேன்... என்கிட்ட அப்படி என்ன ஸ்பெஷல் குவாலிட்டி இருக்கு? சொல்லு அக்ஷரா?'' கெஞ்சினான்.

''பணத்துக்குப் பணிஞ்சு போகாத உங்க சுய கவுரவம், விசாலமான அறிவு, அலட்சியப் பார்வை, உதவுற மனப்பான்மை, இதெல்லாம் என் மனசை வசீகரித்தது. வாழ்ந்தா உங்க கூட தான்னு தீர்மானிச்சு டிரை பண்ணேன். எறும்பு ஊற கல்லும் தேயும்னு சொல்வாங்க. நீங்களும் இறங்கி வந்து 'ஐ லவ் யூ'ன்னு சொல்லிட்டீங்க!'' முகத்தில் மாஞ்சிவப்பு படர வெட்கித் தலை குனிந்தபடி அக்ஷரா கூறியபோது சந்துருவுக்கு உடல் முழுவதும் ஜிவ்வென்று சிலிர்ப்பு பரவியது.

''நினைவு தெரிஞ்ச நாள்லே இருந்து வித விதமா மாடர்ன் டிரஸ்லே பவனி வந்தவ நீ. இப்போ எனக்காக தழைய தழைய புடவை கட்டி, தலை நிறைய பூ வச்சு டிரெடிஷனா மாறிட்டே! உண்மையிலேயே... உனக்கு 'ஹோம்லி லுக்' தெரியுமா? சேலை கட்டினா அம்சமா இருக்கே அக்ஷரா'' சந்துருவின் விழிகள் ஆசையுடன் அவளை மேலும் கீழும் அளவெடுத்தன.

''இப்போ டிரெயினிங் பீரியட்டிலே இருக்கேன். இன்னும் ஆறு மாசம் போச்சுன்னா... வேலை கிடைச்சு கை நிறைய சம்பளம் கிடைக்கும். உங்கம்மா கிட்ட நாங்க பட்ட கடனை அடைக்கணும். சம்யுக்தாவுக்கு நல்ல அலையன்ஸ் பாத்து முடிக்கணும். இதெல்லாம் முடிய மூணு வருஷம் பிடிக்கும். அதுவரை எனக்காக நீ காத்திருப்பியா?''

''என்ன சந்துரு இது? முப்பது வருஷம் காத்திருக்கச் சொன்னாலும் நான் தயார். நான் மனசளவில உங்க மனைவியா வாழ ஆரம்பிச்சு ரொம்ப நாளாகுது! எங்கம்மா தான் முட்டுக்கட்டை போடுவாங்க. பட்... நான் ரொம்ப ஸ்டெடியா இருக்கேன். எனக்கு பக்க பலமா எங்கப்பா வேற இருக்கார். கண்டிப்பா நாம்ப ஒண்ணு சேர்வோம்!'' அவளது வலது கையைப் பற்றிக் கண்களில் ஒற்றிக் கொண்டான்.

சட்டென்று அவளது கையைப் பிடித்த சந்துரு சற்றே குனிந்து மென்மையாக முத்தமிட்டான். அக்ஷராவுக்கு ஒரு பக்கெட் நிறைய பனி நீரை அள்ளி அப்படியே தலையில் கொட்டியது போலிருந்தது. கன்னங்களும், காது மடல்களும் சிவந்து சூடாக நாணத்துடன் மெல்ல கையை உருவிக் கொள்ள முயன்றாள்.

''வி... விடுங்க சந்துரு! யாராச்சும் பாத்துடப் போறாங்க'' என்றாள்.

''பாக்கட்டும்... ஆனாலும் அக்ஷரா சேலை கட்டினதும் அநியாயத்துக்கு நீ வெட்கப்படறே. உம்! ரொம்பத்தான் மாறிட்டே! 'தமிழ்நாட்டு வெட்கம் வந்தல்லோ...'' மெல்லிய குரலில் அவன் பாடியதும்,

''பூ... பூ... நாட்டி!'' முல்லைப் பல் வரிசை தெரிய அழகாய் முறுவலித்தாள் அக்ஷரா.



# 12

எங்கிருந்தோ குரல் கொடுத்த ஒரு காகத்தின் குரலுக்கு, மரத்திலிருந்த காகங்கள் பறந்தோடின. பங்களாவின் விஸ்தாரமான மொட்டை மாடி அது! பரந்து விரிந்த அந்த மரத்தினூடே இண்டு இடுக்கு விடாமல் தன் ஊசிக் கதிர்களை நுழைத்திருந்த சூரியனின் பிம்பங்கள், அங்கங்கு காசுகளை அள்ளி இறைத்தது போல் தரையில் சிதறியிருந்தன. கங்கா சுவற்றுக் கைப்பிடி மீது சாய்ந்தபடி எங்கோ வெறித்தாலும்... அவள் மனம் சொர்ணத்தின் திட்டத்தை எண்ணி அலை பாய்ந்து கொண்டிருந்தது.

'மாமியார் சொர்ணம் ஏதாவது ஒரு சாக்கு போக்கு சொல்லி வீட்டை விட்டுத் தன்னை துரத்தியடித்தால்? ஒரு போக்கிடமும் இல்லாத அவளுடைய கதி?'

அன்று நடந்த சம்பவத்திற்குப் பின்னால் மாமியாரின் அராஜகம் தலை தூக்கி ஆடியது. கால்களில் இன்னமும் காயம் ஆறவில்லையாதலால் சற்று ஊன்றித் தான் நடந்தாள். அக்ஷராவும், விஸ்வநாதனும் சாப்பிட்டு முடித்து கல்லூரிக்கும், ஆபீசுக்கும் வெளிக் கிளம்பி விட்டால் போதும், கங்காவை விரட்டி விரட்டி வேலை வாங்கிப் படாத பாடு படுத்துவாள்.

''அத்தே! நீங்க சொன்ன மாதிரி கேழ்வரகு மாவுல அடை சுட்டுக் கொண்டு வந்திருக்கேன்.'' பவ்யமாகத் தட்டை நீட்டினாள் கங்கா.

''வெங்காயம், பச்சை மிளகாய், கறிவேப்பிலை, கேரட்டை பொடியா நறுக்கிப் போட்டியா?'' நாக்கில் ஜலம் ஊற ஆவலுடன் தட்டை வாங்கிச் சுவைத்தாள் சொர்ணம்.

''ஆமா அத்தே! தொட்டுக்க காரசாரமா கொத்தமல்லிச் சட்னி செய்துருக்கேன்!'' கிண்ணத்திலிருந்த சட்னியை ஸ்பூனால் அள்ளி தட்டில் ஓரமாக வைத்தாள் கங்கா. காரசாரமாக சுவையும், மனமுமாக இருந்தது. நாக்கைச் சப்புக் கொட்டினாள் சொர்ணம்.

'எவ்வளவு சம்பளம் கொடுத்தாலும் இந்த அளவுக்கு ருசியாக, பக்குவமாக சமைக்க ஆள் கிடைக்குமா? அவளது கை மணத்தை வக்கணையாய் அனுபவித்தாகி விட்டது?'

சொர்ணத்திற்கு இரட்டை நாடி சரீரம். வீட்டிலிருக்கும் சமயத்தில் ஏதாவது ஒன்றைக் கொறிக்க வேண்டும். மூன்று வேளைக்கும் சாப்பிட்டது போக... இடையிடையே ஏதாவது ஒரு பலகாரத்தைச் சுடச்சுட பொருத்தமான பதார்த்தத்துடன் வயிற்றுக்குள் தள்ளினாள்.

''ஏய்! மூணு அடை போதும். நாந்தான் 'டயட்'டில் இருக்கேன்னு தெரியுமில்லே?'' உறுமுவாள். நான்கு முழத்திற்கு நாக்கை வைத்துக் கொண்டு, சதா அரவை மிஷின் போல் அரைத்துத் தள்ளி விட்டு... 'டயட்'டைப் பற்றி வேறு பேசினாள். கைகளைக் கழுவித் துவாலையால் துடைத்துக் கொண்டு சோபாவில் சாய்ந்து சிறு மோடாவில் கால்களை நீட்டிக் கொண்டாள்.



''மசமசன்னு நிக்காம போய் வேலையை கவனி! ஆங்! அப்படியே கொஞ்சம் ஒரு கைப்பிடி முந்திரிப் பருப்பை மிளகுத்தூள் உப்புப் போட்டு நெய்யில வறுத்து எடுத்துட்டு வா'' துரித கதியில் நடந்து சென்ற கங்காவின் முதுகையே யோசனையுடன் வெறித்தாள் சொர்ணம்.

'எவ்வளவு வேலைப்பளுவைக் கொடுத்தாலும் 'மாங்கு, மாங்கு' என்று செய்கிறாள்.

'கை தேர்ந்த சமையல்காரியைப் போல்... எத்தனை பேரை விருந்துக்கு அழைத்தாலும் சளைக்காமல் முந்தானையை வரிந்து இடுப்பில் சொருகிக் கொண்டு எந்திர வேகத்தில், அதுவும் நாக்கைச் சுழற்றும் அளவுக்கு ருசிகரமாகச் சமைத்து விடுகின்றாள்.

'சாப்பிட்ட கையில் நாள் முழுவதும் கமகமவென வாசம் உள்ளதே? இவளை விரட்டியடித்தால் நமக்குத்தானே இழப்பு? வேறு ஏதாவது காரணம் காட்டி 'மருமகள்' என்ற அந்தஸ்தான பதவியைப் பறிமுதல் செய்து விட்டு, 'அக்மார்க்' முத்திரை குத்திய ஒரிஜினல் வேலைக்காரியாக்கி, அவுட் ஹவுஸில் குடியேறச் செய்ய வேண்டும்' சொர்ணத்தின் மூளை நரித்தனமாக யோசித்து கச்சிதமாகத் திட்டம் வகுத்தது.

''எம்மா வெயில்லே உட்கார்ந்திருக்கீங்க! தோட்டத்துல எல்லாம் தேடிப் பார்த்துட்டு வரேன். வாங்க! சின்ன ஐயா வந்துட்டாரு. பெரிய ஐயா உங்களை அழைச்சுட்டு வரச் சொன்னாங்க!'' அஞ்சலைக்கு மூச்சு வாங்கியது. அவசரமாக மாடி ஏறி வந்திருப்பாள் போலும். பம்மிய வயிறு வேகமாக ஏறி இறங்கியது.

சுவற்றுக் கைப்பிடியில் சாய்ந்து அமர்ந்திருந்த கங்கா திகைப்புடன் எழுந்தாள். ''வாயும் வயிறுமா இருக்கீங்க!

ஏன் இவ்ளோ அவசரமா ஓடி வர்றீங்க? கொஞ்சம் நிதானிச்சுட்டு... மெதுவா இறங்கி வாங்க!'' அன்புடன் கடிந்து கொண்ட கங்காவை அஞ்சலைக்கு நிரம்பவே பிடிக்கும். உள்ளுக்குள் உருகிப் போனாள்.

''சரிம்மா! ஆமா... வெங்காய வடாமை வெயில்லே காயப் போடறேன்னு... இங்க வந்தீங்க. அது சுக்கா காய்ஞ்சு போற வரைக்கும் நீங்களும் சேந்து காயணுமா? உஷ்ணக் கடுப்பு வந்துடும்மா!'' பதிலுக்கு அஞ்சலையும் அக்கறை காட்டிப் பேசினாள்.

லேசாக முறுவலித்த கங்கா, கால் தடுக்கி விடா வண்ணம் சேலைக் கொசுவத்தை சிறிது உயர்த்திப் பிடித்துக் கொண்டு, மெட்டி ஒலி சப்திக்க மடமடவென்று படிகளைக் கடந்து கீழே வந்தாள்.

''ஆமா... இன்னிக்குத்தான் சிங்கப்பூர்லேர்ந்து ஆனந்த் வந்தான். எந்த தேசத்துக்குப் போனாலும் சரி... எனக்காக வேண்டி விதவிதமா வித்தியாசமா பாத்து வாங்கிட்டு வந்துடறான். ஆனந்துக்கு என் மேல அளவு கடந்த பாசம்! சரி... ஒரு நடை வந்து பாத்துட்டுப் போறியா? உம்... சரி!'' மாமியார் சொர்ணம் போனில் யாரிடமோ தம்பட்டம் அடித்துக் கொண்டிருந்தாள்.

பரந்த ஹாலையொட்டி விஸ்வநாதனின் அலுவலக அறை இருந்தது. அறைக் கதவு ஒருக்களித்துச் சாத்தப் பட்டிருந்தது. தயக்கத்துடன் ஒரு வினாடி நின்றாள் கங்கா.

''என்ன யோசிக்கறே ஆனந்த்? நான் சொன்னதெல்லாம் புரிஞ்சுதா இல்லையா?'' விஸ்வநாதனின் கவலை தோய்ந்த குரல் கேட்டது.

''ச... சரிப்பா! புரியுதுப்பா! அ... அப்பா! நீங்க ஏற்கனவே ஹார்ட் பேஷண்ட். இதைப் பத்திக் கவலைப்பட்டு



மறுபடியும் நெஞ்சு வலி வரவழைச்சுக்காதீங்க!'' வருந்திய குரலில் ஆனந்த் பேசுவது நன்றாகக் கேட்டது.

''டாக்டர் என்னப்பா சொல்றார்?''

''வயசாயிடுச்சுல்ல... ஏதாவது ஒரு வியாதி வரத்தானே செய்யும்? நாலு நாள் முன்னாடி நெஞ்சை அடைச்சிட்டு வந்தது. கேஸ்ட்ரபிள்! ஏதாவது டென்ஷன் பட்டா... இப்பெல்லாம் இது மாதிரி ஆயிடுது. 'டென்ஷன் ஆகிட்டே இருந்தா... 'அட்டாக்கு'ல கொண்டு விட்டுரும்னு டாக்டர் சொல்றார். சொர்ணத்துக்கு இது தெரியாது. தெரிஞ்சா 'அட்டாக்' வந்துடுச்சுன்னு ஊரைக் கூட்டிடுவா'' கூறினார் விஸ்வநாதன்.

கங்கா நாசூக்காக ஒற்றை விரலால் கதவைத் தட்டினாள்.

''வாம்மா! உள்ளே வா! நம்ம வீட்டுலே உரிமையா உள்ளே நுழையணும். எதுக்கு தயங்கறே? நீ என்ன மூணாம் மனுஷியா?'' ஆதரவாகப் பேசினார். மெல்ல முறுவலித்த கங்கா ஆனந்தை ஏறிட்டாள். அவன் இமை கொட்டாமல் தன்னையே பார்ப்பது தெரிந்ததும், சட்டென்று பார்வையைத் தழைத்துக் கொண்டாள்.

''பாரும்மா! ரெண்டு பேரும் இன்னக்கித் தான் மனசு விட்டுப் பேசியிருக்கோம். இனி எல்லாம் நல்லபடியா நடக்கும் கங்கா! எனக்கு வயிறு பசிக்குதும்மா. சாப்பாடு ரெடியா? வா... உங்கையால பரிமாறு. எல்லாரும் சேந்து சாப்பிடலாம்!'' கனிவுடன் மருமகளைப் பார்த்துப் புன்னகைத்தார் விஸ்வநாதன்.

''இதோ... ஒரு நிமிஷம் அப்பா!'' பரபரப்புடன் நகர முயன்றாள் கங்கா.

''க... கங்கா... உனக்கு கால்லே இன்னமும் 'பெயின்' இருக்கா?'' தணிந்த குரலில் தயக்கத்துடன் கேட்டான் ஆனந்த்.

கங்காவுக்கு ஒரு கூடைப் பூக்களை வாரித் தலையில் கொட்டியது போலிருந்தது. சில்லென்ற காட்டு அருவியில் நனைந்தது போலிருந்தது. உள்ளுக்குள் சாரல் அடித்தது. அதுவரை வறண்டு கிடந்த பாலைவனத்தில் ஓராயிரம் வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கியது போலிருந்தது.

நிமிர்ந்து கணவரை ஏறிட்டுப் பார்த்த கங்கா, ''இப்போ பரவாயில்ல!'' என்றாள்.

ஆனந்த் தன்னிடம் பேசி விட்டதும் காலில் இருந்த வலியும் வேதனையும் பாதியாகக் குறைந்து விட்டது போலிருந்தது. மனதிலிருந்த பாரம் இறங்கி பஞ்சு போல் லேசானது.

மதியச் சாப்பாட்டை கங்கா பரிமாற, விஸ்வநாதன், ஆனந்த், சொர்ணம் ஆகியோர் சேர்ந்தமர்ந்து கலகல வென்று பேசி உண்டனர். சாப்பிட்டு முடித்ததும் கைகளைக் கழுவிக் கொண்ட ஆனந்த், ''வெளியே ஒரு வேலை இருக்கு. முடிச்சிட்டு வரதுக்கு லேட்டாகும். நைட் டின்னரை நான் வெளிலே முடிச்சுப்பேன். எனக்காக காத்திருக்காம சாப்பிட்டுப் படுங்க'' பொத்தாம் பொதுவாகக் கூறி விட்டு விருட்டென்று வெளியேறி போர்டிகோவிலிருந்த காரைக் கிளப்பிக் கொண்டு மறைந்தான்.

இரவு வெகு நேரம் வரை நாவலைப் புரட்டிக் கொண்டிருந்த கங்கா அசதி மிகுதியில் அயர்ந்து போய் உறங்கி



விட்டாள். ஒரு மணி வாக்கில் தான் ஆனந்தின் கார் உள்ளே நுழைந்தது. காரை நிறுத்தி விட்டுத் தள்ளாட்டத் துடன் சென்ற ஆனந்தை திகைப்புடன் பார்த்தான் வாட்ச்மேன்.

ஒரு நாளும் இல்லாத திருநாளாய் கழுத்து மட்டும் குடித்து விட்டு வந்திருந்தான். அறைக்குச் சென்று கட்டிலில் சரிந்து படுக்கப் போனவன் தற்செயலாய் திரும்பிப் பார்த்தான். கங்கா விளக்கை அணைக்காமலே, புத்தகத்தை மூடாமலே படுத்திருந்தாள். காற்றின் உபயத்தில் புத்தகத்தின் பக்கங்கள் படபடத்துக் கொண்டிருந்தன.

அவளருகில் சென்ற ஆனந்த் புத்தகத்தை மூடிவிட்டு கங்காவின் தோளை அழுந்தப் பற்றினான். திடுக்கிட்டு கண் விழித்த கங்காவுக்கு நடப்பதெல்லாம் கனவு போலிருந்தது. அவள் சூடியிருந்த மல்லிகைச் சரம் உதிரத் தொடங்கியது.

## 13

முடிந்ததை நினைப்பவன் மனிதன்! நினைத்ததை முடிப்பவன் இறைவன் அல்லவா? ஆனந்துக்கே விழித்த போதுதான் புரிந்தது. கண்களை ஓட விட்டவன்... தரையில் பெட்ஷீட் விரிப்பில் கங்காவின் இடத்தில் தான் படுத்திருப்பதை உணர்ந்தான்.

பெட்ஷீட்டிலும், தலையணையிலும் கசங்கின மல்லிகைப் பூக்கள் இரவில் நடந்ததைப் பறைசாற்றின. அவமானமும் குழப்பமும் ஒரு சேர தன்னையே நொந்து கொண்டான். தந்தை விஸ்வநாதன் முன்தினம் எவ்வளவோ புத்திமதி புகட்டியிருந்தார்.

'கங்காவின் மனதைக் கஷ்டப்படுத்தாமல்... அன்னியோன்யமாக சந்தோஷமாக அவளை வைத்துக் கொள்' என்று ஏகத்துக்கும் வற்புறுத்தினார். அச்சமயத்தில் அந்த நியாயம் புரிந்தது.

'அவளை ஏற்றுக் கொள்வதில் அவனுக்கு என்ன தயக்கம்? ஏழை, அனாதை என்ற இளக்காரமா? அவளுக்கு கட்டாயத் தாலி கட்ட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளானதா? தாய் சொல் தட்டாத தனயன் ஆனந்த்! தாய்க்குப் பிடிக்கவில்லை என்பதால் தனக்கும் கட்டோடு பிடிக்காமல் போய் விட்டதா?

'திருமணத்தன்று, நண்பர்கள் இதழ்க்கிடையில் முறுவல் தொக்கி நிற்க... காட்சிப் பொருளைப் பார்ப்பது போல் வேடிக்கை பார்த்தார்களே? அதுவா?' இனம் பிரித்தறிய முடியாத குழப்பம் அவனை ஆட்டிப் படைத்தது.

'ஸ்திரத் தன்மையும், சஞ்சலமற்ற மனப்போக்கும் ஒரு ஆண் மகனுக்கு இரு கண்கள் போன்றவை. இவை இல்லாவிட்டால் குடும்பத்தில் குழப்பமும் பல பேருடைய நிம்மதியும் மரணிக்கும்.'

வாழ்வின் போக்கு தறி கெட்டுப் போய்... சமயத்தில் விலை மதிக்க முடியாத உயிரை இழக்கவும் நேரிடும். ஆனந்த் வாழ்க்கையில் நடந்ததும் அதுதான்!



தந்தையின் வேண்டுகோளை ஏற்று நடக்கவும் மனமில்லை. இல்லற வாழ்க்கையில் ஒரு தீர்மானமான முடிவுக்கும் வர முடியவில்லை. அந்த குழப்பவாதி தன் நிலை குறித்து தன்னையே நொந்து கொண்டான்.

ஆனால் கங்காவின் மனநிலையோ வேறு விதமாயிருந்தது. தன் கணவனை அதி தீவிரமாய் நேசித்தவள், அவள் முகம் பார்த்தே வாழ்ந்து முடித்து விடலாமே என்ற எண்ணம் கொண்டவள், எதிர்பாராத தருணத்தில் தன்னை ஆட்கொண்டான் என்றதும் அதைத் தன் காதலின் வெகுமதியாகக் கருதினாள்.

ஆனாலும் இதயத்தின் ஓரத்தில் கங்காவுக்கு ரத்தம் கசிந்தது. கணவனின் அணைப்பில் அடங்கியபோது நாசிக்குப் பிடிக்காத நெடி வந்தது. அவளை உறுத்தியது. 'அளவுக்கு மீறி குடித்து விட்டு சுய நினைவை இழந்து குடிபோதையில் தான் கங்காவை நாடினானா?' சம்மட்டியால் அடி வாங்கியது போல் வேதனையில் துடித்துப் போனாள்.

வேதாளம் மீண்டும் முருங்கை மரம் ஏறியது போல்... ஆனந்த் வழக்கம் போல் பணி நிமித்தமாக வெளி மாநிலம், வெளிநாடு என முடிந்தவரை தான் வீட்டில் இல்லாதவாறு பார்த்துக் கொண்டான்.

மாதங்கள் உருண்டோடின. மூன்று மாதங்கள் முடிந்த பின் தான் ஆனந்த் கவனித்தான். கங்கா அங்குமிங்கும் பரபரப்பாக நடமாடி அலையாமல்... அந்த மெட்டி சத்தம் ஒலிக்காமல் ஏதாவதொரு வித்தியாசம் கண்ணில் பட்டது. ஒருமுறை தற்செயலாக மாடியறையிலிருந்து பார்த்தவன் திடுக்கிட்டுப் போனான்.

கன்னங்கள் ஒட்டிப் போய், கண்கள் உள் வாங்கி உருத் தெரியாமல் ஆளே மாறி விட்டிருந்தாள். யோசனையுடன் நகர யத்தனித்த நேரத்தில் கீழே அஞ்சலையின் குரல் கேட்டது.

''என்னவோ தெரியலீங்கம்மா! நாலஞ்சு நாளா கங்காம்மா எதுவுமே சாப்பிடறதில்லை. தண்ணி குடிச் சாக்கூட வாந்தி எடுத்திடறாங்க. கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி கூட மயங்கி சரியப் பாத்தாங்க. நாந்தான் தண்ணி தெளிச்சு எழுப்பினேன்! உங்ககிட்ட சொல்ல வேணாம்னாங்க! எனக்கு தான் மனசு கேட்கலை!'' பவ்யத்துடன் கூறினாள் அஞ்சலை.

''ச்சே! சமயம் பாத்து சொதப்புவாளே? ஜட்ஜ் சம்சாரம் ஒரு வேலையா இந்த ஏரியாவுக்கு வராங்களாம். அப் படியே நம்ம வீட்டுக்கும் வரேன்னு போன்லே காத்தால சொன்னாங்க. ஸ்பெஷல் அயிட்டம் செஞ்சு வச்சு அசத்தலாம்னு பாத்தா... இந்த தறுதலை கழுத்தறுக் கிறாளே? சரி ஒரு ஆட்டோ புடிச்சிட்டு வந்து அவளை ஏதாவது ஒரு டாக்டரிடம் காட்டிட்டு வா!''

''சரிங்கம்மா!'' தயக்கமாய் நகர்ந்தாள் அஞ்சலை.

'வீட்டில் நாலைந்து கார்கள் இருக்க, கட்டிய மனை விக்கு ஆட்டோவா? போன் பண்ணினால் அடுத்த நிமிடம் குடும்ப மருத்துவர் ஓடி வரமாட்டாரா?' ஆனந்த் உள்ளூரக் குமைந்தான். குற்றவுணர்ச்சி செல்லாய் அவனை அரித்தது.

அஞ்சலை கங்காவுடன் வீடு திரும்ப வெகு நேரமாகி விட்டது. சொர்ணம், ஜட்ஜின் மனைவியுடன் உச்ச ஸ்தாயியில் பேசிக் கொண்டிருந்தாள்.



''அம்மா! கங்காம்மா... இப்போ மூனு மாசம் கர்ப்பமா இருக்காங்களாம்!'' அஞ்சலை இங்கிதம் தெரியாமல் விஷயத்தைக் கூறி விட்டாள்.

சொர்ணத்திற்குப் பற்றிக் கொண்டு வந்தது. உள்ளூர குமுறிய எரிமலையை அடக்கி விட்டு முகத்தை மலர்த்தினாள்.

''கங்கிராட்ஸ் மா!'' கங்காவைப் பார்த்து புன்னகைத்த ஜட்ஜ் மனைவி சொர்ணத்தின் கையைப் பிடித்துக் கொண் டாள்.

''மிசஸ் சொர்ணம்! அயாம் ப்ரௌட் ஆப் யூ! உங்களை மாதிரி பரந்த மனசு யாருக்கும் இலேசுல வராது. அபலைப் பெண்ணை மருமகளாக்கி கவுரவப்படுத்தினீங்க. இப்போ அவ மூலமா உங்களோட அடுத்த தலைமுறை உருவாகி யிருக்கு! வெல்டன்! மை ஹார்ட்டி கங்கிராஜுலே ஷன்ஸ்!'' மிருதுவாகத் தோளைத் தட்டினார்.

''சரி! நம்ம மெம்பர்ஸுக்கெல்லாம் எப்போ ட்ரீட்?'' சிரித்தார்.

சொர்ணத்தை கிலியுடன் ஏறிட்டாள் கங்கா. திகிலில் அவளது கைவிரல்கள் சில்லிட்டுப் போயின.

## 14

ஆட்டோ தடதடத்து வந்து நிற்கும் சத்தம் கேட்டதும் ஆவலாய் எட்டிப் பார்த்தான் ஆனந்த். அஞ்சலை சொன்ன

சமாச்சாரத்தைக் கேட்டதும் இனம் புரியாத உணர்வில் தத்தளித்தான். ஜட்ஜின் மனைவி சிலாகித்துப் பாராட்டிய போது, கங்கா தற்செயலாய் மேலே நின்ற ஆனந்தத்தை கவனித்து விட்டாள்.

எந்தப் பெண்ணும் இந்த விஷயத்தை கணவனிடம் முதன் முதலாய் பகிர்ந்து கொள்ள ஆசைப்படுவாள். கங்காவின் வெறித்த பார்வையிலிருந்த தீட்சண்யத்தை எதிர் நோக்கத் தெம்பில்லாமல் பார்வையை தழைத்துக் கொண்டு விருட்டென்று அகன்றான்.

'மளக்' என்று கண்ணீர் உடைபடும் நேரத்தில், கண்களைச் சிமிட்டி உள்ளே இழுத்துக் கொண்டாள் கங்கா. கண நேரம் தான் உடனே தன்னை விறைப்பாக்கிக் கொண்டு கிச்சனை நோக்கி நகர்ந்தாள். சற்று நேரத்தில் காலேஜ் முடிந்து அக்ஷரா அசதியாய் உள்ளே வந்தாள்.

சொர்ணம் ஓரக்கண்ணால் ஜட்ஜின் மனைவியை நோட்டமிட்டாள். தன் மகளை ஏற, இறங்க அவர் அளவெடுப்பதைக் கண்டதும் புளகாங்கிதம் அடைந்தாள். ஜட்ஜ் மகனுக்குத் தன் மகளைக் கட்டிக் கொடுத்தால் தன் ஸ்டேட்டஸ் இன்னமும் உயர்வடையுமே!

"அக்ஷரா! ஒரு குட் நியூஸ்... உங்கண்ணி உண்டாகியிருக்கா! மூணு மாசம்னு டாக்டர் சொல்லியிருக்காங்க. வர வர மருமகளோட உடம்பு உருகிட்டே போகுதேன்னு கவலைப்பட்டேன். விஷயம் தெரிஞ்சதும் வயித்துல பாலை வார்த்தாப்பல இருக்கு. நைட் தூங்கறதுக்கு முன்னாடி ஞாபகப்படுத்து கங்காவுக்கு திருஷ்டி சுத்திப் போடணும்."

தாயின் நடிப்பைக் கண்டு உள்ளூர வெகுண்டு போனாலும்... அக்ஷரா தனது அண்ணி தாய்மையடைந்ததை எண்ணி மகிழ்ந்து போனாள்.



வறண்டு கிடந்த கங்காவின் வாழ்வைச் செழிக்க வைத்து, பசுஞ்சோலையாக மாற்றும் சக்தி... பிறக்கப் போகும் புது ஜீவனுக்கு உண்டு என்று அக்ஷராவுக்குப் பட்டது. நாலே பாய்ச்சலில் கிச்சனுக்குள் புகுந்து அண்ணியைக் கட்டிக் கொண்டாள்.

"ரொ... ரொம்ப சந்தோஷமா்க்கு அண்ணி!" வாஞ்சையுடன் அண்ணியின் நெற்றியில் முத்தமிட்டாள்.

"கொழு கொழுன்னு அழகா ஒரு பையனைப் பெத்துக் குடுங்க. அப்பத்தான் எனக்கு வசதியாக இருக்கும், சரியா?"

"உனக்கு வசதியா இருக்குமா? நீ என்ன சொல்றே?" புரியாத குரலில் கேட்டாள் கங்கா.

"நீங்க பையனைப் பெத்து வச்சா... நாளைக்கு நான் பொண்ணைப் பெத்து... ரெண்டுத்துக்கும் கல்யாணம் பண்ணி வைக்கலாம் பாருங்க! அதுக்குத்தான்" கலாய்த்தாள் அக்ஷரா.

"ச்சீ! குறும்புக்காரி... வயசுப் பொண்ணு பிள்ளைப் பெக்கிறதைப் பத்தி பேசலாமா?" கங்காவின் இருண்டு கிடந்த முகத்தில் சின்ன மின்னல் வெட்டியது.

"அட நீங்க வேறே! இன்னும் ஹைதர் காலத்துலேயே இருக்கீங்க. காலேஜுலே எங்க அரட்டைக் கச்சேரியைப் பாத்தீங்கன்னா... அரண்டே போவீங்க. இந்த மேட்டரை எல்லாத்துக்கும் சொல்லணுமே! டேக் கேர் அண்ணி!" தனது 'செல்'லை உயிர்ப்பித்துக் கொண்டே உற்சாகத்துடன் நடந்தாள் அக்ஷரா.

அனைத்துப் பணிகளையும் முடித்துவிட்டு தங்களது அறைக்கு வந்தாள் கங்கா. தனது ஆபீஸ் அறையில்

கம்ப்யூட்டர் முன் அமர்ந்து பட்டன்களைத் தட்டி ஸ்கிரீனில் சீரியஸாக பார்வையைப் பதித்திருந்தான் ஆனந்த். மும்முரமான வேலையில் லயித்திருப்பதாகப் பொய்யான முக பாவனை!

விம்மலைக் கட்டுப்படுத்திக் கொண்டு சட்டென்று வெளியே வந்த கங்கா வெறும் தலையணையை மட்டும் தரையில் போட்டுப் படுத்தாள்.

'ஒரு அன்னையின் அன்பையும், கரிசனத்தையும் ஒரு கணவனால் காட்ட முடியுமே? சந்தோஷத்தின் வெளிப் பாடாக மெல்ல அணைத்து நெற்றியில் இதழ் பதித்து "நாம் வாரிசு இது! நீ சந்தோஷமாக இருந்தால் தானே... குழந்தை ஆரோக்கியமாகப் பிறக்கும்" என்று ஆறுத லாகப் பேசினால் உடலில் உள்ள வியாதி ஓடிப்போய் விடாதா?

'அன்பாய் ஒரு அணைப்பு, இதமாய் ஒரு முத்தம், கனிவாய் ஒரு பார்வை போதுமே? அந்த திருப்தி தரும் பலத்தில் ஒரு பெண் ஏழு மலைகளையும் ஏறிக் கடப்பாளே?'

சில்லிட்ட தரையில் அவள் படுத்துக் கொண்டிருந் ததைக் கண்ட ஆனந்த் ஒரு பெட்ஷீட்டை எடுத்துக் கொண்டு வந்து அவளை எழுப்பினான். 'எத்தனையோ நாட்கள் இது போல் கிடந்திருக்கிறாளே... கணவன் கண்டு கொண்டதேயில்லையே... இன்று மட்டும் என்ன அக்கறையாம்?"

தோளைத் தொட்டு எழுப்பியும் அவள் திரும்ப வில்லை. ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பதைப் போன்று பாசாங்கு செய்தாள். ஒரு வினாடி யோசித்த ஆனந்த்



அவளது முதுகை ஒட்டி பெட்ஷீட்டை விரித்துப் போட்டு விட்டுத் தயக்கத்துடன் கட்டிலில் வந்து படுத்தான்.

கட்டிலில் படுத்தபடி தன்னையே நோட்டமிடுகிறான் என்பது புரிய கங்கா, தப்பித் தவறிக்கூட திரும்பிப் படுக்கவில்லை. நீண்ட நேரமாக ஒரே பக்கமாக ஒருக் களித்துப் படுத்ததால்... அந்தப் பக்கம் முழுவதுமாக அதீதமாக வலியெடுத்தது.

அந்தப் பொறுமையின் சிகரத்திற்கு... எங்கிருந்தோ கோப உணர்ச்சி பொத்துக் கொண்டு வந்தது. பிடி வாதமும், உதாசீனப்படுத்தியவர்களைப் பழிவாங்கும் பொருட்டு தன்னைத் தானே வருத்திக் கொள்ளும் மனோ பாவமும், ஒரு வித அசாத்தியத் துணிச்சலும் தோன்றின.

கணவனது அன்பிற்காக ஏங்கித் தவித்தவள், குற்ற வுணர்ச்சியில் அவன் தூங்காமல் அலைக்கழிய வேண் டும் என்று உறுதி கொண்டாள். 'மாமியார் சொர்ணம் கூட நட்புக்காகவாவது தனது மகிழ்ச்சியையும் அக்கறையை யும் ஜட்ஜ் மனைவி முன்பு காட்டிக் கொண்டாளே? ஆனால்... ஆனந்த்?'

பெற்ற தாயின் சந்தோஷத்திற்காக... கட்டிய மனைவி கங்காவைக் கண்டு கொள்ளவேயில்லையே.

மனைவியின் மனதைச் சாகடித்த கணவன்... கால முச்சூடும் கண்ணீரும் கம்பலையுமாக நிம்மதியிழந்து தவிக்க வேண்டும். உள்ளூர கறுவியபடி கங்கா தன் இறுதி நாட்களை வேகமாக எண்ணத் தொடங்கினாள்.

# 15

வேலைக்காரி அஞ்சலைக்கு பேறு காலம் வந்து விட்டது. மூன்று மாதங்கள் கழித்துத் தான் இனி வேலைக்குத் திரும்புவாள்: சுற்று வேலை செய்ய சட்டென்று புது வேலைக்காரி கிடைக்கவில்லை. திறமை வாய்ந்த சமையல்காரரையும் புது வேலைக்காரியையும் அவ்வப்போது பணிக்கு அமர்த்திக் கொண்டு தானிருந்தார் விஸ்வநாதன்.

ஆனால் சொர்ணமோ கண்களில் விளக்கெண்ணெய் விட்டுக் கொண்டு... குற்றம் குறை கண்டுபிடித்து அவர்களைத் துரத்தி விட்டுத் தான் மறுவேலை பார்த்தாள். கங்கா எல்லா வேலைகளையும் செய்வது போதாதென்று... சொர்ணம் தனக்குப் பிடித்த அயிட்டத்தை செய்து தரச் சொல்லி உயிரை வாங்கினாள்.

''ஏய்! உருளைக்கிழங்கு பஜ்ஜி சூடா போட்டுக் கொண்டு வா!'' ஏவினாள். 'பஜ்ஜியா?' திகைத்துப் போய் தயங்கி நின்றாள் கங்கா. கரு உண்டானதிலிருந்து அவளுக்கு எண்ணெய் பலகாரங்களைச் சமைத்தாலே... வயிற்றை ஒரு பிரட்டு பிரட்டி வெளியில் தள்ளி விடும். அடிக்கடி வாந்தி பண்ணி தொண்டையெல்லாம் ரணமாகி, எச்சிலை விழுங்கக்கூட முடியவில்லை.

''ப... பஜ்ஜி செய்தா... எண்ணெய் பலகாரம்னாலே... குமட்டி வாந்தி வந்துடும்'' தயங்கி நிறுத்தினாள்.



''மசக்கைன்னா... அப்டி இப்டி இருக்கத்தான் செய்யும்! வக்கத்த மனுஷிக்கு வாயைப் பாரேன்! உன்னை எப்படி கழிச்சுக் கட்டறதுன்னு... நான் யோசிச்சுட்டிருக்கேன். புதுசா வாரிசு வேற வயித்துல உருவாகித் தொலைச்சிருக்கு.., மறுத்துப் பேசாதே! ஆத்திரத்துல நான் என்ன பண்ணுவேன்னு... எனக்கே தெரியாது'' ஆக்ரோஷத்துடன் கங்காவின் புஜத்தில் கை வைத்து வேகமாகப் பிடித்துத் தள்ளினாள்.

மாமியார் அழைத்த மாத்திரத்தில்... வத்தக் குழம்பிற்கு ஊறப் போட்ட புளியை சிறு கிண்ணத்தில் கரைத்துக் கொண்டிருந்த கங்கா, அப்படியே வந்திருந்தாள். போர்டி கோவில் காரை நிறுத்தி விட்டு உள்ளே நுழைந்த ஆனந்த்... தாயின் ஆவேசக் கூச்சலைக் கேட்டு விட்டு, நான்கே பாய்ச்சலில் நெருங்கி விட்டான்.

கங்கா வீலென்று பயத்தில் அலறியபடி மல்லாந்து விழுந்து தருணத்தில்... சட்டென்று கையிலிருந்த ப்ரீஃப்கேஸை கீழே போட்டு விட்டு அவளைத் தாங்கிக் கொண்டான். மெலிந்து போயிருந்த மெல்லிய தேகம் அதிர்ச்சியில் வெடவெடவென்று நடுங்குவதைக் கண்டான்.

சொர்ணம் போட்ட கூச்சலில் வாட்ச்மேன் வேறு ஓடி வந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். சொல்லி வைத்தாற்போல் அக்ஷராவும், விஸ்வநாதனும் உள்ளே வந்து கொண்டிருந்தனர். கங்கா சுதாரித்து நிமிர்ந்து நிற்கவும், ஆனந்த் தாடை இறுக ப்ரீஃப்கேஸை எடுத்துக் கொண்டு... சொர்ணத்தை ஏறிட்டுப் பார்க்காமல் மடமடவென மாடியேறிப் போய் விட்டான்.

''சொர்ணம்! கர்ப்பிணிப் பெண்ணை பார்த்தா... கல் மனசும் இளகிடும்னு சொல்வாங்க. அவ இந்த வீட்டு மருமக. நம்ம குடும்ப வாரிசை சுமந்திட்டிருக்கா. தாய்மை அடைஞ்ச சமயத்துல ஒரு பொண்ணுக்கு உடல் ரீதியா எவ்ளோ இடர்ப்பாடு வரும்னு உனக்குத் தெரியாதா? நீயும் ரெண்டு குழந்தைகளுக்குத் தாயானவ தானே? ஈவு இரக்கமே இல்லையா?'' இரைந்து கத்தி விட்டார் விஸ்வ நாதன்.

''ஜட்ஜ் வொய்ஃப் முன்னாடி மட்டும் நடிக்கத் தெரியுதுல்ல? திருந்தவே மாட்டியாம்மா? அண்ணி கிட்ட இதே மாதிரி நடந்துகிட்டா... என்ன பண்ணுவேன்னு எனக்கே தெரியாது'' அக்ஷராவும் அன்னையிடம் பாய்ந் தாள்.

''வக்கத்த அண்ணிக்கு வக்காலத்து வாங்கிட்டு... என்ன மிரட்டறே?'' துடுக்காகக் கேட்டாள் சொர்ணம்.

''உங்க கிளப் மெம்பர்ஸ் ஒவ்வொருத்தரோட வீட்டுக் கும் போன் பண்ணி உங்க அராஜகத்தைச் சொல்லுவேன். முக்கியமா மிசஸ். கோமதி ராஜேந்திரன் கிட்ட சொன்னா... உங்களை நார் நாராக கிழிச்சுத் தொங்க விட்டுடுவாங்க'' முகத்தில் அறைபட்டது போலிருந்தது சொர்ணத்திற்கு.

அடுத்த இரண்டு தினங்களில் சமையல் வேலைக்கும், வீட்டு வேலைக்கும் இரு நடுத்தர வயதுப் பெண்மணி களை நியமித்து விட்டிருந்தார் விஸ்வநாதன். கூடை நிறைய பழ வகைகளை அவ்வப்போது வாங்கிப் போட் டார். நல்ல தரமான குங்குமப் பூவை, காஷ்மீரிலிருந்து தெரிந்த நண்பர் மூலம் வரவழைத்து மருமகளுக்குக் கொடுத்தார்.



நாளொரு மேனி பொழுதொரு வண்ணமுமாக கங்கா வின் வயிற்றில் குழந்தை வளர்ந்து வந்தாலும், நாளுக்கு நாள் கங்கா குருத்தெலும்பு கண்களை உறுத்தும் வண் ணம் நலிந்து கொண்டே வந்தாள்.

வேலைக்காரியைத் துணைக்கு அழைத்துக் கொண்டு ரெகுலராக அவள் காட்டி வரும் டாக்டரிடம் சென்றபோது டாக்டர் சற்றே கோபத்துடன் பேசி விட்டார்.

''பி.பி. இருக்கும்மா! டெஸ்ட் பண்ணி பாத்ததில பிளட் ரொம்ப கம்மியா இருக்கு. கால் இரண்டும் ஏகத்துக்கும் வீங்கிப் போச்சு. ஜெனரலா நாங்க கர்ப்பிணி பொண்ணுங்களை... குனிஞ்சு நிமிர்ந்து நல்லா வேலை செய்யணும்னு அட்வைஸ் பண்ணுவோம். அப்பத்தான் டெலிவரில ஈஸியா இருக்கும்.

''ஆனா உன் விஷயத்துல அப்டி முடியாது. வேலையை இழுத்துப் போட்டு செஞ்சா... பி.பி. எகிறிடும். மாடிப்படி ஏறாதே! பி.பி. கண்ட்ரோல் டேப்ளட்ஸ் எழுதிக் குடுத்தேனே? போடறியா இல்லையா? நான் சொல்றபடி கரெக்டா பாலோ பண்ணு! பி.பி. இந்த மாதிரி தொடர்ந்து இருந்ததுன்னா... என்னால ரெண்டுல ஒரு உயிரைத்தான் காப்பாத்த முடியும். அசால்டா இருக்காதே கங்கா! வாக்கிங் கண்டிப்பா வேண்டாம்.

''நார்மல் டெலிவரிக்குச் சான்ஸே இல்லை. பி.பி. ஜாஸ்தியானா... பிட்ஸ் வந்து உயிருக்கே உலை வச்சிடும். மறக்காம டேப்ளட்ஸ் போடும்மா... ஆமா... ஒரு வாட்டி கூட உன்னோட ஹஸ்பெண்ட் இங்க வரலையே? ஏன்? வீட்ல பெரியவங்க இருந்தா... அவசியம் அழைச்சிட்டு வா! நான் அவங்க கிட்ட கொஞ்சம் பேசணும். உன் னோட முகத்துல கொஞ்சம் கூட சீரியஸ்னஸ்ஸே

தெரியலை. அதான்!'' கறாராகப் பேசி விட்டார் டாக்டர் விஜயகுமாரி.

பணிவுடன் தலையாட்டி விட்டு பிரிஸ்கிரிப்ஷனைப் பெற்றுக் கொண்டு வெளியே வந்தாள் கங்கா. சமயோசிதமாக வேலைக்காரியை வெளிநோயாளிகள் அமரும் பெஞ்சில் அமர வைத்து விட்டுத்தான் உள்ளே சென்றிருந்தாள்.

''வாங்க! போலாம்... எல்லாம் நல்லபடி இருக்குன்னு டாக்டர் சொல்லிட்டாங்க!'' வலிய புன்னகைத்தாள். அவள் அறியா வண்ணம் கையிலிருந்த பிரிஸ்கிரிப் ஷனைக் கசக்கி ரோட்டோரமாகத் தூக்கி எறிந்தாள்.

''ஆட்டோ வேணாம். நடந்து போலாம்!'' என்றவாறு வீங்கிப் போன கால்களால் சிரமப்பட்டு மூச்சிரைக்க நடக்க ஆரம்பித்தாள் கங்கா.

## 16

கங்காவுக்கு லேசாக இடுப்பு வலித்தது. சமையல்கார அம்மாவைத் தவிர வீட்டில் யாருமில்லை. ஆளுக்கொரு வேலையாக வெளியில் சென்றிருந்தனர். அதிக இடை வெளி விட்டு வந்து வந்து போன இடுப்பு வலி சற்று நேரத்தில் இடைவெளி குறைந்த தினுசில் அடிக்கடி வலித்தது. உடம்பு முழுவதும் வியர்த்துக் கொட்டியதில் கங்கா தொப்பலாக நனைந்தாள்.



பற்களைக் கடித்துக் கொண்டு பொறுத்துப் பார்த்தும் வலி தாளாமல் போகவே கதற ஆரம்பித்தாள். சமை யல்காரம்மா வாட்ச்மேனிடம் விஷயத்தைக் கூற... வாட்ச்மேன் 'செல்லில்' விஷயத்தை விஸ்வநாதனுக்கும் ஆனந்துக்கும் தெரிவித்து விட்டு டாக்ஸியில் கங்காவை ஏற்றி ஆஸ்பத்திரிக்கு விரைந்தாள்.

வேதனை மேலீட்டால், அவள் துடித்த விதத்தைப் பார்த்தவுடனே டாக்டர் விஜயகுமாரி புரிந்து கொண்டாள்.

''டியூ டேட்''க்கு இன்னமும் ரெண்டு வாரம் இருக்கே. சரி... பெயின் வந்து ரொம்ப நேரமாயிடுச்சா? ஏம்மா.. வீட்டுலேர்ந்து வேற யாரும் வரலையா? இவளுக்கு சிசேரியன் தான்னு ஆரம்பத்துலேயே சொன்னேனே... ஆபரேஷன் உடனடியா பண்ணணும்! அதுக்கு முன்னாடி இவளோட கணவர் கிட்டயோ... பெத்தவங்க கிட்டயோ 'சைன்' வாங்கணுமே! போம்மா... சீக்கிரம் வரச் சொல்லு!'' சமையல்காரியிடம் கோபமாகப் பேசி விட்டார்.

பதறியடித்துக் கொண்டு விஸ்வநாதனும், வழக்கம் போல் சஞ்சலத்தில் சிக்கிய மனத்துடன் ஆனந்தும் விரைந்து வந்து சேர்ந்தனர். பார்மில் கையெழுத்து வாங்கிய மறுகணமே கங்கா மின்னல் வேகத்தில் ஆபரேஷன் தியேட்டருக்குள் கொண்டு செல்லப்பட்டாள்.

ஒரு மணி நேரம் அவஸ்தையாய் நகர்ந்தது.

'பெண் குழந்தை பிறந்திருக்கு! பட்... கங்காவைத் தான்...' குரல் கம்ம தடுமாறினார் டாக்டர்.

''என்னாச்சு... என்னாச்சு டாக்டர்? கங்கா நல் லாருக்கால்ல?'' ஏக குரலில் விஸ்வநாதனும் ஆனந்தும் பதறினர்.

''ஷி இஸ் நோ மோர். கடைசி நேரத்துல வந்து பதறி என்ன பிரயோஜனம்? பி.பி. ரொம்ப ஜாஸ்தியா இருக்கு. கங்கா நல்ல ரெஸ்ட்டுல இருக்கனும். பி.பி. கண்ட்ரோல் டேப்ளட்ஸ் தவறாம எடுத்துக்கனும்னு படிச்சு படிச்சு சொல்லி அனுப்பிச்சேன். என்னோட அட்வைஸ்படி அவ நடந்ததா... தெரியலையே? நான் எழுதிக் கொடுத்த மருந்து மாத்திரைகளை தினமும் எடுத்துக்கிட்டிருந்தா... விஷயம் இவ்ளோ தூரம் ஆகியிருக்காதே?

''ஏன் மிஸ்டர் அவ உங்க வொய்ப்தானே? ஒரு வாட்டி கூட அவளுக்குத் துணையா நீங்க கன்சல்டிங் பண்ண வந்ததே இல்லையே? தலைப்பிரசவம்கிறது ஒரு பொண்ணுக்கு மறு பிறவி மாதிரின்னு உங்களுக்குத் தெரியாதா?... நீங்க அந்தப் பொண்ணுக்கு மாமனாரா? நாளுக்கு நாள் அனிமீக்கா... உருக்குலைஞ்சு கால் ரெண்டும் ஏகத்துக்கும் வீங்கி... குற்றுயியிரும், கொலை உயிருமா கங்கா நடமாடறதை... வேடிக்கை பார்த்துட்டு இருந்தீங்களா?

''அவங்களோட ஹெல்த் கண்டிஷனைப் பத்தி என் கிட்ட விசாரிச்சுட்டுப் போயிருந்தா... இப்போ அநியாயமா கங்காவைப் பறி கொடுத்திருக்க மாட்டீங்கல்ல? என்னைக் கேட்டா தப்பு உங்க மேல தான் இருக்கு! சிசேரியன் பண்ணி பாப்பாவை எடுத்த கையோட... கங்காவுக்கு பிட்ஸ் வந்துடுச்சு!

''அந்தப் பொண்ணை ஆரம்பத்துலே இருந்து நான் கவனிச்சேன். வாழணும்னு ஒரு பிடிப்பே இல்லாதவ மாதிரி இருந்தா... வாழணும்னு ஆசையிருந்தா... எம லோகத்தைத் தொட்டுட்டுக்கூட திரும்பி வந்துடலாம்...'' அது இல்லைன்னா... இப்படித்தான் ஆகும்.''



தன் உடம்பிலிருந்த உயிரை யாரோ உருவி எடுத்து விட்டது போலிருந்தது ஆனந்துக்கு. அவனது நெஞ்சைக் குற்ற உணர்வு கூறு போட்டது.

## 17

அந்தப் பெரிய சட்டத்துக்குள் அடங்கி... முகத்தில் சாந்தம் தவழ, இதழோரம் சிறு புன்னகை இழையோட... நேற்று வரை உயிரும் சதையுமாக சுறுசுறுப்புடன் நடமாடிய கங்கா உயிர் நீத்து நிழற்படமானாள். உயிருடன் நடமாடியபோது சேர்ந்தாற்போல் இரு நிமிடங்கள் நின்று அவள் முகத்தை உற்று நோக்காத ஆனந்த்... நீர்த் திரையிட்ட விழிகளுடன் அவள் படத்தருகே அமர்ந்து வெறித்துக் கொண்டிருந்தான்.

கங்காவின் இதழ்களில் பூத்த சிறு புன்னகை கிட்டத் தட்ட 'மோனலிசா'வின் புன்னகையை ஞாபகப்படுத் தியது. 'உலகத்திலேயே மிக அழகான... அதே சமயம் சோகத்திற்குப் பெயர் போன புன்னகையல்லவா அது? என் கங்கா இவ்வளவு அழகா? என்ன குறையைக் கண்டேன் அவளிடம்? ஏதேதோ மனக் குழப்பத்தால் கிடைத்தற்கரிய வைரத்தைத் தொலைத்து விட்டேனே?

'அனாதை என்ற முத்திரையுடன் இந்த வீட்டிற்கு வாழ வந்தவள்... என் அன்பு கிட்டாமல் ஏங்கித் தவித்து

அனாதையாகவே வாழ்ந்து முடித்து விட்டாளே! வாழ வேண்டும் என்று ஒரு துளி ஆசையாவது... கங்காவின் மனதில் இருந்திருந்தால்... நிச்சயம் எமனுடன் போராடி மீண்டும் வந்திருப்பாளே... அன்பும் பரிவும் காதலும் காட்டாத கணவனுடன் வாழ்ந்து நடைப் பிணமாக நடமாடுவதை விட போய்ச் சேரலாம் என்று விரக்தியில் முடிவெடுத்து விட்டாள்.

'வயிற்றில் வளர்ந்த சிசுவைப் பற்றி சிறிதும் சிந்திக்காத அளவுக்கு வெறுத்துப் போய் விட்டாள் போலும். அந்த நிலைக்கு அவள் தள்ளப்பட்டு விட்டாள். அதற்கு முழுக் காரண கர்த்தா நான் தான்! அம்மா செய்த கொடுமை களைக் காட்டிலும் என்னுடைய பாராமுகம் தான் கங்காவைப் படாத பாடு படுத்தியிருக்கும்.'' முகத்தில் அறைந்து கொண்டு கதறியழுதான் ஆனந்த்.

நாட்கள் ஜெட் வேகத்தில் பறந்தன. பிறந்த பெண் குழந்தை தாய் அணைப்பிற்கும், தாய்ப்பாலுக்கும் ஏங்கித் தவித்தது. குழந்தையை கவனிக்க நர்ஸ் ஒருத்தியை ஏற்பாடு செய்திருந்தனர். கடமையைக் கடனே என்று செய்த நர்சிடம் உண்மையான அரவணைப்பு கிட்டாமல் போகவே... சதா குழந்தை கதறித் தீர்த்தது. கங்காவின் விஷயத்தில் கவனக் குறைவாக இருந்து விட்டோமே என்று அக்ஷராவும், விஸ்வநாதனும் வேதனையில் வெந்து போனார்கள்.

தோழிகள் துக்கம் விசாரிக்க வரும் சமயத்தில் மட்டும்... சொர்ணம் டவலில் பொதிந்து தூங்கும் குழந்தையை எடுத்து மடியில் போட்டுக் கொள்வாள். கண்ணீர் சிந்தி மூக்கை உறிஞ்சி சோகமாக முகத்தை வைத்துக் கொண்டு துக்கம் அனுஷ்டிப்பாள். அன்றும்



அப்படித்தான். தோழி பங்கஜம் வந்ததும், குழந்தையை தூக்க வந்த சொர்ணத்தை இடைமறித்தான் ஆனந்த்.

''குழந்தையைத் தூக்காதேம்மா! இவ்ளோ நேரம் கதறிட்டு இப்பத்தான் கண் அசந்திருக்கு. நீ தூக்கினா தூக்கம் கலைஞ்சு கதறும். அதுக்கு தொண்டையெல்லாம் ரணமா இருக்கும்'' அடிக்குரலில் அதட்டினான் ஆனந்த். ''அநியாயம் செய்யும்போது... அவ்வப்போது இதே போல் தலையிட்டு திட்டவும் செய்திருந்தால் கங்காவுக்கு ஆறுதலாக இருந்திருக்கும்'' ஆனந்த் உள்ளூர உருகி னான்.

விஸ்வநாதன் மருமகளின் மறைவுக்குப் பின் அலு வலகத்திற்கு ஓடுவதில்லை. முக்கிய பைல்களை வீட்டிற்கு தருவித்துக் கையெழுத்திடுவதோடு சரி! ஆனந்த் ராஜினாமா கடிதத்தை அனுப்பி விட்டு சதா கங்காவின் படத்தருகே அமர்ந்திருந்தான். மூன்று மாதங்கள் முடியும் வரை பொறுமை காத்த அக்ஷரா, அவள் நினைத்த தருணம் வந்ததும்... கருணாகரன் வீட்டிற்குச் சென்றாள்.

அவளது அழைப்பின் பேரில்... ஆனந்தையும், விஸ்வ நாதனையும் ஆறுதல் படுத்த கருணாகரனது குடும்பமே கிளம்பி வந்தது.

கங்காவின் படத்தருகே அமர்ந்து கண்ணீர் வடிக்கும் ஆனந்தைக் கண்டு அனைவரது நெஞ்சங்களும் பதறின. சம்யுக்தாவுக்கு 'பகீர்' என்றிருந்தது. தாடிக் கோலத்தில் இருந்த ஆனந்தைப் பார்க்கவே சகிக்கவில்லை!

''இன்னமுமா சோகத்திலிருந்து மீளவில்லை? உருக் குலைந்து ஆளே அடியோடு மாறிப் போய் விட்டானே?

கட்டிய மனைவியை அந்த அளவுக்கு நேசித்தானா? கங்கா அபாக்கியவதி தான். நீண்ட காலம் ஆனந்தோடு சேர்ந்து வாழக் கொடுத்து வைக்காமல் போய் விட்டாளே?''

சம்யுக்தாவின் அடி வயிற்றில் அமிலம் சுரந்தது.

தூளியில் தூங்கிக் கொண்டிருந்த குழந்தை திடீரென்று கதறியது. அடி வயிற்றைப் பிசைவது போன்று அப்படி யொரு அலறல்! குரல் கேட்ட வினாடியில்... ஆனந்தை முந்திக் கொண்டு சம்யுக்தா ஓடிப்போய், குழந்தையைத் தூக்கி வாகாக வாரியணைத்துக் கொண்டாள்.

சம்யுக்தாவின் அணைப்பில் அடங்கிய குழந்தை 'கப்சிப்' என்று அடங்கி தூக்கத்தை மீண்டும் தொடர்ந்தது. கருணாகரனும், விஸ்வநாதனும் அர்த்த புஷ்டியுடன் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

ஆனந்த் திகைத்துப் போய் குழந்தையைப் பார்த்தான். ஒரு முறை வாயைத் திறந்தால்... 'நான் ஸ்டாப்'பாக குறைந்த பட்சம் அரை மணி நேரமாவது அழுது கதறித் தீர்க்கும் குழந்தை சம்யுக்தா வாரியணைத்ததும் வாயை மூடிக் கொண்டதே?

''அரவணைப்பு இல்லாமத் துடிக்கற பச்சை மண்ணு... கதறி கதறித் தீர்த்து தன்னோட தாய் கிட்டயே போய்ச் சேர்ந்துடுமோன்னு... ரொம்ப பயந்து நடுங்கிகிட் டிருக்கோம். சம்யுக்தாவோட அரவணைப்புல பெத்த தாயோட கதகதப்பை இந்தப் பிஞ்சுக் குழந்தை உணர்ந்து நிம்மதியாத் தூங்கிடுச்சு பாருங்க'' விஸ்வநாதன் தழு தழுத்தார்.

''இத்தன பேர் இருக்கறச்சே... என்னை மட்டும் பெத்த தாயாக இந்தக் குழந்தை அங்கீகரிச்சு ஏத்திட்டிருக்கு!



உன்னதமான தாய் ஸ்தானத்துக்கு என்னை உசத்தி யிருக்கு!'' நினைத்த மாத்திரத்தில் சம்யுக்தாவின் விழி களில் கண்ணீர் பொங்கிப் பிரவாகமெடுத்தது.

குக்கரில் பருப்பு வெந்து கொண்டிருந்தது. காய்கறி களை நறுக்கிக் கொண்டிருந்தாள் சம்யுக்தா. அவளது மனம் முழுவதும் ஆனந்தும், பிஞ்சுக் குழந்தையுமே ஆக்கிரமித்துக் கொண்டிருந்தனர். விரலில் பிடித்திருந்த புடலங்காய் துண்டு துண்டாகிக் கொண்டிருந்தது.

''ஆறடி உயரத்தில் ஆஜானுபாகுவாய் கண்களையும் மனதையும் ஒரு சேர வசீகரித்த ஆனந்த்... இப்படி அடியோடு மாறிப் போவான் என்று அவள் கனவிலும் கருதவில்லை. இளைத்து, கறுத்து, கன்னங்கள் உள் வாங்கி ஒட்டிப் போய் கண்களில் ஜீவன் தொலைந்து போய்... உருக்குலைந்து போய் விட்டானே?'

சதா கதறி அழுத குழந்தை தன் அணைப்பில் அடங்கி அழுகையை நிறுத்தியதை எண்ணும்போதே சம்யுக்தா வின் மேனி சிலிர்த்தது. பச்சாதாபத்தில் அழுகை முட்டிக் கொண்டு வந்து தொண்டையை அடைத்தது.

பூக்குவியலாக இளம் குருத்தாக கரங்களில் தவழ்ந்த பிஞ்சுக்குழந்தையை மீண்டும் வாரியெடுத்து அணைத்துக் கொள்ள வேண்டும் என்று அவள் மனம் அலை பாய்ந்தது. அவளையும் அறியாமல் தாய்மை உணர்வு பொங்கிப் பிரவாகம் எடுத்தது.

''சம்யுக்தா... அம்மாடி சம்யுக்தா!'' அழைத்தபடி தேவகி அடுக்களைக்குள் நுழைந்தாள்.

''என்னம்மா இது? குக்கர் இத்தனவாட்டி விசிலடிக் குது? பருப்பு தீய்ஞ்சு போன வாசம் வருது பாரேன்!'' மகளின் முகத்தை ஆராய்ந்தாள்.

சட்டென்று அடுப்பை அணைத்து விட்டு குக்கரை இறக்கி வைத்து விட்டு நிமிர்ந்தவளின் விழிகளில் கண்ணீர் தளும்பியது.

''என்னாச்சும்மா? அழறே?'' பதறினாள் தேவகி.

''வெங்காயம் கட் பண்ணினேன். அதான்!'' பொய்யை சரளமாக அவிழ்த்து விட்டாள்.

''இல்ல... சொர்ணத்தோட பங்களாவுக்கு போயிட்டு வந்ததில இருந்து உன் முகமே சரியில்ல... ஏதோ சோகத்தை மென்னு முழுங்கற மாதிரியே இருக்கு. அந்த குட்டிப் பாப்பாவைப் பத்தித்தான். ஒருவேளை அதோட நிலைமையை நினைச்சு விசனப்படறியோ'ன்னு நெனச்சேன்!'' பெற்ற மகளின் மனதை வெகு துல்லியமாக கணித்து விட்டிருந்தாள் தேவகி.

''அ... அப்படியெல்லாம் ஒண்ணுமில்லைம்மா. வெளியில போயிட்டு வந்ததிலிருந்து தலைவலிம்மா. அதான்! தாளிக்கிறதுக்கு கறி வேப்பிலை இல்லை. பின் பக்கத்து தோட்டத்துல பறிச்சுட்டு வந்துடறேன்'' அதற்கு மேல் தாயின் அருகில் நின்றிருந்தால், தன் முகமே உள்ளத்து உணர்வுகளைப் பிரதிபலித்து விடும் என்ற பயத்தில் சட்டென்று நழுவினாள் சம்யுக்தா.

தோட்டத்தில் கறிவேப்பிலை பறிக்கும்போது... பச்சிளம் பாப்பாவின் கன்னங்களையும், பூப்போன்ற பாதங்களையும் தொட்டுத் தடவி வருட வேண்டும் என்று சம்யுக்தாவின் கரங்கள் பரபரத்தன.

'ச்சே! என்ன இது? இதே ரீதியில் நானிருந்தால்... அம்மா மட்டுமல்ல அப்பா, சந்துரு அண்ணா என்று ஒருவர் விடாமல் அனைவரும் துருவித் துருவி கேள்வி கேட்க ஆரம்பித்து விடுவார்கள்.



''நம் அன்புக்குரியவர்களின் காலில் அடிபட்டால்... நம் கண்ணில் கண்ணீர் வரும்'' என்று பெரியவர்கள் சும்மாவா சொல்லி வைத்தார்கள்? நான் ஆனந்தை இன்றளவும் உயிருக்குயிராய் நேசிக்கிறேன் போலும்! என்னையும் அறியாமலே... மனதின் அடிவாரத்தில் அந்தக் காதல் புதைந்திருக்கிறது.

'அவனுக்குத் திருமணமானதும் வலுக்கட்டாயமாக தன் மனதில் இருந்து தூக்கியெறிந்து விட்டு மனதை சமாதானப்படுத்தியதெல்லாம் வீண் தான் போலும்!

'அடி ஆழத்தில் ஒளிந்திருந்த காதல் அவளது அனுமதியின்றி மனதை ஆக்கிரமித்திருக்கிறது.

'ஆனந்தின் உருக்குலைந்த தோற்றத்தைக் கண்டும், அவனது சோகத்தைக் கண்டும் அவளது உள்ளம் புழுவாய் துடிதுடித்துப் போகின்றது.

உள்ளுக்குள் ஊமையாய் புலம்பி ஓலமிட்டு மாய்ந்து மாய்ந்து மருகிப் போனாள் சம்யுக்தா.

வாய் விட்டு ஓவென்று கதறியழ வேண்டும் போலிருந்தது. கண்கள் மீண்டும் உடைப்பெடுத்துக் கொண்டன. கன்னங்களில் கோடு போட்டுக் கொண்டு வழிந்த நீரைத் துடைத்துக் கொண்டு மிகுந்த பிரயத்தனம் செய்து முகத்திலிருந்த இறுக்கத்தைத் தளர்த்தி இயல்பு நிலைக்குக் கொண்டு வந்தாள் சம்யுக்தா.

அன்று கூடத்தில் ஒன்றாக அமர்ந்து அனைவரும் சாப்பிட்டபோது... கனத்த அமைதி நிலவியது.

''வெங்காய சாம்பார் ரொம்ப நல்லாருக்கு! சம்யுக்தா'' சூழ்நிலையைக் கலகலப்பாக்க எண்ணம் கொண்டு சந்துரு மெல்ல ஆரம்பித்தான்.

''தேங்க்ஸ் அண்ணா!'' சிரிப்பை வலிய வரவழைத்துக் கொண்டாள். ''புடலங்காய் பொரியல் எப்படியிருக்குன்னு சொல்லவே இல்லையே?''

''அதுவும் சிம்ப்ளி சூப்பர்ப்! அப்பா... சம்யுக்தாவோட சமையலைப் பாராட்டி ரெண்டு வார்த்தை பேசிடுங்க. தமிழ் வாத்தியார் நீங்க? வஞ்சப் புகழ்ச்சி அணியைப் பத்தி உங்களுக்கு சொல்லியா தரணும்?'' கலாய்த்தான் சந்துரு.

'களுக்' என்று சிரித்து விட்டாள் சம்யுக்தா.

''போண்ணா... உனக்கு எப்பவுமே கிண்டல்தான்!'' சிணுங்கியவளைப் பார்த்ததும் உள்ளூர திருப்தியாக இருந்தது சந்துருவுக்கு.

''என்னப்பா? ஒண்ணுமே பேச மாட்டேங்கறீங்க?'' கருணாகரன் மெல்ல ஏறிட்டுப் பார்த்தார்.

''மனசே சரியில்லப்பா!''

''முகமே இருண்டு கிடக்கு! என்னப்பா விஷயம்?'' சந்துருவின் முகத்தில் இருந்த குறும்புத்தனம் மறைந்து போய்... சிறு கவலை குடி கொண்டது.

''எல்லாம் இந்த ஆனந்த் பயலை நினைச்சுத்தான். பாவம்பா! வாழ வேண்டிய வயசுல மனைவியைப் பறி கொடுத்துட்டு... பெத்த குழந்தை தாய்ப் பாசத்துக்காக ஏங்கித் தவிக்கற பரிதாபத்தை கண்கூடாப் பாத்துக் கிட்டிருக்கானே கொடுமை!

''கோடி கோடியா பணம் கொட்டிக் கிடக்கு! அந்தக் குடும்பத்தோட அடுத்த தலைமுறை உருவாயிருக்கு. அதோட ஏக்கத்தை பணத்தால தீர்க்க முடிஞ்சுதா பார்! விஸ்வநாதனைப் பார்க்கவே சகிக்கலை. மருமக போனதி



லேர்ந்து ரொம்பவே இடிஞ்சு போயிட்டான். நம்ம சொர்ணமும் ரொம்ப பாவம்தான்.

''கவலையோட சாயலே படியாம... இதுநாள் வரைக்கும் செல்வச் செழிப்போட சந்தோஷமா வளைய வந்துட் டிருந்தவ. அவளுக்கு ஆனந்த்னா ரொம்ப உயிர். ஆசை மகனோட வாழ்க்கை அலங்கோலமாயிருச்சேன்னு அவளும் ஆடிப் போயிட்டா. அங்க போயிட்டு வந்தது லேர்ந்து எனக்கு மனசே ஆறலைப்பா! சந்துரு! உனக்கு ஒண்ணு தெரியுமாப்பா? நம்மள மாதிரி சதா கஷ்ட நஷ்டத்திலேயே உழன்று கிட்டிருக்கிறவங்களுக்கு எவ்ளோ பெரிய கஷ்டம் வந்தாலும் சரி... தாங்கிக்கிற பக்குவம் இருக்கும்.

''நம்ம வர்க்கத்துக்குரிய போராட்டமே தனி தான். சதா அடிபட்டு அலைக்கழிஞ்சு இதயத்துல ஒரு வலு வந் துடும். வஜ்ரம் பாய்ஞ்சுடும். ஆனா பணக்கார வர்க்கத்துல இருக்கறவங்களுக்கு சின்னதா ஒரு சரிவு வந்தாலே உள்ளூர நொறுங்கிப் போயிடுவாங்க. எந்தவொரு இழப்பையும் சுலபமா அவங்களால ஜீரணிக்கவே முடி யாது. இது என்னோட தனிப்பட்ட கருத்து! அ... அந்த கைக்குழந்தை ரொம்ப பாவம்பா!

''ஹூம்! எல்லாம் பகவானோட செயல்! விதியை யாரால மாத்த முடியும்?''

மீண்டும் அங்கே கனத்த அமைதி நிலவியது.

அப்பாவின் பேச்சைக் கேட்டதும் பிஞ்சுக் குழந்தை யின் ஞாபகம் மீண்டும் அலை அலையாய் எழும்பி அவளது இதயத்தில் வேகமாய் மோதியது.

சாதத்தில் வெங்காய சாம்பாரை ஊற்றிப் பிசைந்து ஒரு உருண்டையை வாய்க்குள் திணித்தாள் சம்யுக்தா.

சாப்பாடு தொண்டைக்குள் இறங்க மறுத்தது. கண்களில் கண்ணீர் எட்டிப் பார்த்தது. இதயம் விம்மியது.

அம்மா தேவகிக்கு என்ன தோன்றியதோ? விழிகள் விரிய இவளையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

சட்டென்று தலை குனிந்தபடி சாதத்துடன் சேர்த்து துக்கத்தையும் சிரமப்பட்டு விழுங்கினாள். சடுதியில் சாப்பிட்டு விட்டு தட்டைத் தூக்கிக் கொண்டு அடுக்களைக்குள் புகுந்தாள்.

''கடவுளே! எதையும் தாங்கிக்கற பக்குவத்தை எனக்குத் தரவேணும்!'' மானசீகமாக வேண்டிக் கொண்டாள்.

அடுக்களையில் பாத்திரங்களைப் போட்டு விட்டு... அம்மாவுக்கும், அப்பாவுக்கும் தர வேண்டிய மாத்திரைகளை எடுத்துக் கொண்டு கூடத்திற்கு விரைந்தாள்.

''அப்பா! நீங்களும் சரி! அம்மாவும் சரி! சொர்ணம் அத்தையோட குடும்பத்தைப் பத்தின கவலையை விட்டுத் தள்ளுங்க! இருக்கற வியாதி பத்தாது? கவலைப் பட்டாலே பிரச்னை தான்! அவங்க அவங்க தலை எழுத்துப் பிரகாரம் எல்லாம் நடக்கும். மாத்திரை போட்டுகிட்டு பகவான் மேல பாரத்தைப் போட்டுட்டு தூங்குங்க!'' அன்புடன் அதட்டினாள்.

## 18

**வா**சலில் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டதும்... மாத்திரையை விழுங்கி விட்டு கூடத்தில் அக்கடா என்று



தலை சாய்த்துப் படுத்திருந்த தேவகி, வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள்.

கருணாகரன் சற்று நேரத்திற்கு முன்பு தான் வீட்டை விட்டுக் கிளம்பிச் சென்றிருந்தார். பொது நூலகத்திற்கோ அல்லது பழைய சிநேகிதனைப் பார்க்கவோ சென்றிருப்பார். பொழுது போகாமல் சதா வீட்டில் அடைந்து கிடக்க அவருக்குப் பிடிப்பதே இல்லை.

சந்துரு அலுவலகத்திற்கும், சம்யுக்தா கோவிலுக்கும் கிளம்பிச் சென்றிருந்தனர்.

தாழ்வாரத்தில் செருப்புகளைக் கழற்றிப் போட்டு விட்டு விடுவிடுவென்று நடந்து வந்தாள் அக்ஷரா.

''அட... வாம்மா அக்ஷரா! வா... உட்காரு!'' பழைய நாற்காலியை இழுத்துப் போட்டாள் தேவகி.

''பரவாயில்ல அத்தே! நான் கீழேயே உட்கார்ந்துப்பேன்!'' சதா கலகலவென்று சிரித்த முகத்துடன் வளைய வருபவளிடம்... இன்று ஏனோ சோகத்தின் சாயல்!

''எப்பவும் சிரிச்ச முகத்தோட இருப்பியே? என்ன விஷயம்மா?'' கவலையுடன் ஏறிட்டாள் தேவகி.

''சம்யுக்தா எங்கே அத்தே?'' கண்களை சுற்றும் முற்றும் சுழல விட்டாள் அக்ஷரா.

''என்னம்மா என்ன விஷயம்? சம்யுக்தாவைத் தேடறியே?'' பதறினாள் தேவகி.

''நீங்க கெஸ் பண்ணினது சரிதான்! பாப்பாவுக்கு சரியான காய்ச்சல். டாக்டர் வந்து பார்த்துட்டுப் போனாங்க!'' தயங்கி நிறுத்தினாள்.

''நர்ஸ்... கிட்ட இருந்து நல்லா கவனிச்சுக்கிறா இல்லையா?''

''அதுதான் பிரச்சனையே அத்தே! ஆயிரம் சொல்லுங்க. வெறும் காசு பணத்துக்கு கடமையைச் செய்தா குழந்தையோட ஏக்கத்தை அது தீர்த்து வைக்குமா? அது உண்மையான தாயன்புக்கும், கதகதப்புக்கும் ஏங்குது... அந்த ஏக்கம் தான் இப்போ காய்ச்சல்ல கொண்டு விட்டிருக்கு!

''சம்யுக்தாவோட அணைப்புல அழுகையை நிறுத்துச்சு இல்லையா? நிம்மதியா நல்லாத் தூங்கிச்சு! மறுபடியும் கண் முழிச்சதும் அரவணைப்பு தேடி மறுபடியும் ஒரே கதறல் தன்! அதோட காய்ச்சல் வேறே! டாக்டர் வந்து இன்ஜெக்ஷன் போட்டிருக்கிறார். இந்தக் கொடுமையைப் பார்க்கணும்னு தலையில எழுதியிருக்கே'ன்னு அப்பா மனசுடைஞ்சு போயி கதறிட்டார் அத்தே!

''சரி... பேசிட்டிருக்க நேரமில்ல. சம்யுக்தா எங்கே போய் இருக்கா? பாப்பா திரும்பவும் கண் முழிக்கும்போது அவ சம்யுக்தாவோட மடியில இருந்தாகணும். இல்லைன்னா எங்க கங்கா அண்ணி போன இடத்துக்கே வர்ஷா குட்டியும் போயிடுவா?''

அக்ஷராவின் இதழ்களைத் தன் வலது கரத்தால் சட்டென்று பொத்தினாள் தேவகி.

''இன்னொரு வாட்டி அந்த வார்த்தையைச் சொல்லாதேம்மா! சம்யுக்தா பக்கத்துல இருக்கற அம்மன் கோவிலுக்குத் தான் போயிருக்கா! வா... நானும் வரேன்!'' கிளம்ப எத்தனித்தவளை இடைமறித்தாள் அக்ஷரா.

''இல்ல... அத்தே! உங்களுக்கு எதுக்கு வீண் சிரமம்? நான் பாத்துக்கறேன். உடம்பு முடியாதவங்க நீங்க அலட்டிக்க வேணாம். ரெஸ்ட் எடுங்க!'' தலையாட்டி



விடை பெற்றுக் கொண்டு ஓட்டமும் நடையுமாக விரைந்தாள். செருப்புகளைக் கால்களில் திணித்துக் கொண்டு இரண்டே பாய்ச்சலில் காருக்குள் புகுந்தாள்.

அன்று வெள்ளிக்கிழமை! கோவிலில் பெண்களின் கூட்டம் தான் அதிகமாக இருந்தது. அம்மனைக் கண் குளிர தரிசித்துவிட்டு, குங்குமப் பிரசாதம் பெற்றுக் கொண்டு பிரகாரத்தை வலம் வந்தாள் சம்யுக்தா.

பிரகாரத்தில் ஒரு தூணின் மீது சாய்ந்து கொண்டு அமர்ந்து விட்டாள். அவள் உள்ளத்தில் ஒரு பட்டி மன்றமே நடந்து கொண்டிருந்தது.

'தன் காதலன் ஆனந்தின் குழந்தை என்பதால்... அந்தப் பாப்பாவிடம் பாசம் ஊற்றெடுக்கின்றதா? அல்லது யார் தூக்கினாலும் சமாதானம் அடையாமல் கதறிய குழந்தை இவளது அணைப்பில் அடங்கி திருப்தி அடைந்ததே... அவளுக்கு ஒரு உன்னதமான தாய் ஸ்தானத்தை அளித்ததே... அதனால் அதன் பேரில் பாசம் சுரக்கின்றதா?'

தனக்குள் நூறு முறை கேள்விகளைக் கேட்டாலும் விடையை அறிய முடியவில்லை. எது எப்படியோ போகட்டும். பெற்றெடுக்காத குழந்தையை எண்ணும் போதே அவளுள் தாய்மை உணர்வு ஜீவ நதியாய் பொங்கிப் பெருகியது மட்டும் நிஜம்!

''சம்யுக்தா! நீ... நீ இங்க உக்காந்திருக்கியா? வா... வா... சீக்கிரம் போலாம். பாப்பாவுக்கு ரொம்ப முடியலை!'' அக்ஷராவுக்கு மூச்சு வாங்கியது. வேகமாக ஓடி வந்திருப்பாள் போலும். அவள் மூச்சிரைத்த விதத்தையும், கலவரமான முகத்தையும், அவள் சொன்ன செய்தியையும் கேட்ட சம்யுக்தாவுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

கால் தடுக்கி விழாத வண்ணம் சேலையை சிறிது உயர்த்திப் பிடித்துக் கொண்டு மின்னல் வேகத்தில் ஓடி கோவில் வாசலுக்கு வந்தாள் சம்யுக்தா. அக்ஷராவால் கூட அவள் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியவில்லை. கோவில் மதில் சுவரோரமாக விட்டிருந்த காலணிகளைப் பெண்கள் இருவரும் கால்களில் திணித்துக் கொண்டு, சடுதியில் காரில் ஏறி அமர... கார் வேகமெடுத்துப் பறந்தது.

டவலில் பொதிந்து கிடந்த குழந்தை வர்ஷாவை... நடுங்கும் கரங்களால் மெல்ல வாரியெடுத்தாள் சம்யுக்தா. அதன் கன்னங்களில் சதா அழுது அழுது காய்ந்து போன கண்ணீர்க் கோடுகளின் தடயங்கள். குழந்தையைத் தன் மார்போடு அணைத்துக் கொண்டாள். அதன் பூமுகத்தை தனது கன்னங்களில் பொருத்திக் கொண்டாள். அனலென தகித்தது குழந்தையின் பூ முகம்!

அவளையும் அறியாமல் ஆனந்தத்தில் விழியோரங்களில் நீர் திரண்டு வழிந்தது. குழந்தையின் நெற்றியில் இரு சொட்டுகள் பட்டுத் தெறித்தன. கண்ணீர்த் துளிகள் பட்டதினாலோ... அல்லது அவளது இதமான ஸ்பரிசத்தோலோ... அதன் தூக்கம் கலைந்து மெல்ல சிணுங்கியது.

''ம்கும்! ம்கும்!'' சிணுங்கியபடி விழிகளை மெல்ல மலர்த்தியது. உடம்பை நெளித்து சோம்பல் முறித்தது. சற்றே தலையை நகர்த்தி சம்யுக்தாவின் முகத்தை ஆராய்ந்தது. அதன் முகத்தில் பூரண திருப்தி படர்ந்திருந்தது. அவள் முகத்தை கண் கொட்டாமல் உற்றுப் பார்த்தது.

''உங்கா! உங்கா!'' என்று விட்டு 'களுக்' என்று சிரித்தது.



மெல்ல தன் பிஞ்சுக்கரங்களால் சேலையை வருடி இறுகப் பிடித்துக் கொண்டது. கால்களை மாற்றி மாற்றி உதைக்க ஆரம்பித்தது.

இறுகப் பிடித்த சேலையை மெல்ல வாய்க்குள் திணிக்க ஆரம்பித்தது. அதுவரை மெய் மறந்திருந்த சம்யுக்தா சட்டென்று அதன் கைகளிலிருந்து சேலையை விலக்கினாள். பக்கவாட்டிலிருந்த நர்ஸை ஏறிட்டாள்.

விஸ்வநாதன், ஆனந்த், சொர்ணம், அக்ஷரா, நர்ஸ், வேலைக்காரி, அஞ்சலை ஆகியோர் இந்த அரிய காட்சியைக் கண்டு கண் கலங்கினர். கல் மனம் படைத்த சொர்ணம் கூட தேம்பி விட்டாள். ஆனந்தோ விம்மியபடி விஸ்வநாதனின் தோளில் சாய்ந்து கொண்டான்.

உதட்டைக் கடித்தபடி அழுகையை அடக்கிக் கொண்டிருந்தாள் அக்ஷரா. ''நர்ஸ்! சம்யுக்தாவுக்கு எல்லாம் சொல்லுங்க. இப்போ வர்ஷாவுக்கு பால் தரலாமா? சிரப் ஊத்தணுமா? பாப்பா... நல்ல மூடுக்கு வந்ததே ரொம்ப பெரிசு! சீக்கிரம்!'' துரிதப்படுத்தினாள்.

''இதோ இந்த பாட்டில்ல இருக்கிற 'பெபாநில்' சிரப்பை அரை டீஸ்பூன் விடணும். பால்லே கலந்து கொடுத்துடலாம்'' கூறியபடி டேபிளில் இருந்த பீடிங் பாட்டிலை எடுக்கப் போனாள் நர்ஸ்.

''பீடிங் பாட்டில் வேணாம்! அக்ஷரா... பாலாடை இருந்தா எடுத்துட்டு வாயேன். அப்புறம் அஞ்சலை என்கூட வாங்க! கிச்சன் எங்க இருக்குன்னு காட்டுங்க. பாப்பாவுக்கு நானே பாத்திரத்தை ஸ்டெரிலைஸ் பண்ணி ப்ரெஷ்ஷா பாலைக் காய்ச்சிக் குடுக்கணும்னு நெனைக்கிறேன்!'' தயங்கியபடி விஸ்வநாதனை ஏறிட்டாள் சம்யுக்தா.

''கருணாகரன் இப்படித்தான்! எதையும் நிதானமா, பொறுமையா, சாமர்த்தியமா டீல் பண்ணுவார். அதே குணம் அப்படியே உன்கிட்ட இருக்கும்மா! உன் விருப் பப்படியே செய்மா! எந்த விதமான தயக்கமும் வேணாம்! கேரி ஆன்!'' சம்யுக்தாவின் உச்சந்தலையில் கை வைத்து மெல்ல வருடினார் விஸ்வநாதன்.

பதிலுக்கு ஒரு புன்னகையை உதிர்த்துவிட்டு அஞ்சலையைப் பின் தொடர்ந்து அந்த மாடியறையை விட்டுக் கீழே இறங்கினாள் சம்யுக்தா. குழந்தையும் கையுமாக இறங்கிப் போனவளைத் தொடர்ந்து... மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்க நடந்து வந்தாள் சொர்ணம்.

அதற்குள் அக்ஷரா வெள்ளிப் பாலாடையை எடுத்து வந்திருந்தாள். ''அக்ஷரா! அந்தப் பாத்திரத்தை நல்லா வெந்நீர் விட்டு அலம்பு! கொஞ்சமா அரை டம்ளர் பால் மட்டும் அதில விட்டுக் காய்ச்சு. நல்லா கொதிக்கட்டும். வெந்நீர் விட்டு இந்த பாலாடையையும் நல்லா அலம்பு! பாலை நல்லா ஆத்திக் கொண்டா... பாப்பாவுக்கு குடுக்கலாம்.

''பெபாநில் சிரப்பை இப்போ தர வேணாம். அரை மணி நேரம் பொறுத்து வெந்நீர்லே குடுத்துக்கலாம். சரியா!'' கை தேர்ந்தவளைப் போன்று... வெகு நேர்த்தியாக பாலாடையால் பாலைப் புகட்டி விட்டாள் சம்யுக்தா.

''எக்ஸலண்ட்! எனக்கு ஒரு டவுட் கேக்கட்டுமா?'' அக்ஷராவின் விழிகளில் குறும்புத் தனம் மின்னியது.

''என்ன டவுட்?'' பாப்பாவின் கடைவாயில் வழிந்த பாலை, தனது சேலைத் தலைப்பால் துடைத்தபடி கேட்டாள் சம்யுக்தா.



''குழந்தை வளர்ப்பு என்பது ஒரு கலை. அது ஒரு சாதாரண விஷயம் இல்லைன்னு கேள்விப்பட்டிருக்கேன். பெரிய அத்தைப் பாட்டி ரேஞ்சுக்கு இல்லையில்ல... நாலு பாப்பாக்களை பெத்து வளர்த்து ஆளாக்கினவ மாதிரி அசத்தறே? ஒரு 'அன்மேரீட் கேர்ள்'க்கு எப்படி செண்டிமெண்ட்டான சாமர்த்தியம் வந்துச்சு?'' கண் சிமிட்டினாள் அக்ஷரா.

''அதானே? எனக்கும் ரொம்ப ஆச்சரியமாயிருக்கு சின்னம்மா!'' அஞ்சலையும் ஒத்து ஊதினாள்.

''கண் பார்த்தா... கை செய்யணும்னு எங்கம்மா அடிக்கடி சொல்லுவாங்க! பக்கத்து வீட்டு மாமிக்கு போன வருஷம் பேத்தி பிறந்தது. அவங்க குழந்தையைக் கையாள்ற விதத்தை நான் அடிக்கடி பார்க்கிறதுண்டு. அத்தோட புக்ஸ்லேயும் படிச்சிருக்கேன்!'' சங்கோஜத் துடன் பதில் அளித்தாள் சம்யுக்தா.

''வெல்டன் சம்யுக்தா! இன்னும் இந்தக் கையில என்னென்ன திறமைகள் ஒளிஞ்சிருக்கோ? யார் கண்டா? கை குடு!'' அவளது கையைப் பற்றிக் குலுக்கினாள் அக்ஷரா.

''போதும்! கலாய்ச்சது! பாப்பாவுக்கு வேற ரூம் மாத்திக் குடு அக்ஷரா. அந்த மாடியறை வேணாம். கீழேயே தோட்டத்தை வேடிக்கை பார்க்கிற மாதிரி வேறே ரூம் இருந்தால் பரவாயில்லை. இந்த ஸ்டேஜுல ஒரே ரூம்லே அதை முடக்கி வைச்சா அதுவே எரிச்சலாவும் 'அன்ஈஸி'யாவும் ஃபீல் பண்ணும்!

''நாலு மாசமாச்சு! நல்லா வேடிக்கை பாக்கத் தோணும். நாலு எடத்துக்கு காத்தோட்டமா உலாவி வந்தா... அதுக்கு ஹேப்பியா இருக்கும்!''

''அப்பாவோட ஆபீஸ் ரூமுக்குப் பக்கத்துல இருக்கற ரூமைப் பாப்பாவுக்கு ஒதுக்கிடுவோம்!'' கூறியபடி குழந்தை வர்ஷாவின் பட்டுக் கேசத்தை வருடினாள் அக்ஷரா.

சம்யுக்தாவின் அணைப்பில் குழந்தை சுகமாக சாய்ந்த படி தலையை இப்படியும் அப்படியுமாகத் திருப்பி வேடிக்கை பார்த்தது. குஷியில் கை, கால்களை காற்றில் உதைத்தது.

அடுத்த அரை மணி நேரத்தில் பெபாநில் சிரப்பை வெந்நீரில் கலந்து பாப்பாவுக்கு ஊற்றியதும் பத்தே நிமிடத்தில் குப்பென்று வியர்த்து விட்டது. வியர்த்துப் போய் சருமம் சில்லென்றானது.

அதற்குப் பின் 'செரிலாக்' கலந்து கொடுத்ததும் தெம்பாய் சாப்பிட்டு விட்டு உறங்கிப் போனது. உறக்கத்தில் ஆழ்ந்திருந்தவளை தொட்டிலில் இட்டால் சட்டென்று கண் விழித்து வீறிட்டு அலறியது. சம்யுக்தாவின் மடியை விட்டு இறங்க மறுத்தது.

''பார்த்தியா? முளைச்சு மூணு இலை விடலே... இதுக்கு என்னவொரு சாமர்த்தியம் பாரேன்? பயங்கர உஷாருப்பா. இது வளர்ந்து ஆளாச்சு, ஊரையே வித்துடும் போ!'' கிண்டலடித்தாள் அக்ஷரா.

''குழந்தைக்கு இருக்கற வீம்பையும் பிடிவாதத்தையும் கொஞ்சம் கூட குறைத்து விடக்கூடாது பகவானே!'' உள்ளூர பிரார்த்தனை செய்தாள்.

''எல்லாம் நல்லபடியா நடத்தி வைக்கணும். ஆஞ்சநேயா! வேண்டுதல் நிறைவேறிட்டா உடனடியா உனக்கு துளசி மாலை சாத்தறேன்!'' நங்கநல்லூர் ஆஞ்சநேயரை மனதார வேண்டிக் கொண்டாள் அக்ஷரா.



குழந்தையை மடியில் கிடத்திக்கொண்டு அமர்ந்திருந்த சம்யுக்தாவுக்கு இருப்பே கொள்ளவில்லை. முள்ளில் அமர்ந்திருப்பதைப் போல் தவித்துப் போனாள்.

மாடியில் ஆனந்தின் அறைக்குப் பக்கத்தில் தான் நர்சும் குழந்தையும் உபயோகித்த அறை இருந்தது. ஆனந்தின் கண்களில் அடிக்கடி தான் படாமல் இருக்க வேண்டும் என்று விரும்பினாள். அதனால் தான் ஏதோ ஒரு சாக்கை வைத்து குழந்தையின் அறையை மாற்றும்படி கேட்டுக் கொண்டாள்.

சொர்ணத்தின் விழிகளில் அகம்பாவமும், அலட்சியமும் கடுகளவுகூட குறைந்ததாகத் தெரியவில்லை. அத்திப்பூத்தாறபோல் பணத்தைப் பெற்றுக்கொள்ள இந்த பங்களாவுக்கு சம்யுக்தா அடியெடுத்து வைப்பதே அவளுக்கு எட்டிக் காயாகக் கசக்கும்.

பணத்தைக் கொடுத்துவிட்டு, மறுகணமே சம்யுக்தா இடத்தை விட்டு அகல வேண்டும் என்று எதிர்பார்ப்பாள். ''மூக்கும் முழியுமாக லட்சணமாக இருக்காளே... அருமை மகன் ஆனந்தின் கண்களில் பட்டுத் தொலைத்து... காதல், கத்தரிக்காய் என்று விஷயம் ஏடாகூடமாக ஆகிவிட்டால்!'' 'சீக்கிரம் நடையைக் கட்டு' என்ற ரீதியில் சொர்ணத்தின் நடவடிக்கை இருக்கும்.

அவமானத்தில் கண்களும், மூக்கு நுனியும் சிவக்க... சடுதியில் நடையைக் கட்டி விடுவாள் சம்யுக்தா. நாள் முழுவதும் இங்கே இருக்க நேரிட்டதை எண்ணி உள்ளூர வருந்தினாள்.

# 19

ஜன்னல் வழியாகப் பார்த்தால்... தோட்டம், நீச்சல் குளம், டென்னிஸ் கோர்ட் என சகலமும் தெரிந்தது. தோட்டக்காரனும், வாட்ச்மேனும் நாய்களை சங்கிலியால் பிணைத்து 'வாக்' போவதை இங்கிருந்தே வேடிக்கை பார்க்க முடிந்தது. சம்யுக்தா கேட்டபடி விசாலமான அறையை ஒதுக்கியிருந்தாள் அக்ஷரா.

கண்களை நாலாபுறமும் சுழற்றி வேடிக்கை பார்த்தது குழந்தை. ''வா! சம்யுக்தா! சாப்பிடலாம். மூணு மணிக்கு மேல ஆகுது பார்!''

''இல்ல... அக்ஷரா! கீழே படுக்க வைச்சாலே மறுபடியும் அழறா! டைனிங் ஹாலுக்கு நான் வரல. பசிக்கலை! நீ போ!''

''நல்லாருக்கே! நான் மட்டும் சாப்பிடணுமா? சரி... எனக்கும் பசிக்கல!'' சட்டென்று அமர்ந்து விட்டாள்.

''அக்ஷரா! ப்ளீஸ் அண்டர்ஸ்டாண்ட் மீ! எ... எனக்கு நீ பண்றது தர்ம சங்கடமாயிருக்கு!'' சம்யுக்தாவின் குரல் கிசுகிசுப்பாய் வெளிப்பட்டது.

''நீ எதுக்கும்மா தர்ம சங்கடப்படணும்? நீயும் எங்க வீட்டுப் பொண்ணுதான்! பாப்பாவை பத்தின கவலையில... நாங்க யாரும் இன்னும் சாப்பிடவே இல்ல. இந்தக்



குடும்பத்தோட வாரிசுக்குப் பாதுகாப்பு உணர்வையும், திருப்தியையும் தந்தவ, நீ. சொல்லப் போனா நீ மட்டும் வரலைன்னா காய்ச்சல்லேயே கண்ணை'' விஸ்வநாதன் கூறி முடிப்பதற்குள் குறுக்கிட்டாள் சம்யுக்தா.

''வேண்டாம் மாமா! பெரியவங்க நீங்க. உங்க வாயால எதையும் சொல்ல வேணாம்! நான் சாப்பிட வரேன்!'' பெரியவரின் பேச்சுக்கு மறு பேச்சு பேசாமல் குழந்தையை மடியில் இருத்திக் கொண்டபடி பெயருக்கு இரு பிடி சாதத்தைக் கொறித்தாள்.

என்ன காரணத்தினாலோ... சொர்ணம் அமைதி காத்தபடி ஒரு பிடி பிடித்தாள். விஸ்வநாதன் வற்புறுத்திய தால் ஆனந்த் சாப்பிட வந்தான் போலும். சோற்றில் கைகளை அளைந்த வண்ணம் இருந்தான்.

''தே... தேங்க்யூ சம்யுக்தா! காய்ச்சலோடு கதறிய 'குழந்தையைப் பாத்து... நான்... நம்பிக்கையே இழந்துட்டேன். உன்னால தான் எனக்கு வர்ஷா திரும்பவும் கிடைச்சிருக்கா'' தாடி கோலத்தில் கண் கலங்கியபடி ஆனந்த் பேசியதை தலை குனிந்த வண்ணம் கேட்டுக் கொண்டிருந்தாள் சம்யுக்தா.

சங்கடத்துடன் அக்ஷராவை ஏறிட்டாள்.

''என்னது இது? ஆள் ஆளுக்கு 'தேங்க்ஸ்' சொல்லியே... அவளை ஒரு வழி பண்ணிடுவீங்க போலிருக்கே... அவ யாரு? வேத்து மனுஷியா? அவ நம்ம குடும்பத்தைச் சேர்ந்தவ தான்! அவளோட கடமையை அவ நல்லபடியா செய்திருக்கா... அவ்ளோதான்... நன்றி சொல்லி, சொல்லியே மூணாம் மனுஷியாக்கிடாதீங்க!'' குரலுயர்த்தி அதட்டினாள் அக்ஷரா.

அன்று இரவு குழந்தைக்கு பாலைப் புகட்டி, தட்டிக் கொடுத்து வருடிக் கொண்டிருந்ததும்... வெகு நேரம் கழித்து நிம்மதியாக உறங்கிப் போனது. அரை மனதுடன் குழந்தையை நர்ஸிடம் ஒப்படைத்து விட்டு, அறையை விட்டு வெளி வந்தாள் சம்யுக்தா.

''நைட்லே நர்ஸ் கூட இருந்து நான் கவனிச்சுக்கறேன். காத்தால வீட்டுக்கு கார் அனுப்பிடுவேன். நீ வந்துடு...! ப்ச்! பேசாம இங்கயே... தங்கலாம். நீ தான் பிடிவாதமா மறுக்கறே! ஹூம்! நைட்லே தப்பித் தவறி கண் முழிச்சு அது பாத்துச்சு... போச்சு! ரகளை தான்!

''நான் ஸ்டாப்''பா கதறும் தெரியுமா? நாலு மாசக் குட்டியா அது? எல்லாத்தையும் அலற வைக்குதே... இந்த வயசிலேயே சாதிக்குது பார்... லேசுப்பட்ட குட்டியில்லப்பா! அம்மாடி!'' நெஞ்சில் கை வைத்து அக்ஷரா பேசிய விதத்தைப் பார்த்து முறுவல் பூத்தாள் சம்யுக்தா.

''குழந்தையை அப்படியெல்லாம் சொல்லாதே! பாவம்!'' என்றபடி எதேச்சையாக அண்ணாந்து பார்த்தாள்.

மாடி வராண்டாவில் நின்றபடி இவர்கள் சம்பாஷிப்பதை அதுவரை பார்த்துக் கொண்டிருந்த ஆனந்த் மெல்ல இறங்கி வந்தான்.

''வாண்ணா! உன் குழந்தையோட வீரதீர பிரதாபத்தைப் பத்தி தான் பேசிட்டிருக்கோம்!'' என்று அக்ஷரா கூறியதும்... ஆனந்தின் முகத்தில் அதுவரை இருந்த இறுக்கம் சற்றே தளர்ந்தது போலிருந்தது.

''வீட்ல கவலையா இருப்பாங்க! நான் வரேன்!'' ஓட்டமும் நடையுமாக விரைந்து சென்று காரில் ஏறிக் கொண்டாள் சம்யுக்தா.



அவள் சென்ற திக்கையே வெறித்துக் கொண்டிருந்த ஆனந்த், பூனைப்பாதம் வைத்து மெல்ல அறைக்குள் சென்றான். தொட்டிலில் நிம்மதியாய் நிச்சலனமாய் பரம திருப்தியாய் உறங்கிக் கொண்டிருந்த குழந்தையை இமை கொட்டாமல் பார்த்தான்.

''கங்கா! இந்த பூப்பிஞ்சை விட்டுட்டுப் போக உனக்கு எப்படி மனசு வந்தது? எல்லாம் என்னால தான்! உன்னைக் கொல்லாமல் கொன்ன பாவி நான்! கங்கா... கங்கா... என்னை மன்னிக்க மாட்டியா? என்னையும் நம்ம குழந்தையையும் தவிக்க விட்டுட்டுப் போயிட்டியேம்மா!'' மவுனமாக உள்ளுக்குள் கதறித் தீர்த்தான் ஆனந்த்.

சாலையில் போக்குவரத்து நெரிசல் குறைந்து விட்டபடியால்... கார் காற்றாய் பறந்தது. கார் வீட்டை அடைந்தபோது இரவு மணி பதினொன்றரையைத் தொட்டிருந்தது.

கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டதும்... கூடத்திலிருந்தவர்கள் அரக்கப் பரக்க ஓடி வந்து எட்டிப் பார்த்தனர்.

''குழந்தைக்கு இப்போ எப்படியிருக்கு? பரவாயில்லையா? காய்ச்சல் இறங்கியிருக்கா?'' மூவரும் பரபரப்பாய் விசாரித்தனர்.

''பகவான் புண்ணியத்துல... காய்ச்சல் இறங்கி பாப்பா நல்லா வேடிக்கை பாத்து விளையாட ஆரம்பிச்சிருக்கு!''

''குழந்தைக்கு ஏக்கம் தான்! வேற ஒண்ணுமே இல்ல... அதான் காய்ச்சல் உடனடியா இறங்கியிருக்கு! தீராத ஏக்கம் இருந்தா... அதுவே நோயில தள்ளி விட்டுரும்!'' பெருமூச்சு விட்டாள் தேவகி.

''ஆனா... ஒண்ணு! மடியை விட்டு இறங்கவே மாட்டேங்கிறா... தூங்கிடுச்சுன்னு தொட்டில்லே போட்டா... முழிச்சுக்கிட்டு ஒரே அழுகை! குழந்தைக்கு ஆழ்ந்த தூக்கம் வர்ற வரைக்கும் தோள்லே போட்டு தட்டிக் கொடுத்து... தூங்கினதும் தொட்டில்லே கிடத்தி... நர்ஸ்கிட்டேயும் அக்ஷரா கிட்டேயும் ஒப்படைச்சுட்டு வந்தாச்சு!'' சோர்வுடன் முறுவலித்தாள் சம்யுக்தா.

''நைட்லே முழிச்சு அழுது... திரும்பவும் காய்ச்சல் வந்துடுமேன்னு தான் எல்லாருக்கும் கவலை! காலைல கார் வந்துடும்... நான் போய் தான் ஆகணும்பா!'' தயக்கமாய் தந்தையை நோக்கினாள்.

''ஆனந்த் பாவம்! மனைவியை இழந்து தவிச்சுட்டிருக்கான். இனிமே அவனுக்கு சகலமும்... இந்தக் குழந்தைதான்! அந்தப் பச்சை மண்ணுக்கு எந்தக் குறையும் வராம... ஆரோக்கியமா தீர்க்காயுசோட நல்லா இருக்கணும். எந்தப் பெண்ணுக்கும் இந்த வயசுல கிடைக்காத பாக்கியம் உனக்குக் கிடைச்சிருக்கு. தயங்காம போயிட்டு வாம்மா!'' கருணாகரனது தெளிவான பேச்சைக் கேட்டதும்... சம்யுக்தாவுக்குள் இருந்த தயக்கம் மாயமாய் மறைந்தது.

''வாம்மா! சாப்பிடலாம்! தயிர் சாதமும் ஊறுகாயும் தான் இருக்கு! சந்துரு, கடையில இருந்து பக்கோடா வாங்கிட்டு வந்தான்!'' அடுக்களைக்குச் செல்ல முயன்ற தேவகியை இடைமறித்தாள்.

''நீ இரும்மா! நான் எடுத்து வைக்கிறேன்! ஏம்பா நீங்க எல்லாம் சாப்பிட்டு இருக்கலாமே? நேரம் தவறி சாப்பிட்டு... மாத்திரை போட்டா... உடம்பு என்னத்துக்கு ஆகும்? என்ன அண்ணா? நீயாவது சொல்லி சாப்பிட வச்சிருக்கலாமே?''

''எங்கே... சொன்னாக் கேட்டாதானே? சர்வாதிகாரி சம்யுக்தா வந்து... 'ஏன் இன்னமும் சாப்பிடலைன்னு கேட்டு ஆட்டிப் படைக்கப் போறா... சாப்பிட்டுருங்க'ன்னு நானும் சொன்னேன். கேட்டாதானே?'' சீரியஸாய் முகத்தை வைத்துக் கொண்டு சந்துரு பேசியதும்... களுக் என்று சிரித்துவிட்டாள் சம்யுக்தா.



அடுத்த அரை மணி நேரத்தில் கூடத்தில் பாயை விரித்துப் படுத்ததும் அனைவரும் உடனே கண்ணயர்ந்து விட்டனர். தூக்கம் வராமல் புரண்டு புரண்டு படுத்தபடி விட்டத்தை வெறித்துக் கொண்டிருந்தாள் சம்யுக்தா. ''தூக்கம் கலைந்து விட்டால்... குழந்தை கதறித் தீர்க்குமே?''

''ஒருவேளை... நான் இந்தப் பக்கம் வந்ததும் விழித்துக் கொண்டு கதறுகிறாளோ?'' துக்கம் பந்தாக எழும்பி தொண்டைக் குழியை அடைத்துக் கொண்டது.

விழியோரங்களிலிருந்து வழிந்த கண்ணீர் தலையணையை நனைக்க ஆரம்பித்தது. இரவு விளக்கிலிருந்து கசிந்த மெல்லிய வெளிச்சத்தில்... மெதுவாய் நடந்து உள்ளறைக்குச் சென்று விளக்கைப் போட்டாள். அங்கு சிறு மேஜை டிராயரைத் திறந்து... அந்த டைரியை வெளியில் எடுத்தாள்.

அன்றாட நிகழ்வுகளை டைரியில் எழுதி வைக்கும் பழக்கம் உடையவள் சம்யுக்தா. தன் மனதில் உள்ளதை ஒன்று விடாமல் டைரியில் எழுத்தாய் வடித்து விடுவாள். அனைத்தையும் கொட்டித் தீர்த்து எழுதினால் தான்... அவளுக்குத் தூக்கமே வரும்.

சிறு வயதிலிருந்தே டைரி எழுதும் வழக்கம் அவளுக்குண்டு! ஒவ்வொரு வருடாந்திர டைரியையும் பொக்கிஷமாய் பத்திரப்படுத்தி பாதுகாத்து வைப்பதில்... சம்யுக்தாவிற்கு அலாதி சுகம்தான்!

பெற்ற தாயிடம் கூட வெளிப்படுத்த முடியாத சில ரகசியங்களை தன் உள்ளத்து உணர்வுகளை... மனக்குறைகளை எல்லாம் வெளிப்படுத்த ஒரு வடிகாலாக இருந்தது டைரி மட்டுமே!

புரண்டு படுத்த சந்துருவுக்கு அன்று ஏனோ விழிப்பு தட்டியது. தொண்டை வறண்டு விட்டது போல் அப்படியொரு தாகம்! அடுக்களைக்குச் சென்று நீர் அருந்த எழுந்தவன். உள்ளறையில் விளக்கெரிவது கண்டு, மெல்ல எட்டிப் பார்த்தான்.

சீரியஸான முக பாவத்துடன் டைரியில் எதையோ எழுதித் தள்ளிக் கொண்டிருந்தாள். 'அழுகின்றாளா என்ன?' தூக்கக் கலக்கத்தில் இருந்த சந்துரு கண்களைக் கசக்கி விட்டுப் பார்த்தான். ''நடு ஜாமத்துல என்ன எழுதறே?'' என்று அவன் கேட்டதும்... சட்டென்று டைரியை மூடி மேசை டிராயரில் போட்டு நிமிர்ந்தாள்.

## 20

''எத்தன நாளைக்கித்தான் இந்த கண்றாவியை சகிச்சுட்டு இருக்கப் போறே? 'செத்தும் கொடுத்தாள்'



அப்படிங்கிற மாதிரி... கங்கா உயிரோட இருந்தும் பிரச்சனை தான். செத்ததுக்கு அப்புறம் கேக்கவே வேணாம். ஆனந்தை என்ன கதியாக்கிட்டா பாத்தியா?'' தூபம் போட்டாள் பங்கஜம். புல்வெளியில் போடப்பட்டிருந்த பிரம்புக்கூடை நாற்காலிகளில் அமர்ந்திருந்தனர்.

''தங்கத்தாம்பாளத்துல வச்சு நீ அவளைத் தாங்கினே? ஆனா ஊர் உலகத்துல... ''நீ ஒரு கொடுமைக்கார மாமியார்னு கண்டவங்க பேசும்படியான சூழ்நிலையை உருவாக்கிட்டுப் போயிட்டா, அதுக்கு எல்லாம் மனம் தளராம... நான் சொல்லப் போற விஷயத்தைப் பத்தி யோசி! என் தங்கச்சிக்கு ஒரே பொண்ணு. பேரு தீபிகா. பி.ஏ. படிச்சிருக்கா. ஓரளவுக்கு அந்தஸ்தான குடும்பம். இவளை நீ மருமகளாக்கிட்டா... நாலு எடத்துக்கு கௌரவமா அழைச்சுட்டுப் போலாம்.

''குணத்தைப் பத்தி கேக்கவே வேணாம். எங்க குடும்பத்துப் பொண்ணு. படிச்சவ பதவிசா நடந்துப்பா. ஆனந்துக்கு சட்டுபுட்டுனு கல்யாணத்தை முடி. பழையபடியே சரியாயிடுவான். சிங்கப்பூர், மலேசியா, ஜப்பான்னு பறக்கற பையன். வீட்டோட முடங்கிக் கிடக்கான் பாரு. இந்தா... இது பொண்ணோட போட்டோ! இது ஜாதகம். எல்லாம் கையோட கொண்டு வந்துட்டேன். பிடி!''

ஹேண்ட் பேக்கில் திணித்து வைத்திருந்த ஜாதகத்தை வெளியில் எடுத்து சொர்ணத்தின் கையில் வைத்து விட்டுப் புன்னகைத்தாள் தெய்வானை.

ஆனந்தின் அலங்கோலத்தை நினைத்ததும் சொர்ணத்தின் விழிகளில் ஈரம் படர்ந்தது.

''யோசிக்காதே! மடமடன்னு ஆக வேண்டியதைப் பாரு சொர்ணம். எல்லாம் சரியாகி விடும். நாங்க கிளம்பறோம்.''

பங்கஜமும், தெய்வானையும் சொர்ணத்தை உசுப் பேற்றி விட்ட திருப்தியில் கிளம்பி விட்டனர்.

எழுந்து வேக வேகமாய் ஆனந்தின் அறையை நாடிப் போனாள். படுக்கையறையில் பால்கனிக் கதவை ஒட்டியபடி கால்களை நீட்டிக் கொண்டு அமர்ந்திருந்தான் ஆனந்த். அவனது மடியில் கங்காவின் புகைப்படம். தாரை தாரையாக கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தான்.

சொர்ணத்திற்கு, ஆனந்தின் நிலைமையைக் கண்டு அடி வயிற்றில் பிசைந்தது. விம்மியபடி அவனருகே சென்று மெல்ல அமர்ந்து கொண்டாள்.

''இத்தன சொத்தையும் ஆளப் பிறந்த ஆண் வாரிசுப்பா நீ! உன்னோட லட்சியத்துக்கு மதிப்பு கொடுத்துத் தானே... நீ ஊரான் கம்பெனியில வேலை பார்க்கிறதுக்கு அனுமதிச்சேன். சிங்கப்பூர், மலேசியான்னு பறந்துகிட் டிருந்தே. என்னிக்காவது ஒரு நாள் உன்னோட லட்சியம் நிறைவேறி அதுக்கு அப்புறம் முழு திருப்தியோட நம்ம கம்பெனிகளோட நிர்வாகத்தை ஏத்து நீ நடத்துவேன்னு நான் நம்பிக்கிட்டிருந்தேன்.

''இப்படி இடிஞ்சு போய் உட்கார்ந்துட்டியேப்பா! திறமையான இளைஞன்னு பேரெடுத்தவன் நீ. சிங் கப்பூர், மலேசியான்னு... பழைய மாதிரி போ! கங்கா வுக்காக உன்னோட லட்சியத்தைக் கைவிடணுமா? வெளிநாடுகளுக்குப் போனா... உனக்கும் கொஞ்சம் மனசுக்கு நிம்மதி கிடைக்கும். ஒரு மாற்றம் வரும். இதோ பார்! ஊர் உலகத்துல நடக்காததா நம்ப வீட்டுலே நடந்து போச்சு? ஏதோ விதி! பழசை நினைச்சுட்டிருந்தா உன் னோட எதிர்காலமே இருண்டு போயிடும்.



''இதோ பார் போட்டோ! தெய்வானையோட தங்கச்சி மக தீபிகா! பிடிச்சிருக்கா பாரு. நீ சரின்னு சொல்லிட்டா சீக்கிரமா எல்லா ஏற்பாட்டையும் பண்ணிடுவேன்.''

அவளது கையிலிருந்த போட்டோவை வாங்கித் தூக்கியெறிந்தான். ''என்னோட கங்கா போயிட்டா ளேன்னு குற்றவுணர்வில் நான் தவிச்சுட்டு இருக்கேன். என்னோட வேதனை புரியாம மறுகல்யாணத்தைப் பத்தி பேசறியே? ச்சே!'' தலையில் அடித்துக் கொண்டான் ஆனந்த்.

''பொண்டாட்டி செத்தா புது மாப்பிள்ளைன்னு சொல் லுவாங்க. அவ செத்து அஞ்சு மாசமாகப் போகுது. வெளி நாடுகளுக்குப் போய் வான்னு சொல்றேன். அதுக்கும் கேட்க மாட்டேங்கிற! கல்யாணத்துக்கும் நீ சம்மதிக்க மாட்டேங்கிறே?'' தழுதழுத்தாள்.

''பிராஜெக்ட், லட்சியம்... சிங்கப்பூர், மலேசியா எல்லாமே முடிஞ்சு போச்சும்மா! தீராத பழி பாவம் என்னை வந்து சேர்ந்துடுச்சே. உன்னோட சந்தோஷத்துக்காக எல்லாம் உனக்காக... நான்... நான்... ச்சே! தாலி கட்டின தினத்திலிருந்து மனசுக்குள்ளே நொந்து புழுங்கி அந்த அப்பாவிப் பொண்ணு தினம் தினம் கொஞ்ச கொஞ்சமா செத்துக்கிட்டிருந்திருக்கா. ஒரேயடியா விரக்தியடைஞ்சு உலகத்தை விட்டே போயிட்டா.

''இந்த உலகத்துல ரொம்பக் கொடுமையானது எது தெரியுமா அம்மா! அவாய்ட்னெஸ். எஸ்! யாராலும் கண்டு கொள்ளப்படாம புறக்கணிக்கப்படறதுதான்! கங்கா அந்த மாதிரிக் கொடுமையை அனுபவிச்சிருக்கா. எனக்காகத் தானே பல கஷ்டங்களை சகிச்சுக்கிட்டா...! மனைவிங்கற உண்மையான அங்கீகாரம் கிடைச்சிருந்தா சத்தியமா

செத்திருக்க மாட்டா! கத்தியின்றி ரத்தமின்றி ஒரு அபலைப் பெண்ணைக் கொலை செய்த பாவி நான்.

''பஞ்சமா பாதகம் செய்தவனுக்குக் கூட மன்னிப்பு உண்டு. ஆனா... நான் செய்த பாவத்துக்கு மன்னிப்பே கிடையாது. அத்தகைய பாவத்தை நான் செய்ததுக்கு மூல காரணமே நீ தான்! உனக்கொண்ணு தெரியுமா? நான் ஒரு பெண்ணை விரும்பினேன். அவளையே மனைவியா அடையணும்னு நான் ஆசைப்பட்டேன். அந்த ஆசைக்கு நீ சம்மதிக்க மாட்டேன்னு தான் வாய் மூடி மௌனியா அந்தக் காதலை குழி தோண்டிப் புதைச்சிட்டேன்.

''நான் இந்த கதியானதுக்கு காரணமே நீதான். வர்ஷாவுக்காகத்தான் உசுரைப் புடிச்சிட்டிருக்கேன். மத்தபடி எல்லாமே... எல்லாமே முடிஞ்சு போச்சு. ப்ளீஸ் மா! கெட் அவுட் அண்ட் லீவ் மீ அலோன்!'' கங்காவின் படத்தை இறுக அணைத்தபடி கறாராகப் பேசிய மகனை ஏறிட்டுப் பார்க்கத் தெம்பின்றி குலைகுனிந்தபடி வெளியேறினாள்.

* * *

சம்யுக்தா முதல் வகுப்பில் தேறியிருந்தாள். மேற்கொண்டு எம்.எஸ்ஸி. படிக்க ஆசைதான். குழந்தை வர்ஷாவை கவனித்துக் கொள்ள வேண்டிய கடமை இருந்ததால் தன் ஆசைக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டிருந்தாள். தபால் மூலம் எம்.ஏ. தமிழ் படிக்கத் தீர்மானித்தாள்.

ஆரம்பத்தில்... தொடர்ந்து இரு வாரங்களாக சொர்ணத்தின் பங்களாவுக்குச் சென்று குழந்தையை கவனித்து வந்தாள். பங்களாவுக்கு வருவதில் தனக்கிருந்த சங்கடத்



தையும், தயக்கத்தையும் அக்ஷராவிடம் எடுத்துச் சொன்னாள் சம்யுக்தா.

''டெய்லி... காத்தால வந்துட்டு லேட் நைட்லே வீடு திரும்பறதுக்கு ரொம்ப சங்கோஜமாயிருக்கு! வேணும்னா... குழந்தையை எங்க வீட்டுக்குத் தூக்கிட்டுப் போய் பாத்துக்கட்டுமா? இல்லைன்னா... காத்தால குழந்தையைத் தூக்கிட்டு வந்து விட்டுடு! நைட்லே தூங்கினதுக்கு பின்னாடி நீ பாப்பாவை... வேணாம்! வேணாம்! தினமும் நைட்லே கார்லே அங்கேயும் இங்கேயுமா அலைஞ்சா பனிக்காத்துல சளி புடிச்சுக்கும். பேசாம... பாப்பா என்கிட்டயே எங்க வீட்டுலே இருக்கட்டுமே. நா கண்ணுக்குள்ள வச்சுப் பாத்துப்பேன். என் மேல நம்பிக்கை இருக்குல்லே?'' தழுதழுத்தாள் சம்யுக்தா.

''உனக்கு இங்க வர்றதிலே என்ன பிரச்சனை? என்னவோ இருக்கு மறைக்கிறே? உண்மையைச் சொன்னா நானே உனக்கு சப்போர்ட் பண்ணுவேன் இல்லே?'' துருவிக் கேட்டாள் அக்ஷரா.

''நே... நேத்து வர்ஷாவை 'பேபி வாக்கர்'லே உக்காத்தி வச்சு தோட்டத்துல தள்ளிக்கிட்டே வேடிக்கை காட்டினேன். அத்தையோட ரூம் ஜன்னல் பக்கமா தோட்டத்துல நான் நின்னுகிட்டிருந்தேன். அத்தைகிட்டே அவங்க சிநேகிதி 'ஏதோ சொக்குப்பொடி போட்டு பேத்தியை மயக்கிட்டா. சொத்துக்கு ஆசைப்பட்டு ஆனந்தையும் வளைச்சுப் போட்டுடப் போறாள்'னு பேசிக்கிட்டாங்க.

''எனக்கு உடம்பெல்லாம் கூசிப் போச்சு தெரியுமா? அதுக்குத் தான் சொல்றேன்!'' சம்யுக்தா கூறி முடிப்பதற்குள் கொதித்துப் போனாள் அக்ஷரா.

''பங்கஜமும், தெய்வானையும் விஷக்கிருமிங்க! அம்மாவுக்கு தூபம் போட்டு ஏத்தி விடறவங்களை செருப்பால அடிச்ச மாதிரி நாலு கேள்வி கேட்டாத்தான் இந்தப் பக்கம் தலை வச்சுப் படுக்காம இருப்பாங்க.''

''அய்யோ அக்ஷரா! விட்டுத் தள்ளு! இவங்க ரெண்டு பேத்து வாயை அடைச்சிட்டா ஆச்சா? ஊர்லே மத்தவங்களும் இத மாதிரி பேசிப்பாங்க போல தெரியுது!'' மிடறு விழுங்கினாள்.

''ஊஹூம்! இது மட்டுமே காரணமில்ல! உன் மனசுக்குள்ளே வேறே ஏதோ நெருடல் இருக்கிற மாதிரி தோணுது. சரி! அப்பாகிட்ட பேசறேன். நீ தயங்கறதுக்குரிய காரணத்தையும் சீக்கிரம் கண்டு பிடிக்கறேன். ஓ.கே.வா? அண்ணி!''

''அ... அண்ணியா?'' திகைத்துப் போய் விழித்தாள் சம்யுக்தா.

''ஆமா... நீ எனக்கு அண்ணி முறை! உனக்கு நான் அண்ணி முறை! ஹூம்! நீயா... என்னை அண்ணின்னு கூப்பிட மாட்டியா?ன்னு... ரொம்ப நாளா ஏங்கறேன். கூப்பிட்ட பாடில்லை. சரி... நாமளாவது கூப்பிடலாம்னு கூப்பிட்டுப் பார்த்தேன்!'' முகத்தை சோகமாய் வைத்துக் கொண்டு பேசினாள் அக்ஷரா.

''நம்ம ரெண்டு பேத்துக்கும் சம வயதுதான். அதனால் தான் உன்னைப் பேர் சொல்லி...'' பேசியவளுக்கு எங்கோ பொறி தட்டியது.

''அட... அதுவும் அப்படியா?'' மகிழ்ச்சி தாளாமல் ஏற இறங்க அக்ஷராவைப் பார்த்தாள் சம்யுக்தா.

''எதுவும் எப்படியாம்?''



''நீயும்... சந்துருவும்...?'' தயங்கி நிறுத்தினாள்.

''அண்ணனும் தங்கையும் சரியான டியூப் லைட்டுங்க. சந்துரு இன்னமும் உன்கிட்ட சொல்லலையா? அழுத்தம் ஜாஸ்தி! எனக்குப் பிடிச்ச குணமே அதுதான்.

''சுய கௌரவத்தை விட்டுக் குடுக்காம அலட்சியமா ஒரு பார்வையோட திரிவாரே...? அது தான் என்னை ரொம்ப ஈர்த்துடுச்சு!'' நாணத்தில் அவளது கன்னங்களில் செம்மை படர்ந்தது.

''இப்படியொரு அண்ணியை எனக்குக் கொடுத்ததுக்கு நான் பகவானுக்கு நன்றி சொல்லணும்!'' சம்யுக்தாவின் கண்கள் பனித்தன.

''அதே மாதிரிதான் நானும் நன்றி சொல்ல ஆசைப் படறேன்!'' பூடகமாக அவள் பேசியது சம்யுக்தாவுக்குப் புரியவில்லை.

''என்ன சொல்ல வரே?''

''ஒ... ஒண்ணுமில்ல... நேரம் வரும்போது உனக்குத் தன்னால புரியும்?'' நமட்டுச் சிரிப்புடன் நகர்ந்தாள்.

* * *

காலச் சக்கரம் வேகமாய் சுழன்றது. வர்ஷாவுக்கு பத்து மாதங்கள் ஆகிவிட்டன. சொர்ணத்தின் எதிரி கோமதி ராஜேந்திரன் மீண்டும் தனது கைவரிசையைக் காண்பித்து விட்டாள். கங்காவை சொர்ணம் ஆட்டிப் படைத்ததாகவும், அடி உதை சித்ரவதைகளுக்கு ஆளான கங்கா தலைப்பிரசவத்தில் மாண்டு போனதாக கிளப் உறுப்பினர்கள் அனைவரிடமும் கூறி விட்டாளாம்.

சொர்ணத்திற்கு அவமானத்தில் நாக்கைப் பிடிங்கிக் கொள்ளலாம் போலிருந்தது. வெளியில் எங்கும் தலை

காட்டாமல் வீட்டிற்குள்ளேயே 'அஞ்ஞான வாசம்' செய்தாள். ஜட்ஜின் மனைவி வேறு சமீபத்தில் போன் செய்து பேசினாள்.

''கங்கா கர்ப்பமாயிருக்காள்னு தெரிஞ்சதும் நீங்க எவ்ளோ சந்தோஷப்பட்டீங்க. அதை நான் நேர்ல பாத்தவ. கண்ட வதந்தியை நான் நம்ப மாட்டேன். பழி போட்டுப் பேசறவங்களைப் பத்தி கவலைப்படாம உங்க கடமையைச் செய்யுங்க. உங்க ஜாடையில பிறந்திருக்கிற உங்க பேத்தியை போஷாக்கா வளருங்க. நாளா வட்டத்துல உங்களோட உண்மையான பாசமும், இரக்க சுபாவமும் உலகத்துக்குப் புரியும்.''

அவர் பேசிய ஒவ்வொரு வார்த்தையும் சொர்ணத்தின் இதயத்தை ஈட்டி போல் பதம் பார்த்தது. குழந்தையைப் பார்ப்பதற்கு... அடிக்கடி கருணாகரனின் வீட்டிற்குச் சென்றாள்.

அச்சில் வார்த்தது போல் தன்னை உரித்துக் கொண்டு வந்த பேத்தியின்பால் பாசம் பிறந்தது. 'கல்லுக்குள் ஈரம்' கசிவதைப் போல்... பாறையாய் இறுகிக் கிடந்த அவளது நெஞ்சில் பாச ஊற்று சுரக்க ஆரம்பித்தது.

குற்ற உணர்விலும், அவமானத்திலும் டென்ஷன் பட்டு சொர்ணத்திற்கு பி.பி., சுகர் ஏகத்துக்கும் ஏறிப் போயிருந்தது. பொழுது போய் பொழுது புலர்ந்தால் புதுப்புது வலிகளையும், உடல் உபாதைகளையும் அனுபவித்து வேதனையில் அரற்ற ஆரம்பித்தாள். கங்கா இருந்தபோது மனதுக்குப் பிடித்த உணவு வகைகளை செய்து தரும்படி நச்சரித்து... கட்டுப்பாடே இல்லாமல் ருசித்துச் சாப்பிட்டு சாப்பிட்டு உடம்பை ஏகத்துக்கும் பெருக்க விட்டிருந்தாள்.



ஆசை ஆசையாக தீனி போட்டு வளர்த்த அழகான உடம்பு அவளுக்கே எதிரியாகி... கை குடைச்சல், கால் குடைச்சல், முட்டி வலி, முதுகு வலி, இடுப்பு வலி... என்று வஞ்சகமில்லாமல் அனைத்து வலிகளையும் வாரி வழங்கி விட்டது.

பணத்தாசையில்... கர்வம் கொண்டு தான் நடந்ததை எண்ணி மனம் குமைந்தாள். குவிந்து கிடக்கும் செல்வத்தாலும், ஆஸ்தியாலும்... அவளது உடம்பு உபாதைகளுக்குத் தீர்வு காண முடியவில்லையே? இனி அவள் சாகும் வரை வேதனையில் நொந்து... அணு அணுவாகச் சித்ரவதைப் பட வேண்டுமே!

''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'' என்பதை சொர்ணம் நன்றாகவே உணர்ந்து விட்டாள். வாழும் கொஞ்ச காலத்தில், நல்ல பெயரெடுத்து விட்டுச் சாகாமல்... இப்படிப் பழி பாவத்திற்கு ஆளாகி விட்டோமே? கர்ப்பிணிப் பெண்ணென்று பாராமல் கங்காவைப் படாதபாடு படுத்தி விட்டேனே! அதற்கு சரியான தண்டனையைக் கடவுள் எனக்குக் கொடுத்து விட்டார்!

உள்ளூர தினமும் அழுது புலம்பினாள். தினமும் சம்யுக்தாவின் வீட்டிற்குச் சென்று பேத்தியின் பக்கத்தில் அமர்ந்து கொண்டாள். சொர்ணத்தின் மனமாற்றத்தைக் கண்டு சிலாகித்துப் போனார்கள் விஸ்வநாதனும், கருணாகரனும், தேவகியும்!

சந்துருவை அக்ஷரா காதலிக்கும் விஷயம் ஜாடைமாடையாகத் தெரிந்தும் கண்டு கொள்ளாமலும் முட்டுக்கட்டை போடாமலும் இருந்தாள் சொர்ணம். கருணாகரனிடமும், தேவகியிடமும்... உண்மையான பாசத்துடன் உறவாடினாள்.

தன் காதலுக்கு 'கிரீன் சிக்னல்' கிடைத்து விட்டதை எண்ணி மகிழ்ச்சியில் திக்கு முக்காடிப் போனாள் அக்ஷரா.

## 21

''சந்துரு.''

தலைசீவிக் கொண்டிருந்த சந்துரு திரும்பிப் பார்த்தான்.

''என்னப்பா?''

''வா! நாம ஒரு முக்கியமான விஷயத்தைப் பத்தி பேசி முடிவெடுக்கணும்!'' மணிக்கட்டிலிருந்த வாட்சைப் பார்த்துவிட்டு கூடத்தில் கருணாகரன் அமர்ந்திருந்த நாற்காலியின் அருகில் வந்து நின்றான்.

''சம்யுக்தா! தேவகி, நீங்களும் வாங்க!''

குழந்தை கண் விழித்து எழுந்து கொள்வதற்குள் பரபரப்பாக சமைத்துக் கொண்டிருந்தாள் சம்யுக்தா.

''சம்யுக்தாவுக்கு நல்ல வரன் பார்க்கும்படி... தரகர் கிட்ட நான் சொல்லியிருந்தேன் இல்லையா? ஒரு நல்ல வரன் வந்திருக்காம். மாப்பிள்ளை, ஒரு பெரிய கம்பெனியில எக்ஸிக்யூட்டிவ் ஆபீசரா இருக்காராம். ஒரே தங்கையாம். கட்டிக் கொடுத்திட்டாங்களாம். மாப்பிள்ளையோட குடும்பம் ரொம்ப நல்ல மாதிரியாம்!



''பையனோட அம்மா, அப்பா நல்ல குணமான பொண்ணைத் தேடிக்கிட்டிருக்காங்களாம். 'எங்களுக்கு ஏத்த மருமகளா இருந்தாப் போதும். பெரிசா ஒண்ணும் எதிர்பார்க்கலை'ன்னு அவங்க சொல்றாங்களாம்! எனக்கென்னமோ இந்த இடம் பிடிச்சிருக்கு. சம்யுக்தாவுக்கும், உங்களுக்கும் சம்மதமா இருந்தா ஜாதகம் பொருந்தியிருக்கான்னு பார்த்துட்டு... அதுவும் சரியா இருந்தா... பொண்ணைப் பார்க்க வரச் சொல்லிடலாம்!'' என்றபடி நிமிர்ந்து பார்த்தார்.

''நீங்க முடிவெடுத்தா எல்லாம் சரியாத்தான் இருக்கும். உங்க விருப்பம் போல் செய்யுங்க!'' என்றாள் தேவகி.

தணலில் நின்று கொண்டிருப்பது போன்று... தவித்துப் போனாள் சம்யுக்தா.

''நீ என்னப்பா சொல்றே?'' பக்கவாட்டில் நின்றிருந்த சந்துருவை ஏறிட்டார்.

''உங்க பேச்சை நான் என்னைக்குத் தட்டியிருக்கேன்? உங்க இஷ்டம்பா!''

''வாழப் போற நீ... என்னம்மா சொல்றே?''

''எ... எனக்கு இப்போதைக்கு கல்யாணம் வேண்டாம்பா! நான் எம்.ஏ. முடிக்கணும்பா.''

கருணாகரனுக்கு விழிகளில் ஒரு திடுக்கிடல் தெரிந்தது.

''போஸ்டல்லே தானேம்மா படிக்கிறே? கல்யாணத்துக்கு அப்புறமும் நீ படிப்பைத் தொடரலாம். அது ஒண்ணும் பிரச்சனையில்ல!''

''இ... இல்லப்பா! எனக்கு கல்யாணத்துல இஷ்டம் இல்லைப்பா! நம்ம குடும்பத்தை விட்டுப் பிரிஞ்சு போற

சக்தி என்கிட்ட இல்லப்பா. மேற்கொண்டு வற்புறுத்தா தீங்கப்பா. உண்மையை சொல்லப்போனா இந்த வர்ஷாவை விட்டுட்டு எப்படிப்பா?''

''எந்த பொண்ணுக்கும் கிடைக்காத பாக்கியம் உனக்கு கிடைச்சிருக்கு. அந்த பிஞ்சுக் குழந்தையை கவனிக்க வேண்டிய கடமை உனக்கு இருக்கு'' அப்படின்னு நீங்க தானேப்பா சொன்னீங்க?''

''நல்ல அலையன்ஸ் கிடைச்சிருக்குன்னு சந்தோஷப் பட்டு... கல்யாணம் பண்ணிக்கிட்டு சுயநலமா போற துக்கு நான் தயாரா இல்ல. எனக்கு உன்னதமான தாய் ஸ்தானத்தை கொடுத்த குழந்தைக்கு நல்ல தாயாக இருக்க விரும்பறேன். நான் உங்க பொண்ணுப்பா. என்னால சுயநலமா சிந்திக்க முடியாதுப்பா!'' திட்டவட்ட மாகக் கூறி விட்டாள் சம்யுக்தா.

வாயடைத்துப் போய் விட்டார் கருணாகரன்.

''அது சரி! இந்தப் பிரச்சனைக்கு என்ன தான் முடிவு? இப்படியே நீ கால முச்சூடும் இருக்க முடியுமா? கல் யாணம் ஆகாத பொண்ணு... கையில குழந்தையோட சதா வளைய வரே! கோவிலுக்கா? ஆஸ்பத்திரிக்கா...? எங்கே போனாலும் குழந்தையோட தான் போறே! காலம் முழு வதும் கையில் குழந்தையோட கல்யாணமே ஆகாம நீ இருந்துட முடியுமா? ஊர், உலகம் என்ன சொல்லும்? ஊர், உலகத்தை விட்டுத்தள்ளு...

''ஏகப்பட்ட வியாதிகளோட அவஸ்தைப் பட்டுக்கிட்டு இன்னமும் எத்தன நாளைக்கு நாங்க தாக்குப் பிடிக்கப் போறோம்? நாங்க நல்லா இருக்கும்போதே... உனக்கொரு கல்யாணம் காட்சியைப் பாக்கணும்னு எங்களுக்கு



ஆசையா இருக்காதா? இதோ உங்க அண்ணா சந்துரு! அவனை யோசிச்சுப் பார்த்தியா? தங்கச்சி காலம் முழு வதும் கரையேறாம இருந்தா... அவன் எப்படிக் கல்யாணம் செய்துப்பான்? கடைசி காலத்துல எங்களுக்கு ஒரு நிம்மதியே இல்லாம பண்ணுறியேம்மா!''

''அம்மா கேட்கறாங்க இல்லே? பதில் சொல்லு!'' சந்துரு அதட்டினான்.

தூளியில் சிணுங்கி அழ ஆரம்பித்த வர்ஷாவைப் பாய்ந்து சென்று தூக்கிக் கொண்டாள் சம்யுக்தா. தன் தோளில் முகம் புதைத்துக் கொண்ட பாப்பாவின் முதுகில் தட்டிக் கொடுத்தாள்.

''கேட்கிறதுக்கு பதில் சொல்றாளா பாருங்கப்பா?''

''விட்டுரு சந்துரு! அவளை அவ போக்கில விட் டுரு!'' தலை குனிந்தபடி மெல்லிய குரலில் பேசிய கருணாகரனைப் பார்க்கவே பாவமாக இருந்தது.

தற்செயலாகத் திரும்பிய சந்துரு... தாழ்வாரத்தில் கையில் அர்ச்சனைக் கூடையுடன் அக்ஷரா நின்று கொண்டிருப்பதைக் கண்டதும் திடுக்கிட்டான்.

''இவள் எப்போது வந்தாள்? எல்லாவற்றையும் கேட்டு விட்டாளோ?'' மனதில் ஐயம் முளைத்தது.

''வா! அக்ஷரா! உள்ளே வா'' தயக்கமாய் உள்ளே நுழைந்தாள், கனத்த அமைதி நிலவியது.

''மாமா! அத்தே! இன்னக்கி என்னோட பொர்த்டே. கோவிலுக்குப் போயிட்டு அப்படியே உங்ககிட்ட ஆசீர் வாதம் வாங்கலாம்னு வந்தேன். ரெண்டு பேரும் சேர்ந்து நில்லுங்க. நமஸ்காரம் பண்ணிக்கறேன்!''

இருவரும் சேர்ந்து நின்றனர். கருநீல வண்ணத்தில் மைசூர் சில்க் புடவை கட்டி, தலை நிறைய மல்லிகைப்பூவைச் சூடி... தங்கக் குத்து விளக்காய், கண்களை வசீகரித்தாள்.

''சௌபாக்கியவதியா... தீர்க்காயுசா நல்லா இரும்மா!'' கருணாகரன் அவளது உச்சந்தலையில் கை வைத்து ஆசீர்வதித்தார். சாமி படங்கள் வைத்திருந்த அலமாரியிலிருந்து குங்குமச் சிமிழை எடுத்துக் கொண்டு வந்து தேவகியிடம் தந்தாள் சம்யுக்தா.

''இதே வீட்டுக்கு மருமகளா வரணும்னு ஆசீர்வாதம் பண்ணுங்க மாமா!''

தேவகி மற்றும் கருணாகரனுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

''ஒரே போடா போட்டு உடைச்சிட்டாளே! அச்சச்சோ!'' கைகளை உதறினான் சந்துரு.

''இதோ பாரும்மா...!'' கருணாகரன் ஆரம்பிப்பதற்குள் சட்டென்று குறுக்கிட்டாள் அக்ஷரா.

''அப்பா என்னோட மனசைப் புரிஞ்சவர் மாமா! அம்மாவைப் பத்தி உங்களுக்கே தெரியும். முன்ன மாதிரி இல்ல அவங்க. ஜாடை மாடையா இந்த விஷயம் அவங்களுக்குத் தெரியும். மறுப்பு எதுவும் சொல்லலை.

''நான் சந்துருவை மனசார விரும்பறேன். என்னை மருமகளா ஏத்துக்க நீங்க சம்மதிப்பீங்களா மாமா?''

''உன்னை மறுக்க... யாருக்காவது மனசு வருமாம்மா?'' கருணாகரன் சிரித்து விட்டார்.

தேவகி சட்டென்று குங்குமத்தை எடுத்து அக்ஷராவின் நெற்றியில் இட்டாள்.



கருணாகரன் தம்பதியினருக்கு உண்மையில் மனம் பூரித்துப் போய் விட்டது.

''திருட்டுப் பயலே! இத்தன நாளா இதைச் சொல்லவே இல்லையே?'' கருணாகரன் பொய்க் கோபத்துடன் சந்துருவை அடிக்க கையை ஓங்கினார்.

''அக்ஷரா... எனக்கு அண்ணியா வரப் போறான்னு எனக்கு ஏற்கனவே தெரியும்!'' சம்யுக்தா முறுவலித்தாள்.

''ஷட் அப்! நீ பேசாதே. நான் இந்த வீட்டுக்கு மருமகளா வரப்போறவ, கொஞ்ச நேரத்துக்கு முன்னே பெரியவங்க மனசைக் கஷ்டப்படுத்திப் பேசினியே! பெத்தவங்களுக்கு நிம்மதியை தேடித் தர்றது தான் ஒரு மகளோட கடமை.

''வருங்கால மருமகள்ங்கிற உரிமையில... இவங்க சார்பா உன்கிட்ட கேட்கறேன்! எங்க அண்ணா ஆனந்தை கட்டிக்க உனக்கு சம்மதமா? அவனைப் பத்தி... சரியாத் தெரிஞ்சவ நீ! உன்னை விட நல்ல மனைவி அவனுக்குக் கிடைக்க மாட்டா! அதோட நீயும் உன் குழந்தை வர்ஷாவைப் பிரியவே தேவையில்ல.

''வர்ஷா உன்னைத் தாயா அங்கீகரிச்சிருந்தா உரிமையா, உண்மையான தாயா... கால முச்சூடும் அவளை விட்டுப் பிரியாம நீ இருக்கலாம். நீ 'சரி'ன்னு ஒரு வார்த்தை சொன்னா... ரெண்டு குடும்பங்களுமே சந்தோஷப்படும். எல்லாருக்கும் நிம்மதி கிடைக்கும் என்ன சொல்றே? என்னைப் பாரு. என்னோட மனசுல இருக்கறதைப் பட்ட வர்த்தமான பட்டுன்னு உடைச்சிப் பேசி... புரிய வச்சுட்டேன் பார்த்தியா?

''எதுவா இருந்தாலும்... உடைச்சு சொல்லிடு! அதுல தப்பே இல்ல சம்யுக்தா!''

''இல்லே! நான் இதுக்கு சம்மதிக்க மாட்டேன்.''

''ஏன்? என்ன காரணம்? ரெண்டாம்தாரமா எப்படி வாழ்க்கைப்படறதுன்னு தயங்கறியா?'' விடாமல் கேள்விக்கணை தொடுத்தாள் அக்ஷரா.

''அ... அப்படியெல்லாம் ஒண்ணுமில்லே!'' மிடறு விழுங்கினாள் சம்யுக்தா.

''அப்ப என்ன காரணம்னு சொல்லு?''

''ஆனந்த்... மனசளவுல கங்கா கூட வாழ்ந்திட்டிருக்கார். அவரோட வாழ்க்கையில நான் என்னைக்கும் குறுக்கிட மாட்டேன்!'' சம்யுக்தாவுக்கு துக்கம் தொண்டையை அடைத்தது.

''அப்போ... அவன் மட்டும் உன் வாழ்க்கையில குறுக் கிடலாமா?''

''அக்ஷரா... என்ன சொல்றே? ஆனந்த் என் வாழ்க் கையில குறுக்கிட்டாரா?''

''ஆமா! எங்க வீட்டு வாரிசு, சாரி! ஆனந்தோட குழந்தையை வளர்த்துட்டு வர்றே! அவனோட வர்ஷா வுக்காக நீ கல்யாணமே பண்ணிக்கப் போறதில்லை'ன்னு ஒத்தைக் கால்லே நிக்கறே!

''கால முச்சூடும் கன்னிப் பொண்ணா... கரையேறாம இப்படியே நிக்கறேன்'னு சொல்றே... அதுக்குக் காரண கர்த்தா ஆனந்த்... ஆனந்தோட குழந்தை தான். நீ கல்யாணம் செய்துகிட்டா குழந்தையைப் பிரிய வேண்டி வரும்.

''குழந்தையை நீ பிரிஞ்சா... அந்த ஏக்கத்துல அதுக்கு ஏதாவது ஆயிடும். அதுக்கு ஏதாவது ஒண்ணு ஆச்



சுன்னா... ஆனந்தும் போய்ச் சேர்ந்துடுவான். அப்படின்னு இரக்கப்பட்டு தானே, கல்யாணமே வேண்டாம்னு சொல்றே? ஸோ... உன் வாழ்க்கையில அவன்தான் குறுக்கிட்டுக் கெடுக்கறான்.

''இந்த விஷயம் ஆனந்துக்குத் தெரிஞ்சா... என்ன ஆகும்னு தெரியுமா? நம்மால ஒரு பொண்ணோட லைப் கெட வேண்டாம்னு குழந்தையை வாங்கிட்டுப் போயிடுவான். குழந்தைக்கு என்ன ஆனாலும் பரவா யில்ல. குழந்தையோட சேர்ந்து நாமளும் கங்காகிட்ட போயிடலாம்'னு முடிவே பண்ணிடுவான். இதைப் பத்தியெல்லாம் யோசிச்சுப் பார்த்தியா?''

எலிப்பொறிக்குள் மாட்டிக் கொண்டதைப் போன்ற உணர்வில் திணறிப் போனாள் சம்யுக்தா.

''அ... அக்ஷரா உனக்கே தெரியுமே? அன்னைக்கு... சொர்ணம் அத்தையோட சிநேகிதி என்ன பேசிக்கிட் டாங்கன்னு சொன்னேன் இல்லையா? சொத்துக்கு ஆசைப்பட்டு தான் நான் பாப்பாவை பார்த்துக்கறேன்'னு சொல்றாங்க. இதையே சாக்கா வச்சு ஆனந்தை வளைச்சுப் போட்ருவேன்'னு பேசினாங்க.

''எந்தவிதமான பிரதிபலனையும் எதிர்பார்க்காம அப் பழுக்கில்லாத பாசத்தை வர்ஷா மேல நான் வச்சிருக்கேன்.

''அன்னைக்கு அவங்க பேசறதைக் கேட்டதும் என் னோட நெஞ்சுல ஈட்டி பாய்ஞ்சது மாதிரி இருந்தது தெரியுமா? அவங்களை மாதரி தானே மத்தவங்களும் என்னை நினைப்பாங்க.

''வர்ஷா மேல நான் வச்சிருக்கற தூய்மையான அன்பைக் களங்கப்படுத்திப் பேசினா என்னால தாங்

கிக்கவே முடியாது. ஒருவேளை... ஆனந்த் கூட அந்த மாதிரி நினைச்சுட்டார்னா... மைகாட்! நான் உயிரோட இருந்து பிரயோஜனமே இல்ல!'' குரல் பிசிறடிக்க, நா தழுதழுக்கப் பேசினாள். பேசியபடியே தேம்பியழுதாள் சம்யுக்தா.

ஒரு கணம் அவளையே உறுத்துப் பார்த்தாள் அக்ஷரா.

''உனக்கொரு உண்மை தெரியுமா? கங்காவை... கட்டிக்கிறதுக்கு முன்னாடி எங்க ஆனந்த் ஒரு பொண்ணை மனசாரக் காதலிச்சான். அந்தக் காதலைப் பத்தி அம்மா கிட்ட வெளிப்படையா சொல்லு'ன்னு வற்புறுத்தினேன். அம்மா சம்மதிக்கமாட்டாங்கன்னு பயந்துகிட்டு உள்ளுக்குள்ளேயே பூட்டி வச்சிருந்தான்.

''தைரியத்தை வரவழைச்சுக்கிட்டு அவன் சொல்றதுக்கு முன்னாடி காரியம் கை மீறிப் போயிடுச்சு. கங்கா அண்ணிக்கு கட்டாயத் தாலி கட்ட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருச்சு!

''காதல் தோல்வியில் நொறுங்கிப் போயிட்டான். அது ஒரு தலைக்காதல் தான். அவளையே மனைவியா கற்பனை செய்து வாழ்ந்துட்டு இருந்தவனால் கங்காவை அங்கீகரிக்க முடியலை. சொல்லவும் முடியாம, மெல்ல வும் முடியாம சரியா முடிவெடுக்கத் தெரியாம அவன் குழம்பின விதம் தான் இத்தனை குழப்பத்துக்கும் காரணம். இதை கங்கா அண்ணிகிட்டயாவது வெளிப் படையா அவன் சொல்லியிருக்கலாம்.

''ஆனந்தோட மனசு என்னைக்காவது மாறுகிற வரைக் கும் நம்பிக்கையோட அவங்க காத்துக்கிட்டிருந் திருப்பாங்க. இப்படித்தான் நடக்கணும்னு விதி. நடக்கக் கூடாததெல்லாம் நடந்து போச்சு. அவன் விரும்பின பொண்ணு வேற யாருமில்ல. நீ தான்!'' இதைக் கேட்டதும்... திடீரென்று எரிமலை குமுறி வெடித்தது போலிருந்தது. பூகம்பம் வந்தது போல் அதிர்ச்சி ஏற் பட்டது.



## 22

சம்யுக்தாவிற்கு சர்வமும் பதறியது. கடைசியாக பலமான ஒரு அஸ்திரத்தைப் பிரயோகித்திருந்தாள் அக்ஷரா. காலடியில் தரை நழுவிச் சென்று விட்டதைப் போன்ற உணர்வில் தள்ளாடிப் போனாள் சம்யுக்தா.

''என்னது? ஆனந்த் என்னை நேசித்தாரா? எனக்குள் ஏற்பட்டது போல் அவருக்குள்ளும் காதல் அரும்பியதா? என்னை மனைவியாக மனதளவில் வரித்திருந்தாரா?''

கொடிய அரக்கன் தன் வலிய கரங்களால் மெல்லிய இதயத்தைக் கசக்கிப் பிழிவது போன்ற வேதனை ஏற்பட்டது.

அந்த வேதனையிலும் ஏதோ ஒரு சுகம். உள்ளூர ஒளிந்திருந்தது நிஜம்! 'கருத்தொருமித்த இரு நெஞ் சங்கள். இனி ஒன்றுகூட முடியுமா? எல்லாம் கையை மீறிப் போய் விட்டதே? இனி இந்தத் திருமணம் நடந்தால் வீண் அவதூறு தான் தனக்கு மிஞ்சும்!'

உள்ளுக்குள் ஓராயிரம் தேள்கள் ஒரு சேரக் கொட்டியது போல் வலித்தது.

''இதை நான் நம்ப மாட்டேன்! நீ பொய் சொல்றே? என்னை... எப்படியாவது சம்மதிக்க வைக்கணும்னு கதை கட்டறே! நான் நம்பவே மாட்டேன்! ப்ளீஸ்... என்னைக் கொல்லாதே! இதுக்கு மேல இதைப் பத்தி வற்புறுத் தாதே... வேதனை தாங்காம செத்துடுவேன்!''

குழந்தையை சுமந்த வண்ணம் மடங்கி முழங்கா லிட்டு கதறியவளைப் பார்த்து... அனைவரது உள்ளங் களும் பதை பதைத்தன.

''சந்துருவை நான் உயிருக்குயிரா நேசிக்கறேன்'னு உனக்கே தெரியும். அவர் மேல சத்தியமா சொல்றேன்! நான் சொன்னதெல்லாம் நிஜம்! நான் வரேன்.''

மற்றவர்களிடம் தலையாட்டி விடை பெற்றுக் கொண்டு வெளியே நடந்த அக்ஷராவைப் பின்பற்றி னான் சந்துரு.

''அக்ஷரா?''

''எஸ்... சந்துரு! நான் சொன்னது நிஜம் தான்!''

''இவளை எப்படி டீல் பண்றதுன்னு தெரியலை?''

''அடிக்கற அடியில அம்மியே நகரும்'னு சொல் வாங்க. இப்போ வீட்டுக்குப் போய் ஆனந்த்கிட்ட பேசறேன்! சாயந்தரம் நாம்ப வழக்கமா மீட் பண்ற இடத்துக்கு வந்துடுங்க. யோசிக்கலாம்!'' முறுவலித்தாள் அக்ஷரா.

''மெனி மெனி ஹாப்பி ரிடர்ன்ஸ் ஆப் த டே!'' கண்ணைச் சிமிட்டினான் சந்துரு.



''நீங்க கண்ணடிச்சதை மாமாகிட்ட சொல்லவா?'' அன்று அவள் கேட்க, ''நாட்டி! எமகாதகி! நீ செஞ்சாலும் செய்வே!'' பயந்து போய் உள்ளே ஓடினான்.

மெரீனா பீச்! பைக்கை பார்க் செய்து விட்டு வருவ தற்குள்... போதும் போதும் என்றாகி விடுகின்றது.

''வா அக்ஷரா! அதோ... அந்தப் படகு மறைவில உட்கார்ந்தா ப்ரீயா பேசலாம். அங்க ஜனநடமாட்டமும் கம்மியா இருக்கு பார்!'' தூரத்தில் சுட்டிக் காட்டினான் சந்துரு.

இருவரும் கைகளைக் கோர்த்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தார்கள்.

நான்கடி நடப்பதற்குள்... பின்னால் ஒரு பெண்ணின் குரல் கேட்டது.

''சந்துரு அண்ணே! சந்துரு அண்ணே!''

திரும்பிப் பார்த்த சந்துருவின் விழிகளில் ஆச்சரியம் எட்டிப் பார்த்தது.

''அட! சுகந்தி? எப்படிம்மா இருக்கே?''

அந்த சுகந்தி குட்டையாய், குண்டாய், கருப்பாய் இருந்தாள். இடுப்பில் இரண்டு வயது மதிக்கத்தக்க மொட்டைப் பையனை சுமந்து கொண்டிருந்தாள். வேகமாக வந்தாள் போலும். அதிகமாக மூச்சிரைத்தாள்.

சந்துருவின் வீட்டுக்குப் பக்கத்தில் தான்... இந்த சுகந்தியின் குடும்பம் குடியிருந்தது. சுகந்தியின் தந்தைக்கு மூன்று வருடங்களுக்கு ஒரு முறை ஊர் ஊருக்கு மாற்றலாகும் வேலை! பக்கத்து வீட்டுப் பெண் என்பதாலும்... சம்யுக்தாவுடன் ப்ளஸ் ஒன், ப்ளஸ் டூ...

பி.எஸ்ஸி. முதலாமாண்டு வரை ஒன்றாகப் படித்தவள் என்பதாலும் இருவரும் இணை பிரியாத தோழிகளாக இருந்தனர்.

சுகந்தியும், சம்யுக்தாவும் நகமும் சதையுமாக... நெருங்கிய சிநேகிதிகளாக இருந்ததால் சதா சம்யுக்தாவின் வீட்டிலேயே பழியாகக் கிடப்பாள். படிப்பில் அவள் சுமார் ரகம் என்பதால் சந்தேகங்களைக் கேட்டு நிவர்த்தி செய்து கொள்ள சம்யுக்தாவின் வீட்டிலேயே தான் படிப்பது வழக்கம்!

சந்துருவை உரிமையுடன் 'அண்ணே' என்று தான் அழைப்பாள். அவள் கல்லூரி முதலாமாண்டு முடித்ததும் மீண்டும் வேலை மாற்றலாகி மதுரைக்குக் குடி போயினர். நல்ல வரன் வாய்த்ததால் சுகந்தியின் படிப்பை நிறுத்தி விட்டு கட்டிக் கொடுத்து விட்டனர். சுகந்தி, இன்விடேஷனை அனுப்பியிருந்தாள். இவர்களால் தான் செல்ல முடியவில்லை.

சம்யுக்தா வாழ்த்து மடலை மட்டும் அனுப்பியிருந்தாள். சுகந்திக்கு திருமணமானதும் கடிதப் போக்குவரத்து கூட நின்று விட்டிருந்தது.

''நான் நல்லாருக்கேன். வீட்டுலே எல்லாரும் சவுக்கியமா இருக்காங்களா? நீங்க எப்படி இருக்கீங்க அண்ணே?''

நலம் விசாரித்தவளின் விழிகள்... பக்கத்தில் நின்றிருந்த அக்ஷராவை அளவெடுத்தன.

''எல்லாரும் சவுக்கியம்தான்! இது உன்னோட பையனா?''

''ஆமாண்ணே! என்னோட மாமியார் வீட்டுக்காரங்களோட டூர் வந்துருக்கோம். டூரிஸ்ட் பஸ்லே வந்தோம். முந்தா நாளு திருப்பதியில இவனுக்கு மொட்டை அடிச்சோம்! மெட்ராஸ்லே முக்கியமான எடங்களா சுத்திப் பாக்கறோம். டூரிஸ்ட் பஸ்லே வந்ததாலே நான் மட்டும் அனுமதி கேட்டு உங்க வீட்டுக்கு வர முடியாது இல்லையா?



''எனக்கு மனசெல்லாம் அடிச்சுக்கிச்சு? எப்படியாச்சும் சம்யுக்தாவை பார்த்துடணும்னு. அது மாதிரியே பார்த்துட்டேன். என்னோட லக்கு! உங்களையும் பார்த்துட்டேன்!'' சந்தோஷத்தில் சுகந்திக்கு வாயெல்லாம் பல்!

''என்னது சம்யுக்தாவை நீ பார்த்தியா? அவ இதைப் பத்தி என்கிட்ட சொல்லவே இல்லையேம்மா?''

''நேத்து விடியற்காலையில திருப்பதியில... டீ, காபியை குடிச்சிட்டு டூரிஸ்ட் பஸ்லே ஏறி உட்கார்ந்த வங்க தான். வழியில காலை டிபனுக்கு எங்கேயும் நிறுத்தலே. ஒன்பதரை மணிக்கு மேல மெட்ராஸ் சிட்டியில நிப்பாட்டினாங்க. அரை மணி நேரம் டிபன் சாப்பிடற டைம்!

''வேகமாக இட்லி இவனுக்கு ஊட்டிட்டு... எதுத்தாப்ல பார்த்தா ரோட்டுக்கு அந்தப் பக்கமா 'பெரிய ஹாஸ்பிடல்'. காரை நிறுத்திட்டு கார்லே இருந்து கைக்குழந்தையோட சம்யுக்தா ஆஸ்பத்திரிக்குள்ள போயிட்டா! இவளுக்கு எப்போ கல்யாணம் ஆச்சு? நமக்கு ஒரு இன்விடேஷன் கூட அனுப்பலையேன்னு கோபமா வந்துச்சு.

''இங்க பாத்தா... டிபன் சாப்பிட்டுட்டு எல்லாரும் பஸ்லே ஏறிக்கிட்டிருந்தாங்க. நான் வேகமாக ரோட்டைத் தாண்டி ஓடி கார் டிரைவர் கிட்ட கேட்டேன். ஒருவேளை வேற யாரோட குழந்தையை எடுத்திட்டு வந்தாளோ என்னமோ? அப்படின்னு நெனச்சு...

''சம்யுக்தா என்னோட தோழிதான்! அவ கையில இருக்கற குழந்தை யாருது'ன்னு டிரைவர்கிட்ட கேட்டேன்.

''அது எங்க ஆனந்த் ஐயாவோட குழந்தை'ன்னு சொன்னாப்பல. அட.... அவளுக்கு கல்யாணமாகி அவ குழந்தையைத்தான் கையில வச்சிருக்காள்னு புரிஞ்சுகிட்டேன். அவ எனக்கு இன்விடேஷன் அனுப்பி வைக்காட்டியும் பரவாயில்ல அண்ணே!

'அவ ஆசைப்பட்ட ஆனந்தையே அவ கல்யாணம் செய்துகிட்டாளே அதுவே எனக்குப் பெரிய சந்தோஷம்! அவ காதல் எப்படிக் கை கூடப் போகுதுன்னு நான் ரொம்ப பயந்தேன். கடைசிலே அவ காதல் நிறைவேறினதை நெனைச்சு நான் ரொம்ப சந்தோஷப்பட்டேன்'னு சம்யுக்தா கிட்ட சொல்லுங்க.

''ஏண்ணே? உங்களுக்கும் கல்யாணமாயிடுச்சா?'' அவளது கண்கள் அக்ஷராவின் மேல் படிந்து மீண்டன.

சந்துரு கல்லாய் சமைந்து விட்டிருந்தான். சுகந்தி பெரிய குண்டைத் தூக்கிப் போட்டது போலிருந்தது.

''நான் ஆனந்தோட தங்கை தான்! கூடிய சீக்கிரம் எங்க மேரேஜ் நடக்கும். கண்டிப்பா உங்களை நேர்ல வந்து இன்வைட் பண்றோம்!'' கைகளைக் குவித்தாள் அக்ஷரா.

''சந்துரு அண்ணே... உங்களுக்கு ஏத்த பொண்ணா வாய்ச்சிருக்கு அண்ணே! சந்தோஷம்... அவங்க எல்லாரும் என்னைத் தேடுவாங்க. வரேன்... இன்னொரு நாளைக்கு எல்லாத்தையும் வந்து பார்த்துட்டுப் போறேன். வரட்டுமாண்ணே?'' இடுப்பில் குழந்தையை சுமந்தபடி ஓட்டமாக ஓடி... கூட்டத்தில் கலந்து மறைந்து போனாள்.



''சந்துரு! டேக் இட் ஈஸி! கதையில இப்போதான் திருப்புமுனையே ஏற்பட்டிருக்கு! வர்ஷாவுக்கு தடுப்பு ஊசி போடணும்னு சம்யுக்தா சொன்னா...!''

''திருப்புமுனைதான்! திருப்பு முனைதான்!'' முணுமுணுத்தான் சந்துரு.

''என்ன சந்துரு! வாங்க நடங்க. அங்க போயிடலாம்!'' இருவரும் மவுனமாக மணலில் கால்கள் புதைய நடந்தார்கள்.

படகு மறைவில் சென்று அமரும் வரை சந்துரு வாயைத் திறக்கவில்லை.

''எனக்கு ஆறவே இல்ல அக்ஷரா! இவ்ளோ பெரிய விஷயத்தை மனசுல போட்டு புதைச்சிருக்கா. என்கிட்ட மறைச்சுட்டா பாரேன்? அவ மேல எனக்கு அவ்ளோ பாசம்! கூடப் பிறந்த தங்கையோட மனசுல என்ன இருக்குன்னு... புரிஞ்சுக்க முடியாத மடையன் நான்! ச்சே!''

''இந்த விஷயத்தை நான் ஓரளவு ஊகிச்சிருந்தேன். இப்போ தான் ஊர்ஜிதமாயிருக்கு. கடல் ஆழத்தைக்கூட கண்டுபிடிச்சிடலாம். ஆனா பெண்ணோட மனசு அதை விடப் பெரிய ஆழம். யாராலும் கண்டுபிடிக்க முடியாதுன்னு சொல்வாங்க. அது சரியாத்தான் இருக்கு!

''அவ எங்க வீட்டுக்கு வர்றதுக்கு ரொம்பவே தயங்கினா. ஏதேதோ காரணங்களைக் காட்டி அங்க வரவே மறுத்துட்டாளே... அதுக்கும் காரணம் இருக்கு!

''அவளால ஆனந்தோட நிலைமையைப் பார்க்க முடியலை. அதைக் கண்ணால தினமும் பார்க்கிறதுக்குரிய தெம்பும் அவகிட்ட இல்லை. எங்க தன்னையும் மீறி உடைஞ்சு போய் கதறிடுவோமோன்னு அவளுக்குள்ள ஒரு பயம்!

''ஆனந்தோட கண்ணுல தண்ணி வர்றதைப் பார்த்துட்டு இவளோட இதயத்துல ரத்தம் கசியுது. ஆத்மார்த்தமான காதலோட வெளிப்பாடுதான் இது!''

''சரி! சந்துரு... நாம அடுத்து என்ன செய்யணும்னு யோசிப்போம்! இந்த சுகந்தி, சம்யுக்தாவை விட்டு எப்போ பிரிஞ்சு போனா? ஞாபகம் இருக்கா?'' சீரியஸான முக பாவனையுடன் கேட்டாள் அக்ஷரா.

''நல்லா ஞாபகம் இருக்கு! சம்யுக்தாவும், இவளும் பர்ஸ்ட் இயர் முடிச்சதும் சுகந்தியோட அப்பாவுக்கு டிரான்ஸ்பர் கிடைச்சு மதுரைப் பக்கம் போயிட்டாங்க!''

''அப்போ காலேஜ் பர்ஸ்ட் இயர்லே அவளுக்குள்ள காதல் அரும்பியிருக்கு. நான் இதைப்பத்தி ஆனந்த்கிட்ட பேசப் போறேன். இன்னக்கி உங்க வீட்டுலேர்ந்து போனதுமே அவன்கிட்ட சம்யுக்தாவைப் பத்திப் பேசலாம்னு இருந்தேன்.

''நைட்டெல்லாம் முழிச்சிருந்தான் போல... அசந்து தூங்கிட்டிருந்தான். அவனை எழுப்ப மனசு வரலை! அவன்கிட்ட உடனடியா சம்யுக்தாவோட காதலை எடுத்துச் சொல்லியாகணும். ஆனா அவன் நம்ப மாட்டானே?'' அலுத்துக் கொண்டாள் அக்ஷரா.

''ஏன்? ஏன் ஆனந்த் நம்ப மாட்டார்னு சொல்றே?''

''எப்படி சந்துரு நம்புவான்? சுகந்தி சொன்னதும்... நீங்களே திகைச்சுப் போயிட்டீங்களே? உங்க தங்கை என்னைப் பார்த்து என்ன சொன்னா? அவளை சம்மதிக்க வைக்க நான் பொய் சொல்றேன்னு சொன்னா இல்லே? அதே மாதிரி தான் ஆனந்தும் நினைப்பான்!''

''சம்யுக்தா நேசிச்ச விஷயத்தை எப்படிச் சொல்றது?''



''ஆனந்தை சம்யுக்தா நேசிச்சாள் அப்படீங்கிற விஷயத்தை நிரூபிக்க ரெண்டே வழிகள்தான் இருக்கு! ஒண்ணு... சம்யுக்தாவே தன் வாயால... உண்மையைச் சொல்லணும். ரெண்டு... அந்த குண்டு சுகந்தியை குண்டுக்கட்டா தூக்கிட்டு வந்து உண்மையைச் சொல்ல வைக்கணும்!'' கன்னங்குழி விழ சிரித்தாள் அக்ஷரா.

''சரியான மண்டு நீ! ரெண்டுமே நடக்கற காரியமா?'' அவள் தலையில் ஒரு குட்டு வைத்தான் சந்துரு.

''அந்த காதலை வெளிப்படுத்தறதுக்கு... ஒரு எவிடென்ஸ் வேணுமே?'' தூரத்தில் அலையடிக்கும் கடலை வெறித்தாள் அக்ஷரா!

''வாரே வா! வீ காட் இட்! சம்யுக்தாவுக்கு டைரி எழுதற பழக்கம் இருக்கு. அன்னக்கி ஒரு நாள் நடுராத்திரியில உட்கார்ந்து என்னத்தையோ எழுதினா. நான் எட்டிப் பார்த்ததும் சட்டுனு அதை மறைச்சு வச்சா... ராணுவ ரகசியத்தைப் பாதுகாக்கறாப்பல இப்படி மூடி மறைச்சு வைக்கிறாளேன்னு மனசுக்குள்ளே சிரிச்சேன். விஷயம் இப்பத்தானே விளங்குது!'' சந்துருவின் கண்களில் ஆயிரம் வாட்ஸ் பல்ப் போட்டது போல்... அப்படியொரு வெளிச்சம்!

''முதல்லே நமக்குத் தேவையான டைரியைக் கண்டு பிடிச்சு எடுத்துட்டு வாங்க. அதை வச்சுத் தான் நான் ஆனந்த்கிட்ட பேச முடியும்!''

''இவ்ளோ மெனக்கெட்டு அந்த டைரியைக் காட்டினா ஆனந்த் மனசு இறங்கி சம்யுக்தாவை கல்யாணம் செய்துக்குவார்னு நீ நம்பறியா?''

''நம்ம நோக்கமே சம்யுக்தாவோட காதலை வெளிப் படுத்தறதுதான். ஆனந்த், சம்யுக்தாவை நேசிச்ச விஷ

யத்தைப் போட்டு உடைச்சு சம்யுக்தாவுக்கு தெரியப் படுத்தியாச்சு. அதே மாதிரி ஆனந்துக்கும் தெரியப் படுத்தினா கண்டிப்பா ஒரு மாற்றம் வரும்!'' அக்ஷராவின் குரலில் நம்பிக்கை தொனித்தது.

''சம்யுக்தாவுக்கு நீ உண்மையைச் சொல்லியும் அவ சம்மதிக்கவே இல்லையே? அதே மாதிரி ஆனந்த் விஷயத்துலேயும் நடந்தா என்ன பண்றது?'' கவலையுடன் கேட்டான் சந்துரு...

''அதான்... எனக்கும் புரியலை!'' திருதிருத்தாள் அக்ஷரா.

சந்துருவுக்கு ஏதோ பொறி தட்டியது.

''யோசிச்சு... யோசிச்சு மண்டை துருப்பிடிச்சிருச்சு... தள்ளு!'' அவளது கையை விலக்கி சட்டென்று மடியில் தலை வைத்துப் படுத்தான்.

சிறிது நேரம் அவளது முகத்தை கண் இமைக்காமல் பார்த்து விட்டு... இரு கைகளாலும் அவளது முகத்தை ஏந்திப் பிடித்து இழுத்தான்.

''இங்க வாயேன்!''

''போங்க சந்துரு! இதெல்லாம் கல்யாணத்துக்கு அப்புறம் தான்!''

வெட்கத்துடன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

''ஆனந்த் சம்யுக்தாவுக்கு 'ஷாக் ட்ரீட்மெண்ட்' குடுக்கப் போறதைப் பத்தின ரகசியத்தை உன் காதுல சொல்லலாம்னு கூப்பிட்டேன்! நீ என்னமோ கண்டதையும் கற்பனை பண்றியே? ஆமா... உனக்கு இப்படியெல்லாம் கூட ஆசை இருக்கா என்ன?'' நமட்டுச் சிரிப்புடன் அவளை ஏறிட்டான்.



''யூ... யூ ராஸ்கல்! முகத்தை குனிய வைச்ச கிஸ் பண்றது மாதிரி பாவ்லா காட்டிட்டு... இப்போ வேற கதை விடறியா? நான் அப்படி ஏடாகூடமா நெனக்கணும்னு தானே... அந்த மாதிரி முகத்தை இழுத்தீங்க? ரகசியத்தை இங்க இருந்தே சொன்னா என்னவாம்? ரகசியத்தை ஒட்டுக் கேட்க இங்க ஆட்கள் நடமாடறாங்களா என்ன?''

''பொர்த்டே பேபியைக் கலாய்க்கலாம்னு தான் இப்படி பண்ணினேன். சாரிடா!'' என்றவனின் மீது தனது ஹேண்ட் பேக்கால் ஒரு போடு போட்டாள் அக்ஷரா.

''சரி! அக்ஷரா... நாளைக்கு டைரி கொண்டு வரேன். ஆனந்த் கிட்ட பேசிட்டு ரிசல்ட் என்னன்னு உடனடியா சொல்லு. ஆத்மார்த்தமான காதலுக்கு ஒரு சக்தி உண்டு. அது எப்படியாவது பிரிஞ்சு போன அன்பு உள்ளங்களைச் சேர்த்து வச்சிடும். ஒரு ஷாக் ட்ரீட்மெண்ட் நாம குடுத்தாகணும். தன்னால வழிக்கு வந்துடுவாங்க. உடனடியா அவங்களைச் சேத்து வச்சுடணும்.''

## 23

பின்பக்கத்து தோட்டத்தில்... கொய்யாமரத்தில் ஐந்தாறு தவிட்டுக் குருவிகள் *'கீச் கீச்'* என்று கத்தியபடி அமர்ந்திருந்தன. சிறு கிண்ணத்தில் இட்லியை பாலூற்றிப் பிசைந்து... அதை வர்ஷாவுக்கு ஊட்டியபடி. குருவிகளை வேடிக்கை காட்டினாள் சம்யுக்தா.

''குருவிங்களுக்கு பாப்பாவோட மம்மு வேணுமாம்! ச்சூ சொல்லு பாக்கலாம். சூச்சூ சொல்லு!'' வாயிலிருந்த கவளத்தை சுவாரசியமாக விழுங்கி விட்டு... ஏதோ புரிந்த தினுசில் 'களுக்' என்று சிரித்தது குழந்தை!

''என்னோட பட்டுக்கு சிரிப்பு வந்துடுச்சா'' கொஞ்சியபடி அதன் குண்டுக் கன்னத்தில் முத்தம் பதித்தாள் சம்யுக்தா.

சந்துரு தோட்டத்தில் எட்டிப் பார்த்தான். குழந்தையுடன் சம்யுக்தா லயித்துப் போயிருந்தாள். இப்போதைக்கு வந்து விட மாட்டாள் என்று ஊர்ஜிதப்படுத்திக் கொண்டு... உள்ளறையில் மேஜை டிராயரைத் திறந்து பார்த்தான்.

'அந்த குறிப்பிட்ட டைரியை எங்கே வைத்திருப்பாள்?' சுற்றும் முற்றும் தேடினான். தற்செயலாக அண்ணாந்து பார்த்தபோது... பரணிலிருந்த துணிப்பை கண்களில் பட்டது. துணிப்பையை எடுத்து தூசு தட்டி... உள்ளே துழாவியபோது... அவன் தேடிய... அந்த வருடத்து டைரி கிடைத்து விட்டது.

முத்துக்களைக் கோர்த்தது போன்ற அழகான கையெழுத்தில்... தன் எண்ணங்களை வடித்திருந்தாள் சம்யுக்தா.

தங்கையின் வாழ்வை சீராக்கும் பொருட்டு... அவளது அந்தரங்க எண்ணங்களைக் கொட்டி வைத்திருக்கும் டைரியை... அவளுக்குத் தெரியாமல் எடுத்து துப்பறிய வேண்டிய நிலையை எண்ணி... சந்துருவின் கண்களில் கண்ணீர் துளிர்த்தது.

'சாரி சம்யுக்தா! இந்த அண்ணாவுக்கு வேற வழி தெரியலை! எல்லாம் உன்னோட நன்மைக்குத்தான்!'



மானசீகமாக மன்னிப்புக் கேட்டான் சந்துரு. துணிப்பையை பழையபடி அதே இடத்தில் வைத்துவிட்டு... டைரியை சட்டென்று தனது பனியனுக்குள் திணித்தான்.

''செல்போனுக்கு சார்ஜ் ஏத்திக்கோ சம்யுக்தா!'' அவளுக்கு கேட்கும்படி இங்கிருந்தே வயிற்றை எக்கிக் குரல் கொடுத்தான்.

டிரெயினிங் பீரியட்டில் இருந்தாலும்... கை நிறைய சம்பளம் வந்தது. வீட்டிற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை... தாராளமாக வாங்கிப் போட்டான். வீட்டில் குழந்தை மற்றும் வயதான பெற்றோர்கள் இருந்ததால்... ஆத்திர அவசரத்திற்கு உபயோகிக்க... சம்யுக்தாவுக்கு செல்லை வாங்கிக் கொடுத்து இருந்தான்.

'பக்'கென்று அதிர்ந்து போனாள் சொர்ணம்! அவளால் நம்பவே முடியவில்லை. ''அம்மாடா! அக்ஷரா! நீ சொல்றது உண்மைதானா? உனக்கு இது நல்லாத் தெரியுமா?'' சந்தேகம் நீங்காத குரலில் கேட்டாள்.

''என்னம்மா இது? ஒட்டு மொத்தமா எல்லாரும் பேசி வச்சுக்கிட்ட மாதிரி... நான் சொன்னா... யாருமே நம்ப மாட்டேங்கிறீங்க? கலப்படம் எதுவுமில்லாத அக்மார்க் உண்மை தான்!'' சலித்துக் கொண்டாள் அக்ஷரா.

'அவன் மனசுல ஒரு பொண்ணு இருக்காள்னு என்னால ஊகிக்க முடிஞ்சது... அந்தப் பொண்ணு... அவனோட ஆபீஸ் கொலீக் மரியாவாகத்தான் இருக்கும்'னு நான் நெனைச்சேன்... எல்லாம் என்னால தான்! அவனோட நிலைமைக்கு நான் தான் காரணம்!'' முகத்தில் அறைந்து கொண்டு அழுதாள் சொர்ணம். சோபாவில் அவளது அருகில் அமர்ந்திருந்த விஸ்வநாதன், சட்டென்று அவளைத் தடுத்தார்.

''விடு! சொர்ணம்! நடந்ததையே நினைச்சுக் கதறிட்டு இருந்தா... ஆகப் போறது என்ன? அக்ஷரா சொன்னதை யெல்லாம் கேட்டுட்டே இல்லே? அந்தப் பொண்ணு சம்யுக்தா கடைசியா என்ன முடிவெடுத்திருக்கா பார்த் தியா? நம்ம குடும்பத்துக்கு நல்லதே நினைச்ச குடும் பத்துல... யாருக்காச்சும் நிம்மதி இருக்கா சொல்லு?

''நம்ம வீட்டு வாரிசை நல்லபடியா வளர்க்கணும்னு... தன்னோட வாழ்க்கையையே தியாகம் பண்ணிட்டு நிக்கத் துணிஞ்சுட்டா சம்யுக்தா! கருணாகரனுக்கு எவ்ளோ பெரிய மனசு? இந்த மனசு யாருக்கு வரும்?

''சம்யுக்தா எடுத்த முடிவை நினைத்து... உள்ளுக்குள் உருகினாலும்... வருத்தத்தை நம்ம கிட்ட வெளிப் படையாச் சொன்னாரா பார்த்தியா? சரி... அக்ஷரா கேட்ட துக்குத்தான் சம்யுக்தா செவி சாய்க்கலை... நாம முறையா போய் கருணாகரன் கிட்ட... பொண்ணு கேட்போம். என்ன சொல்றே?'' கோல்டு பிரேமிட்ட கண்ணாடியைக் கழற்றி அதைத் துடைத்துக் கொண்டே மனைவியை ஏறிட்டார்.

''சரிங்க! நான் பண்ணின பாவத்துக்கு நான்தான் பிராயச்சித்தம் தேடணும். கருணாகரன் அண்ணாவோட கையில் கால்லே விழுந்தாவது... ஏன் சம்யுக்தாகிட்டயே நேரடியா பேசிடலாம். சாயந்தரம் ஐந்து மணிக்குக் கிளம் பிடலாம்!'' கண்ணீரைத் துடைத்தபடி எழுந்து சென்றாள்.

தோட்டத்தில்... புல்வெளியில் போடப்பட்டிருந்த அலங்கார ஊஞ்சலில் அமர்ந்து ஆடியவாறே... 'செல்'லை உயிர்ப்பித்து சந்துருவை அழைத்தாள் அக்ஷரா.

''என்னாச்சு அக்ஷரா?'' சந்துருவின் குரலில் ஆர்வம் ததும்பியது. ''ப்ச்! பெரியவங்க கிட்ட, நேத்து நம்ம



வீட்டுல நடந்த விஷயத்தை ஒண்ணு விடாம சொல்லிட்டேன். 'சம்யுக்தா... ஆனந்தை விரும்பினது... அந்த டைரி சமாச்சாரம்'... இதெல்லாம் நமக்குள்ளேயே இருக்கட்டும். இன்னக்கி 5 மணிக்கு... எங்க அம்மா, அப்பா முறைப்படி பொண்ணு கேட்டு உங்க வீட்டுக்கு வராங்க. நீங்க ஆபீஸை விட்டு சீக்கிரமா வந்துடுங்க.

''பெரியவங்க போனதும், நான் இங்க ஆனந்த் கிட்ட டைரி மேட்டரை ஓபன் பண்றேன். ஓ.கே.வா? பேச்சு வார்த்தை நடந்து முடிஞ்சதும் நீங்க நேரா... நாம மீட் பண்ற இடத்துக்கு வந்துடுங்க. ஆனந்தோட ரியாக்ஷன் என்னன்னு பார்த்துட்டு... நானும் அங்க வந்துடறேன். சூட்டோட சூடா... முடிவெடுத்துடலாம். சரியா? பை!''

''ஆஞ்சநேயா! ஸ்ரீராம தூதா!... எல்லாம் நல்லபடியா நடக்கணும். வறட்டுப் பிடிவாதத்தை விட்டுட்டு... இவங்க ரெண்டு பேரும் ஒண்ணு சேர வழி செய்யப்பா!'' கண்ணீர் மல்க உளமார வேண்டிக் கொண்டாள்.

மாலை... பைக்கில் அமர்ந்து ஜெட் வேகத்தில் பறந்தபடி... நாலே முக்காலுக்குள் வீட்டுக்கு வந்து விட் டிருந்தான் சந்துரு. ஈஸி சேரில் சாய்ந்து அமர்ந்த வண் ணம் 'மாலை முரசை' புரட்டிக் கொண்டிருந்த கருணா கரனிடம் குனிந்து... ரகசியக் குரலில் முணுமுணுத்தான்.

நழுவப் பார்த்த மூக்குக் கண்ணாடியை சரி செய்து கொண்டே... சந்துருவை தீர்க்கமாகப் பார்த்தார். அவரை ஆயத்தப்படுத்தி விட்டு தேவகியிடம் வந்தான். கூடத்தில் குழந்தை... சுற்றிலும் பொம்மைகளைப் பரத்திக் கொண்டு அமர்ந்திருந்தது. தேவகி அருகில் அமர்ந்தபடி டிரெயின் பொம்மைக்கு 'கீ' கொடுத்தாள். டிரெயின் சிறிய தண்டவாளத்தைச் சுற்றி வந்தது.

''சம்யுக்தா எங்கேம்மா? அட... வர்ஷா பவுடர் அடிச்சு பொட்டு வச்சு சிங்காரிச்சுக்கிட்டு விளையாடுறாளா?'' என்று சந்துரு கூறியதும்... சிநேக பாவனையில் கன்னங்குழி விழ சிரித்தது குழந்தை.

''முகம் அலம்பிட்டிருக்கா!''

''அத்தையும், மாமாவும்... முறைப்படி பொண்ணு கேட்க, கிளம்பி வந்துட்டிருக்காங்க! அக்ஷரா போன் பண்ணி சொன்னாம்மா!'' தேவகியின் முகத்தில் கலவரம் படர்ந்தது.

''விஸ்வநாதன் பெரிய மனுஷன்! அவர் முன்னாடி... இந்த சம்யுக்தா என்ன சொல்லப் போறாளோ? தெரியலையே!'' புலம்பினாள்.

''இப்படி முரண்டு பிடிக்கிறாளேப்பா? நான் கிழிச்ச கோட்டைத் தாண்டமாட்டா... அவ்ளோ தங்கமான பொண்ணு... ஏன் இப்படி அடம் பண்றா?'' தேவகிக்கு குப்பென்று வியர்த்து விட்டது.

அதற்குள் வாசலில் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டது. டிரைவரும், ஒரு பணியாளும் இரு பெரிய தாம்பாளங்களை ஏந்தி வந்தனர். பூக்கள், பழ வகைகள், தாம்பூலம்... முதலிய பொருட்களை தாம்பாளத்தில் குவித்துக் கொண்டு வந்திருந்தனர்.

''வாங்க! வாங்க!'' வாய் நிறைய வரவேற்றனர்.

சந்துரு புதிதாக வாங்கிப் போட்டிருந்த டீப்பாயில் தாம்பாளங்களை வைத்து விட்டு பணியாட்கள் நகர்ந்தனர்.

விஸ்வநாதன் தயக்கமாய் சோபாவில் அமர்ந்தார். சொர்ணம் நின்று கொண்டே இருந்தாள்.



''அண்ணா! முக்கியமான நல்ல விஷயம் பேச வந்திருக்கோம். சம்யுக்தாவைக் கூப்பிடுங்க!'' என்றாள்.

சத்தம் கேட்டு தயங்கியபடி உள்ளிருந்து வந்தாள் சம்யுக்தா.

''அண்ணா! என்னை நீ தான் கட்டிக் கொடுத்தே! உன்னோட ஆசீர்வாதத்துலே நான் அமோகமா வாழ்ந்தேன். பணம் வந்ததும்... பாசத்தோட அருமை தெரியாம திமிரா நடந்து கிட்டேன். எல்லாத்துக்கும் சேர்த்து வச்சு... பகவான் சரியான தண்டனையைக் குடுத்துட்டார். பழி பாவத்துக்கு ஆளாகி... மகனோட வாழ்க்கை அழிஞ்சு போயி... குற்றவுணர்ச்சியில் தினம் தினம் நான் செத்துக்கிட்டிருக்கேன். என்னை மன்னிச்சு... என் குடும்பத்தை நீ தான் வாழ வைக்கணும் அண்ணா!''

தடாலென்று அவரது கால்களில் விழுந்து கதறினாள் சொர்ணம். ''அய்யோ! எந்திரிம்மா நீ! எந்திரிச்சுக்கோ! உன் மேல எனக்கு எப்பவும் வருத்தம் கிடையாதும்மா!'' நடுங்கிய கரங்களால் தூக்கி நிறுத்தினார்.

அனைவரது பார்வையும் சொல்லி வைத்தாற்போல்... சம்யுக்தாவின் மேல் படிந்தன.

''அம்மாடி சம்யுக்தா! இந்தத் திமிர் பிடிச்ச பாவியை மன்னிச்சுடும்மா! நான் முன்ன மாதிரி இல்ல திருந்திட்டேன். என் பேத்தி மேல சத்தியம்! ஆனந்தை கல்யாணம் செய்துக்கிட்டு... இந்தக் குழந்தைக்கு உரிமையான, உண்மையான தாயா... என்னைக்கும் பிரியாம இரும்மா!'' அவளது கரங்களைப் பற்றிக் கொண்டாள் சொர்ணம்.

''அவரைக் கல்யாணம் செய்து கிட்டாத்தான்... நான் அவளுக்குத் தாயா இருக்க முடியுமா? இப்ப மட்டுமில்ல

எப்பவும் நான் நல்ல தாய்தான்! தாய் ஸ்தானத்தைக் கொடுத்திருக்கா... என் பொண்ணு வர்ஷா! வேற எந்த புது பந்தமும் எனக்குத் தேவையில்லை... எதையும் எதிர் பார்த்து நான் பாசம் வைக்கலை. இதை எல்லாரும் புரிஞ்சுக்கணும்!'' அவள் பேசிக் கொண்டிருந்தபோது... விஸ்வநாதன் பேச வாயெடுத்தார்.

''மாமா! நீங்க எதுவும் பேசாதீங்க! நீங்க எதையாவது என் கிட்ட கேட்டு... நான் மறுக்கிற நிலைமையை உருவாக்கிடாதீங்க... ஒரு கட்டாயக் கல்யாணத்தால தான்... இந்த கதி ஏற்பட்டிருக்கு! மறுபடியும் என்னைக் கட்டாயப்படுத்தி... நீங்க கல்யாணத்தை நடத்தினா.. மறுபடியும் ஒரு உயிர் போகும்! பரவாயில்லையா?''

விஸ்வநாதன் தலை குனிந்தபடி கருணாகரனது தோளை ஒரு முறை தட்டிவிட்டு.. தாழ்வாரத்தைத் தாண்டி வெளியேறினார்.

## 24

ஆனந்திடம் ஒன்று விடாமல் கூறி முடித்திருந்தாள் அக்ஷரா.

''அடுத்தவங்க டைரியை எப்படிப் படிக்கிறதுன்னு... தயங்குறியா? அவ உன்னோட காதலி தான்! இந்தா... இந்தப் பக்கத்தை மட்டுமாவது வாசிச்சுப் பாரு... அப்போ



தான்... நான் சொல்றது நிஜம்னு நீ நம்புவே! ப்ளீஸ்!... அண்ணா!''

தனக்குள் காதல் பூ மலர்ந்ததை... ஆனந்தின் உருவம் தன் இதயத்தில் பதிந்து போனதை... அனுபவித்து எழுதியிருந்தாள் சம்யுக்தா. அவனது கண்களில் பெருக்கெடுத்த கண்ணீர் சிந்தி... முத்துப் போன்ற அழகான எழுத்துக்கள் நனைந்தன. அவளும் நேசித்தாளா? இதயத்தில் கத்தி பாய்ந்தது.

''உன் குழந்தை மட்டும் போதும்னு... தன்னோட லைஃபை தியாகம் பண்ணிட்டிருக்கா சம்யுக்தா!''

''போதும் அக்ஷரா! எல்லாம் முடிஞ்சு போச்சு! எதைப் பத்தியும் பேசாதே! அவங்கவங்க வாழ்க்கையை அவங்கவங்க தீர்மானிக்கட்டும். எனக்கு எதைப்பத்தியும் அக்கறை இல்லை. இன்னும் கொஞ்ச நாள்லே நான் கங்கா கிட்ட போய் சேர்ந்துடுவேன்! ஸோ... டோண்ட் டிரை அக்ஷரா!'' தன் முகத்தில் பிரதிபலித்த உணர்வுகளை, அக்ஷரா அறியா வண்ணம்... வேறுபுறம் திரும்பிக் கொண்டு பேசினான். உள் மனம் சம்யுக்தாவின் நிலை குறித்து ஓலமிட்டது.

கடற்கரை! வழக்கமாய் அவர்கள் சந்திக்கும் இடத்திற்கு... வேக வேகமாய் வந்தாள் அக்ஷரா. ஏற்கனவே படகுக்கு அருகில் அவளுக்காகக் காத்துக் கொண்டிருந்தான் சந்துரு. படகு மறைவில் இருவரும் அமர்ந்தனர்.

'டிரெயினிங் பீரியட் முடிஞ்சு... நான் எதிர்பார்த்த நல்ல வேலை கிடைச்சிருக்கு அக்ஷரா! இந்த சந்தோஷ சமாச்சாரத்தை வீட்ல சொல்றதுக்கே மனசு வரலை... சம்யுக்தாவோட பிடிவாதத்தாலே வீடே நிலை குலைஞ்சு போயிருக்கு!'' குரலில் பிசிறு தட்டியது.

''உங்க திறமைக்கு இன்னும் மேல மேல வருவீங்க சந்துரு! சரி! ஷாக் டிரீட்மெண்டைப் பத்தி சொல்லுங்க!''

''சந்திரா ஹாஸ்பிடல் ஓனர் உங்கப்பாவுக்கு நண்பர் தானே? அவரோட ஹாஸ்பிடல்லே... ஒரு பேஷண்டை அட்மிட் பண்ண ஏற்பாடு பண்ண முடியுமா? அது ஒரு ஸ்பெஷல் ரூமா இருக்கணும். எந்த நர்ஸும், டாக்டர்ஸும் அங்க எட்டிப் பார்க்கப்படாது. விஷயம் கான்பிடென்ஷியலா இருக்கணும். செய்ய முடியுமா? நாளைக்கே?''

''முடியும்! அந்த அங்கிள் நமக்காக எதையும் செய்வார்! ஆமா... பேஷண்ட்டை ஏன் யாரும் டிரீட் பண்ணக் கூடாதுன்னு சொல்றீங்க?'' புரியாமல் ஏறிட்டவளுக்கு.. தன்னுடைய திட்டத்தை விளக்கினான் சந்துரு.

''இது ரொம்ப ரிஸ்க்கா தெரியுதே சந்துரு? விஷப் பரீட்சை தேவையா?''

''கண்டிப்பா ஒர்க் அவுட் ஆகும்! அதுக்கு மேல கடவுள் செயல்!''

சம்யுக்தாவின் 'செல்' அலறியது. செல்லில் தெரிந்த நம்பரை கவனித்தாள்.

''என்ன அக்ஷரா?''

''ச... சம்யுக்தா? எங்க அண்ணா ஆனந்த் விஷம் குடிச்சிட்டான்.

''சந்திரா ஹாஸ்பிடல்லே அட்மிட் பண்ணிருக்கோம். ரூம் நம்பர் 104. சீரியஸா இருக்கான். டாக்டர்ஸ் போராடிக் கிட்டிருக்காங்க!''

சம்யுக்தாவின் இதயத்தில் இடி விழுந்தது போலி ருந்தது. குழந்தை தூளியில் தூங்கிக் கொண்டிருந்தாள்.



''வர்ஷாவை பார்த்துக்கோம்மா!'' என்று அலறியபடி பதறிக் கொண்டு ஓடினாள். தலை தெறிக்க ஓடி பிரதான சாலைகளை அடைந்து ஆட்டோவில் ஏறிக் கொண்டாள். ''சீக்கிரமா போங்க!'' குமுறி அழுதாள்.

40 நிமிடங்களில்... அனலிடைப்பட்ட புழுவாய் துடித்துப் போனாள். சந்திரா ஹாஸ்பிடலை அடைந் ததும்... ரிசப்ஷனில் விசாரித்து விட்டு, உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு... மாடியில் இருந்த அந்த அறையைத் தேடிப் போனாள்.

மாடி வராண்டாவில் இருந்தபடி கீழே பார்த்தால்... ஆஸ்பத்திரி வளாகத்திற்கு வரும் வாகனங்களை வேடிக்கை பார்க்கலாம். அந்த அறை வாசலில் வராண் டாவில் கருணாகரன் விஸ்வநாதன், சொர்ணம், சந்துரு, அக்ஷரா கண்ணீர் மல்க தலை குனிந்தபடி நின் றிருந்தனர்.

நெஞ்சில் கை வைத்தபடி மூச்சிரைத்துக் கொண்டே... அறைக்குள் எட்டிப் பார்த்தாள். பெட்டில்... வெள்ளைப் போர்வையால்... தலை முதல் கால் வரை போர்த்தப்பட்ட உருவத்தைப் பார்த்ததும்... அவளது இதயம் வெடித்தது போல் இருந்தது.

''ஆ... ஆனந்த்! போயிட்டீங்களா? என்னை விட் டுட்டு? அணு அணுவாய் துடிச்சு சாகறதை விட... ஒரேடியா போயிடலாம்னு போயிட்டீங்களா? எல்லாம் என்னோட துரதிர்ஷ்டம்! என்னை நேசிச்ச பாவத்துக்கு தான்... உங்களுக்கு இந்த கதி ஏற்பட்டிருக்கு! அய்யோ... நீங்க என்னை நேசிசச விஷயம் தெரிஞ்சதும்... ஓடோடி வந்து உங்க கால்லே விழாம போயிட்டேனே?

''நானும் உங்கள நேசிச்ச விஷயத்தைச் சொல்லிக் கதறியிருந்தா... ஒரு வேளை ஏத்துகிட்டிருப்பீங்க! நான் பாவி, பாவி!'' பெருங்குரலில் அலறினாள்.

வெளியில் மாடி வராண்டாவில் எட்டிப் பார்த்த சந்துரு, ''அக்ஷரா... ஓடு! ஆனந்த் வராப்பல!'' துரிதப்படுத் தினான்.

அக்ஷரா நாலே பாய்ச்சலில் உள்ளே ஓடி, சம்யுக் தாவின் பின் பக்கமய் வந்து அவளது வாயைப் பொத்தி... இழுத்துக் கொண்டு பக்க வாட்டிலிருந்த அறைக்குள் மறைந்தாள்.

தாரை தாரையாய் கண்ணீர் வடித்தபடி விம்மலை அடக்கிய வண்ணம் ஓடி வந்தான் ஆனந்த்! மாடி வராண்டாவில் வரிசையாய் நின்றபடி அழுத முகங் களுடன் தலை குனிந்தவர்களை... பயப் பார்வையுடன் ஏறிட்டான்.

''சந்துரு!'' திகிலில் அவனது நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக் கொண்டது.

முகத்தை கர்ச்சீப்பால் பொத்திக் கொண்டு... குலுங் கினான் சந்துரு. உள்ளே செல்லத் திராணியற்றவ னாய்... அடி மேல் அடி வைத்து மெல்லச் சென்றான். வெள்ளைப் போர்வையால் தலை முதல் கால் வரை போர்த்தப்பட்ட உருவத்தைப் பார்த்ததும்... ''நோ... நோ! சம்யுக்தா...''

''என் கண்ணே... போயிட்டியா நீயும்? உயிருக்குயிரா உன்னை நேசிச்சேன் தெரியுமா? நீயும் என்னை நேசிச்சேன்னு உன்னோட டைரியைப் பார்த்து தெரிஞ்சு கிட்டேனே? ஓடோடி வந்து உன் மடியில தலை வச்சுக்



கதறியிருந்தா... எல்லாரும் வற்புறுத்தினபோது கல் யாணத்துக்கு சம்மதிச்சிருந்தா... உனக்கு இந்த நிலைமை வருமா? ஒரு கல்யாணத்துக்கு சம்மதிச்சதால... வீணா கங்கா போயிட்டா... இன்னொரு கல்யாணத்துக்கு சம்மதிக்காததால... நீ போயிட்டியா?

''கங்காவுக்கும் நல்ல கணவனா நான் நடக்கலை. உனக்கும் நல்ல காதலனா நடந்துக்கலை. ரெண்டு பேத்தையும் கொன்ன நான்... இதோ இந்தப் பாய்ஸனை சாப்பிட்டுட்டு உன் கூடவே வந்துடறேன். ஐ லவ் யூ! சம்யுக்தா... நீ இல்லாத உலகத்துல நான் வாழப் போறதே இல்லை!'' யிலிருந்த சிறு புட்டியை அவன் திறப்ப தற்குள்... அக்ஷராவிடமிருந்து திமிறிக் கொண்டு ஓடி வந்தாள் சம்யுக்தா.

''ஆ... ஆனந்த்! நீங்க அனுபவிச்ச வேதனையே ஜாஸ்தி! நா... நான் சாகலை... ஐ... ஐ லவ் யூ ஆனந்த்!'' தேம்பி அழுதபடி அவனது கையிலிருந்த புட்டியைத் தட்டி விட்டாள். விம்மியபடி அவனது கண்களை ஊடுருவியவளை... இழுத்து நெஞ்சோடு அணைத்துக் கொண்டான்.

''ஐ லவ் யூ சம்யுக்தா!'' அவளது உச்சந்தலையில் முத்தமிட்டான்.

''அப்பாடா! ஒரு வழியா சேந்துட்டாங்க! எல்லாரும் உள்ளே வாங்க!'' என்றபடி சந்துரு அறைக்குள் நுழைந் தான்.

சுற்றிலும் திரண்டிருந்த உறவுத் தலைகளைக் கண் டதும்... வெட்கத்துடன் சட்டென்று விலகினாள் சம்யுக்தா.

அவளது கரத்தை விடாமல் அழுத்தமாகப் பற்றிக் கொண் டிருந்தான் ஆனந்த்.

''எதுக்காகவும் நான் உன்னை விட்டுக் கொடுக்கப் போறதில்லை!''

'அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்' உண்மை யான அன்பு...

அவர்களை ஒன்று சேர்த்துவிட்டது. அன்பு... ஒரு மகா சக்தி! வாழ்க்கையில்...

புயல் சூறாவளி வீசி அலைக்கழித்தாலும்... உண்மை யான அன்பு வசந்தத்தை வரவழைக்கும் என்பது நிச் சயம்!!

41414
6227230